2936

T.N.L.A. Debates

official Report

Vol 24 No 2 & 3

28, 29, Apr. 1986

D
211,31 N86
N86.24.2&3
136481

வெளியீடு 23-12-1986] [Issued 23-12-1986

904/87
2936

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 28, 1986 - தொகுதி 24 எண் 2
Monday, 28th April 1986 - Volume 24 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George.**
**Madras - 600009**

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

136481
சென்னை-600 008

# உள்ளடக்கம்

## 28—4—1986


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 205—242 |
| 2. தகவல் கோரல்— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் : | 242—243 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| (அ) பக்கிங்காம் கால்வாய் குறுக்கே மைலாப்பூரில் முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவை இணைக்கும் பாலம் கட்டும் பணி. | 244—246 |
| (ஆ) குடிசை மாற்று வாரியம் இராயபுரம் தொகுதியில் வீடுகள் கட்டுவது குறித்து .. | 246—248 |
| 4. அறிக்கைகள் அளித்தல்— | |
| பொது நிறுவனங்கள் குழு .. .. | 248 |
| 5. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி). | |
| (அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை .. | |
| (ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம். | |
| (இ) கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. .. | |
| (ஈ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. .. .. .. | 248—335 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 251—279, 320—323, 327—335 |
| *திரு. எஸ். சிவராமன் | 251—261 |
| *திரு. ச. பாலகிருஷ்ணன் | 261—267 |
| திரு. கு. சுப்பராயன் | 267—272 |
| *திரு. மா. மணிமாறன் | 272—285 |
| திரு. த. பழனி | 285—289 |
| திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா | 289—297 |
| *திரு. மா. சின்னராசு | 297—305 |
| திரு. கு. ரமணி | 305—313 |
| திரு. எஸ். என். இராமசாமி | 314—317 |
| திரு. என். எஸ். வி. சித்தன் | 317—335 |


டி 2 A 86—1

6. அமைச்சரின் அறிக்கை—

உள்ளாட்சிகள் சட்டத்தை திருத்துவது குறித்து விதி 111-ன் கீழ் உள்ளாட்சித்துறை அமைச்சரின் அறிக்கை .. .. .. 313—314

7. அரசினர் தீர்மானம் : —

விதி 32-ஐத் தளர்த்தல் .. .. 335–336

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 336

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986 ஏப்ரல் 28, திங்கட்கிழமை.

சித்திரை 15, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல் '',

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

ஊராட்சிகளில் வரி வசூல்.

587—(*வினா எண். 7232) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சிகளில் வரி வசூல் செய்யும் பொறுப்பினை கிராம சேவகர்களிடம் ஒப்படைக்கும் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஊராட்சிகளில் வரி வசூல் செய்யும் பொறுப்பினை கிராம சேவகர்களிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கான வரி வசூலை ரெவின்யூத் துறை அதிகாரிகள் செய்து வருகிற காரணத்தால், ஊராட்சி மன்றங்களுக்கான வருவாய் தானே என்கின்ற அளவில் அவர்கள் போதிய அக்கறை செலுத்துவதில்லை என்கிற புகார் அடிப்படையில், உண்மையான நிலை அப்படி இருக்குமானால் அதை கிராம சேவக்குகளிடம் ஒப்படைத்து, முழு அளவில் மாற்றுப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற கிராம அதிகாரிகளை நம்பியிராமல், ஊராட்சி மன்றங்களுக்கு வர வேண்டிய வசூலை வசூலிக்கின்ற வகையில், மாற்றுத் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற திட்டத்தில் எந்த வித குறைபாடும் இது வரையிலும் அரசுக்கு வரவில்லை. ஆனால் பொதுவாக ஏற்கனவே வருவாய்த் துறையைச் சார்ந்தவர்கள் ஊராட்சிமன்ற வரி வசூலில் கொஞ்சம் தயக்கம் காட்டியது என்பது உண்மை தான். யாரிடம் ஒப்படைக்கலாம் என்பது பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சிமன்றங்களிலே வேலை செய்கின்ற எழுத்தர்களை ஊராட்சிமன்றங்களிலே இருக்கின்ற வரிகளை எல்லாம் தண்ணீர் வரி, வீட்டு வரி, மனைவிலை வரி, போன்ற பணிகளை எல்லாம் அவர்களிடம் ஒப்படைத்து அவர்களை முழு நேர அரசு எழுத்தர்களாக அறிவிக்கின்ற, செயற் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ள செயற்குறிப்புகளில் இதுவும் ஒன்று.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் வரி வசூல் செய்வதற்கு பில் கலெக்டர்களை நியமிப்பது போல் ஊராட்சிகளுக்கும் இங்கே வரி வசூல் செய்ய அரசு பில் கலெக்டர்களை நியமிக்க ஆய்வு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, பகுதி நேர எழுத்தர் பணியிடங்களை தொகுதி எழுத்தர் மற்றும் வரி தண்டலர்கள் என்ற முழு நேரப் பணியிடமாக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வாங்கப்படும் எருமை மாடுகள்.

588—(*வினா எண் 7351) திரு. க. வெ. வீராசாமி பலம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் (I.R.D.P.) பால் எருமைகள் வாங்கி பயன் அடைபவர்கள் சொந்த மாவட்டத்தில் மட்டும் வாங்க வேண்டுமென அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்போதுள்ள நடைமுறையின்படி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் நல்ல தரமான கறவை மாடுகள் எங்கெல்லாம் கிடைக்கிறதோ, அது வெளி மாவட்டங்களாக இருந்தாலும் வாங்கிக் கொள்ளலாம். அதற்கு எந்தத் தடையுமில்லை. இந்த நடைமுறை நல்ல முறையில் செயல்படுவதினால் இதில் எந்த மாறுதலும் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.



கீழராஜகுலராமன் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.

589—(*வினா எண். 7866)—திரு. வி. பாலகிருஷ்ணன் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகாசித் தொகுதி, திருவில்லிப்புத்தூர் ஒன்றியத்தில் உள்ள கீழராஜகுலராமன் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு R.L.E.G.P. திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

பார்த்தீனிய செடிகளை அழித்தல்

590—(*வினா எண். 5613)—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பார்த்தீனிய விஷச் செடியை அழிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் ர. காளிமுத்து : நம் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் காணப்பட்ட பார்த்தீனியக் களைகள் மீது உப்பு மற்றும் சோப்புக்கரைசலை சூரிய வெளிச்சத்தில் தெளித்ததில் பார்த்தீனியம் களைச் செடிகள் கருகிவிட்டன. 3 அல்லது 4 நாட்களில் வேருடன் காய்ந்து சருகுபோல் ஆகி விடுகின்றன.

பார்த்தீனிய செடி ஒழிப்பு முறைகள் வேளாண்மைத் துறை பணியாளர்கள் மூலம் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்த்தீனியச் செடிகள் அழிக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் தமிழகத்தில் பெரும் பகுதிகளில் இந்தப் பார்த்தீனியச் செடிகள் விளைபொருளைப் போல வளர்ந்து மிகப் பெரிய அளவில் கொண்டிருக்கிறது. அதை நடைமுறையில் ஒழிப்பதற்கு தற்போது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்று நடைமுறை அனுபவம் கூறுகிறது. ஆனால்

[1986 ஏப்ரல் 28

பெங்களூரில் அக்ரோ யூனிவர்சிட்டியில் இந்தப் பார்த்தீனியத்தை அழிப்பதற்குரிய ஒரு விதை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுபற்றி அரசு அறியுமா? அவற்றைப் பெற்று, தமிழ்நாட்டில் இத்தகைய விஷச் செடிகளை அழிக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்போது நான் குறிப்பிட்டிருக்கிற இந்த முறை மிக மிக எளிமையானது. இது விவசாயிகள் மேற்கொள்வதற்கு மிகவும் வசதியானது. இதன் மூலமாக விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கிறது என்ற தகவல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப்போன்று பெங்களூர் பல்கலைக் கழகத்திலே அந்த விதை இருக்குமானால் அதைப்பற்றிக் கேட்டறிந்து அதைப் பயன் படுத்த அரசு முயற்சி செய்யும்.

திரு. த. பழனி: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே பாலாற்றின் கரைகளில் இரு மருங்கிலும் பாலாற்றுத் தண்ணீர் பாய்கிற இடங்களில் எல்லாம் பார்த்தீனியச் செடிகள் இருக்கின்றன. அவை அனைத்தையும் ஒழிப்பதை விவசாயிகள் செயல்படுத்த முடியவில்லை. ஆகவே ஊராட்சி ஒன்றியங்கள் மற்ற நிர்வாகங்கள் மூலமாக அந்தப் பணியை மேற்கொள்ளச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, விவசாயத் துறை அலுவலர்கள் அதை நிறைவேற்றுவார்கள். அப்படி நிறைவேற்றவில்லை என்ற வகையிலே நிலைமை இருக்குமானால் அரசு உரிய அறிவுரைகளைச் சொல்லி நிறைவேற்றுமாறு கட்டளையிடும்.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த பார்த்தீனியச் செடிகளை அழிப்பதற்காக விவசாயிகளுக்கு துறை மூலமாக ஏதாவது நிதியுதவி வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதற்கு நிதியுதவி தேவையில்லை.

பெரியகுளம் பேரிச்சம் ஏரியிலிருந்து குடிநீர் வழங்கல்.

591—(*வினா எண் 5637)—டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம்—தென்கரை பகுதியில் பேரிச்சம் ஏரியில் இருந்து குடிநீர் சரியாக கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா?



1986 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், அதுபற்றி எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) பெரியகுளம் தென்கரைப் பகுதியில் பேரிச்சம் ஏரியிலிருந்து குடிநீர் போதுமான அளவு கிடைக்கிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரிச்சம் ஏரியிலிருந்து நீர் கிடைப்பதால் பெரியகுளம் வடகரைப் பகுதியில் உள்ள குழாய்களில் தண்ணீர் சரியாக வருவதில்லை. அதனால் அங்கே குடிநீருக்கு மக்கள் அவதிப்படுகிறார்கள். ஏற்கனவே இரண்டு முறைகள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்து பார்வையிட்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். அதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதற்கு உரிய கட்டணத்தை நகராட்சி கட்டவேண்டும். நகராட்சி அதைக் கட்டியதற்குப் பிறகு அங்கே வடகரைப் பகுதியில் தண்ணீர் வழங்குவதற்கு வழிசெய்ய இயலும். இரண்டு முறையும் அந்தக் கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள். உரிய நடவடிக்கை அரசு எடுக்கத் தயாராக இருக்கிறது. ஆகவே நகராட்சி தான் முன்வரவேண்டும்.

டாக்டர் த. முகமது சலீம்: தலைவர் அவர்களே, ஏறக்குறைய 100 ஆண்டுகள் ஆகியும் பெரியகுளம் நகராட்சியில் போதுமான வருமானம் இல்லாத காரணத்தினால் அமைச்சர் அவர்கள் அதற்கு விதிவிலக்குக் கொடுத்து சீக்கிரமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, போதிய வருமானம் இல்லை என்பது தெரிகிறது. வருமானத்தை அதிகப்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது முயற்சிகளை மேற்கொண்டால் நல்லது.

பூச்சிகொல்லி மருந்துகள் வழங்கல்.

592—*வினா எண் 7417—திரு. கா. வே. கந்தசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு பூச்சிக்கொல்லி மருந்து இலவசமாக கொடுக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி இலவசமாக விவசாயிகளுக்குப் பூச்சிமருந்து கொடுப்பதிலே பல தவறுகள் நடப்பதாக மக்கள் மத்தியில் பேசிக் கொள்ளப்படுகிறது. ஓ.ஏ.பி. கொடுப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டால் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. அதைப் போலே வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு பாஸ்போர்ட் வாங்க வேண்டுமென்றால் எம்.எல்.ஏ.க்கள் கையெழுத்துப் போட்டால் அதற்கு அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. அதே போன்று விவசாயிகளுக்கு இலவசமாக பூச்சி மருந்து வழங்குகிறபோது சட்டமன்ற உறுப்பினர்களின் கையெழுத்து வாங்க வேண்டுமென்ற முறையைக் கொண்டுவந்தால் சிறிய விவசாயிதானா என்று பார்த்து இலவசமாகப் பூச்சி மருந்து வழங்கலாம் என்ற பரிந்துரையைச் செய்தால் அதன் மூலமாகக் கொடுக்கலாம். அப்படிச் செய்வதன் மூலமாக தவறுகளைத் தடுக்க முடியும், எனவே சட்டமன்ற உறுப்பினர்களின் கையெழுத்து வேண்டுமென்ற முறையைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இலவசமாக மருந்து கொடுக்கிற திட்டம் இல்லை. அது நடைமுறையில் இல்லை. 50 சதவீத மானியத்திலே தான் நாம் கொடுக்கிறோம். அதைக் கண்காணிக்கிற முயற்சியை வேண்டுமென்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்வதிலே எந்தவிதமான தடையும் இல்லை.

திரு. பொ. உத்திரபதி : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பூச்சி மருந்து கொடுப்பதைப்பற்றி சொல்லும்போது சட்டமன்ற உறுப்பினருக்கு அந்த அங்கீகாரம் கொடுக்க இயலாது என்று சொன்னார்கள். விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் அதை கொடுப்பது நல்ல அம்சம்தான். தற்போது உள்ள குறைபாடு, சாதாரணமாக $2\frac{1}{2}$ ஏக்கருக்குட்பட்ட நிலம் வைத்திருக்கிற விவசாயிகள் வி. ஓ. மூலமாக பினாமி பெயராகப்போட்டு எந்த விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமோ அவர்களுக்குக் கிடைக்காத முறையில் பினாமியாகபோட்டு பெரும்பகுதி பூச்சிமருந்து விநியோகம் ஆகிறது. அதைத் தடுப்பதற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையின் மூலமாக வேறு முறையில் கண்காணிப்புகளை ஏற்படுத்தி நடவடிக்கை எடுப்பார்களா ?





(முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, திட்டங்களை நாம் எவ்வளவு கண்காணிப்புடன் செயல்படுத்தினாலும், அதில் சில குறைபாடுகள், தவறுகள் நேர்ந்து விடுகின்றன. ஆகவே, இவைகளைக் களைகின்ற முறையிலேதான் நாம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்கின்றோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப் போல் தவறுகள் நடப்பதாக ஆங்காங்கு இருந்து தகவல்கள் வருகின்றன. அப்படித் தகவல்கள் வருகின்ற நேரத்தில் நாம் உரிய நடவடிக்கை எடுக்கிறோம். சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம். ஆகவே, இன்னும் அந்தத் திட்டத்தை நிறைவாக, ஒழுங்காகச் செயல்படுத்துவதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவைகளை ஆராய்ந்து செயல்படுத்தும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரு விவசாயிகள், சிறு விவசாயிகள், மத்தியதர விவசாயிகள் ஆகிய இவர்களுக்கெல்லாம் கம்போஸ்ட், சிறிய பிளான்டேஷன் செய்ய உரம், பூச்சிக்கொல்லி மருந்து போன்ற அத்தனையையும் சிறு விவசாயிகளுக்கும், குறு விவசாயிகளுக்கும் மானிய விலையில் கொடுத்து வந்தது. தற்போது தென்னம்பிள்ளை போன்றவைகளை மானிய விலையில் கொடுப்பது சில பகுதிகளில் இல்லை. ஆகவே, அப்படிக் கொடுப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவாகளே, எல்லாத் திட்டங்களையும் எல்லா நேரத்திலும் எப்பொழுதும் செயல்படுத்திக் கொண்டிருக்க முடியாது. அதுவும் எல்லாப் பகுதிகளிலும் செயல்படுத்திக் கொண்டிருக்க முடியாது. தேவைக்கேற்ப, நிலைமைக்கேற்பதான் அவைகளைச் செயல்படுத்த முடியும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்த வரையில் விவசாயிகளை, பெரிய விவசாயிகள் என்றும், சிறிய விவசாயிகள் என்றும், குறு விவசாயிகள் என்றும் பிரித்து குறு விவசாயிகளுக்கு ஏராளமான சலுகைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. உதாரணமாக இலவச மின்சாரம், விதைகளை இலவசமாகக் கொடுப்பது ஆகியவைகளைச் செய்து கொண்டிருக்கிறது ; நெல், கடலை ஆகியவைகளை இலவசமாகக் கொடுக்கின்ற நேரத்தில், இப்படிப்பட்ட பூச்சி மருந்துகளையும் குறு விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுப்பதற்கு அரசு பரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1986 ஏப்ரல் 28

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, இலவசமாகக் கொடுப்பதற்கு அரசினுடைய நிதி நிலைமை இடம் தராது என்பது ஒரு பக்கம் இருக்க இன்னொரு பக்கத்தில் இப்படி இலவசமாகக் கொடுக்கின்ற நேரத்தில் நிறைய தவறுகள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளும் ஏற்படும். ஆகவே இந்த முறைதான் சாலச் சிறந்தது.

திருமதி ஏ, எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பூச்சிக் கொல்லி மருந்துகளை ஆங்காங்கு மருந்தடிக்க சிறு விவசாயிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டம் இப்படியே நடைமுறையில் இருந்தாலும் கூட, எங்கெங்கெல்லாம் விவசாயிகளுக்கு நெல் அல்லது இதர தானியங்களுக்கு சீக்கு ஏற்பட்டு சேதம் அடைகிறதோ அங்கெல்லாம் நாமே இந், விவசாய இலாக்காவின் மூலம் மருந்து அடிக்கச் சொல்லி விட்டு பிறகு அவர்களிடத்திலேயிருந்து— பெரிய விவசாயிகள், நடுத்தர விவசாயிகளிடத்திலேயிருந்து— வசூலித்துக் கொள்வதற்கு வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, பெருமளவில் பாதிப்பு ஏற்படுகின்ற நேரத்தில் நாம் அப்படித் தான் ஒட்டுமொத்தமாக மருந்து தெளிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் எல்லாப் பகுதிகளிலேயும் ஒரே நேரத்தில் தாக்குவதில்லை. தனித்தனியாகத் தாக்குகின்ற நேரத்தில் நாம் இப்படிப்பட்ட முறைகளைத்தான் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்ததைப் போல மருந்து அடிப்பதற்காக ஆகும் செலவான 15 ரூபாய் ஹெக்டேருக்கு என்பதை நிலவரியிலேதான் சேர்த்து வசூலிக்கிறோம்.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பூச்சிக் கொல்லி மருந்தை இலவசமாகக் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். இருந்தாலும் கூட, நடுத்தர, சிறு விவசாயிகளுக்கு 20 சதவீத மானிய முறையிலே அரசு கொடுப்பதற்கு முன் வருமா ? ஏனென்றால் இப்பொழுது விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை உணர்ந்து தற்காலிகமாக இலவசமாக இல்லாவிட்டாலும், 20 சதவிகித மானியத்திலேயாவது கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, இப்பொழுதே நாம் பூச்சி மருந்து தெளிக்க மானியத் தொகையாக ஏறத்தாழ 20 கோடி ரூபாயைச் செலவு செய்கிறோம். இதற்கும் அதிகமாகச் செலவு செய்யக்கூடிய அளவிற்கு நிலைமை இல்லை.



1986 ஏப்ரல் 28]

திரு. ஜா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிடும்பொழுது மானியத்தில் சிறு விவசாயிகளுக்கு உரம், பூச்சிக் கொல்லி மருந்து கொடுப் பதாகக் கூறினார்கள். அதைப் போல், ஆதி திராவிட மக்க ளுக்கு சிறு விவசாயிகளாக இருந்தால் விதை, பூச்சி மருந்து ஆகியவைகள் இலவசமாகக் கொடுக்கப்படும் செயற் குறிப்பு உள்ளதாகத் தெரிகிறது. அது உண்மையா ? அதே சமயத்தில் கிராமப் புறங்களிலே மானிய விலையிலே பூச்சிக் கொல்லி மருந்து கொடுக்கின்றபொழுது எல்லா விவசாயி களுக்கும், குறிப்பாக சிறு விவசாயிகளுக்குத் தெரியாமல் போய் விடுகிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஏழு இலட்சம் ரூபாய், கடந்த வெள்ள நிவாரணத்தின் பொழுது பூச்சி மருந்தை மானிய விலையில் கொடுப்பதாகக் கூறினார்கள். ஆனால் ஐந்து இலட்சம் ரூபாய் தான் கொடுக்கப்பட்டு இரண்டு இலட்சம் ரூபாய் திருப்பி அனுப்பப்பட்டது. ஆகவே, கிராமப் புறங் களிலே இது போல மானிய விலையில் கொடுக்கப்படும் என்று ரெவின்யூ இலாக்கா மூலமாக பிரச்சாரம் செய்து மானிய விலை யிலே வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஆதி திராவிட மக்களுக்கென்று விவசாயத் துறை மூலமாக தனித் திட்டங்கள் தனி மானியத்திலே செயல்பட்டுக் கொண்டிருக் கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சில மானியத் தொகை விவசாயப் பெருமக்களுக்குக் கொடுப்பது தெரியாமல் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். பயிற்சி வழி தொடர்பு போன்ற திட்டங்களை கூட எந்தெந்த வகையில் பயன் படுத்த வேண்டுமோ அந்தந்த வகையில் பயன் படுத்துகிறோம். அதிலே இன்னும் விளம்பரம் தேவைப்படும் என்ற வகையில் அவர்கள் கருதுவார்களானால் அதிலே மேற்கொண்டு என்ன முயற்சியை செய்யவேண்டுமோ அந்த முயற்சிப் செய்யப்படும்.

தேசிய பயறு வகைகள் பெருக்கத் திட்டம்.

593—(*வினா எண். 7451 ): திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தேசிய பயறு வகைகள் பெருக்கத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1986 ஏப்ரல் 28

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) தேசிய பயறு வகைகள் பெருக்கத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் திட்டங்கள் ஏதும் செயல் படுத்தப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

போக்குவரத்துக்கல்லாத மோட்டார் வாகன வரி வசூல்.

594—(*வினா எண். 4727) திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு வரி வசூல் செய்யும் பணியை சென்னையில் உள்ள போக்குவரத்து அலுவலகம் பெறுவது போல் தமிழகத்தில் மற்ற எல்லா இடங்களிலும் போக்குவரத்து இல்லாத வாகனங்களுக்கு வரி வசூல் செய்யும் உரிமை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் போக்குவரத்துக்கல்லாத மோட்டார் வாகன வரி அரசுக் கருவூலங்கள் மற்றும் அனுமதிக்கப் பட்ட இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளைகள் மூலம் தற்போது வசூலிக்கப்படுகிறது. இருப்பினும் போக்குவரத்து அலுவலகங்கள் மூலம் வசூலிப்பது குறித்தும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழ் மூதாட்டி ஔவை பெயரில் போக்குவரத்துக் கழகம்.

595—(*வினா எண். 8243) : திரு. மு. இராமநாதன், திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் மூதாட்டி ஔவையின் பெயரை போக்குவரத்துக் கழகம் ஒன்றிற்குச் சூட்டும் செயற்குறிப்பு அரசிற்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



1986 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, திருமலை நாயக்கன் பெயரால் ஒரு அரசு போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, புதிய போக்குவரத்துக் கழகங்கள் துவக்கக் கூடிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தமைத்தல்.

596—*வினா எண் 8433—திரு. கே. பி. கே. சேகர், திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து செங்கற்பட்டு மாவட்டத்திற்கென தனியாகப் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. பி. கே. சேகர் : தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகத்தினுடைய நிர்வாக அலுவலகம் வேலூரில் இருப்பதால், செங்கற்பட்டு மாவட்டத்தில் வடகோடியில் உள்ள பொன்னேரி, கும்மிடிபூண்டி, திருவள்ளூர் போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் அந்த அதிகாரிகளோடு தொடர்பு கொள்வதற்கு சங்கடங்கள் இருக்கின்றன. இதைக் கருத்தில் கொண்டு பெரியதாக உள்ள இந்த பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து செயல் படுத்தும் திட்டத்தை இனிமேலாவது அரசு கொண்டுவருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,
ஒரு போக்குவரத்துக் கழகத்தை பிரிக்க வேண்டுமென்றால் ஏற்
கெனவே குறைந்தது ஒரு போக்குவரத்துக் கழகத்தில் 600
பேருந்துகள் இருக்கவேண்டும் என்ற ஒரு கருத்தினை சி. ஆர்.
பட்டாபிராமன் குழு அரசுக்கு பரிந்துரை செய்தது. அந்த
பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இப்பொழுது
கேள்வியிலே கேட்கப்பட்டுள்ள பட்டுக்கோட்டை அழகிரி போக்கு
வரத்துக் கழகத்தை பொறுத்தமட்டில் 600 பேருந்துகள் அந்தப்
கழகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் அதிக
மான பேருந்துகள் அந்தக் கழகத்திலே இருந்தால்தான் அதை
பிரிக்கமுடியும். மேலும் புதிய போக்குவரத்துக் கழகத்தை
துவக்கவேண்டுமென்றால் குறைந்தது 350 பேருந்துகள் இருக்க
வேண்டும் என்பது அந்தக் குழுவின் பரிந்துரையாகும். அந்த
முறையில் புதியதாக போக்குவரத்துக் கழகத்தை துவக்க சிக்கல்
கள் இருக்கின்றன. எந்த ஒரு அலுவலகமாக இருந்தாலும் ஒரே
இடத்தில்தான் அமைய வேண்டும். சென்னை கூட நம்முடைய
தமிழகத்தில் வடகோடியில் இருக்கிறது. அதைக் கூட மைய
இடத்தில் கொண்டு செல்லவேண்டும் என்று சொல்லப்பட்டு
வருகிறது. அந்த முறையில் மேலும் ஒரு புதிய போக்குவரத்துக்
கழகத்தை துவக்குவது சரியான மாற்றுத் திட்டமாக இருக்காது
என்று அரசு கருதுகிறது.

(முற்பகல் 9.20)

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : பேரவைத் தலைவர் அவர்
களே, எங்களுடைய செங்கை மாவட்டத்தில் 350-க்கும் மேற்
பட்ட பேருந்துகள் இன்றைக்குச் சென்று கொண்டிருக்கின்றன.
அதுமட்டுமல்ல எங்களுடைய செங்கை மாவட்டத்தில் தந்தை
பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் 300 பேருந்துகள் மதுராந்
தகம் செங்கற்பட்டு போன்ற பகுதிகளில் சென்று கொண்டிருக்
கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் இன்றைக்கு பட்டுக்
கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் 600-க்கும் மேற்
பட்ட பேருந்துகள், நம்முடைய தந்தை பெரியார் போக்கு
வரத்துக் கழகமும், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக்
கழகமும் சேர்ந்து இன்றைக்கு நடத்திக்கொண்டு வருகின்றன.
இன்றைக்கு வடாற்காடு மாவட்டத்தில் 200-க்கு குறைந்த
பேருந்துகள்தான் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக்
கழகத்தின் மூலம் செயல்பட்டு வருகின்றன. எனவே, எங்க
ளுடைய செங்கை மாவட்டத்தில் தனியாக ஒரு பேருந்துக்
கழகம் அமைக்க வேண்டிய நியாயம் இருக்கிறது. இப்போது
வேலூரில்தான் தலைமையகம் இருக்கின்றது. எனவே,
எம்.டி.-ஐச் சந்திக்க வேண்டுமென்றால் வேலூருக்குத்தான்
செல்ல வேண்டியிருக்கிறது. காஞ்சிபுரத்திலும், சென்னையிலும்
அதற்கான அலுவலகம் சரியாக இல்லை. எனவே, தனியாக ஒரு
போக்குவரத்துக் கழகத்தை அரசு ஏற்றுக்கொண்டு அங்கே செயல்
படுத்துமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கே சுட்டிக்
காட்டியது போல் செங்கை மாவட்டத்தைச் சுற்றி பல்வேறு
போக்குவரத்துக் கழகங்களின் தலைமையகங்கள் இருக்கின்றன.
அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளும் செங்கை
மாவட்டத்தைக் கடந்துதான் செல்லக்கூடிய அளவுக்கு. அனைத்
துப் போக்குவரத்துக் கழகங்களாலும் அது சரியாக இணைக்கப்
பட்டிருக்கிறது. அவர்களே. அதைச் சுட்டிக் காட்டினார்கள்.
பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திலே மொத்தம்
600 பேருந்துகள் இருப்பதாகவும் அதிலே 400 பேருந்துகள்
செங்கை மாவட்டத்திலே செல்வதாகவும், 200 பேருந்துகள்தான்
வடாற்காடு மாவட்டத்திலே செல்வதாகவும் கூறினார்கள்.
அதிலே இருந்து அந்த மாவட்டம் தனிக் கவனம் செலுத்தப்
படக்கூடிய மாவட்டமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருது
கிறேன். அந்த வகையில் அமைந்திருக்கிற தலைமையகமும்
சரியாகத்தான் அமைந்திருக்கிறது. வடாற்காடு மாவட்டத்
திற்குக் கூடுதலாகப் பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு
மென்றால் அந்த அளவுக்குத் தேவைப்பட்டால் இந்த அரசு
நடவடிக்கை எடுக்கும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்
களே, தர்மபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அண்ணா போக்கு
வரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்படுவது பற்றி ஆலோசனை
இருக்கிறது. அப்படி பிரிக்கப்படக்கூடிய போக்குவரத்துக்
கழகத்தின் மற்றொரு பிரிவிற்கு சுப்ரமணிய சிவா அவர்களின்
பெயரைச் சூட்டுவதற்குரிய வகையில் முதலமைச்சர் அவர்களோடு
கலந்தாலோசனை செய்து அந்த வகையில் பெயர் சூட்டுவதற்குத்
தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர்
அவர்களே, கடந்த கேள்வி மூலம் இது முடிந்து விட்டது.
ஆகவே he has missed the bus.

சத்துணவு மையங்களுக்கு புதிய பாத்திரங்கள்.

597—*வினா எண் 7627—திரு. ப. ந. இராமச்சந்திரன் :
மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு மையங்களுக்கு புதிய பாத்திரங்கள் வாங்
கிட அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்,

[1986 ஏப்ரல் 28

(ஆ) சத்துணவு மையங்களிலுள்ள பழுதடைந்த பாத்திரங் களுக்குப் பதிலாக புதிய பாத்திரங்கள் வாங்கிட அரசு ஒரு கோடி ரூபாய் பண ஒதுக்கீடு செய்துள்ளது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர் களே, சத்துணவு மையங்களுக்குப் புதிய பாத்திரங்களை வாங்கு கிறபோது முன்பு புழக்கத்திலே இருந்த அலுமினியப் பாத்திரங் களைப் பயன்படுத்தும்போது கெமிக்கல் ரியாக்ஷன் ஏற்பட்டு பாதிப்பு ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அதை மாற்றி பித்தளை அல்லது எவர்சில்வர் பாத்திரங்களை வாங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பித்தளைப் பாத்திரங்களைப் பயன்படுத்து வதால் சில நேரங்களில் ஆபத்துக்கள் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு. அதிலே பூசப்படுகிற ஈயம் முறையாக இல்லாமல் போனால் அதனால் ஃபுட் பாய்சன் ஏற்படுவதற்கும் அதன் காரணத்தால் அந்த உணவை உண்பவர்கள் பாதிக்கப்படு வதற்குமான வாய்ப்புக்கள் உண்டு. மற்றொன்று, எவர்சில்வர் பாத்திரத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எவர்சில்வர் பாத்திரங்களின் விலை அதிகம். மேலும் தமிழகத்தில் 66 ஆயிரத்திற்கும் அதிகமான மையங்கள் இருக்கின்றன. அவ்வளவு மையங்களுக்கும் எவர்சில்வர் பாத்திரங்கள் தருவது என்றால் அது எளிதில் முடியக் கூடிய காரியம் அல்ல. பொதுவாக இப்போது அலுமினியப் பாத்திரங்கள் வீட்டிலே கூட புழக்கத் திலே இருக்கின்றன. எலுமிச்சம்பழம் அல்லது உப்பு கலந்த மோர் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறபோதுதான் அதிலே கெமிக்கல் ரியாக்ஷன் ஏற்படுகிறது. நாம் அப்படிப்பட்ட எந்த உணவையும் தற்போது தயாரித்து வழங்குவதில்லை. மேலும் அலுமினியப் பாத்திரங்களை உபயோகப்படுத்துவது சுலபமாக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த 66,000 சத்துணவு மையங்களுக்கு புதிதாக ஒரு கோடி ரூபாய் அளவிற்கு வாங்க இருக்கிற பாத்திரங்கள் எவ்வளவு காலக்கெடுவிற்குள் சத்துணவு மையங்களுக்கு வழங்கப் படும் ? இப்போது போதிய பாத்திரங்கள் இல்லாதிருக்கிற காரணத்தினால் அந்த சத்துணவு மையங்களில் சமைப்பவர்கள் மிகவும் திண்டாடுகிறார்கள். எனவே விரைவில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்து பாத்திரங்கள் கிடைக்க வழிவகை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலை வர் அவர்களே, 14–4–86-க்குள் இந்த வேலைகள் முடிக்கப்பட வேண்டும் என்று நாம் டான்சி நிர்வாகத்திற்கு தாக்கீது அனுப்பி இருக்கிறோம். அவர்கள் இந்த மாத முடிவிற்குள் வழங்கி விடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மாத முடிவிற் குள் பாத்திரங்கள் நிச்சயமாக வழங்கப்பட்டுவிடும்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சரவர்கள் பாத்திரங்கள் வாங்குவதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பல சத்துணவு மையங்களில் பாத்திரங்கள் குறைவாக இருப்ப தால் மிகுந்த கஷ்டத்தை அங்குள்ள ஊழியர்கள் அனுபவிக்கி றார்கள். பலயிடங்களில் பாத்திரங்களை கடன் வாங்கிக் கூட பயன்படுத்துகிறார்கள். நேரடியாக எனக்குத் தெரிந்த ஒன்றாகும் இது. இதில், அலுமினியப் பாத்திரங்களை உப யோகப்படுத்துவது நல்லதல்ல என்ற கருத்து பொதுவாக இருக்கிறது. உப்பை உபயோகப்படுத்தாமல் சாப்பாடு தயார் செய்யமுடியாது. உப்பை உபயோகப்படுத்தித்தான் ஆக வேண்டும். இந்த 66,000 சத்துணவு மையங்களில் வெண் கலப் பாத்திரங்களை உபயோகப்படுத்துவதற்கு, வார்ப்பட பாத்திரங்களை உபயோகப்படுத்துவதற்கு இந்த—வார்ப்படம் என்பது ஒரு காம்பவுண்ட் மெட்டல்—இந்த வார்ப்படப் பாத்தி ரங்களுக்கு ஈயம் பூசவேண்டியதில்லை. இது ஒரு அற்புத மான சாதனம்—எனவே வெண்கலப் பாத்திரங்களை அர சாங்கமே தயார் செய்து சப்ளை செய்வதற்கு ஏற்பாடு செய் வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலை வர் அவர்களே, இந்த வெண்கலப் பாத்திரம் என்பது கனமான ஒன்று. இரண்டாவதாக அதன் விலை அதிகமானது. மூன்றாவதாக, அதை ஜாக்கிரதையாகப் பயன்படுத்த வேண் டும். கை தவறுதலாக வேகமாக கீழே வைத்துவிட்டால்கூட அந்த வெண்கலப் பாத்திரம் உடைய அல்லது கீறல் விழ வாய்ப்பு உண்டு. நம் வீடுகளில்கூட பால் காய்ச்சுவதற்கும் சாதம் சமைப்பதற்கும் மட்டுமே பொதுவாக வெண்கலப் பாத்திரங்களைப் பயன்படுத்துவார்கள். அதை வாங்கவும் அதிகமான பணம் ஆகும். எனவே சத்துணவு மையங்களில் வெண்கலப் பாத்திரங்களைப் பயன்படுத்துவது என்பது அவ்வளவு உசிதமான காரியமல்ல. மோரோடு உப்பு கலந்து அலுமினியப் பாத்திரங்களில் வைக்கும்போதுதான் பாதகம் ஏற்படுகிறதே தவிர மீதி நேரத்தில் அலுமினியப் பாத்திரங்கள் எந்தப் பாதகத்தையும் ஏற்படுத்துவதில்லை.

[1986 ஏப்ரல் 28

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு குடிப்பதற்கான பாத்திரங்கள் இல்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, தற்போது குடிப்பதற்கு பாத்திரங்கள் இல்லாத காரணத்தினால் இந்த ஒரு கோடி ரூபாய்க்கு பாத்திரங்கள் வாங்குவதில் இதையும் சேர்த்து, குடிப்பதற்கு பாத்திரங்கள் அளிக்கவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மையங்களிலும் காய்ச்சிய வெந்நீரை ஆறவைத்து பிள்ளைகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று முதலிலேயே ஆணையிட்டு அவர்களுக்குத் தருவதற்கு அதற்குத் தேவையான டம்ளர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. சில மையங்களில் அந்த டம்ளர்களைப் பயன்படுத்தாமல் இருப்பதையும் பார்த்திருக்கிறோம். அவர்கள் அதைப் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். எங்கேயாவது குறிப்பிட்ட இடங்களில் அதுபோன்று டம்ளர்கள் இல்லை என்று சொன்னால் அவைகளை வழங்க உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு பாத்திரங்கள் வாங்க ஒதுக்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சத்துணவு மையங்களில் இரண்டு மூன்று பிரிவுகள் இருக்கின்றன. இதிலே குழந்தைகள் சத்துணவு மையங்கள் கல்விக்கூட சத்துணவு மையங்கள் என்றிருக்கின்றன. எந்தெந்த சத்துணவு மையங்களுக்கு எவ்வளவு பாத்திரங்கள் வாங்க எவ்வளவு பணம் தனித்தனியாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாத்திரங்களுக்கு என்று மொத்தமாக ஒரு கோடி ரூபாயை நம் அரசு ஒதுக்கியிருக்கிறது. அதிலே பள்ளிக் கல்வி இயக்குநருக்கு 75 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. சமூக நல இயக்குநருக்கு ரூ. 10,50,000 வழங்கப்பட்டிருக்கிறது. பிற்பட்டோர் நல இயக்குநருக்கு 5 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு ரூ. 6,20,000 வழங்கப்பட்டிருக்கிறது. சென்னை மாநகராட்சி ஆணையருக்கு ரூ. 98,000 வழங்கப்பட்டிருக்கிறது. கோவை மாநகராட்சி ஆணையருக்கு ரூ. 1,82,000 வழங்கப்பட்டிருக்கிறது. மதுரை மாநகராட்சி ஆணையருக்கு ரூ. 50,000 வழங்கப்பட்டிருக்கிறது. ஆக ஒரு கோடி ரூபாய் புதிய பாத்திரங்கள் வாங்குவதற்காக வழங்கியிருக்கிறோம்,



1986 ஏப்ரல் 28]

திருமதி பா. வளர்மதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறபோது பித்தளைப் பாத்திரங்களில் வழங்குகிறபோது அது குழந்தைகள் உடல் நலத்திற்கு ஒத்துவராது என்று சொன்னார்கள். ஆகவே இன்டோலியம் பாத்திரங்கள் வாங்கினால், அதைப் பயன்படுத்தினால், எல்லாவிதத்திலும் அது பொருந்தும் எனக் கருதுகிறேன். ஆகவே இன்டோலியம் பாத்திரங்கள் உபயோகிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னேன். புழங்குவதற்கும் சுலபமாக இருக்க வேண்டும். இன்டோலியம் கனமான பாத்திரம். ஆகவே அதை அடுப்பிலிருந்து ஏற்றி இறக்குவது கடினமானதாகும். சில பள்ளிக்கூட மையங்களில் கிட்டத்தட்ட 500 குழந்தைகள் அல்லது அதற்கு மேற்கொண்டும் சாப்பிடுகிற அளவிற்குக்கூட உணவு சமைத்துக் கொண்டிருக்கிறோம், ஆகவே மிகப் பெரிய பாத்திரங்களில் அவற்றை சமைத்து இறக்குகிறபோது பாத்திரங்கள் கனமாக இருக்குமானால் பணியாற்றுகிறவர்களுக்கும் தொல்லையாகயிருக்கும். ஆகவே அலுமினியப்பாத்திரங்களைப் பயன்படுத்தலாம். அதற்கு அலுமினியம் மிகவும் சிறந்ததாக இருக்கிறது.

சேரன்மாதேவியில் புதிய சத்துணவு மையங்கள்.

598—(*வினா எண் 7693) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாதேவி ஊராட்சி ஒன்றியப் பகுதியில், கோட்ட வளர்ச்சி அதிகாரியால் புதிய சத்துணவு மையங்கள் அமைப்பது குறித்து கடந்த 6 மாதங்களில் வந்துள்ள பரிந்துரைகள் எத்தனை?

(ஆ) அவற்றுள் எத்தனை மையங்கள் அமைக்க ஆணை இடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். செளந்திரராஜன் : மாண்புமிகு
பேரவைத்தலைவர்அவர்களே, (அ) சேரன்மாதேவி ஊராட்சி
ஒன்றியப் பகுதியில் கோட்ட வளர்ச்சி அதிகாரியால், புதிய
சத்துணவு மையங்கள் அமைப்பது குறித்து கடந்த ஆறு
மாதங்களில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்களுக்கு வந்துள்ள பரிந்துரைகள் :

| | | | |
|---|---|---|---|
| (1) புதிய சத்துணவு மையங்கள் | .. | .. | 3 |
| (2) கிளை நிலையங்கள் | .. | .. | 3 |
| | | | 6 |

(ஆ) சேரன்மாதேவி ஊராட்சி ஒன்றியப் பகுதியில்,
மூன்று புதிய சத்துணவு மையங்களும்; மூன்று கிளை நிலை
யங்களும் விரைவில் அமைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்
படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி.

(முற்பகல் 9-30)

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த சத்துணவு மையங்கள் நடப்பு நிதி
ஆண்டில் அமைக்கப்படுமா ? ஏற்கனவே அந்தத் தொகுதியில்
இயங்கிக் கொண்டிருந்த சத்துணவு மையங்கள் எத்தனை
குறைக்கப்பட்டிருக்கின்றன ? எண்ணிக்கையின் அடிப்படையில்
சத்துணவு மையங்கள் செயல்படுகின்றனவா என்பதையும்,
எத்தனை சத்துணவு மையங்கள் நர்சரி பள்ளிகளாக மாற்றப்
பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். செளந்திரராஜன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்கள்
குறைக்கப்படவில்லை. புதியதாக மூன்று மையங்களும்,
மூன்று கிளை மையங்களும் துவக்கப்பட இருக்கின்றன.
இப்படி துவக்கப்படுகின்ற மையத்திற்கு சில வரையறைகள்
வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மையத்தை துவக்க வேண்டு
மென்றால், 70-லிருந்து 150 குழந்தைகள் வரை 2 பிளஸ்,
4 பிளஸ் இருந்தால் அந்த மையத்தைத் துவக்க இயலும். 70-க்கு
கீழே இருக்குமானால், ஒரு கிளை மையத்தை துவக்கு
கிறோம். அப்படி கிளை மையங்கள் துவக்கப்படுகின்றபோது,
நம்முடைய மையத்தில் இருந்து சமைத்த உணவை யாராவது
ஒரு சுமக்கிற கூலியாள் மூலம் அந்தப் பகுதி ஊருக்கு



அனுப்பி, அங்குள்ள குழந்தைகளுக்குக் கொடுப்பதற்கு வழி
வகை செய்து கொண்டிருக்கிறோம். தற்போது எத்தனை
நர்சரி பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன என்று மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மொத்தம்
இதுவரையில் 14,140 மையங்கள் நர்சரி பள்ளிகளாக மாற்றப்
பட்டிருக்கின்றன.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழகம் முழுமைக்கும் புதிதாக எத்தனை
சத்துணவு மையங்கள் அமைப்பதாக மாவட்ட ஆட்சித்
தலைவர்கள், கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், மாநகராட்சி
ஆணையர்கள் போன்ற அதிகாரிகளால் பரிந்துரை செய்யப்பட்டி
ருக்கிறது? அவைகளில் எத்தனை அமுலில் இருக்கின்றன என்பதை
யும், சென்னை மாநகரத்தில் புதிதாக சத்துணவு மையங்களை
அமைக்கும் செயற்குறிப்பு அரசினிடம் உள்ளதா என்பதை
யும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். செளந்திரராஜன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நம்முடைய
தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலை
வர் அவர்கள் கொண்டு வந்ததே, வளருகின்ற சமுதாயம் எந்த
வகையிலும் பட்டினியும் பசியும் இல்லாமல் அவர்கள் பெறவேண்
டிய சக்தியைப் பெறவேண்டும் என்பதற்காகவும், எல்லோரும்
அதை பெறுகின்ற வகையில் பெறவேண்டும் என்பதற்காகவும்
இந்தத திட்டத்தை துவக்கி நடத்திக் கொண்டிருக்கிறோம்.
சமீபத்தில்கூட, நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மாநாட்டில் பல மாவட்ட ஆட்சித் தலைவர்கள் புதிய
மையங்களைத் துவக்கவேண்டும் என்று கேட்டபோது, நம்
முடைய முதலமைச்சர் அவர்கள் நீங்கள் அதற்குரிய நட
வடிக்கைகளை மேற்கொண்டு அரசிற்கு தெரிவிப்பீர்களே
யானால், புதிய மையங்களை துவக்குவதற்கான வழிவகைகள்
உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்தி
ருக்கிறார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களிட
மிருந்து அந்தத் தகவல்கள் வரவேண்டும். மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் தமிழகததில் மொத்தம் எவ்வளவு
மையங்கள் என்று கேட்டார்கள். தனிக் கேள்வி கேட்டால்,
அந்தத் தகவலை சேகரித்துக் கொடுக்க முடியும். காரணம்,
இது சேரன்மகாதேவியைப் பொறுத்த கேள்வி. அதைப்
பொறுத்தவரையில்தான் இதிலே விளக்கங்கள் இருக்கின்றன
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1986 ஏப்ரல் 1?

இலங்கை அகதிகள் முகாம்கள்.

599—(*வினா எண். 1454) திரு. கு. ரமணி: மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் இலங்கை அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டு உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை முகாம்கள்?

(இ) அவைகளில் உள்ள அகதிகள் எவ்வளவு பேர்கள்?

(ஈ) அதன் விவரம் என்ன?

(உ) அவர்களுக்கு தினம் ஒன்றுக்கு நபருக்கு என்ன செலவு செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : (அ) ஆம்.

(ஆ) 17 முகாம்கள்.

(இ) 17 முகாம்களிலும் 31–3–1986 நிலைப்படி மொத்தம் 507 குடும்பங்களைச் சேர்ந்த 2,027 நபர்கள் குடியமர்த்தப் பட்டுள்ளார்கள்.

(ஈ) அடியில் குறிப்பிட்டுள்ள விவரப்படி பெரியார் மாவட்டத்தில் அகதி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன :

| | | |
|---|---|---|
| ஈரோடு வட்டத்தில் | .. | 3 முகாம்கள் |
| பெருந்துறை வட்டத்தில் | .. | 3 முகாம்கள் |
| தாராபுரம் வட்டத்தில் | .. | 2 முகாம்கள் |
| காங்கயம் வட்டத்தில் | .. | 3 முகாம்கள் |
| பவானி வட்டத்தில் | .. | 2 முகாம்கள் |
| கோபி வட்டத்தில் | .. | 2 முகாம்கள் |
| சத்தி வட்டத்தில் | .. | 2 முகாம்கள் |

(உ) சராசரி ஒரு நபருக்கு ரூ. 4.20 பைசா செலவு செய்யப் படுகிறது.



1986 ஏப்ரல் 28]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த அகதிகள் வசிக்கின்ற மையங்களில் போதுமான கழிப்பிட வசதி இல்லை என்பதும், அவர்கள் பத்திரமான நிலையில் இருக்க முடிய வில்லை என்பதும், சுற்றிலும் பாதுகாப்பு இல்லாத நிலையில் அவர்கள் வைத்திருக்கக்கூடிய பொருள்களைக் கூட களவாடிச் செல்லக்கூடிய அபாயங்கள் ஏற்படுகின்றன என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே அந்த மையங்களை பாதுகாப் பாகவும் பத்திரத் தன்மையோடும், சுகாதாரத்தோடும் வைத் திருக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? வைத்திய வசதிகள் அந்த முகாம்களில் ஏற்படுத்துவதற்கு ஏதாவது டாக்டர்கள் அங்கே நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் அந்த மையங்களில் போய் வைத்திய வசதி செய்வதற்கு உரிய நட வடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய 171 மையங்களில் அகதிகள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர் களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கக்கூடிய அளவில்தான் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருக் கிறது. பொதுவாக இருக்கக்கூடிய மையங்களில், ஆங்காங்கு இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் பணிபுரியும் டாக்டர்கள் அந்த மையங்களுக்குச் சென்று பரிசோதித்து வருகிற சூழ் நிலை இருந்து கொண்டிருக்கிறது. மேலும் பாதுகாப்பு இல் லாத நிலை அவர்களுக்கு இருப்பதாகக் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலை எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே அகதிகள் மிகுந்த கவனத்தோடு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, குடியமர்த்திய நேரத்திலே இருந்து இதுவரையில் தினசரி அவர்களுக்கு கொடுக்கக்கூடிய தொகையைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தொடர்ந்து பொருள்களின் விலை எக்கச்சக்கமாக ஏறியிருக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் அந்தத் தொகையை ஏதாவது உயர்த்திக் கொடுக்க உண்மையிலேயே அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா? இல்லை என்றால் குறைந்த பட்சம் அவர்களுடைய சாப்பாடு மற்ற வசதிகளுக்குத்தேவை யான அளவுக்கு அதைக் கணக்கிட்டாவது அதை உயர்த்திக் கொடுக்க அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 பெரியவர்கள் 12 வயதுக்கு உள்ளே உள்ள 2 சிறுவர்கள் சேர்ந்து, 5 பேர்கள் உள்ள ஒரு குடும்

[1986 ஏப்ரல் 28

பத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 357.50 பைசா விதம் கொடுக்கப்
படுகிறது. மானிய விலையில் அவர்களுக்கு அரிசி 57 பைசா
ஒரு கிலோ என்று வழங்கப்படுகிறது. ஆகையினால் போது
மான அளவிலேதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். பல்வேறு முகாம்களுக்கு சென்று பார்க்கிற
போது, அரசாங்கம் தருகிற அந்தப் பணத்தை அவர்கள்
முறையாக செலவு செய்வார்களேயானால் நிச்சயமாக போது
மான அளவுக்கு இருக்கிறது என்றுதான் அங்கே இருக்கக்கூடிய
அகதிகளில் சிலரே சொல்லியதை நான் கேள்விப்பட்டிருக்
கிறேன்.

திரு. ஈ.வே.கி.ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் சக்தி வட்டத்தில்
அமைந்துள்ள 2 அகதிகள் முகாம்களில் இருக்கிற—கெம்ப
நாயக்கன் பாளையம், பெரும் பள்ளம் அணைக்கட்டு பகுதி
யிலே அமைந்துள்ள முகாம்களில் இருக்கின்ற அகதிகள் இரண்டு
பிரிவாகப் பிரிந்து தங்களுக்குள்ளேயே தகராறு செய்து கொண்டும்
அந்தப் பகுதியிலே இருக்கிற மற்ற மக்களுக்கு இடையூறு
செய்து கொண்டும் இருப்பது பற்றி அரசினுடைய கவனத்திற்கு
வந்திருக்கிறதா? அந்த அகதி மையங்களில் வழங்கப்படுகின்ற
அரிசி மிக மக்கிப் போனதாகவும், புழுத்த அரிசியாகவும்
இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதை மாற்றி நல்ல அரிசி
யாக கொடுக்க அரசு முன் வருமா என்பதையும் அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே,
இலங்கையிலே வன்முறையினாலே பாதிக்கப்பட்டுள்ள நம்
முடைய சகோதரர்கள், வன்முறையாளர்களால்
விரட்டியடிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இங்கே
யாகக் கவனிக்கப்பட வேண்டும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற
அளவிலேதான் பல்வேறு மாவட்டங்களில் குடி அமர்த்தப்
பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்,
அமைதியாக இருக்க வேண்டும், இங்கே உங்கள்
நிலைமையை நீங்கள் இவ்வாறு குறைத்துக் கொள்ளக் கூடாது
என்றும் ஆங்காங்கு அருகிலே உள்ள சகோதர மக்களும்,
நாமும் தான் அவர்களுக்கு நல்ல அறிவுரை வழங்கவேண்டும்,
அத்தோடு மக்கிப் போன அரிசி கொடுப்பதாகச் சொன்னார்கள்.
அப்படி அரிசி கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.
உண்மையிலேயே எங்காவது இருந்தால், அரசின் கவனத்திற்கு
கொண்டு வந்தால். நிச்சயமாக நல்ல அரிசி வழங்க அரசு
ஏற்பாடு செய்யும்.



986 ஏப்ரல் 28]

600—*(வினா எண் 3933)—திரு. மு. மாரிமுத்து, டாக்டர்
த. முகமது சலீம் : மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை
வாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து வருகின்ற அகதிகளுக்காக எத்
தனை அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அகதி முகாம்களுக்காக அரசு ஒரு நாளைக்கு செல
விடும் தொகை எவ்வளவு?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே,
(அ) தமிழகத்தில் 171 முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(ஆ) அனைத்து முகாம்களுக்கும் ஒரு நாளைக்கு செலவு
செய்கிற தொகை ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 54 ரூபாய்
ஆகும்.

திரு. மு. மாரிமுத்து : தலைவர் அவர்களே, இலங்கை
யிலிருந்து தமிழகத்திற்கு வந்திருக்கிற அகதிகளை காப்பாற்ற
வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழகத்திற்கு இருக்கிறது.
இலங்கையிலிருந்து வந்திருக்கிற அகதிகள் அங்கே தங்களுடைய
சொத்துக்களை இழந்து விட்டு வந்திருக்கிறார்கள். ஆகவே
அவர்கள் இங்கே வசிக்கிற காலத்தில் தமிழக அரசும் மைய
அரசும் எவ்வளவு அவர்களுக்காக செலவழிக்கிறார்களோ
அதனை இலங்கை அரசிடமிருந்து வற்புறுத்தி பெற, வசூல்
செய்ய மத்திய அரசை கேட்டுக் கொள்ள தமிழக அரசு
முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : தலைவர் அவர்
களே, தார்மீக உணர்வோடு இலங்கையில் தங்கள் சொத்து
சுகங்களை இழந்து விட்டு வந்திருக்கிற அகதிகளை நம்முடைய
அரசும், மைய அரசும் காத்து வருகிறது என்பது நாடறிந்த
உண்மை. அடுத்து, உறுப்பினர் அவர்கள் பணம் வசூல்
செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள்.
அது மத்திய அரசு முடிவு செய்ய வேண்டியது. அதற்கான
நடவடிக்கையை நம்முடைய அரசும் எடுத்துக் கொள்ளும்.

டாக்டர் த. முகம்மது சலீம் : தலைவர் அவர்களே,
இப்போது ஒரு நாளைக்கு 4 ரூபாய் என்ற அளவில் கொடுக்கப்
படுகிறது. இந்த 4 ரூபாய் என்பது போதுமானதாக இல்லை
யென்பதால் அவர்களுக்கு ஏதாவது வேலை வாய்ப்பைக்கொடுத்து,
அதன்மூலம் வருவாய் பெற்று அவர்கள் நல்வாழ்க்கை நடத்த
அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே. நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசோடு அவ்வப்போது தொடர்பு கொண்டு இங்கே வந்திருக்கிற அகதிகளுக்கு நல்ல முடிவு ஏற்படவேண்டு மென்று அக்கறையோடு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். அதே நல்ல எண்ணத்தோடுதான் மத்திய அமைச்சர் அவர்களும் இலங்கை செல்லவிருக்கிறார்கள். அங்கே நல்ல சூழ்நிலை வரவேண்டுமென்றுதான் நாம் எல்லோரும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இங்கே அகதிகளாக வந்திருப்ப வர்கள் திரும்பவும் அந்த நாட்டிற்கு போக வேண்டியவர்கள், அவர்கள் அந்த நாட்டு குடியுரிமைப் பெற்றவர்கள். ஆகவே இன்னல் ஏற்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் அவர்களைப் பாதுகாக்கிற கடமை தான் நமக்கிருக்கிறது. வேலை வாய்ப்பு கொடுக்கிற சூழ்நிலை நம்மிடத்தில் இல்லை.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, அகதிகளை பராமரிப்பதில் மத்திய அரசினுடைய பங்கு எந்த அளவிற்கு இருக்கிறது? மாநில அரசின் உதவி எந்த அளவிற்கு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே, இதில் முழுக்க முழுக்க மத்திய அரசின் நிதி தான் செலவு செய் யப்படுகிறது. அந்தப் பணத்தை மத்திய அரசிடத்திலிருந்து எதிர் பார்த்து மாநில அரசு செலவு செய்கிறது. பின்னாலே அவர் களிடத்தில் வசூல் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்தப் பணம் முழுக்க முழுக்க மத்திய அரசின் பணம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முகாம் ஒன்று என்னுடைய தொகுதியில் இராசி புரத்தில் இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அந்த முகாம் அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் 15 நாட் களுக்கு வைத்துக்கொள்வோம் என்று நகராட்சிக்குச் சொந்த மான ஒரு திருமண மண்டபத்தில் அதை அமைத்தார்கள். அதற்குப் பின்னாலே வேறு இடத்திற்கு மாற்றப்படாமல் அதே திருமண மண்டபத்தில் இருந்து வருவதால், அந்தப் பகுதி மக்கள் திருமண மண்டபத்தை உபயோகப்படுத்த முடியாமல் இருக்கிறது. விரைவாக வேறு முகாம் ஏற்படுத்தி அவர்களை அங்கே வைக்க அரசு முடிவெடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி தலைவர் அவர்களே. அகதிகளை உடனடியாக குடியமர்த்தவேண்டுமென்பதில் உடனடி யாக அக்கறை எடுத்துக்கொண்டு செய்தோம். சில இடங்





களில் தனி கட்டிடங்கள் கிடைக்காத காரணத்தால் திருமண மண்டபத்தில் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இன்றையதினம் இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வாடகைக்கு இடத்தை வாங்கிக் கொடுப்பார்களானால் வாடகை கொடுக்க கூட வழிவகை இருக்கிறது. அங்கேயிருந்து முகாமை மாற்றுவதற்கும் வாய்ப்பு ஏற்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்ட அதிகாரிகள் தேர்வுக்கு சிறப்புப் பயிற்சி.

(601—)*வினா எண் 2034ஏ திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வழக்கறிஞர் களுக்கு சட்ட அதிகாரிகள் (law officers) தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மாண்புமிகு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அமுல்படுத்தப் படுகிறது என்று அன்றைக்குகொடுத்த மானியக் கோரிக் கையின் கொள்கைக் குறிப்பிலே ஒரு பக்கத்தில் சொல்லப் பட்டு இருக்கிறது. அதற்காகக் கூட நன்றி சொன்னேன். ஆனால் இப்போது அதற்கு மாறாக அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு இடமில்லை என்று சொல்கிறார்கள். எனவே இது பற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்மிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைக்குறிப்பிலே 'லா கிராஜுவேட்ஸ், பயிற்சி பெறுவதற்காக கொடுக்கின்ற திட்டம் தான் இந்த ஆண்டு ஜுன் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என்று குறிப் பிடப்பட்டு இருக்கிறது. 20 ஜுனியர் லாயர்களுக்கு மாதத் திற்கு 500 ரூபாய் வீதமும் அதைக் கற்றுக் கொடுக்கின்ற அந்த லா புரஃபசருக்கு 5,000 ரூபாய் வீதமும், ஒரு ஆண்டுக்கு இந்த செலவுக்காக 1 லட்சத்து 81 ஆயிரம் ரூபாய் செலவிலே இந்தத்

திட்டம் ஆரம்பிக்க இருக்கிறது. அதற்கும் லா ஆபீசர்களுக்கும் சம்பந்தம் இல்லை. அந்தக் கொள்கை விளக்கத்திலே அப்படிப்பட்ட திட்டம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பல ஆண்டுக்காலமாக பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு அந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஏன் அரிசன மக்களுக்கு, அந்த வழக்கறிஞர்களுக்கு மட்டும் இந்த சிறப்புத் திட்டத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது? அப்படி எடுப்பதாலே அரசாங்கத்திற்கு என்ன நஷ்டம் வந்து விடும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். எனவே இதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்து, இந்த லா ஆபீசர்கள் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறையின் மூலமாக இதுஅளிக்கப்படுகிறதா என்பதைப் பற்றிய அந்த விவரம் எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் 'லா கிராஜுவேட்க்கு, முன்பு இருந்த இந்தத் திட்டத்தின் மூலமாக இந்த ஆதி திராவிட் ஜுனியர் லாயர்களுக்கு, அவர்கள் அந்தத் தொழிலை தொடங்குவதற்கு 750 ரூபாயும், அதைப்போலவே அலமாரி, புஸ்தகங்கள் வாங்குவதற்கு 750 ரூபாயும், ஆக மொத்தம் 1,500 ரூபாய் ஒரு ஆண்டுக்கு ஒவ்வொருவருக்கும் —15 பேர்களுக்கு கொடுக்கின்ற திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. அதைப் போல அடுத்து இந்தத் திட்டத்தையும் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். இதைப்போன்ற லா ஆபீசர்கள் தேர்வுக்கான பயிற்சி கொடுக்கின்ற திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

## எரகுடியில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.

602—(*வினா எண். 6974)திரு.வி. தங்கவேலு : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் வட்டம் எரகுடியில் ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?



மாண்புமிகு திரு. எ, அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு கனம் ஸ்ரீ சபாநாயகர்
அவர்களே, எரகுடியில் ஆதி திராவிடக் குடியிருப்புகள் கட்டு
வதற்காக அரசிடம் திட்டம் உள்ளதா என்ற கேள்விக்கு நான்
எதிர்பார்த்தமாதிரியே கனம் ஸ்ரீ ஆதி திராவிட அமைச்சர்
அவர்கள் பதில் அளித்து இருக்கிறார்கள். இங்கே ஆதி திராவிடர்
களுக்கு வீடு கட்டித் தரக்கூடிய குடியிருப்பில், தற்போது
காலனி என்று சொல்லி, ஊருக்கு அப்பால் இப்படிப்பட்ட
குடியிருப்புகளைக் கட்டித் தருகிறார்கள். எரகுடியில் அந்த
வீடுகளைக் கட்டாமல் போனாலும், எஞ்சியிருக்கக்கூடிய
ஆதி திராவிடக் குடியிருப்புகளை, ஜாதி இந்துக்களோடு ஒட்டி
வாழ்வதற்கு ஏற்றாற்போல தமிழகத்தில் வீடுகள் கட்டக்
கூடிய திட்டம் அரசின் குறிப்பில் உள்ளதா என்பதைத்
தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் கட்டு
கின்ற வீடுகள் அவர்கள் இருக்கின்ற இடத்திலே கட்டுகின்ற
திட்டம்இருக்கிறது.அதைப்போல் அவர்களுக்குப் பட்டா கொடுக்
கின்ற இடத்திலே வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டமும் இருக்
கிறது.மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜாதி இந்துக்கள் வாழ்
கின்ற இடத்திலேஅந்த வீடுகளைக் கட்டவேண்டும் என்று சொன்
னார்கள். ஆனால் இந்தத்திட்டமே ஆதிதிராவிடர்நலத்துறையின்
மூலமாகதாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்றஇடத்தில் அவர்களுக்கு
கட்டிக் கொடுக்கின்ற அந்த வீட்டின் பக்கத்திலே, அதே இடத்
திலே இவர்கள் வாழ விரும்பினால் அவர்களுக்கும் இனாமாக
வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் இருக்கிறது. ஆகவே அந்த
மக்கள் இங்கே வந்து வசதியாக வாழக்கூடிய சூழ்நிலை இருக்கு
மானால், அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டமும்
நடைமுறையில் இருந்து கொண்டு இருக்கிறது.

(முற்பகல் 9-50)

திரு. வி. தங்கவேலு : கனம் சபாநாயகர் அவர்களே,
கனம் ஆதி திராவிடர் நலத்துறைஅமைச்சர் அவர்கள் இவ்வளவு
நல்ல ஒரு பதிலைத் தந்ததற்கு நன்றி. இன்றைக்கு டெல்லி
போன்ற மாநகரங்களில், ஜாதி இந்துக்களும்அரிசனங்களும்சேர்ந்து
வாழ்வதற்கேற்றாற்போல் வீடுகளை அழகாக கட்டி வருகிறார்
கள். அப்படிப்பட்ட திட்டத்தை இங்கு அமுல் செய்வதற்கு அந்த
ஆதிதிராவிடக் குடியிருப்புக்களில் வீடு கட்டித் தருவதற்கு
அதிகப் பணம் ஒதுக்கீடு செய்ய முடியுமா என்பதை அறிய
ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே தாட்கோ மூலமாக வீடு கட்டு கின்ற திட்டத்தில் ரூ.4,000 என்று இருந்தது. அதைத் தற்போது தான், 1984-ல்தான் ரூ. 6,000 ஆக உயர்த்தியிருக்கிறோம். நான் கூட மானியக் கோரிக்கையிலே சொல்லும்போது, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கூறிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, வருகின்ற நிதிநிலைக்கேற்ப, ரூ. 10,000-லே கட்டுகின்ற திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப் பிட்டேன். அந்தத் திட்டம் வருகின்றபொழுது, சிறப் பாக அந்தக் குடியிருப்பைப் கட்டிக் கொடுக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**பின்தங்கிய மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி மையங்கள்.**

603—(*வினா எண். 4932) மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியற் கல்லூரிகளில் அனுமதிக்காக நடைபெறும் நுழைவுத் தேர்வுக்கு பின்தங்கிய மாணவர்களுக்கு மாவட்ட வாரியாக பயிற்சி அளிக்க பயிற்சி நிலையங்கள் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அர சிடம் உள்ளதா ?

மாபுமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மாணவர் களுக்கு மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளில் அனுமதி பெற நடத்தப்படும் நுழைவுத் தேர்வுகளுக்குப் பயிற்சி யளிப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதன்படி சென்னை யில் உள்ள தனிப்பயிற்சி நிலையம், திருச்சி ஈ. வே. ரா. அரசு கலைக் கல்லூரி, கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரி, மதுரை மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி ஆகிய நான்கு மையங் களில் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர் களுக்கு நடப்பாண்டு முதல் நுழைவுத் தேர்வுப் பயிற்சியளிக்கப் படும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பிற்பட்ட மாணவர்களுக்கு நுழைவுத் தேர் வுக்கு வருகிற ஆண்டிலே யிருந்து பயிற்சி அளிக்கப்படும் என்ற விவரங்களை அறிவித்தார்கள். மாநிலம் முழுவதற்கும் நான்கே நான்கு மையங்களில்தான் அது தொடங்கப்பட இருப்பதாக



அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆயிரக்கணக்கில் பிற் பட்ட மாணவர்கள் எழுதுகிறபொழுது, இதிலே சேர்க்கப்படுகிற மாணவர்கள் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கும். அந்த எண்ணிக்கை எவ்வளவு? கூடுதலாக பிற்பட்ட மாணவர்கள் பயன்படுகிற வகையில், குறைந்த பட்சம் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் அப்படிப்பட்ட பயிற்சி நிலையங்களை வருகிற ஆண்டிலே துவங்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மையத்திலும் தலா 100 பேர் வீதம் 400 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். ஜூன், ஜூலை மாதங்களில் மூன்று முதல் நான்கு வாரங்கள் வரை இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வரலாறு, நடப்புச் செயல்கள் நிலவியல் மற்றும் பொது அறிவியல் ஆகிய பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியில் சேர மாணவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 9,000க் குள் இருக்க வேண்டும். இது பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட இருக்கிறது. தேவையானால் அதிக எண்ணிக்கை மாணவர்களைச் சேர்ப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 400 மாணவர்களுக்கு என்றுதான் விவரங்களைச் சொன்னார்கள். எப்படியாவது வருகிற கல்வி ஆண்டில், நிச்சய மாக, அதைக் கூடுதலாக்க முயற்சி செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைத்து, அதே போல், இப்படிப் பயிற்சிக்குச் சேர்க் கப்படுகிற மாணவர்களுக்கு அரசு வேறு என்ன உதவிகளை, அவர்களுடைய உணவுக்காகவும், தங்கும் இடத்திற்காகவும்— ஏனென்றால், கிராமங்களிலேயிருந்து வருகிறவர்கள் நகரத்திலே தங்கித்தான் அந்தப் பயிற்சியைப் பெற வேண்டுமென்ற நிலை வரும்போது மிகப்பெரிய சிக்கல் ஏற்படும். ஆகவே, அவர்களுக்கு, உணவு, தங்குவதற்காக ஏதாவது உதவிகளை அரசாங்கம் செய் கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியுள்ள மாணவர்களுக்குப் பயிற்சி மையத்தின் அருகிலுள்ள பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் மாணவர் இல்லத்தில் இலவச உணவு, உறையுள் அளிக்கப்படும். அந்தந்தக் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் தேவைப்பட் டால் பிற கல்லூரிப் பேராசிரியர்கள் ஒத்துழைப்புடன் பயிற்சி அளிக்கப்படும். அதிலே அதிகமான அளவுக்கு மாணவர்கள் வரு வார்களானால், தேவைக்கேற்ப அடுத்த ஆண்டு நாம் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

[1986 ஏப்ரல் 28

வளபன் ஆற்றில் மீன்பிடி பணிகள்.

604—(*வினா எண். 6455) திரு. போ. உத்திராபதி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், தொண்டியகாடு, கற்பகநாதர் குளம், கரையன்காடு பகுதியில் உள்ள மீனவர்கள் மீன்பிடிக்க வசதியாக தூர்ந்துவிட்ட வளபன் ஆற்றை தூர் எடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தற்போது இல்லை.

திரு. போ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தற்போது இல்லையென்று சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி தொகுதியில், தொண்டியக் காடு, கற்பகநாதர் குளம் ஆகியவை கடற்கரை ஓரமாக இருக்கக்கூடிய பிரதேசங்கள். அங்கே யிருக்கக்கூடிய பிற்பட்டவர்கள் அதிகமான பேர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கக் கூடியவர்கள். அந்த வளப நாட்டில், பழைய வாய்க்காலைத் தவிர, புதிதாக ஒரு வாய்க்கால் கடல் வரைக்கும் வெட்டப்பட்டிருக்கிறது. அதை வெட்டியதற்குப் பிறகு, பழைய வாய்க்கால் அப்படியே விடப்பட்டதனால், அந்தப் புது வாய்க்கால் மூலமாக வரக்கூடிய தண்ணீர் பழைய வாய்க்காலில் செல்வதனால் அங்கிருந்து வரக்கூடிய படகு புது வாய்க்கால் வழியாக கரைக்கும் வரமுடியாத நிலைமை தற்போது இருப்பதனால் மீன்பிடிக்கக்கூடியவர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் தற்போது இல்லாவிட்டாலும் கூட அந்த விவரங்களைச் சேகரித்து, அந்தப் புதிய வாய்க்காலை மேலும் தூர் எடுத்து, மீன்பிடித்து வரக் கூடிய படகு கரைக்கு வரக்கூடிய நிலையை உருவாக்கித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில்கூட இதுபற்றி நான் தெளிவாக உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். கடலோரங்களிலே இருக்கின்ற பல்வேறு இடங்களில், காட்டாற்று முகத்துவாரங்களில் மண் தேங்கி விடுவதால் வெளியிலேயிருந்து படகுகள் கடலுக்குச் செல்லமுடியாத ஒரு நிலைமை இருப்பதையும் அறிந்து இதுபற்றி முழு விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அந்த முகத்துவாரப் பகுதியில் படகுகள் நாராளமாகச் செல்வதற்கு தூர் வாருகின்ற ஒரு பணியை இவ்வரசு மேற்கொளவதற்குத் தேவையான பரிசீலனை நடந்து வருகிறது.



1986 ஏப்ரல் 28]

திரு. போ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதில் சொல்கிறபோது அமைச்சர் அவர்கள் பொதுவாகச் சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம் பொதுவாக அமைச்சர் அவர்கள் பார்த்துவிட்டு வந்த இந்தக் குறிப்பிட்ட பகுதி என்பது அமைச்சர் அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்த பகுதியாகும். இந்த தொண்டிய நாட்டுப் பகுதியைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி என்று சொல்லி விடாமல் அமைச்சர் அவர்கள் அங்கே இறால் குஞ்சு வளர்ப்பதை பார்க்கவருகிறபோதுகூட அதை நேரில் பார்த்துவிட்டு வந்தார்கள். இந்த தொண்டிய நாட்டின் இன்னொரு பகுதியில் மரைக்காதுறை ஆறு ஒன்று இருக்கிறது. அதிலே 3 கிலோ மீட்டர், அந்த ஆற்றை வெட்டிக் கொடுக்காததனால், தில்லைவளாகம், இடும்பவனம் போன்ற பகுதிகள்லுள்ள பிற்படுத்தப்பட்ட மீனவர்கள் 100 கிலோ மீட்டர் சேற்றிலே நடந்து, 6 மணி நேரம் நடந்து அப்புறம் கடலுக்குச் சென்று மீன்பிடித்து மறுபடியும் 6 மணி நேரம் சேற்றிலே நடந்து கரை சேரக்கூடிய ஒரு கஷ்டமான சூழ்நிலை இருக்கிறது. இதை அமைச்சர் அவர்களும் நேரிலே பார்த்து வந்திருக்கிறார்கள். ஆகவே இந்த தொண்டிய நாட்டுப் பகுதி மீது விசேஷ கவனம் எடுத்துக்கொண்டு அந்தப் பகுதி மக்களுக்கு இந்தமாதிரி காரியங்களைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் உத்திர பதி அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் கேள்வியாகத்தான் வைக்கிறார்களே தவிர, இது கோரிக்கையாக வரவில்லை. இது கோரிக்கையாக வந்திருக்குமேயானால் இதுசம்பந்தமாக இந்நேரம்கூட நாம் அந்த தூர் எடுக்கிற பணியை மேற்கொண்டிருக்கலாம். என்றாலும் இதை முடிந்த வரையிலே அந்தத் தொண்டியநாடு, கற்பகநாதர் குளம், கரையன்காடு பகுதியிலே உள்ள ஆற்றை தூர் எடுக்கிற பணியை இந்த ஆண்டில் முடிந்தால் தேசிய கிராமப் புற வேலைவாய்ப்பு திட்டப் பணிகள் மூலமாகச் செய்யமுடியுமா என்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து ஆலோசிக்கலாம் என்று இருக்கிறோம். அந்த வகையிலேயும் பார்ப்போம். மீன் வளத்துறை மூலமாகவும் இதுபற்றி அதிக கவனம் எடுத்துக்கொள்ளலாம்.

பெருங்காமநல்லூர் கால்வாய் திட்டம்.

605—(*வினா எண். 4390) திரு. பி. சே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுக்காவில் "பெருங்காம நல்லூர் கால்வாய் திட்டம்" ஏதும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தினை 58 கிராம மக்கள் பகுதிகளின் திட்டம் என்ற முறையிலே—ஒரு கோரிக்கையாக அவர்கள் முன் வைத்து—இங்கே இன்றைக்கு அந்தத் திட்டம் ஆய்விலே இருக்கிறது. அங்கே இன்றைக்கு அதை சர்வே கூட செய்து வந்துகொண்டிருக்கிறார்கள். அன்றைக்கு ஆங்கிலேயருடைய ஆட்சியிலே, சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் என்கிற முறையில் அந்த பெருங்காமநல்லூர் பகுதி மக்கள் அங்கே நடந்த அந்த துப்பாக்கிச் சூட்டிலேயெல்லாம் பலர் இறந்திருக்கிறார்கள் என்று சொல்லி அந்தப் பகுதி மக்களுடைய மேம்பாட்டுக்காக அந்தத் திட்டத்தைச் செய்யவேண்டுமென்று சொல்லி அன்றைக்கு இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினராக இருந்த அமரத் தலைவர் மூக்கையாத் தேவர் அவர்கள் அன்றைக்கே இந்தத் திட்டத்தை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் பல்வேறுவழியாகப் பிரிக்கப்பட்டாலும் மீண்டும் அந்தப் பகுதிக்குத் தேவை என்பதைத்தான் அந்தக் கிராம மக்கள் மீண்டும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இன்றைக்கு இருக்கக்கூடிய வைகை அணை கூட அந்தப் பகுதி மக்களுக்காகத்தான், அந்தப் பகுதி மேம்பாட்டிற்காகத்தான் அன்று அமைக்கப்பட்டது. எனவே வருகின்ற நேரத்திலே, நவீனப் படுத்துகின்ற நேரத்திலேயாவது இதுமாதிரியான கால்வாய்த் திட்டத்தை அந்தப் பகுதி மக்கள் பயன்படுத்துகின்ற வகையிலே, அவர்களை மேம்படுத்தக் கூடிய வகையிலே அது செய்யப்படுமா ? அதுபற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படுமா என்று அமைச்சர் அவர்களிடத்திலே கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 58 கிராம மக்கள் பற்றிய ஆய்வு ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டு வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அவர்களுடைய மூலக் கேள்வியிலே, அவர்களால் கேள்வி கேட்கப்பட்ட பெருங்காமநல்லூர் கால்வாய் திட்டம் என்ற ஒரு தனித் திட்டம் இருப்பதாகத்தான் தெரியவில்லை என்று சொன்னேனேயொழிய மொத்தமாக 58 கிராமங்கள் என்ற பெரிய ஒரு திட்டம் இல்லை என்று சொல்லவில்லை. திட்டம் ஆய்வில் இல்லை என்று சொல்லவில்லை. அந்தப் பெரியதிட்டத்திலே ஒரு அங்கமாகத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டிய அந்தத் திட்டம் அமைந்திருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே கோரிக்



கையில நியாயம் இருக்குமானால் அதை நிறைவேற்றுவதற்
காக இந்த அரசு இருக்கிறது என்ற முறையில் ஆய்வுகளின்
முடிவின் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்
கொள்ளப்படும்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஏற்கனவே உலக வங்கியின் உதவியோடு
பெரியார் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்களின்
மூலம் பாசன வசதிக்காக நாம கால்வாய்கள் எடுத்துக்கொண்டு
இருக்கிறோம. அந்த பெரியார் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம்
எடுக்கப்படாமல் விடுபட்டுப்போன கண்மாய்களை உலக வங்கியின்
உதவி இல்லாவிட்டாலும் கூட தமிழக அரசு தன் சொந்த நிதி
யிலிருந்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றும் என்று ஏற்
கனவே இநத அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
உறுதி அளித்து இருக்கிறார்கள். அது எப்போது எடுத்துக்கொள்
ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவியோடு கால்வாய்கள்
சீரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன. அதிலே முதல் கட்டம்
முடிந்து விட்டது. இரண்டாவது கட்டப் பணி நடைப்பெற்றுக்
கொண்டு வருகின்றது. ஆனால் எந்த ஒரு பணியிலும்
தொடர்ந்து கூடுதலாக பாசன பரப்புக்கு, பாசனப் பகுதி நிலங்
களுக்குபாசன வசதி செய்து தரவேண்டும் என்றால் ஏற்கனவே
நாம் மேற்கொண்டு இருக்கிற திட்டத்தின் வாயிலாக அந்தநோக்
கத்தின் அடிப்படையில், அந்த நிலங்களுக்கு பாசன வசதி தரவேண்
டும்என்ற கருத்தின் அடிப்படையில் எந்த ஒரு திட்டம் திட்டப்பட்
டதோ அந்தப் பகுதிகள் பாசன வசதியை பெறுகிறதா என்று
முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குப் பிறகு தான்
அந்தப் பகுதியில் அந்த திட்டத்தின் மூலம் அவர்களின் தேவையை
நிறைவேற்றுகின்ற அளவுக்கு பாசன வசதியை பெறுகின்றன
என்ற ஒரு தெளிவான முடிவுக்கு விவரத்தைப் பெற்ற பிறகு தான்
கூடுதலான பகுதிகளுக்கு அந்தத் திட்டத்தின் பயனைக் கொண்டு
செல்லலாமா என்று பார்க்க முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலை
யில்தான் திட்டங்களை நிறைவேற்ற முடியும். அவ்வாறு நீட்டிக்
கிற நேரத்தில்தான் தமிழக அரசு தன்னுடைய சொந்த நிதி
யிலிருந்து அதைச் செய்யும் என்று இந்த அரசு சொல்லி இருக்கி
றது. ஆகவே, உடனடியாக இந்தத் திட்டத்தை மேற்கொள்
ளுவதற்கு இல்லை. சற்று காலம் ஆகும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

[1986 ஏப்ரல் 28

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருங்காமநல்லூர் கால்வாய் திட்டம் எனது நிலக் கோட்டை தொகுதியில் வத்தலகுண்டு ஒன்றியத்தில் கடைசிப் பகுதியான ஒரு மேடான பகுதியான விருப்பாடு பகுதி ஆகும். அந்தப் பகுதியில் தான் இந்த பெருங்காமநல்லூர் கால்வாய் திட்டம் வருகின்ற ஒரு திட்டமாக இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தின் வாயிலாக வருகின்ற தண்ணீரை இந்தப் பகுதியில் உள்ள உருதுநாடு, ராஜராணிகோட்டை, வளையப்பட்டி, விருப்பாடு போன்ற பகுதிகளில் உள்ள கண்மாய்களுக்கு அந்தத் தண்ணீரை கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களை டம் ஏற்கெனவே மனுக்கள் கொடுத்து இருக்கிறேன். ஆகவே அதையும் சேர்த்து இந்தத் திட்டத்திற்குள் செயற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா என அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, ஒரு நீர் நிலையின் வாயிலாக நன்மை கிடைக்கும் என்ற முடிவுக்கு அரசு வந்தாலோ, அல்லது நன்மைகள் கிடைக்குமா என்ற ஆய்வை மேற்கொள்ள வேண்டும் என்று ஒரு ஆணையை அரசு பிறப்பித்தாலோ அந்தத் திட்டத்தின் வாயிலாக எவ்வளவு அதிகபட்ச வசதியை அல்லது நன்மையை அந்தப் பகுதி மக்கள் பெறமுடியுமோ அந்த அளவுக்கு திட்டம் நீட்டிக்கப்பட வேண்டும், விஸ்தரிக்கப் பட வேண்டும் என்று ஆய்வு செய்ய வேண்டும் என்று தான் இந்த அரசு கருதுகிறது. அந்த முறையில் அந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய தண்ணீர் அளவு, இருக்கக்கூடிய நீர் அமைப்பு, நீர் அளவைகள் இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு எவ் வளவு தூரத்திற்கு அதிகமாக நன்மைகள் கிடைக்க முடியுமோ அந்த அளவுக்கு நன்மைகள் கிடைக்கக்கூடிய அளவுக்கு ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு உத்திரவிடும்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் திட்டம் உண்மையிலேயே நியாயமாக இருந்தால் அது அந்த மக்களுடைய மேம்பாட்டிற்காக செய்து தரப்படும் என்று சொன்னதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே பகுதியில் காட்டாற்று வெள்ளம்--நேற்றைய தினத்திலே இந்த வறட்சியான நேரத்தில்கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொகுதியிலே நல்ல மழை பெய்திருக்கிறது. அதன் காரணமாக எங்கள் பகுதியின் வழியாக காட்டாற்று வெள்ளம் வருகிறது. இடையில் தடைப்பட்டு நின்று கொண்டிருக்கின்ற



1986 ஏப்ரல் 28]

திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், இன்னும் உசிலம்பட்டி மக்களுக்கு அது பயன்படும் வாய்ப்பு இருக்கிறது. எனவே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, கேள்வியையொட்டி பல்வேறு திட்டங்களை மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர் 24 மணி நேரம் பொறுத்திருந்தால் நன்றாக இருக்கும். நாளைய தினம் மானியக் கோரிக்கை வருகிறது. இந்த வினாவை அடிப் படையாக வைத்து, நாளையதினம் அவற்றுக்கான விரிவான அளவில் அரசு பதில் கொடுக்கப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, உலக வங்கி நிதியுதவியோடு இப்போது போடப்பட்டு வருகின்ற பெரியார், வைகை ஆயக்கட்டுப் பகுதிகளில் மிச்சப்படுகின்ற அதிகமான தண்ணீரைப் பெறுவதற்கு, ஏற்கனவே 18-ஆம் கால்வாய், சண்முகாநதித் திட்டங்கள் முடிவிலே இருந்துகொண் டிருக்கின்றன. அவைகளை மேற்கொண்டு, அந்த நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்துவதற்கு அல்லது அதற்கும் கொஞ்சம் பங்கு கொடுக்கப்படுமா என்பதை அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, தனியாக நம்முடைய தேனியார் அவர்கள் சண்முகாநதியின் பால் அக்கறை கொண்டவர் என்பதை நான் அறிவேன். ஆகவே அந்த விவரம் தேவைப்படுகிறது என்பதை அறிவேன். இந்தக் கேள்வியைப் பொறுத்த மட்டில், மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்பதை நான் தெரிவித்துக் கொண்டு, நாளையதினம் வரக் கூடிய மானியத்தில் பதில் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, ஏற்கனவே வைகை அணையிலிருந்து தான் திருமங்கலத்திற்குக் கிட்டத்தட்ட 10,000 ஏக்கருக்கு தண்ணீர் கொடுக்கப்படுகிறது. இந்தப் பகுதியில் வரக் கூடிய அந்த உபரித் தண்ணீரைக் கூட, நிலக்கோட்டை, வத்தலகுண்டு பகுதிகளுக்குக் கொடுக்க வேண்டும். அங்கே கொண்டுபோவதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்தப் பகுதி மக்களுக்குப் பயன் அடையக் கூடிய வகையில் செய்துவிட்டு, பிறகு அங்கே அவர்கள் பயன டையமுடியாமல், பிறகு அதை திருப்பி எடுத்துச்செல்ல வேண்டு மென்றால், அங்கேயிருக்கிற மக்கள் அதை எதிர்காலத்தில் பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்று அமைச்சரவர்கள் கருதுகி றார்களா?

[1986 ஏப்ரல் 28

அதுமட்டுமல்லாமல், இந்த வைகை மேம்பாட்டுத் திட்டத்தில் 4,000 ஏக்கர்களுக்கு தண்ணீர் கொடுப்பதாகச் சொல்லி, ரூ. 4 கோடி சாங்ஷன் செய்யப்பட்டு, அது உலக வங்கிக்கு கட்டுப் படியாகக் கூடிய திட்டமாக இல்லை என்று நிறுத்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி உலக வங்கி அதை நிறுத்தியிருக்கு மானால், நம்முடைய மாநில அரசுத் தொகையிலிருந்து அந்தப் பணத்தை செலவு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதுபோன்று, உலக வங்கியின் மூலம் எடுத்து, திட்டத்தை தீட்டுகின்ற நேரத்தில், ஒருசில கோட்பாடு களின் அடிப்படையில் அந்தத் திட்டத்தை தீட்டி செய்கிறார் கள், அல்லது நாம் தீட்டுகின்ற திட்டத்திற்கு அவர்கள் ஒப்புதல் அளிக்கிறார்கள் . அந்தத் திட்டத்திற்கு அவர்கள் ஒப்புதல் வழங்கிய பிறகுதான் அவர்களுடைய உதவியோடு இணைந்து செய்யக் கூடிய ஒரு திட்டமாக அது உருவாகும். அந்தத் திட்டத்தின் வாயிலாகக் கிடைக்கக் கூடிய அளவிற்கும் மேலாக தண்ணீர் கிடைக்குமானால், மிச்சப்படுத்தக் கூடிய தண்ணீரை நாம் நம்முடைய சொந்த நிதிபோட்டு, கூடுதலாக சில திட்டங் களைத் தீட்டி செயல்படுத்த முடியும். ஆனால் கூடுதலாக தண்ணீர் அப்படி கிடைக்கிறதா, இல்லையா என்பதைப் பார்க்க முதலில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். அந்தத் திட்டத்தை நிறைவேற்றிய பிறகுதான், ஒரு ஆண்டுகாலம் பொறுத்திருந்து, அந்தத் திட்டத்தின் வாயிலாகக் கிடைக்கக் கூடிய நன்மை போக, எஞ்சிய தண்ணீர் வீணாகிறதா என்று பார்க்கவேண்டும். அதற்குப் பிறகு தான் கூடுதலான திட்டத்தை மேற்கொள்ள முடியும். அப்படி மேற்கொள்ளக் கூடிய கால கட்டத்தில் தான் அந்தத் திட்டத்தை அரசு ஆய்வு செய்யமுடியும். ஆகவே இவ்வளவு சூழ்நிலைகளில் இருக்கக் கூடிய தன்மைகளில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து இதை வலியுறுத்துவது நியாமாக இருக்காது என்பதை அவருடைய கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன்.

**பூலா ஏரி வாய்க்கால் திட்டப் பணிகளுக்குக் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள்.**

606— (*வினா எண். 8980)— திரு. செ. செம்மலை : மாண்பு மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் பூலா ஏரி வாய்க்கால் திட்டத்திற்கு கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்காததால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை அரசு அறியுமா ?



1986 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், ஈட்டுத்தொகை கொடுக்க அரசு எடுத்து உள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) : இத் திட்டத்திற்கு 3.73 ஏக்கர் புன்செய் நிலத்தை கையகப் படுத்த நில எடுப்புச் சட்டத்தின் 4 (1)-வது பிரிவின் கீழான முன் மொழிவுகளுக்கு அரசு விரைவில் ஒப்புதல் அளிக்கும். நில எடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தி விரைவில் இழப்பீட்டுத் தொகை வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப் படுவார்.

(முற்பகல் 10-10)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கையகப்படுத்தப்பட்ட அந்த நிலங்களுக்கு நட்ட ஈடு கொடுக்கப்படுகிறது என்று சொன்னாலும் இன்றைக்கு இருக்கிற நிலையில் நட்ட ஈடு கொடுப்பதிலே வீணாக கால தாமதமாகிக் கொண்டிருக்கிறது என்பது யதார்த்தமான உண்மை. காரணம் வருவாய்த் துறையும் பொதுப் பணித் துறையும் இணைந்து செயலாற்ற வேண்டிய நிலை இருக்கிறது. இரண்டு துறைகளும் இணைந்து கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நட்ட ஈடு கொடுக்கிற போது குறிப்பிட்ட ஒரு கால அளவு நிர்ணயம் செய்து அதற்குள்ளாக கட்டாயமாகக் கொடுத்தாக வேண்டு மென்ற முறையிலே விரைவாக நட்டஈடு கொடுக்கச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின் அடிப்படையில் அறிக்கைகள் அனுப்ப வேண் டும். அந்த அறிக்கைகள் அனுப்பிய பிறகு உரிய முறையில் விளம்பரப்படுத்த வேண்டும். அதற்குப் பிறகு ஆட்சேபணை கள் வருகின்றதா என்று பார்க்க வேண்டும். அப்படி வந்த தற்குப் பிறகு விசாரிக்க வேண்டும். இப்படிப் படிப்படியாக பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த வகையில் தான் சட்டங்களும் விதிமுறைகளும் இருக்கின்றன. அதிலே மாற்றம் செய்ய வேண்டுமானால் பொதுப் பணித் துறையே தனியாகச் செய்துவிட முடியாது. அதைப் போலவே வருவாய்த்துறையும் தனியாகச் செய்துவிட முடியாது. நாட்ட ளவில் மாற்ற வேண்டுமென்றிருக்கிற விதிமுறைகள் ஆகும். அது மிகப் பெரிய பணி. ஆகவே அந்தப் பொறுப்பை உறுப் பினர் அவர்கள் என்னிடம் ஒப்படைக்கப் பார்க்கிறார்கள். அந்தப் பொறுப்பை அவர்களே ஏற்றுக் கொண்டு அதை மாற்று வதற்கு முன் மாதிரியாக செய்கிற முறையில் செய்தால் எனக்கும் பெரிய தலைவலியை நீக்குவதாக இருக்கும்.

[1986 ஏப்ரல் 28

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இந்த ஆர்.
எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட இந்தப்
பணி முடிவடையாமல் இருக்கக் காரணம் நிதிப் பற்றாக்குறை
தான் என்று சொல்கிறார்கள். ஆகவே தேவையான நிதியை
ஒதுக்கி, இந்த ஆண்டிலேயே நிதியை ஒதுக்கி அந்தப் பணியை
விரைவுபடுத்த அமைச்சர் அவர்கள் முயற்சியை மேற்கொள்
வார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்
களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் வேலை
வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் இது வரக்கூடிய திட்டம்
ஆகும். இதற்குத் திட்ட மதிப்பீடு ரூ. 22 லட்சம் ஆகும்.
இந்தத் திட்டத்தை நாம் மேற்கொள்வதற்கு நிலத்தைக் கையகப்
படுத்த வேண்டிய பணிகள் போன்ற பணிகள் தேக்கத்திலே
நின்று விட்டன. எனினும் நம்முடைய பொதுப் பணித் துறை
யைச் சேர்ந்த அதிகாரிகள் 28–5–1984 அன்று பணியைத் துவக்கி
னால் நல்லது என்று தொடர்ந்து பணியைச் செய்கிறபோது
ஆர். எல். இ. ஜி. பி.-யிலிருந்து வரக் கூடிய நிதி வருவதற்குச்
சற்றுக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. நிறுத்திய பணிகளை
விரைவில் நிறைவேற்ற, அந்தப் பணிகளின் நன்மைகள் மக்க
ளுக்குக் கிடைக்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது
என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் வி. பி. சிந்தன்,
ப. பொன்னுரங்கம், பரிதி இளம்வழுதி ஆகியோர் ஸ்டான்லி
பிரச்சனையைப் பற்றி அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆனால்
அமைச்சர் அவர்கள் வரவில்லை....

திரு. அ. ரகுமான்கான் : நான் கொடுத்து பத்து நாளாகி
விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குக் காலை
யிலேதான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.



986 ஏப்ரல் 28]

திரு. அ. ரகுமான்கான் : எனக்கும் வாய்ப்புத் தர
வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மறு பரிசீலனை செய்
தால்தான் எடுக்க முடியும். அவர்களுக்கு வாய்ப்பு இருந்தால்
உங்களுக்கும் வாய்ப்பு உண்டு.

டாக்டர் பே. பி. இராமலிங்கம் : * * * *

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் வேண்டாம்.
இது கட்சிப் பிரச்சனை அல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு
எடுக்கப்படும். இதுவரை பேசியவை எல்லாம் நீக்கப்படுகின்றன.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, நான்
உங்களிடமிருந்து ஒரு விவரத்தை அறிந்து கொள்ள விரும்புகி
றேன். மாண்புமிகு உறுப்பினர் தங்கவேலு அவர்கள் பேசும்
போது, கனம் ஸ்ரீ என்று சபாநாயகர் அவர்களையும், அமைச்சர்
அவர்களையும் அழைக்கிறார். மாண்புமிகு என்று தமிழில் அற்புத
மான வார்த்தை இருக்கும் பொழுது அவ்வாறு அழைக்கலாமே.
அதை விடுத்து அவர் கனம், ஸ்ரீ என்று அழைக்கிறாரே இது
சபை மரபுதானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படி நம்முடைய
வரைமுறை இருக்கிறதோ அதன் பிரகாரம் மாற்றிவிடலாம்.

திரு. பரிதி இளம்வழுதி : தலைவர் அவர்களே, ஒரு சின்ன
சந்தேகம். தெரிந்துகொள்ள விரும்புகிறேன். யாருக்காகவும்
என்னுடைய கருத்துக்களிலிருந்து நான் பின்வாங்க மாட்டேன்
என்று நீங்கள் சொன்னீர்கள். ஏற்கனவே ஒரு தீர்ப்பை ரத்து
செய்து இருக்கிறீர்கள். அதேபோல ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சித்
துணைத் தலைவர் பேசிய காரணத்தினால் தான். அதையும்
சொல்லி விட்டேன். இந்தப் பிரச்சனை வேண்டாம். ரூலில்
பேசலாம். நிலைநாட்ட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால்
நிலைநாட்டத் தயார்.

திரு. வி. தங்கவேலு : ப்ளீஸ் அலவ் மி டு டாக். கனம்
சபாநாயகர் அவர்களே, ............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவரை வட நாட்டிற்கு
அனுப்புங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

[1986 ஏப்ரல் 28

## 3. கவன ஈர்ப்பு.

(அ) பக்கிங்காம் கால்வாய் குறுக்கே மைலாப்பூரில் முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவை இணைக்கும் பாலம் கட்டும் பணி.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே மைலாப்பூரில் முண்டகக்கண்ணி அம்மன் கோயில் தெருவை இணைக்கும் பாலம் கட்டும் வேலை ஆரம்பித்து ஓராண்டுக்கு மேலாகியும், எந்தவித முன்னேற்றமும் இல்லாததால் போக்குவரத்து தடைபட்டு அங்கு வாழும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடைஞ்சல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே, மைலாப்பூரில் முண்டகக் கண்ணி அம்மன் கோயில் தெருவை இணைக்கும் பாலம் கட்டுக் வதற்காக ரூ. 35 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கு அரசால் அனுமதியும் பாதி மானியம் மற்றும் பாதி கடன் அடிப்படையில் நிதி உதவியும் 27–12–83 நாளிட்ட அரசு ஆணை நிலை எண். 1951-ல் வழங்கப்பட்டது. பின்னர், ஒப்பந் தங்கள் வரவேற்கப்பட்டு ரூ. 31.31 இலட்சத்திற்கு ஒப்பந்தக் காரர், திரு. வி. இரங்கநாதன் அவர்களுக்கு வேலை அளிக்கப் பட்டது. 17–10–84-ல் இப்பணி துவங்கப் பெற்று, பாதசாரி மற்றும் மிதி வண்டி போக்குவரத்திற்காக தற்காலிக மர நடை பாலம் கட்டி முடிக்கப்பட்டது. பின்னர், பழைய பாலம் இடிக் கும் பணி தொடங்கப்பட்டது. பாலத்தின் இரு மருங்கிலும குடிசைப் பகுதியின் ஆக்கிரமிப்பு இருந்த காரணத்தால், பாலத்தை இடிக்கும் பணி சுமார் மூன்று மாத காலத்திற்கு தடைபட்டது. ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்திய பிறகு, பாலத்தை இடிக்கும் பணி தொடரப்பட்டு துரிதமாக நடைபெற்றது.

சோதனை ஆழ்துளை சான்கிரீட் குழாய் ( Test Pile) தயாரிக்கப்பட்டு பாலப் பகுதியில் இறக்கப்பட்டது. மேற்படி கான்கிரீட் குழாய் பாரம் ஏற்கும் திறன், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தினரால் சோதிக்கப்பட்ட பின், எஞ்சியுள்ள ஆழ் துளை கான்கிரீட் குழாய் தயாரிக்கும் வேலை மற்றும்



பூமிக்குள் இறக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதற் கிடையே நவம்பர் 1985-ல் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக மேற்படி பணி சுமார் இரண்டு மாத காலத்திற்கு தடைப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள ஆழ்துளை கான்கிரீட் குழாய் தயாரிக்கும் நேரத்தில், மேற்படி பாலத்திற்கு தேவை யான 24 கான்கிரீட் உத்திரங்கள் (Prestressed Concrete Beams) அண்ணா சாலையில் உள்ள நெடுஞ்சாலை துறையினரின் வார்ப்புக் கூடத்தில் தயாரிக்கப்பட்டு பாலப் பகுதிக்கு எடுத்துச் செல்லப் பட்டது. ஆழ் துளை கான்கிரீட் குழாய்களை இணைத்து உத்திரங் களும் மற்றும் கான்கிரீட் தளம் போடும் வேலைகளும் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது முடிவுற்ற பின், பாலத் தின் பிரதான சுவர்களை எழுப்பி அதன்மீது உத்திரங்கள் பொருத்தப்பட்டு மற்றும் இணைப்புச் சாலை வேலைகளும் சேர்ந்து முடிவுற, ஏறக்குறைய இரண்டு மாத காலத்தில் பாலம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்துக்கு திறந்து விடப்படும்.

[முற்பகல் 10-30]

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 1984–வது ஆண்டு கட்டப்பட்ட தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சமீபத்திலே பெய்த மழையின் காரணமாக நீரின் உள்ளே மரத்தூண்கள் இருக்கின்ற காரணத் தால் பாதிக்கப்பட்டு மரப்பாலம் ஆடுகிற நிலைமையில் இருக்கிறது. பிரதான பாலம் கட்டி முடிக்கப்படும் வரையில் அந்த மரப்பாலத்தைத் தற்காலிக மாகச் சரி செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மரப்பாலத்தைச் சரி, செய்வதை விட அந்தப் பிரதான சாலை வேலையே இன்னும் இரண்டு மாதத்திற்குள்ளாக முழுமையாகக் கட்டி முடிவடைந்துவிடும் என்றும், போக்குவரத் திற்காக அது திறந்துவிடப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித் திருக்கிறார்கள். எனவே மரப்பாலத்தைச் சரி செய்வதைவிட புதிய பாலத்தையே கட்டிவிடுவதுதான் சிறந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி பா. வளர்மதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு மாதத்திற்குள்ளாகக் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்று அதிகாரி கள் தெரிவித்திருப்பதாகச் சொன்னார்கள். நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே அந்த மரப்பாலத்திற்கு அருகே மிகப் பெரிய மரம் ஒன்று இருக்கிறது. அந்த மரத்திற்கு அருகே மரப்பாலத்தைக் கடக்கிற பாதையில் மின்சார விளக்கு

[திருமதி பா. வளர்மதி] [1986 ஏப்ரல் 28

வசதி இல்லை. அந்த மரம் அங்கே இருப்பதன் காரணத்தால் வயது முதிர்ந்தவர்களும், சைக்கிளிலே செல்பவர்களும் இரவு நேரத்திலே அந்தப் பாதையைக் கடக்கின்றபோது மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. விபத்திற்குள்ளாகக்கூடிய சூழ் நிலையும் இருக்கிறது. ஆகவே அவசரமாக அந்த மரத்தை அகற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மரத்தை அகற்றுவதை விட அங்கே விளக்கு வசதி அமைத்து வெளிச்சத்தை ஏற்படுத்தினால் போகிறவர் களுக்கும், வருகிறவர்களுக்கும் உதவிகரமாக, நன்மையாக இருக்கும். எனவே, அதற்குண்டான ஏற்பாடு மாநகராட்சி யால் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) குடிசை மாற்று வாரியம் இராயபுரம் தொகுதியில் வீடுகள் கட்டுவது குறித்து.

திரு. ப. பொன்னுரங்கம்ம : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ''சென்னை, இராயபுரம் தொகுதி 6-வது வட் டம், காசிபுரம், 'ஏ' பிளாக் பகுதியிலுள்ள நிலச் சொந்தக் காரர்களுக்கு (பட்டா உடையவர்கள்) எந்தவித நிவாரணமும் வழங்காமல் அந்நிலங்களைக் கையகப்படுத்த தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளபடியால் அப்பகுதி வாழ் நிலச் சொந்தக்காரர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதி துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

ாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி நிலம் கையகப்படுத்தப்படவில்லை.

சென்னை, இராயபுரம் தொகுதி 6-வது வட்டம் காசிபுரம் 'ஏ' பிளாக் என்ற இடத்தில் குடிசைப்பகுதி மாற்று வாரியம் 420 குடியிருப்புகள் கட்ட 1984 ஆம் ஆண்டில் திட்டமிட்டது. இந்த இடத்திற்கு ''பவர் குப்பம்-காசிபுரம் 'ஏ' பிளாக்'' என்று பெயர். இந்த நிலம் அரசாங்கத்திற்கு சொந்தமானது. இதில் 276 குடியிருப்புகள் 1986 ஆம் ஆண்டு மார்ச் முடிய கட்டி முடிக்கப்பட்டன. மீதம் உள்ள 144 குடியிருப்புகள் கட்டு வதற்கு தேவையான நிலத்தில் வசிப்பவர்கள் ஒரு சிலர் தங்க ளுக்கு வட்டாட்சியாளரால் மனை பட்டா வழங்கப்பட்டதாக தெரிவித்து உள்ளார்கள். ஆகையால், இது குறித்து வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு செய்யப்படுகிறது. எனவே தற்போது இவர்களுக்கு நிவாரணம் வழங்கும் அவசியம் எழ வில்லை.



1986 ஏப்ரல் 28]

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே குடிசைமாற்று வாரியத்தால் வீடு கட்டுகிற அதே நேரத் தில் அந்த நிலத்தை ஒட்டியே சில பட்டாதாரர்கள், பட்டா நிலத்துக்குச் சொந்தக்காரர்கள். அவர்கள் தங்களுக்கு குடிசை மாற்று வாரியம் போல் அல்லாமல் தனியாகவே வீடு களைக் கட்ட, கடனாக எல்.ஐ.ஜி. போன்ற ஸ்கீம் மூலமாக அரசின் மூலம் அமைக்க வேண்டும் என்று கூட அமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பம் எல்லாம் போட்டிருப்ப தாக நான் அறிகிறேன். கணக்கெடுத்தால் அவர்கள் 20 அல்லது 30 பேர்தான் இருக்கக்கூடும். எனவே உண்மையிலேயே பட்டா உடையவர்களைக் கணக்கெடுத்து அவர்களுக்கு அவர்களுடைய விருப்பம் போல் அதே இடத்திலே எல்.ஐ.ஜி. என்ற அமைப்பிலே வீடுகளைக் கட்டித் தர அரசு முன்வருமா ?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது மீதம் உள்ள 144 வீடுகளை அங்கே கட்ட வேண்டும். அங்கே 4 பேர்கள்தான் அந்தப் பட்டாவைக் கையிலே வைத்துக்கொண்டிருப்பதாகக் குறிப்பு வைத்திருக்கிறார்கள். மீதி 8 பேர் தீ விபத்தில் எரிந்துவிட்ட தாகச் சொல்கிறார்கள். ஒட்டுமொத்தமாக இருக்கிற கருத்தி தின் அடிப்படையில் பார்க்கிறபோது 12 பேர் பட்டா நிலம் வைத்திருப்பதாகவும். அதிலே அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்றும் சொல்லுகிற கருத்து இருக்கிறது. அந்த 144 வீடு களைக் கட்டுகின்ற ஸ்கீமிலே மாற்றம் செய்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல் வது போன்ற அந்த எண்ணிக்கையைக் கணக்கெடுத்து அங்கே ஏதாவது மாற்று ஏற்பாட்டைச் செய்வதற்கு, அதை அரசாங்கம் உருவாக்குவதற்கு முடிந்தால் ஏற்பாடு செய்யும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரிய வீடுகளைக் கட்டுவதற்கே அவர்கள் தடையாக இருக்கிறார்கள். அந்தப் பட்டாதாரர்கள் எங்களுக்கு அதிலே தனியாக வீடு வேண்டு மென்று கேட்கிறார்கள். அதனால் அந்த ஸ்கீமே ஹெல்ட் அப் ஆகி இருக்கிறது. அதிகாரிகளும், கான்ட்ராக்டர்களும் திணறு கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் இன்னொரு வேலை யும் செய்ய இருக்கிறார்கள். இப்போது என்னுடைய கையிலே ஒரு ஸ்லிப் இருக்கிறது. தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனை கழகத்தை அவர்கள் அணுகி இருக் கிறார்கள். அவர்கள் ஸ்டே வாங்க இருக்கிறார்கள். வேண் டாம், அரசோடு ஒத்துப் போங்கள் என்று நானே சொல்லியிருக் கிறேன். ஆகவே இதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்ற தகவலை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிப்பதன் மூலம் குடிசைமாற்று

வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட ஏதுவாக இருக்கும். தடை ஏற்படாது. தடை ஏற்படுத்தக்கூடாது என்று சம்பந்தப் பட்டவர்களுக்கு, அவர்களுடைய கோரிக்கைகள் உரிய முறை யில் கவனிக்கப்படும் என்று ஆணை மூலமாக தகவல் தெரிவிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெருந்தன்மையாக அந்த இடத்தில் ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியதற்கு நன்றி. அங்கே அவர்கள் மாற்றுக் கருத்துத் தெரிவித்தாலோ அல்லது நீதிமன்றம் சென்று தடை ஆணை வாங்கினாலோ திட்டம் நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற் படும். அதைத் தடுக்கக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவருக்கு நான் சட்டமன்றத்தில் கூறிய பதிலையே அவர்களுக்கு வாக்குறுதி யாக அவர் கூறலாம். அந்த அடிப்படையில் உரிய நடவடிக்கை யை இந்த அரசு எடுக்கும்.

4. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சார்பாக அக்குழுவின் கீழ்க்கண்ட 29-வது மற்றும் 30-வது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன் :

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் வனம் மற்றும் மீனளத்துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை.

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) போக்குவரத்துத் துறை பற்றிய பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பதாவது அறிக்கை.

5. வரவு-செலவுத் திட்டம், 1986–87, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 1—நிலவரித் துறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,87,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழை ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு தற்போது உள்ள நிலவரியை மேலும் குறைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,87,18,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். எஸ். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது இடங்களை ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களுக்கு அபராத ஆக்கிரமிப்பு கட்டணம் விதித்து வசூல் செய்யவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற 18,87,18,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பி. டே. எம். [illegible]ந்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி பகுதியில் வரி வஜா செய்வது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,87,18,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 43,48,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,48,35,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1986 ஏப்ரல் 28

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் அதிகாரங்களைப் பிரித்து பரவலாக்குதல் குறித்து விவாதிக்க, நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,48,35,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,48,35,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(இ) கோரிக்கை எண். 41—இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 40,67,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 63வது வட்டம் நேவல் ஆஸ்பத்திரி ரோடு, ஸ்டிங்கர்ஸ் தெரு, அதைச் சுற்றி வாழும் மக்களில் வெள்ளத்தின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு துயர் துடைப்பு நிவாரணம் அளிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 40,67,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேய்க்குளத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் முழுதும் கடைகள் எரிந்து நிர்க்கதியாக உள்ள ஒன்பது நபர்களுக்கு தொழில் செய்ய கடனுதவி வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



1986 ஏப்ரல் 28] [திரு. எஸ்.என். இராமசாமி]

''மானியக் கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 40,67,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஈ) கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 27,43,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

(முற்பகல் 10-40)

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தாலும், தீயினாலும் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தற்போது நிர்ணயித்துள்ள தொகையைப் பிரித்து பங்கு போட்டுக் கொடுப்பது போல் கொடுக்காமல், நிர்ணயித்துள்ள முழுத் தொகையையும் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,43,57,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறைபற்றிய கொள்கை விளக்கக்குறிப்பு @ மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு முன் கூட்டியே அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. அதை நான் படித்ததாக ஏற்றுக் கொண்டு குறிப்பேட்டில் ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு எஸ். சிவராமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற நிலவரித்துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் மானியக் கோரிக்கைகள் மீது என் கருத்துக்களை சொல்ல வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

---

@ 337–405-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. எஸ். சிவராமன்] [1986 ஏப்ரல் 28

நம்முடைய நாட்டில் மிகவும் முக்கியமான துறையாக இருப்
பது வருவாய் துறையாகும். இந்த துறையின் மூலமாக கிராம
மக்கள் மற்றும் நகர மக்களை தொடர்பு கொண்டு 19-க்கும்
மேற்பட்ட பிரிவுகளை வைத்துக்கொண்டு நிர்வாகத்தை நடத்தி
வருகிறார்கள். இந்தக் துறையின் மூலமாக செய்யப்படும் நல்ல
காரியங்கள் மக்கள் மனதிலே ஆழமாக பதியக் கூடிய வாய்ப்
பிருக்கிறது. இந்தத் துறையின் மூலமாக செய்யப்படுகிற நல்ல
காரியங்கள் பலனளித்து அரசாங்கத்திற்கு நல்ல பெயரை வாங்கிக்
கொடுக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் கிராம அதிகாரிகளை எடுத்து
விட்ட காரணத்தால் கிராமப்புறங்களிலும் மற்ற இடங்களிலும்
வரி வசூலிப்பது போன்ற பணிகளில் மிகவும் இக்கட்டான சூழ்
நிலை அரசாங்கத்திற்கு இருந்து வந்தது. அந்த நிலையைப்
போக்குவதற்கு இன்றையதினம் அரசாங்கம் கிராம நிர்வாக
அலுவலர்களை தேர்வாணைக் குழு மூலமாக தேர்ந்தெடுத்
துள்ளது. அவர்கள் இன்றையதினம் கிராமப்புறங்களில் பணி
யாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் தேர்வாணைக்
குழு மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு
கொடுக்கப்படாத சூழ்நிலையும் இருக்கிறது. அவர்களுக்கும்
வேலை வாய்ப்பு கொடுக்கப்படவேண்டும்.

இதற்கு முன்பு கிராமப் புறங்களில் மணியக்காரர், கர்ணம்
போன்ற பதவிகளில் பணியாற்றி வந்தவர்களுக்கு எல்லாம் வேலை
வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்
கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடல்நலம் குன்றி
யிருந்து வெளி நாட்டில் இருந்து வந்தபோது மேல்மருவத்தூர்
ஆலயத்திலிருந்து உடல் நலமாக வாழ வேண்டும் என்று வேண்டி
ஊர்வலமாக வந்து அவர்கள் தங்களை பணியில் அமர்த்த வேண்டு
மென்று கோரிக்கையை வைத்து அரசாங்கத்திற்கு மனு கொடுத்
தார்கள். காரணம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாததால்
அவர்களின் குடும்பம் சாப்பாட்டிற்கே வழியில்லாமல் கஷ்டப்
பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பள்ளி இறுதித்
தேர்வு முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படுமென்று
சொல்லப்பட்டது. அப்படி சொல்லப்பட்டு அவர்களில் பள்ளி
இறுதித் தேர்வு முடித்தவர்களுக்கு இன்னமும் எந்தவிதமான
வேலை வாய்ப்பும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கு
வேலை வாய்ப்பு கொடுக்க அரசாங்கம் முன் வர வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராம நிர்வாக அலுவலர்களை மாவட்டத்தில்
தாலுக்காவிலிருந்து தாலுக்காவிற்கு மாற்றிக் கொண்டிருக்கிறார்
கள். இதற்கு முன்பிருந்த மணியக்காரர், கணக்குப்பிள்ளை
போன்றவர்கள் மரியாதைக்கு கட்டுப்பட்டு லஞ்ச லாவண்யம்
இல்லாமல் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். இன்றைய



86 ஏப்ரல் 28] [திரு. எஸ். சிவராமன்]

தினம் கிராம நிர்வாக அலுவலர்கள் தாலுக்காவிலிருந்து
தாலுக்காவிற்கு மாற்றப்படுகிறபோது, அதற்காக நிறைய செலவு
செய்து விட்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி ஒருசில கிராம
நிர்வாக அலுவலர்கள் தவறுகள் செய்வதைப் பார்க்கிறோம்.
அவர்கள் தாலுக்கா விட்டு தாலுக்காவிற்கு மாவட்டம் முழு
வதும் போய்க் கொண்டிருக்கிறார்கள். இதனால் தங்களுடைய
குடும்பத்தை பராமரிப்பது அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது.
ஆகவே அவர்கள் சிரமத்தை குறைத்து நிர்வாகம் நல்ல முறை
யில் நடைபெற அவர்களை தாலுக்காவிற்குள்ளே மட்டும் மாறு
தல் செய்வது நலமாக இருக்கும். இதனால் நிர்வாகமும் நல்ல
விதமாக நடக்கும். அவர்களும் குடும்பத்தை நல்லமுறையில்
பார்த்துக் கொள்வார்கள். ஆகவே இந்த கிராம நிர்வாக அதிகாரி
களை தாலுக்காவிற்குள் மாற்றுகிற வகையில் அரசாங்கம்
உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அப்படியும் தவறு செய்கிறார்கள் என்றால் அவர்களை தண்டிப்
பதற்கு உரிய சட்ட விதிகள் இருக்கின்றன. அரசாங்கம் அதன்
மூலம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து இன்றைய தினம் கிராமப்புறங்களில் புறம்போக்கு
நிலம் என்றும் நத்தம் என்றும் இருக்கிறது. புறம்போக்கு
நிலத்தை ஒரு சில பணக்காரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு
அவைகள் ஏழைகளுக்குத் கிடைக்காமல் செய்து வருகிறார்கள்.
தங்கள் செல்வாக்கின் மூலம் அரசாங்க அதிகாரிகளைப் பயன்
படுத்தி இப்படிப்பட்ட காரியங்களை அவர்கள் செய்துகொண்டு
இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலங்களை அவர்களிடத்திலே
யிருந்து எடுத்து, ஏழை எளிய மக்களுக்கு பட்டா செய்து கொடுக்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் கிராமத்திலே இருக்கக்கூடிய பல பகுதிகளில்
நிலக் குடியிருப்புச் சங்கங்கள் என்று காங்கிரஸ் காலத்தில் ஒவ்
வொரு ஆதிதிராவிட மக்களுக்கும் நிலக் குடியிருப்புச் செய்து,
அவர்கள் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர் என்று சொல்லி அங்கே
நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்பட்ட
அந்த நிலங்கள் எல்லாம் சொசைட்டி என்ற பெயரால் இருந்து
கொண்டு இருக்கிறது. சொசைட்டி பெயரால் அந்த நிலங்கள்
இருந்து கொண்டு இருந்தாலும், அவைகள் தரிசாக இருந்து
கொண்டு இருக்கின்றன. சொசைட்டிக்கு பட்டா கிடையாது.
அதனாலே அங்கே இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்களும்
விவசாய மக்களும் அரசாங்கத்தின் மூலமாக கடன் வாங்க
வேண்டும் என்று சொன்னால் முடியாத நிலைமையில் மிகவும்
கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்த
நிலைமையை மாற்றி அவர்களுக்கு, நிலக் குடியிருப்புச் சங்கம்
மூலமாக பட்டா செய்து கொடுக்கவேண்டும். அப்போதுதான்
அரசாங்கத்திலே இருந்து கொடுக்கக்கூடிய சலுகைகளை உண்மை

யாக அவர்கள் பெற முடியும். இல்லை என்று சொன்னால் அந்த நிலத்தை வேறு ஒருவருக்கு மாற்றி மாற்றி விற்றுக்கோண் இருக்கிற நிலமையை நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம இதனால் ஏழை எளிய மக்கள் அவதிப்பட்டுக்கொண்டு இருக் கிறார்கள். இதனால் எந்த விதமான பிரதிபலனும் அடைவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. எனவே அவற்றை தரிசாக இருப்பதை மாற்றி, அந்த ஆதி திராவிட மக்களுக்கு ரெவின்யூ துறையின் மூலமாக பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றையதினம் கிராமங்களிலே உள்ள சாலைப் போக்குவரத்துக்கு என்று இருக்கக்கூடிய அந்த இடங்களையும் ஏரிகளின் ஓரங்களிலே இருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களை யும் சில பேர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறார்கள். கிராமப் பஞ்சாயத்து நிர்வாகம் சரியாக இல்லாத காரணத்தால் இவைகள் அத்தனையும் பாழ்பட்டுவிட்டன. இன்றைக்கு கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு தேர்தல் நடைபெற்ற பிறகு, அங்கே சாலை வசதி சரியாக இல்லாத நிலைமையில் கிராம மக்கள் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தேர்ந் தெடுக்கப்பட்ட தலைவர்களைச் சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே இதை மாற்றுவதற்கு ரெவின்யூ துறையின் மூலமாக ஒவ்வொரு கிராமத்திலே உள்ள சாலைகளையும் ஏரிகளையும் அளந்து அங்கே முறையாக கற்களைப் போட்டு அவைகளைக் பஞ்சாயத்திற்கு ஒப்படைக்கவேண்டும்.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு, இயற்கைச் சீற்றம் என்று சொல்கிறபோது, பொதுவாக 4 மாவட்டங்களை மட்டும் இயற் கையால் பாதிக்கப்பட்டு இருக்கிற மாவட்டங்கள்—மழை இல்லாத காரணத்தாலும் வறட்சி என்று அறிவித்துவிட்டு—என்று சொல்லி அந்தக் குறிப்பிட்ட 4 மாவட்டங்களில் மட்டும் பணியை மேற் கொண்டு இருக்கிறார்கள். சேலம் மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலே ஒரு பகுதி வறட்சியாலும், ஒரு பகுதி புயல் வெள்ளம் இவற்றால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இப்படி பாதிக்கப்பட்டு இருந்தாலும், இன்றையதினம் குடிநீர்ப் பிரச்சனை என்பது தலைவிரித்து தாண்டவம் ஆடிக்கொண்டு இருக்கிற நிலைமையை நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அரசாங்க அதிகாரிகள் வறட்சியாக இருக்கின்ற அந்த பகுதி களைப் பார்வையிடுகின்றபோது, எங்கேயோ ஏதோ ஒரு கிணற் றில் நீர்ப்பாசனப் குறைந்திருக்கிறது. தண்ணீர் இருந்து கொண்டு இருக்கிறது. குடிநீர்ப் பிரச்சனை இல்லை என்று சொல்லி அறிக்கை கொடுத்துவிடுகிறார்கள். விவசாயம் செய் கின்ற விவசாயி கிணற்றை வெட்டுகின்றபோது, அவன் 60 அடி, 70 அடி என்று வெட்டுகிறான். அதிலே ஓரளவிற்கு தண்ணீர் இருக்கிறது. அதை வைத்து விவசாயம் செய்கிறான். ஆனால் குடிநீருக்காக காடு காடாக சென்று அலைய வேண்டிய நிலைமை இருக்கிறது.



அதேபோல்தான் தென் ஆற்காடு மாவட்டத்திலே மேற்குப் பகுதியாக இருக்ககூடிய பல தாலுக்காக்களிலே கள்ளக் குறிச்சி யில் வறட்சி நிலைமை தாண்டவமாடிக் கொண்டு இருக்கிறது. அதோடு மட்டுமல்ல, ஆத்தூர், தலைவாசல் போன்ற இடங் களைப் பார்த்தால்கூட, அங்கே இருக்கின்ற மக்கள் குடங்களை எடுத்துக்கொண்டு கிணறு, கிணறாகச் சென்று, தண்ணீர் எடுக்கக் கூடிய நிலைமை இருப்பதை நாம் பார்க்கிறோம்.

அதுமட்டுமல்ல, ஏழை ஆதி திராவிட மக்கள் தண்ணீர் எடுக்கச் செல்லும்போது அங்கே தண்ணீர் இல்லை என்று சொல்லி சாணியைக் கரைத்து விடுகிறார்கள். தண்ணீர் எடுக்க அனுமதிக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். எனவே இந்த நிலையைப் போக்குவதற்கு, குறிப்பாக கள்ளக்குறிச்சி தாலுக்காவையும், செஞ்சி தாலுக்காவையும், திருக்கோவிலூர் தாலுக்கா மற்றும் திட்டக்குடி தாலுக்காவையும் வறட்சி பகுதிகளாக அறிவித்து, குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய தினம் பெரிதாக இருக்கக்கூடிய மாவட்டங் களை சிறுசிறு மாவட்டங்களாக பிரித்துக் கொண்டு இருக்கிறார் கள். குறிப்பாக மத்திய அரசு எடுத்து உள்ள தொழில்துறை பாலிசியினுடைய அடிப்படையில் எந்த ஒரு மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருந்து கொண்டு இருக்கிறதோ, எந்த மாவட்டத் தில் தொழில்துறை இல்லாமல் இருந்து கொண்டு இருக்கிறதோ, அந்த மாவட்டத்திற்கு தொழில் துறையில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று சொல்லிமத்திய அரசினுடைய எண்ணமாக இருக்கிற காரணத்தாலே இன்றையதினம் தமிழக முதல்வர் அவர் கள் ஒவ்வொரு பெரிய மாவட்டத்தையும் இரண்டாகப் பிரித்து, அந்த மாவட்டத்திலே உள்ள தலைநகரிலே ஆக்கபூர்வமாக பல காரியங்களை செய்து கொண்டு இருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் இன்றைய தினம் தென்பகுதியில் இருக்கக்கூடிய மாவட்டங்களை முன்னோடியாக எடுத்துக்கொண்டு அந்த மாவட்டங்களைப் பிரிப்பதற்கும் அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். அவைகளை வறட்சி பகுதியாகவும் அறிவித்து வறட்சி நிவாரணப் பணிகளையும் அங்கேசெய்து நல்ல பல காரியங்களைச் செய்து கொண்டு இருக் கிறார்கள். ஆனால் வட ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் ஆகிய இந்த இரண்டு மாவட்டங்களும் பெரிய மாவட்டங்களாக இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் 21 சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு மாவட்டமாக இருந்து கொண்டு இருக்கின்றது. பொதுவாக தென் ஆற்காடு மாவட்டமும், வட அற்காடு மாவட்டமும், பெரிய மாவட்டங் களாக இருந்து கொண்டு தொழில் துறையில் மிகவும் பின்தங்கி இருக்கின்றன. எனவே தென் ஆற்காடு மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கவேண்டும். ஏன் என்று சொன்னால்

[திரு. எஸ். சிவராமன்] [1986 ஏப்ரல் 28

இப்போது, புதுக்கோட்டை, முத்துராமலிங்கம், காமராஜர், பெரியார் போன்ற மாவட்டங்களில் எல்லாம் 7 சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகள் அடங்கிய பகுதியாகவும், புதுக்கோட்டை மாவட்டம் 5 சட்ட மன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகள் அடங்கிய பகுதியாகவும் இருக்கின்ற வகையில் அவைகளைப் பிரித்து இருக்கிறோம்.

(முற்பகல் 10–50)

அப்படி பார்க்கின்றபோது 21 தொகுதிகளுடைய மாவட்டங் களாக இன்றையதினம் தென் ஆற்காடு மாவட்டமும், வட ஆற்காடு மாவட்டமும் இருந்துகொண்டிருக்கின்றன. எனவே தென் ஆற்காடு மாவட்டத்தைப் பிரித்து ஆற்காடு மாவட்டம் என்று ஒரு புறம் வைத்தாலும், விழுப்புரத்தைத் தலை நகராகக் கொண்டு வள்ளலார் மாவட்டம் என்று வைத்தாலும் கள்ளக்குறிச்சியை மாவட்டத் தலைநகராக வைத்து, திருக் கோயிலூர், உளுந்தூர்ப்பேட்டை, திட்டக்குடி, கள்ளக்குறிச்சி ஆகிய தாலுக்காக்கள் அடங்கிய ஒரு தலைநகராகக் கொண்டு கள்ளக்குறிச்சியை மாவட்டத்தின் தலைநகரமாக அறிவிக்க வேண்டும். அதற்கு முன்பாக, கள்ளக்குறிச்சி தாலுக்கா என்பது இந்த மாநிலத்திலே மிக மிக, பெரிய தாலுக்கா. சிறிய தாலுக்கா இருக்கின்ற பகுதியிலேயெல்லாம் தாலுக்காக் களை இரண்டாகப்பிரித்து விட்டார்கள். பொதுவாக கள்ளக் குறிச்சியைப் பொறுத்தவரையில் சங்கராபுர தாலுக்காவை பிரிக்கவேண்டுமென்று சொல்லி கடந்த மூன்று முறை சட்டமன்றத்திலே பேசப்பட்டும், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டும் ஏனோ தெரியவில்லை அதை வருடக் கணக்கிலே ஒரு மூலையிலே போட்டுவிட்டார்கள். என்ன காரணம் 365-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருந்து. கொண்டிருக்கின்றன. கள்ளக்குறிச்சி பெரிய தாலுக்காவாக இருக்கின்ற காரணத்தினால், வேலைப் பளுவும் அதிகமாக இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தால் வேலையில் தாமதம் ஏற்படுகிறது. மக்களுக்கு குறிப்பிட்ட காலத்திலே ஒரு பணியை செய்து கொடுக்க முடியவில்லை. எனவே சங்கரா புரத்தை உடனடியாக ஒரு தாலுக்காவாகப் பிரித்து அதை தாலுக்காவின் தலைநகரமாக ஆக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு, கல்வராயன் மலைப்பகுதியிலே வாழக்கூடிய மக்களும், அது ஒரு பெரிய பரந்த பகுதியாக இருந்து கொண்டிருக்கிறது. பல மலைப் பகுதிகளைச் சேர்ந்தவை யெல்லாம் தனி நிர்வாகத்தின்கீழ் எடுத்துக்கொண்டு பல நல்ல காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கல்வராயன் மலை பகுதியைத் தனியாகப் பிரித்து வெள்ளி



1986 ஏப்ரல் 28] [திரு. எஸ். சிவராமன்]

மலையைத் தாலுக்கா தலைநகரமாக வைத்து அதை வெள்ளி மலை தாலுக்கா என்று சொல்லி ஒரு தாலுக்காவின் தனி நிர்வாகத்தின்கீழ் அந்த மலைவாழ் மக்களைக் கொண்டுவர வேண்டும். அப்படி கொண்டுவருகின்ற நேரத்தில் 5, 6 தாலுக்காக்கள் அடங்கிய ஒரு பகுதியாக கள்ளக்குறிச்சியை தலைநகரமாக வைத்து, அவற்றை மாவட்ட நகரமாக மாற்றி அந்த மாவட்ட தலைநகரத்திற்கு இந்திராகாந்தியின் பெயரைச் சூட்டவேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்த கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு மலைவாழ் மக்கள் இருக்கக்கூடிய பகுதியிலே மலையின் கீழ்ப்புறம் இருக்கக்கூடிய பகுதியிலே ஜாகிரிதார் கன்ட்ரோலில் இருக்கின்ற நேரத்திலே தும்பை, பாச்சேரி, பாலப்பட்டு, மோட்டாம்பட்டி என்று சொல்லக்கூடிய பகுதி களிலேயெல்லாம் ஜாகிர்தார்களுடைய கெடுபிடியிலே இருந்து வந்தன. மிசா காலத்திலே அரசாங்கம் , எடுத்துக்கொண்ட நேரத்திலேயும் மலைவாழ் எனப்படும் மலைவாசி மக்களுக்கு மட்டும்தான் அங்கே அரசாங்கத்திலே கொடுக்கக்கூடிய நிவாரணப் பொருள்கள் அத்தனையும் போய் சேர்ந்ததே தவிர அந்த பாலப்பட்டு, தும்பை, பாச்சேரி போன்ற பகுதிகளில், கீழ்ப்பரப்பிலே இருக்கின்ற மக்களுக்கு சேர வில்லை. அவர்களும் மலைவாசியைச் சார்ந்தவர்கள் தான், மலையினுடைய சரித்திரத்தின் அடிப்படையில் பார்க்கும்போது அறிந்துகொள்ளலாம் என்று இந்த நேரத்திலே நான் கூறிக் கொண்டு அவர்களையும் மலைவாசிகளாக சேர்த்து இந்தக் சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அத்தோடு இன்றையதினம், ஆற்றிலேயிருந்து மணல் எடுப்பதற்கும், ஏரிகளிலிருந்து களிமண் எடுப்பதற்கும் அதற்கு தாசில்தாரிடம் பர்மிட் வாங்கி மணல், மண் வேண்டுமென்று சொல்லியும், வரி விதிக்க வேண்டுமென்று சொல்லியும் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட இருப்பதாக கேள்வி பட்டேன். இதைமாற்றி ஒவ்வொரு ஊராட்சி பகுதியிலே இருக்கக்கூடிய ஆறுகளிலேயும், பேரூராட்சிப் பகுதியிலே இருக்கக் கூடிய ஆறுகளிலேயும், நகராட்சி எல்லையிலே இருக்கக்கூடிய ஆற்றுப் பகுதிகளிலேயும் மணல் எடுப்பதற்கு ஒரு ''கான்ட் ராக்ட் பேசிஸ்'' என்ற முறையிலே விடவேண்டும். அப்படி எடுக்கின்றபோது இந்த 'கான்ட்ராக்ட்' முறையைச் செயல் படுத்துவதனால் உள்ளாட்சிகளின் வருமானத்தை உயர்த்த முடியும். தனி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்தால் அவைகள் தவறு செய்யாமல் இருக்க வாய்ப்பாக அமைந்து விடும்.

தமிழகத்திலே ஏரிகளில் இருக்கச்கூடிய களிமண்ணையும், வண்டல் மண்ணையும் எடுக்கக்கூடியவர்கள், விவசாயிகள் தான் வேறுயாரும் வியாபரத்திற்கு எடுத்துச் சொல்ல முடியாது. எனவே ஏரிகளிலே மண் எடுக்கின்ற நேரத்திலே, ஏரிகளிலே தூர் வாருவதற்கும், ஏரிகளை ஆழப்படுத்துவதற்கும் வசதி வாய்ப்பாக இருக்கும். அதே நேரத்திலே தண்ணீரினுடைய கொள்ளளவு உயருவதற்கும் ஒரு வாய்ப்பு வசதியாக இருக்கும். எனவே ஏரிகளில் இருக்கக்கூடிய மண்ணை எடுப்பதற்கும், வண்டல் மண்ணை எடுப்பதற்கும் அராசாங்கம் வரி விதிக்கக்கூடாது என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அத்தோடு இன்றையதினம் மாவட்டங்கள் ஆரம்பிக்கட் படுவது ஒருபுறம் இருந்தாலும், கள்ளக்குறிச்சிப் பகுதியை ஒரு கோட்டாட்சி பகுதியாகப் பிரிக்கவேண்டும். அதன்பிறகு மாவட்டங்கள் பிரிக்கப்படும் நேரத்தில் பிரிக்கப்படும் என்று ஒருபுறம் இருந்தாலும் அதை ஆர். டி. ஓ. ''ஹெட் குவாட்டர்ஸ்'' ஆக பிரித்து அதற்கான சலுகைகளை வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம் என்று சொன்னால் இன்றையதினம் இந்தப் புதிய திட்டத்தைக் கொண்டு வந் திருக்கிறார்கள். நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம் எந் தெந்த மாவட்டங்களிலே பூர்த்தி செய்யப்பட்டன? எந் தெந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிடப் படவில்லை. ஆனால் வெள்ளைக்காரன் ஆட்சி செலுத்திய காலத்திலே சர்வே என்று சொல்லி நிலங்களையெல்லாம் பிரித்த நேரத்திலே, அவைகளை 'Survey System' என்று சொல்லக்கூடிய ஒரு முறையை அரசாங்கத்திலே வைத் திருந்தார்கள். ஒவ்வொரு கிராம நிர்வாக அலுவலகத்திலும் அந்த அளவுகளுக்கான வரைபடங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால் இன்றையதினம் அதிகாரங்கள் பிரிக்கப்படும் என்று ஒருபுறம் இருந்தாலும், விவசாயிகள் நலன் கருதி அராங்கத் திலே கடன் வழங்குவதற்கும், வங்கிகள் கடன் வழங்கு வதற்கும் நிலப்பட்டாவைப் பெறுவதற்கும் அதைப் பார்த்து முறையாக கடன் வழங்க வசதியாக இருக்கும் என்ற அடிப் படையில் அவைகள் பிரிக்கப்பட்டிருந்தன. ஆனால் இன்றைய தினம் நிலப்பரப்பை பிரிக்கும்போது அதிலே அமைக்கப்பட்ட சர்வேயர்கள் நிலங்களுக்குச் சென்று நிலத்தை அளந்து பார்த்து வரைபடம் போடுவது இல்லை. தன்னுடைய அலுவலகத்தில் இருந்து கொண்டு யார் ஒடுகிறார்களோ ? அவர்களைக்கேட்டு அந்த வரைபடங்களை போட்டு பிரித்து விடுகிறார்கள்.





அதோடு மட்டும் அல்ல, அந்த சம்பந்தப்பபட்ட தோட்டங்களுக்குச் சென்று எல்லைகளைப் பார்த்து அளவை எடுத்தாலும்கூட அவற்றை முறையாக எடுப்பது இல்லை. உதாரணமாக சொல்லவேண்டும் என்றால், என்னுடைய சொந்த நிலம் இருக்கிறது, அந்த நிலத்தை அளக்கும் போது நானே கூட இருந்தேன், நிலத்தை அளந்தார்கள் அப்படி அளந்தும் என்னுடைய பட்டா நிலத்தை பக்கத்தில் உள்ள வேறு ஒருவர் பெயருக்கு பட்டா போட்டு கொடுத்து விட்டார்கள். இப்படி நானே உடன் இருந்து என்னுடைய மனைவியின் பெயரில் உள்ள நிலங்கள், என்னுடைய பெயரில் உள்ள நிலங்களை பிரித்தும், ஒரு நாள் முழுவதும் இருந்து பிரித்த நிலத்தை பட்டா கொடுக்கிறபோது என்னுடைய நிலம் வேறு ஒருவருக்கு மாற்றிதந்து விட்டார்கள். இப்படி எனக்கே இந்த நிலமை என்றால், அதை பயன்படுத்துகிற சாதாரண விவசாய மக்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்படுவார் கள் என்பதை எண்ணிப் பார்க்கவேணடும் என்று. கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் தாலுக்கா அலுவலகத்தில் சென்று பார்க்கும் போது பட்டா கொடுத்த முறை சரியில்லை என்று குவிந்து கிடக்கும் மனுக்களைப் பார்க்கும் போது என்றைக்குதான் இந்தப் பிரச்சினைகள் தீரும் என்று தெரியவில்லை. ஆனால் தாசில்தாரிடம் அப்பீல் கொடுக்கலாம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

அப்பீல் கொடுக்க வேண்டும் என்றால், அந்த நில உடமை மேம்பாட்டுத் தாசில்தார் தவறு செய்து இருந்தால தாசில்தார் அலுவலகத்தில் உள்ள தாசில்தார் அவர்களுக்கு மனு கொடுக்க லாம். ஆனால் கொடுக்கப்படுகின்ற மனு உடனடியாக பரிசீலனைச் செய்யப்படுகிறதா என்றால், இல்லை. ஆகவே அதை மாற்றுவதற்கு உடனடி தேவையாக குவிந்து இருக்கிற அத்தனை மனுக்கள் மீதும் உடனடி நடவடிக்கை எடுத்து பிரச்சினையை தீர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட அடையாள அட்டைகள், வெள்ளைக்காரன் காலத்தில் கொடுக்கப்பட்ட அட்டையையும் பாருங்கள், இப்போது நீங்கள்கொடுக்கிற அடையாள அட்டையை பாருங்கள், அவற்றை காற்றில் விட்டால் ஃபேன்காற்றில் விட்டால் கூட கிழிந்து போகும் நிலைமை இருக்கிறது. அதற்காக ஒதுக்கப் பட்ட தொகை எவ்வளவு ? ஏன் அரசாங்கத்தில் நல்ல பேப்பர் இல்லையா ? அந்த நல்ல பேப்பர்களை எல்லாம் வெளியில் விற்று விட்டு பணியாற்றுகின்ற அதிகாரிகள் பிளாக் மெயில் செய்கிறார்களா ? ஆகவே தவறு செய்கிறார்களா கொள்ளை அடித்து விட்டார்களா என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு பொதுவாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்று
சொன்னால் நான் இப்போது இருக்கிற மாவட்ட ஆட்சித் தலை
வரை அல்ல—எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில்—
பொதுமக்கள் மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்
களிடம் கொடுத்தால் முறையாக வாங்கி பார்த்து பரிசீலனை
செய்து நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு
கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு சில மாவட்ட ஆட்சித் தலைவர்
கள் அதை வாங்காமல் அங்கே ராஜா ஆட்சி செய்வதை போ
இருந்து கொண்டு அங்கே ஆர். டி. ஓ. விடம் கொடுங்கள்,
தாசில்தார் இடம் கொடுங்கள் உடனடி நடவடிக்கை எடுப்ப
கள் என்று சொல்லிவிட்டு போய்விடுகிறார்கள். தாசில்தா
நம்பிக்கை இல்லாமல், ஆர்.டி. ஓவிடம் நம்பிக்கை இல்லாமல்தா
மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து கொடுத்தா
காரியம் நடக்கும் என்று கொடுக்கிறார்கள். கருணை மனு
என்று எல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் அதையும் வாங்க
மறுக்கிறார்கள். இந்த மாதிரி ஒரு சில மாவட்ட ஆட்சித்
தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய இந்த அணுகு
முறை சம்பந்தமாக ஆணையாளர் அவர்கள் நடவடிக்கை எடுத்து
மக்களை மக்களாக மதிக்க வேண்டும் என்று உத்திரவு பிறப்பிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தாலுக்கா அலுவல
கத்தில் செல்லுகின்ற விசிட்டர்கள் விசிட்டிங் கார்டு கொடுக்கிற
போது உட்கார சொல்லுங்கள், பிறகு பேசுகிறேன் என்று சொல்லி
விடுகிறார்கள். இது குறித்து கூட ஒரு சில நிகழ்ச்சிகளை
அமைச்சர் அவர்கள் என்னுடைய பகுதிக்கு வந்த போது சொல்லி
இருந்தேன். அவர்கள் முறையாக கண்டித்து ஒரு தாக்கீதை
சொல்லிவிட்டு வந்தார்கள். சென்னைக்கு வந்த பிறகு ஒரு
அறிக்கையும் அனுப்பி வைத்தார்கள். ஆனால் தாலுக்கா
தாசில்தார்கள் மரியாதை கொடுப்பது இல்லை. பொது
மக்களை மக்களாக மதிக்காமல் மாக்களாக மதித்துக்கொண்
டிருக்கிறார்கள். கிராம நிர்வாக அலுவலர்கள். வருவாய்த்
துறை அதிகாரிகள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் மக்
களை மதிக்க வேண்டும். மக்களுக்கு உரிய மரியாதையைக்
கொடுக்கச் சொல்லுங்கள், இல்லை என்று சொன்னால்
அது எந்த அரசாக இருந்தாலும் அந்த அரசுக்கு கெட்ட
பெயர்தான் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

இது போன்ற குறைகள் எல்லாம் கிராம மக்களுக்கு நேரடியாக
தெரிகிற குறைகள். இதைப் போக்கி நல்ல முறையில் நிர்வாகம்
செய்தால் அரசுக்கு என் போன்ற உறுப்பினர்களுக்கு உரிய
மரியாதைகிடைக்கும் என்பதை கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதே நேரத்தில் குடிநீர் பிரச்சினை என்பது—சேலம்
மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் இணைந்து இருக்கக்
கூடிய மாவட்டம். தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதி
வெள்ளத்தினாலும், ஒரு பகுதி மழை இல்லாத காரணத்தாலும்





பாதித்துக் கொண்டு இருக்கிறது. இது சம்பந்தமாக வருவாய்த்
துறை ஆணையாளரைப் பார்த்தேன். டிரவுட் கமிஷனர்
அவர்களைப் பார்த்தேன். வறட்சி இல்லை, தண்ணீர்
இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்களிடம் 19ஆம் தேதி நேரில் சென்று
குறைகளை எடுத்து சொல்லி, குடிநீர் பிரச்சினையால் எனது
தொகுதி மக்களும் பாதித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்
களுக்கு உடனடியாக குடிநீர் கொடுப்பதற்கு வறட்சி நிவாரணப்
பணியில் நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
அந்த அளவிலே ஒதுக்கி அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்க
மன் வரவேண்டுமென்று கூறி, அமைச்சருக்கு நன்றி கூறி
டிக்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11–00)

* திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவையின்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்
களால் இந்த அவையிலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற வருவாய்த்
துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து
வைப்பதற்கு வாய்ப்பு தந்தமைக்காக முதலிலே என்னுடைய
நன்றி கலந்த வணக்கத்தை உங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு,
வருவாய்த் துறையைப் பொறுத்த வரையில், இது மக்களோடு
மிகவும் பின்னிப் பிணைந்து கொண்டிருக்கின்ற ஒரு துறையாகும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக கிராமப்
புறத்திலே இருக்கின்ற மக்களுடைய அன்றாட வாழ்க்கையிலே
இந்த வருவாய்த்துறை மிகவும் முக்கியமான துறையாக
இன்றைக்கும் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

வருவாய்த்துறையைப் பொறுத்த வரையில், இது ஒரு
சிறப்பு மிக்க துறை என்று ஏன் சொல்கிறேன் என்றால், இந்த
வருவாய்த்துறையானது, மற்ற துறைகளெல்லாம், அது
வேளாண்மைத் துறையாக இருந்தாலும் சரி, கல்வித் துறையாக
இருந்தாலும் சரி, உள்ளாட்சித்துறையாக இருந்தாலும்சரி,
வீட்டு வசதித் துறையாக இருந்தாலும் சரி, இந்தத் துறைகள்
எல்லாம் வருவாய்த் துறையை அணுகித்தான் அவர்
களுடைய பணிகளைச் செய்ய வேண்டிய ஒரு கட்டாயம்
இருந்து வருகிறது. அந்த வகையிலே இந்தத் துறை மிகவும்
முக்கியத்துவம் வாய்ந்த துறையாக விளங்குகிறது.

வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு
கிராமப்புறங்களில் இருக்கின்ற முக்கிய பிரச்சினைகளையெல்லாம்
தீர்த்து வைக்கின்ற ஒரு துறையாக அந்த துறை இருந்து
கொண்டிருக்கிறது. இன்றைக்குக் கூட அவையிலே வைக்கப்பட்
டிருக்கிற அறிக்கையிலே கூறப்பட்டிருக்கின்றது. சென்ற ஆண்டு
வெள்ளச் சேதம், வறட்சியினுடைய கொடுமை, இவற்றை

யெல்லாம் சிறப்பாக சமாளித்து இந்த அரசு வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு துவக்கமே, மிகவும் சோதனையயான நிலைமையிலே சென்று கொண்டிருக் கிறது. ஏனென்று சொன்னால், இன்றைக்குப் பல மாவட்டங் களிலே கடுமையான வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது. இந்த அறிக்கையில் கூட சொல்லப்பட்டிருக்கிறது. அண்ணா, மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கம், கோவை, பெரியார், மாவட்டங்களுக்கு என்று குடிதண்ணீர் பிரச்சினையைப் போக்கு வதற்காக ஏறத்தாழ ரூ. 40 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. வறட்சியினுடைய கொடுமையைப் பார்க்கின்ற போது கிராமப்புறங்களில் இருக்கின்ற குடிதண்ணீர் பற்றாக் குறையைப் பார்க்கின்ற போது, ஒதுக்கப்பட்டிருக்கிற, அதுவும் 5 மாவட்டங்களுக்குச் சேர்த்து ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்த ரூ. 40 இலட்சம் போதுமா, என்றால் நிச்சயமாக இது போதாது. 'யானைப் பசிக்கு சோளப் பொறி' அளவில் தான் இருக்கிறது, என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன் றைக்கு நியமிக்கப்பட்டிருக்கின்ற சிறப்பு ஆணையர் அவர்கள் ரூ. 100 இலட்சத்திற்கு சிபாரிசு செய்து அரசுக்கு அனுப்பி யிருக்கிறார்கள். ஒரு மாவட்டத்திற்கே ரூ. 100 லட்சம் ரூபாய் போதாது என்ற நிலையில், 5 மாவட்டங்களுக்கும் சேர்த்து இந்த ரூ. 40 இலட்சம் என்பது மிகவும் போதாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இதை வைத்து நாம் எந்தவிதப் பணிகளையும் செய்ய முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இருக்கின்ற நிலைமை களைக் கருத்தில் கொண்டு, அத்தியாவசிய பிரச்சினையாக மக்களிடம், இன்றைக்கு பூதாகாரமாக தெரிந்துகொண்டிருக்கிற இந்தக் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு அதிக மான தொகையை ஒதுக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், இந்த அரசையும், இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று இன்றைக்கு வருவாய்த்துறை மூலமாக கிராமங்களில் இருக்கின்ற ஆதிதிராவிட மக்களாக இருந்தாலும் சரி, மற்ற பிரிவுகளைச் சார்ந்த மக்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா ஒதுக்கப்படுகின்ற அந்தப் பணி, இந்தத் துறையின் மூலமாக, இந்தத் துறையில் பணியாற்றுகின்ற அதிகாரிகளின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என் தொகுதியான மொடக்குறிச்சிப் பகுதியில், பல இடங்களிலுள்ள மக்களுக்கு பட்டா இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது. அந்த நிலையைப் பற்றி கேட்கிற போது, அவர்கள் ஓடைப் புறம்போக்குகளில் இருக் கிறார்கள். சாலைப் புறம் போக்குகளில் இருக்கிறார்கள்,



மந்தைப் புறம்போக்குகளில் வசித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு பட்டா வழங்குவது இயலாது என்று அந்த காரணத்தைத்தான் அதிகாரிகள் சொல்கிறார்களே தவிர, அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வதாகத் தெரியவில்லை. அந்த மக்கள் ஏறத்தாழ அந்த இடங்களில் 40, 50 ஆண்டுகளாக வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஓடைப் புறம் போக்காக இருந்தால், நத்தம் புறம்போக்காக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யலாம். சாலைப் புறம்போக்காக, சாலைகள் வேறு பகுதிகளில் போடப்பட்டிருந்தால், அந்தப் பகுதிகள் பயன்படுத்தப்படாமல் இருக்கும். அதையும் நத்தம் புறம்போக் காக மாற்றிக் கொடுக்கலாம். இப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்து அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு பட்டாக்களை வழங்குகின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவர்க ளுடைய பணியை நாம் பாராட்ட வேண்டும், போற்ற வேண்டும்.

அப்படியில்லாமல் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லித் தட்டிக் கழிக்கின்ற சூழ்நிலைதான் கிராம அலுவலர்களாக இருந்தாலும் சரி, வருவாய் ஆய்வாளராக இருந்தாலும் சரி, வட்ட ஆட்சியராக இருந்தாலும் சரி அதைச் செய்து கொண் டிருக்கிறார்கள்.

இன்னும் கிராமப் புறங்களிலே ஒரு சிக்கலான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 50, 60 வருடங்களுக்கு முன்னாலே இருந்தே ஒருவன் பட்டா இல்லாமல் ஒரு நிலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு இன் றைக்குப் பட்டா கொடுக்கிற போது அவன் அந்த நிலத்திலே ஒரு தென்னை மரத்தை வளர்த்தாலோ அல்லது வேறு ஏதாவது பலன் தருகின்ற மரத்தை வைத்து வளர்த்தாலோ அந்த மரத் திற்கும் ஒரு கட்டணத்தை அரசு நிர்ணயித்து அந்தக் கட்டணத் தைக் கட்டித்தான் பட்டாவைப் பெற வேண்டுமென்று சொல் கிறார்கள். அவன் நிலத்திலே அவன் சொந்த இடத்திலே ஒரு மரத்தை வைத்து வளர்த்திருக்கிற நிலையில் அந்த மரத்திற்கு ஒரு தொகையைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் நிச்சய மாக அதுவும் ஆதி திராவிட மக்களுக்கு அது பெரும் சுமையாக இருக்கிறது. ஆகவே இதுபோன்ற பிரச்சினைகளை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆதி திராவிட மக்களுக்குப் பட்டாக்கள் வழங்கப் படுகின்றன. அந்தப் பட்டாவை வைத்துக் கொண்டு அவர்கள் ஆதி திராவிட நலத்துறை மூலமாகவோ, தாட்கோ மூலமாகவோ இலவச வீடு கட்டும் திட்டத்தின் மூலமாகவோ என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலமாகவோ ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலமாகவோ வீடு கட்ட வேண்டுமென்று சொன்னால் குறைந்தது

[திரு. ச. பாலகிருஷ்ணன்] [1986 ஏப்ரல் 28

3 சென்ட் ..ம் வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த நிலை
யில் பல இடங்களிலே இன்றைக்கு ஒரு சென்டிற்கும் குறை
வாக நிலப் பரப்பு உள்ள பகுதிகளை பட்டா என்று கொடுத்துக்
கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்கள் அதிலே எந்த வகை
யிலும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியாத சூழ்நிலைதான்
இருக்கிறது. அதை மாற்றி அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று
அதிகாரிகளை அணுகினால் ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டு
மென்று அவர்களைக் கேட்டால் பட்டாக்களை அவர்கள் மாற்
றிக் கொடுப்பதற்கு முன் வருவதில்லை. இது போன்ற் குறை
களையெல்லாம் நீக்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிலவரி, தண்ணீர்க் கட்டணம் பற்றி இதிலே தெளி
வாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிலவரி எப்படி விதிக்கப்படு
கிறது, எந்த நிலங்களுக்கு எத்தனை சதவீதம் வாங்கப்படுகிறது,
அதைப்போலவே தண்ணீர்க் கட்டணம் எப்படி விதிக்கப்படுகிறது
என்பதைப் பற்றியெல்லாம் இந்த குறிப்பிலே தெளிவாகக் குறிப்
பிட்டிருக்கிறார்கள். பெரியார் மாவட்டத்திலே ஒரு பிரச்சினை
நீண்ட நாட்களாக இருந்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக ஒரு
கோரிக்கையை அந்தப் பகுதியிலிருந்து நாங்கள் வைத்துக் கொண்
டிருக்கிறோம். கீழ்பவானி கால்வாய்ப் பாசனம் பெறுகிற பகுதி
யிலே இருக்கிற விவசாயிகள் இந்த அரசுக்கு ஒரு கோரிக்கையை
நீண்ட நாட்களாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தண்ணீர்
தீர்வை என்று அந்தப் பகுதியிலே எப்படி விதிக்கிறார்கள் என்
றால் நஞ்சைப் பயிராக இருந்து அதற்குத் தண்ணீர் விடுகிற
போது ஒரு வரி விகிதம் விதிக்கப்படுகிறது. அதைப் போலவே
புஞ்சைப் பகுதிக்குத் தண்ணீர் விடுகிறபோது அதற்கு ஒரு குறிப்
பிட்ட சதவீதம் வரி என்று விதிக்கப்படுகிறது. புஞ்சைப்
பகுதிக்கு 4 மாதங்கள்தான் தண்ணீர் விடப்படுகிறது. அந்த
நான்கு மாதங்களில் கூட முறையான தண்ணீர் 40 நாட்கள்தான்
விடப்படுகிறது. இப்படி 4 மாதத்தில் 40 நாட்கள் மட்டும்
தண்ணீர் கொடுத்து விட்டு—அந்தப் பகுதியிலே ஒரு ஆண்டுப்
பயிரை அவர்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். கரும்பாக
இருந்தாலும், மஞ்சளாக இருந்தாலும், வாழையாக
இருந்தாலும் பயிர் செய்கிறார்கள்—அப்படிச் செய்கிறபோது
ஏன் அந்தப் பயிர் வைத்தார்கள் என்று சொல்லி அதற்குத்
தண்டத் தீர்வை என்றும், அபராதத் தீர்வை என்றும் விதித்துக்
கொண்டிருக்கிறார்கள். தட்டுப்பாடு இருக்கிற பயிர்களை, கட
லையைப் பயிரிட வேண்டுமென்றும், நெல்லைப் பயிரிட வேண்டு
மென்றும் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட பயிர்களை வைக்
காமல் கரும்போ, மஞ்சளோ, வாழையோ ஒரு ஆண்டுக்காலப்
பயிர்களை வைத்தால் அதற்கு 20 மடங்கு, 30 மடங்கு தண்டத்
தீர்வை விதிக்கிறார்சள். அப்படி விதித்து விவசாயிகள் மீது
பெரிய சுமையை சுமத்துகிறீர்கள்.



1986 ஏப்ரல் 28] [திரு. ச. பாலகிருஷ்ணன்]

குறிப்பாக டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்துதான் வசூல் செய்ய
வேண்டும். பல பகுதிகளிலே ஒரு விவசாயி தனக்கு எவ்வளவு
வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியாமல் இருக்கிற நிலை
இருக்கிறது. பயிர் வாரித் தீர்வை என்று இருப்பதை மாற்றி
ஏக்கர் வாரித் தீர்வையாக விதிக்க வேண்டுமென்று நான்
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பயிர்வாரி வரி
விதித்தால் இவ்வளவு வரி விதிக்கப்படுகிறது என்று சம்பந்தப்
பட்ட விவசாயிக்கு தெரியாமல் இருக்கிறது. தண்ணீர் கால்
வாயில் விடுகிற நேரத்திலே ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்றும்
தண்ணீர் கால்வாயில் விடாத நேரத்திலே ஒரு ஏக்கருக்கு இவ்
வளவு என்றும் வரி விகிதத்தை விதித்து இந்த விவசாய மக்களை
அந்தச் சுமையிலிருந்தும், துன்பத்திலிருந்தும் காப்பாற்றுவதற்
கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும். இப்படிப்
பட்ட நடவடிக்கைகளை எடுத்து, தண்டத் தீர்வை ரத்து செய்யப்
படுகிறது; கீழ் பவானி கால்வாய் மூலம் பாசனம் செய்யும்
விவசாயிகளுக்குத் தண்டத் தீர்வை கிடையாது; பயிர் வாரித்
தீர்வை கிடையாது; இன்றிலிருந்து ஏக்கர்வாரித் தீர்வைதான்
விதிக்கப்படுகிறது என்ற அறிவிப்பு இன்றைக்கு வந்தால், அந்த
மக்கள் இந்த அரசைப் போற்றுவார்கள். மாண்புமிகு அமைச்ச
ரவர்களை வாழ்த்துவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11.10)

அடுத்து, ''குறை தீர்க்கும் நாள்'' என்று இந்த அறிக்கை
யிலே குறிப்பிடப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரையில்
இந்தச் சொல் சரியாக இருக்காது; இது குறை
கேட்கும் நாளாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. குறை
தீர்க்கும் நாளாக இல்லை; குறை கேட்கும் நாளாகத்தான் இருந்து
கொண்டிருக்கிறது. அந்த நாளிலே விண்ணப்பங்களை மாவட்ட
ஆட்சித் தலைவரிடத்திலேயோ அல்லது அந்தப் பொறுப்பிலே
உள்ள வேறு அதிகாரிகள் இருந்தாலும் சரி அல்லது வருவாய்த்
துறை அலுவலர் அந்தப் பொறுப்பிலே அமர்ந்திருந்தாலும்
அல்லது மற்ற அலுவலர்கள் இருந்தாலும் அவர்களிடத்திலே
விண்ணப்பங்கள் கொடுக்கப்படுகின்றன. என்னென்ன
குறைகள் தங்களுக்கு இருக்கின்றன, இந்தப் பகுதி
களில் என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று விண்ணப்பங்
களைக் கொடுக்கின்றார்கள். அதற்குப் பதில் தருகிறார்கள்,
என்னவென்று கேட்டால் ஆறு வார காலத்திற்குள் இந்தப்
பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை
அணுகுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படி ஆறு வார காலத்
தில் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், அவர்கள் சொல்
லியதுமாதிரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள் அணுகு
கிறார்கள். அப்பொழுது அந்த விண்ணப்பம் எங்கே
இருக்கிறது, என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்ற
பதில் கூட அங்கேயிருந்து ஒழுங்காக வருவதில்லை. இந்த அள
விற்குத்தான் இந்தக் குறை தீர்க்கும் நாள் இருந்து கொண்டிருக்

கிறது. எனவே, குறை தீர்க்கும் நாள் என்பது உண்மையிலேயே
மக்களின் குறைகளைத் தீர்க்கும் நாளாக இருக்கின்ற வகையில்
மாண்புமிகு அமைச்சரவர்கள் மாற்றி அமைத்திட வேண்டு
மென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள புறம்போக்கு தரிசு நிலங்களை
வேளாண்மை செய்வதற்கு முன்னாள் இராணுவத்தினர், நிலமற்ற
ஆதி திராவிட மக்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்கின்ற திட்டங்
கள், சட்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படி
கொடுக்கின்ற காலத்தில் அவர்கள் அதை முறையாகப் பயன்
படுத்துகிறார்களா என்பதை நாம் பார்த்தாக வேண்டும். அந்த
நிலங்களைப் பலர் பெற்றுக் கொண்டு, நிலவள வங்கியிலிருந்து
கடனைப் பெறுவதற்காக இந்த நிலப் பட்டாவைப் பயன்படுத்திக்
கொண்டு வருகிறார்கள். இதிலே பல பகுதிகளிலே பல முறை
கேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. சம்பந்தப்பட்ட வட்
டாட்சியர், அங்கே இருக்கின்ற வருவாய் ஆய்வாளர்கள், கிராம
நிர்வாக அலுவலர்கள் போன்றவர்கள் பல முறைகேடுகளைச்
செய்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கிராமப் புறங்களில்
உள்ள புறம்போக்கு தரிசு நிலங்களையெல்லாம் இதைப்
போன்றவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதை நிறுத்திவிட்டு,
அரசாங்கமே அதைப் பயன்படுத்திக் கொள்கின்ற அளவிற்குச்
செய்ய வேண்டும். இன்றைக்குக் கிராமப் புறங்களில் ஆதி
திராவிட மக்கள் ஐ.ஆர்.டி.பி. மூலம் கறவை மாடுகள் போன்ற
வைகளை மான்ய விலையிலே வாங்குகின்றார்கள். அவர்களுக்கு
இதுபோன்ற தரிசு புறம்போக்கு நிலங்களை மேய்ச்சல் நிலங்
களாகக் கொடுத்துவிட்டு, அதற்கு முன்னுரிமை கொடுத்து விட்டு,
பிறகுதான் இதுபோன்ற தரிசு நிலங்களை வேறு யாருக்காவது
பட்டா செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில் இப்பொழுது கடுமையான வறட்சி
நிலவிக் கொண்டிருக்கிறது. குடி தண்ணீர்ப் பிரச்சினை மிகவும்
பயங்கரமான பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பிரச்சினை
யைப்பற்றி ஆறு மாதங்களுக்கு முன்னாலேயே நாங்கள் மாவட்ட
ஆட்சித் தலைவரிடத்திலே சொன்னோம். கடுமையாக பற்றாக்
குறை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தகுந்த நடவடிக்
கைகளை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்
திலே சொல்லியும்கூட ஆறு மாத காலமாக எந்தவிதமான நட
வடிக்கையும் இல்லை. இன்றைக்கு அத்தனை கிராமங்களிலேயும்
தண்ணீர் இல்லை. போடப்பட்ட ஆழ் குழாய்க் கிணறுகளிலே
யும்கூட தண்ணீர் வறண்டு விட்டது. எனவே, கிணறுகளை
வெட்டினாலும், கிணறுகளை ஆழப்படுத்தினாலும் தண்ணீர்
கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகளோ, வாய்ப்புகளோ இல்லை.
ஆகவே, அந்தப் பகுதி முழுவதையும் சேர்த்து அந்த மாவட்டத்



தையே வறட்சி மாவட்டமாக அறிவித்து, போர்க்கால நட
வடிக்கை எடுத்து அங்கே உள்ள மக்களுக்குக் குடி தண்ணீர்ப்
பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அந்த மாவட்டத்தில் விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும்
வேலையில்லாத நிலைமை இருக்கிறது. எனவே, வறட்சி நிவா
ரணப் பணிகளின் மூலம் அவர்களுக்கு வேலை கொடுத்து சாலை
அமைத்தல், ஏரி அமைத்தல், போன்ற வேலைகளைத் தொடங்கி
அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க
வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரவர்களையும், இந்த அர
சையும் கேட்டுக் கொண்டு, இந்த வருவாய்த் துறை மான்யக்
கோரிக்கையின்மீது உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்த பேரவை
யின் துணைத் தலைவரவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றி
கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்,
நன்றி, வணக்கம்.

**திரு. கு. சுப்பராயன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, இங்கே அமைச்சர் அவர்களால் முன் மொழியப்பட்ட
வருவாய்த் துறை மானியத்தின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
யின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன் வைக்க விரும்பு
கிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய ஆளுங்கட்சியைச் சேர்ந்த
மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் தமி
ழகத்திலே நிலவுகிற கடுமையான தண்ணீர் பஞ்சத்தைப் பற்றி
யும், வறட்சியின் கடுமையான தாக்குதல்கள் பற்றியும் குறிப்
பிட்டு, இந்தத் தாக்குதல்களைக் காலத்திலே சட்டமன்ற உறுப்
பினர்கள் உணர்த்தியிருந்தும்கூட, மாநில அரசு தார்க்கோல்
போட்டுங்கூட, அசையாத யானையாக நின்று கொண்டிருந்த
தைப்பற்றி எல்லாம் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். கடு
மையாக வறட்சி ஏற்பட்டிருக்கிற தமிழ்நாட்டில் அரசு அறி
வித்திருக்கிற தொகை என்பது, யானைப் பசிக்கு சோளப்பொறி
தான் என்பது விளக்கக்குறிப்பிலேயிருந்து தெரிகிறது. மாநில
அரசாங்கத்தினுடைய நடவடிக்கைத் தேவையை உணர்ந்ததாக
இல்லையென்பதைத் தெளிவாக உணர முடிகிறது.

பருவ மழை தவறியதால் ஏற்பட்டிருக்கக்கூடிய மிகக் கடுமை
யான பிரச்னை விவசாய உற்பத்தி பாதிப்பாகும். ஒருபுறம்
விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. மறுபுறம் குடிநீர்ப்
பிரச்னை சொல்லி முடியாத அளவுக்கு விஸ்வரூபம் எடுத்திருக்
கிறது. குடிநீர் பல இடங்களில் இல்லாமல், சில மைல்களுக்கு
நடந்துபோய் பெண்கள் குடிநீர் கொண்டு வரவேண்டிய ஒரு
கடுமையான குடிநீர் பஞ்சமே நிலவுகிறது. குறிப்பாக, தர்மபுரி,
சேலம், பெரியார், கோவை, திருச்சி, புதுக்கோட்டை, பசும்
பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம், காமராஜர், நெல்லை
போன்ற மாவட்டங்களில் கடுமையான வறட்சி நிலவிக் கொண்

டிருக்கிறது. இந்த வறட்சியால் பாசனப் பகுதிகள் நீங்கலாக, மற்ற அனைத்து மானாவாரிப் பகுதிகளும், ஏரி பாசனப் பகுதி களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் வந்து கொண் டிருக்கிற செய்திகள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. அந்த வறட்சியின் தாக்குதலைச் சகிக்க முடியாமல் கிராமப்புற மக்கள், நகர்ப்புறங்களுக்கு வேலை தேடி வந்து கொண்டிருக்கிறார்கள்.

அதே போல், உழவு மாடுகள் தீவனம் வாங்க முடியாத நிலைமையில் அவர்கள் உழவு மாடுகளை விற்றுக்கொண்டிருக்கிற நிலைமை, இன்றைக்கு தமிழ்நாட்டில் நிலவிக் கொண்டிருக்கிறது. அத்தகைய கடுமையான நெருக்கடி நிலை நிலவுகிற பொழுது வருவாய்த் துறைக் கொள்கைக் குறிப்பிலே அறிவிக்கப்பட்டிருக் கிற அறிவிப்புகள், ஏதோ மாநில அரசாங்கம் என்ற முறையில், சில பல அறிவிப்புகளை அறிவிக்க வேண்டுமே என்பதற் காக அறிவிக்கப்பட்டதே தவிர, ஒரு அரசு மாநில மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற துயரங்களைக் காலத்தில் உணர்ந்து, தலையிட்டு தீர்ப்பதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வில்லையென்பதை மிகத் தெளிவாக நடைமுறை அறிவிப்பு களாலே உணர முடிகிறது. மாநில அரசு பிரச்னைகளிலேயிருந்து நழுவிக்கொள்கிறதே தவிர, பிரச்னைகளைத் தட்டிக் கழிக் கிறதே தவிர, பிரச்னைகளுக்கு முழுமையான பரிகாரம் காணு வதற்குரிய நடவடிக்கைகளை இந்த வறட்சி கடுமையாகத் தாக் கியிருக்கிற இன்றைய நிலையில், எடுக்கப்படவில்லையென்று இங்கே குற்றச்சாட்டாக நான் வைக்க விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம், இங்கே என்ன நடக்கிறது என்றால், மாடுகளை விற்றுக் கொண்டிருக்கிறார்கள்; விவசாயிகள் கிரா மங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் கட்ட வேண்டிய கடனைக் கட்டவில்லை யென்று கடன் ஜப்திகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கொடுமையையும், மின்சார இணைப்புத் துண்டிக்கப்படுகிற கொடுமையும் நடைபெறுகிறது. அது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுகிற நிலைமை அல்லவா? அத்தகைய நடைமுறைகளை இந்த மாநில அரசு கைவிட வேண்டுமென்பதைத்தான் நான் இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே போல், இன்றைய வறட்சியில் மாநில அரசு உடனடி யாகச் செய்ய வேண்டிய அவசியப் பணி, விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும்.

அதே போல், வறட்சி நிவாரணத்திற்கு தனி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதே போல் இந்த மாநிலத்தில் பாதிக்கப் பட்டிருக்கிற பகுதிகளில், வறட்சி நிவாரணப் பணிகளை



மேற்கொள்ள, நிதித் தேவையை மதிப்பீடு செய்து, அந்த நிதித் தேவையை மத்திய அரசாங்கம் வழங்க வேண்டுமென்று வலி யுறுத்த வேண்டும்.

அதே போல், குடிநீர்த் தட்டுப்பாட்டைப் பொறுத்த வரை யிலும், நிர்வாக டெக்னிக்கல் கிரவுண்டிலே மட்டும் காலதாமதப் படுத்தாமல், உடனடியாகக் குடி நீர் ஆழ்துளைக் கிணறுகளைப் போட வேண்டும். வறண்டு கிடக்கிற கிணறுகளை அடி வெட்டு வெட்ட வேண்டும். பாசனத்திற்குப் பயன்படுத்தக்கூடிய தனி யார்களுடைய பாசனக் கிணறுகளை அடி வெட்டு வெட்டுவதற்கு 50 சதவீத மானியத்தோடு கூடிய கடனை, மாநில அரசாங்கம் வழங்க வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதே போல்தான் வறட்சி நிலை உருவாகி, பரவலாக வேலை யற்று துடிக்கக்கூடிய கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய நடவடிக்கைகளையும் இந்த மாநில அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அதே போல், குடிநீர்த் தேவைகளைப் பொறுத்தவரையிலும் சில இடங்களிலே குடிநீர்த் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால், அடிக்கல் போட்டுக்கூட நிறுத்தப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமைகளை உணர்ந்து, குடி நீர்ப் பிரச்னையைப் பொறுத்தவரையிலும், போர்க்கால நட வடிக்கைகளை மேற்கொள்கிறோம் என்று வெறுமனே "போர்க்காலம்" என்று சொல்லி பயன் இல்லை. எந்தவித மான நிர்வாக நடைமுறைச் சிக்கல்களும் காலதாமதப்படுத்த வாய்ப்பளிக்காமல், உடனடியாக, இந்தத் தண்ணீர்ப் பிரச்னை யைப் பொறுத்தவரையிலும் மிக வேகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதை இங்கே நான் வலியுறுத்த, விரும்புகிறேன்.

ஒரு திட்டம் அறிவிக்கப்படுகிறது, இவ்வளவு ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்படுகிறது. இதே சோளை மா வட்டத்தில் எத்தனை ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்படு கின்றன? நாடு இவ்வளவு கடுமையாக தாக்கப்பட்டு, வறட்சி யால் பாதிக்கப்பட்டுக்கூட, நீர் இல்லை, கிணறு வறண்டு விட டது. ஆழ்குழாய்க் கிணறும் வறண்டிருக்கிறது, எங்கிருந்து அவர் கள் தண்ணீர் பெறுவார்கள், தண்ணீர் பெறுவதற்கு வழியில்லை, அவர்களுக்கு தாகத்திற்குத் தண்ணீர் தராமல், பொறுப்பிலே யிருந்தும் இந்த மாநில அரசாங்கம் தவறு இழைத்திருக்கிறது என்று நான் கடுமையாகக் குற்றம் சாட்டுகிறேன்.

இந்த வறட்சி நிவாரணத்திற்கு இந்த மாநில அரசு தூங்குகின்ற நிலையில் அசைவு அற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறதே தவிர துடிக்கின்ற மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்படுவதாக இந்த மாநில அரசு செயல்படவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறேன்.

(முற்பகல் 11-20.)

அடுத்து ஜப்தி, மின் துண்டிப்பு. தயவு செய்து உடனடியாக மின் துண்டிப்பை நிறுத்துங்கள். அழுகின்றவர்களின் கண்ணீரைத் துடைக்காவிட்டால் பரவாயில்லை, அழுகின்றவர்களின் கண் முழியைக் குத்துகின்ற மாதிரி ஏன் அவர்கள் கண்ணீரை அதிகப் படுத்துகிறீர்கள். இந்த நடைமுறை சரிதானா? இந்த நடை முறையை இந்த அரசு மேற்கொள்ளலாமா? தயவு செய்து இந்த பேரவையிலேயே கடன் ஜப்தி, மின் துண்டிப்பு இருக்காது என்று அறிவிக்க வேண்டும். அதைப் போலவே மாவட்டங்களில் வரி வஜா செய்ய வேண்டும். கடன் தள்ளுபடி செய்யவேண்டும். அதற்குரிய திட்டங்களை இந்த அரசு தயாரிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வெள்ளச் சீற்றம். அது பற்றிய விவரங்கள் அறிக் கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. வெள்ளச் சீற்றத்தைப் பொறுத்த மட்டில் கடந்த வெள்ளம் ஏற்பட்டபோது 148 பேர் இறந்திருப்பதாகச் சொல்கிறார்கள். 11,263 வீடுகள் முழுவது மாக அழிந்தன. 1,16,117 வீடுகள அழிந்தன என்றெல்லாம் பட்டியல் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு என்ன நிவா ரணம் வழங்கப்பட்டு இருக்கிறது. 148 பேர் மரணம் அடைந் தார்கள். அவர்கள் விதி வசத்தால் மரணம் அடைந்து விட வில்லை. வெள்ளத்தால் மரணம் அடைந்தார்கள். ஏற்படுகின்ற வெள்ளத்திலிருந்து ஒரு மனிதனுக்கு உயிர் பாதுகாப்பு அளிக்க வேண்டிய ஒரு அரசு உயிர் பாதுகாப்பு அளிக்கத் தவறி னால் அவர்களின் மரணத்திற்கான பொறுப்பு யார்? முறை செய்து காப்பாற்றாத அரசாங்கம் தான். முறை செய்து காப் பாற்றாத அரசாங்கத்தால் எற்படுகின்ற மரணத்தால் குடும்பத் தில் ஒருவரை இழந்து துடிக்கின்ற, அந்த குடும்பத்திற்கு முழு வதுமாக நட்ட ஈடு வழங்கியிருக்க வேண்டும். வழங்கியதா? வழங்கவில்லை என்றால் இனிமேலாவது வழங்குகின்ற உத்தேசம் இந்த அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

இதே சென்னையில் வெள்ள நிவாரணம் அறிக்கை கொடுத்து பயன் இல்லை. சென்னையில 14 லட்சம் பேர் குடிசையில் வாழ்கிறார்கள். தலைநகர் சென்னையில் 3ல் ஒரு பகுதியினர் குடி சையில் வாழ்கிறார்கள். இதே சென்னையில் 2,000 குடிசைகள்





இருக்கின்றன. இவைகள் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதும், அதற்கு அனுதாபத் தீர்மானம் போடுவதும், வேதனையை வெளிப் படுத்துவது மட்டும் சரியானது அல்ல. வெள்ளத்தால், இயற்கை சீற்றத்தால் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படாமல் நிரந்தரமான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வதற்குரிய ஒரு நிபுணர் குழுவை அமைத்து இத்தகைய தாக்குதலிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து தீ விபத்து. என்ன சொல்லப்பட்டிருக்கிறது என் றால் ஒரு வீடு தீ பற்றி எரிந்துவிட்டால் முழுவதுமாக எரிந்த வீட்டிற்கு 300 ரூபாய் அரைகுறையாக எரிந்த வீட்டிற்கு 150 ரூபாய். நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். 300 ரூபாயில் ஒருவர் குடிசை கட்டிக் கொள்ள முடியுமா? அவருடைய சொத்துக்கள் முழுவதும் அழிந்துபோய் விடுகின்றன. ஏன் இந்த கண் துடைப்பு. ஏன் இந்த உதவி செய்வது போன்ற ஒரு பாவனை. இது பாசாங்கு அல்லவா? இந்த பாசாங்கு கூடாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான உதவி, குடிசை கட்டிக் கொடுக்கின்ற உதவியைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு சேமிப்பிற்கு நீங்கள் உதவ வேண்டாம். இந்த மாநில அரசை சேமித்து வைத்துக்கொள்ள வாய்ப்பு அளியுங்கள் என்று நான் கேட்கவில்லை. துணிமணிகள் அழிந்து போய் பொருள்கள் எல்லாம் அழிந்து அவன் எதையும் செய்ய முடியாமல் நிர்க்கதியான நிலைமையில் 300 ரூபாய் கொடுத்தோம் என்று சொல்வது, தேர்தல் காலத்தில் வால் போஸ்டர் ஒட்டி சாதனை பட்டியலில் சேர்த்துக்கொள்ள உதவுமே தவிர, பாதிக்கப்பட்டவருக்கு இது உதவாது என்பதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 300 ரூபாய் என்ற உதவித் தொகை வரம்பை தயவு செய்து ஆயிரத்திற்கு மேல் நீங்கள் நிர்ணயிங்கள் என்று கூட நான் சொல்லவில்லை. அதே 300 ரூபாய்க்கு நீங்கள் குடிசை போட்டு இழந்த பொருள்களை வாங்கிக் கொடுத்து விடுங்கள் என்பதை வலியுறுத்துகிறேன். மாத வருமானம் 200 ரூபாய் உளளவர்களுக்குத்தான் இந்த உதவித் தொகை என்பது சரியில்லை, இதனை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தமட்டில் இந்த அரசு இன்னும் கொஞ்சம் கூர்மையோடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாநிலத்தில் கையகப்படுத் திய உபரி நிலங்களின் அளவு நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. இது உண்மையிலேயே நிலத் திருடர்கள் சட்டத்திலிருந்து தங் களைக் காப்பாற்றிக்கொள்ள முயற்சித்து வெற்றிபெற்றிருக்கி றார்கள் என்பதை தெளிவாகக் காட்டுகிறது. எனவே, சட்டத் தில் உள்ள அனைத்து விதி விலக்குகளை ரத்து செய்து நிலப் பிரபுக்களாக இருந்து கொண்டு பினாமிகளின் பெயரால் மறைத்து கொண்டு இருக்கக்கூடியவர்களை ஒழிப்பதற்கு பினாமிகள் ஒழிப்பு

[திரு. கு. சுப்பராயன்] [1986 ஏப்ரல் 28

சட்டத்தை இந்த மாநில அரசு கொண்டுவர வேண்டும்.
அந்தப் பினாமியைக் கைப்பற்றாத வரையில் நிலச்சட்டம் என்பது
சரியாக இருக்காது. 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் இருக்க
வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிற அதேநேரத்தில் 3,000
ஏக்கர் நிலங்களை நிலப்பிரபுக்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்
கள். என்னாலே பட்டியல் போட்டுத் தர முடியும். அத்தகைய
நிலப் பிரபுக்களை அனுமதிப்பது நியாயம்தானா? நான் அடிப்
பதுபோல் அடிக்கிறேன், நீ அழுவது போல் அழு என்று சொல்
வது போன்ற பாவனை அல்லவா இது. எனவே, இது நிலப்
பிரபுக்கு எதிராகக் கொண்டு வரப்படுகிற சட்டமல்ல. எனவே,
இந்தச் சட்டத்தின் ஓட்டைகளைத் திருத்தி நிலமற்ற ஏழை
களுக்கும் நிலம் அளிக்கக்கூடிய வகையில் உபரிகளை முழுமை
யாகக் கைப்பற்றுகிற முறையில் சட்டத்தைத் திருத்தி பினாமி
ஒழிப்புச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு நான்
முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இங்கே நிதியமைச்சர் அவர்களால் கொண்டுவரப்
பட்டிருக்கின்ற நிலவரித்துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச்
சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடு
களும் என்ற மானியக் கோரிக்கைகளின் மீது நாம் விவாதித்துக்
கொண்டிருக்கிறோம். இந்த மானியக் கோரிக்கைகளின் மீது
எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத்
தீர்மானங்களை ஆதரித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பாக என்னுடைய கருத்தை வலியுறுத்துகிறேன்.

இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் மொத்தமாக ஒரு
காலத்தில் ஆட்சியாளர்கள் நிலவரியினையே நம்பியிருந்த கால
மும் உண்டு. ஆனால் இன்றைக்கு நிலவரி இல்லாமலே ஆட்சி
செய்யக்கூடிய வகையில் அந்தக் காலத்தை இந்த ஆட்சி கடந்து
கொண்டிருக்கிறது. இந்த வருவாய்த் துறையைப் பொறுத்த
மட்டில் இன்றைக்கு 43 கோடி ரூபாய் என்ற அளவில்தான்
நிலவரி பாக்கி இருக்கிறது. அந்த 43 கோடி ரூபாயை வசூலிப்
பதில் கூட இன்றைக்கு இந்த அரசு கடுமையாக இருக்கிறது. இது
இல்லாமல் கூட இந்த அரசு நடக்க முடியும் என்ற நிலையில்
ஏறத்தாழ 3,500 கோடி ரூபாயை வரவு செலவு தாண்டியிருக்
கிறது இந்த அரசு. எனவே, இந்த 43 கோடி ரூபாயை முக்கிய
மான வருமானமாகக் கருதவேண்டியதில்லை இந்த அரசு. அப்
படிக் கருதினாலும் கூட அதை வசூலிப்பதில் நிர்ப்பந்தப்படுத்த
வேண்டிய அவசியம் இல்லை.



1986 ஏப்ரல் 28] [திரு. மா. மணிமாறன்]

கடந்த காலங்களில் வெள்ளம், புயல் காரணமாக பல மாவட்
டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டமும்
பாதிக்கப்பட்டது என்று மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர்
அவர்கள் அறிவித்தாரகள். அப்படி 13, 14 தாலுக்காக்களில்
பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கமும் ஏற்றுக்
கொண்டு இருக்கிறது ; அரசும் அறிவித்திருக்கிறது. அப்படி
பாதிக்கப்பட்டதற்குப் பின்னால் நம்முடைய அரசும் நிபுணர்களை
அனுப்பி ஆராய்ந்திருக்கிறார்கள். மத்திய அரசும் நிபுணர்களை
அனுப்பி ஆராய்ந்திருக்கிறார்கள். எனவே ஒட்டுமொத்தமாகப்
பாதிக்கப்பட்டது என்பது உண்மை என்பதை நம்முடைய அரசும்
ஏற்றுக்கொண்டு இருக்கிறது ; மைய அரசும் ஏற்றுக்கொண்டி
ருக்கிறது. ஆனால் அப்படி ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால்
நிலவரியை வசூலிப்பதாக இருந்தாலும், கூட்டுறவுச் சங்கக்
கடனை வசூலிப்பதாக இருந்தாலும் இந்த அரசு பின்பற்றும்
நடைமுறையை பார்க்கின்றபோது மெத்த வருத்தமாக இருக்
கிறது.

வருவாய்த்துறை அதிகாரியாக இருந்தாலும் கூட்டுறவுத்
துறை அதிகாரியாக இருந்தாலும் இன்றைக்குத் தளபதிகளாக
காவல் துறையினர் சிப்பாய்களாக கிராமத்தில் படை எடுத்துக்
கொண்டிருக்கின்ற நிலைமை சர்வ சாதாரணமாக நடந்துக்
கொண்டிருக்கிறது. பாதிப்பைப்பற்றி அரசு அறிவித்ததற்குப்
பின்னாலேயும் அங்கே வசூலிப்பதைக் கடுமையாக ஆக்கி
இருக்கிறீர்கள் என்று சொன்னால் நீங்கள் அறிவித்தது உண்மையா
என்பதை நம்முடைய நாவலர் அவர்கள் அறிவிப்பார்களா?
அவர்கள் அறிவித்தது உண்மை என்றால் இப்படி நிர்ப்பந்தப்
படுத்தி வசூலிப்பதைத் தடை செய்வதற்கான முயற்சி செய்ய
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1981-லே ஒரு அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். நிலவரியை
எந்தெந்த வகையில் வசூலிக்கவேண்டுமென்றும் 10 ஏக்கருக்கு
மேலே வைத்து இருப்பவர்களுக்கு 50 சதவீதத்திற்கு மேலா
கப் பாதித்து இருக்கிறது என்று சொன்னால் வரி வசூல் ஒத்தி
வைக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 10 ஏக்கர்களுக்கு
கீழே இருப்பவர்களைப் பொறுத்தவரையில் 50 சதவீதம்
பாதித்து இருக்கிறது என்று சொன்னால் அவர்களுக்கு பாதித்த
அளவுக்கு வரி நிவாரணம் செய்து விட்டு, அவர்களுக்கு எஞ்சிய
வரியை ஒத்தி வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.
1981-லே போடப்பட்ட அரசின் உத்தரவை ஏற்றுக்கொண்டு
அறிவிக்கப்பட்டது. நிலவரியைப் பொறுத்த வரையில் ஆங்கிலே
யர்கள் காலத்தில் கடுமைப்படுத்துவது என்ற வகையில் கட்டாய

மாக ஆக்கியிருக்கிறார்கள். வசூலிப்பதில் கடுமையாக இருந்தார்கள். நிவாரணம் என்பது அவர்களது கருணையாக இருந்தது. 1950-லே குழு கொடுத்த அறிக்கையிலே பாதிப்பிற்கு வரியைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்பதை கருத்தாக வைத்திருந்தார்கள். விவசாயிகளுக்கு நிவாரணம் என்பதை சட்டரீதியான பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று 1950-லே போடப்பட்ட குழு அறிக்கை கொடுத்ததற்குப் பிறகும் இன்றைக்கு பாதிக்கப்பட்டு வரி கட்டாமல் பாக்கி வைத்திருப்பவர்களைப் பொறுத்தவரையில் அவர்களை வற்புறுத்துகிற நிகழ்ச்சியைத் தொடர்ந்து இந்த அரசு மேற்கொண்டிருப்பது விவசாயிகளை ஒட்டுமொத்தமாகப் பாதிப்புக்கு ஆளாக்கி இருக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல் மேலும் அவர்களைப் பழிவாங்குகிற நிலையையும் இந்த அரசு உருவாக்கி இருக்கிறது. பாதிக்கப்பட்ட பகுதிகள் இன்றைக்கும் பஞ்சப் பகுதிகளாக இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஜூன் மாதத்திற்குப் பின்னால் ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில் மேட்டூரிலே இருந்து தண்ணீரைத் திறந்துவிட்டு விவசாயத்திற்குத் தண்ணீர் விடும் நிலை ஏற்பட்டால் -- தஞ்சை மாவட்டத்தைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் அப்படி அறிவிக்கவில்லை என்று சொன்னால் அங்கே இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய சிறுநிலச் சொந்தக்காரர்களாக இருந்தாலும் சரி அவர்களுடைய வாழ்க்கைக்கு மட்டும் அல்லாமல் அந்தப் பகுதிக்கும் ஏதும் செய்ய முடியாத அளவுக்கு பஞ்சப் பிரதேசமாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள். காரணம் அந்தப் பகுதியிலே குளங்கள் கிடையாது, நீர்நிலைகள் கிடையாது. ஆற்றுத் தண்ணீரை மட்டுமே தான் நம்பியிருக்கின்ற பகுதிகளாக இருக்கிற காரணத்தால் தஞ்சை ஜில்லாவிலே நீங்கள் தண்ணீர் தரவில்லை என்று சொன்னால், கட்டாயமாக தஞ்சை மாவட்டத்தை பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்று மீண்டும் இந்த அரசை நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(முற்பகல் 11-30)

ஆகவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பஞ்சப் பிரதேசத்தை சீர் ஆக்க வேண்டும் என்று சொன்னால், அதற்காக 1983-லே நீங்கள் ஒரு திட்டத்தை உருவாக்கித் தந்தீர்கள். அதனால் 5 ஆயிரம் போர் வெல்கள் அமைக்கப்படும் என்று அறிவித்தீர்கள். அறிவித்த 5 ஆயிரம் போர் வெல்களில் 3 ஆயிரம் போர் வெல்





களைத்தான் வேலை முடித்திருக்கிறீர்கள். எஞ்சி இருக்கிற
ஈராயிரம் போர் வெல்கள் என்னவாயிற்று? அவற்றை
இன்றைக்கும் கூட இந்த அரசாங்கம் ஏற்படுத்துவதற்கு முயற்சி
களை மேற்கொள்ளவில்லை. ஆனால் 1983-க்குப் பின்னாலே
தொடர்ந்து தண்ணீரை உரிய காலத்தில் கொடுக்க முடிந்ததா
என்று சொன்னால் முடியவில்லை. ஆனால் ஜூலை 12-ஆம்
தேதிக்கு முன்னாலே மேட்டூரிலிருந்து தண்ணீரை திறந்து விடுகி
றீர்கள் என்று சொன்னால், அதை அரசாங்கத்தின் சாதனைப்
பட்டியலிலே பக்குவமாகப் பதிக்கப்படுகிறது. ஆனால் தண்ணீர்
வரவில்லை. தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று
சொன்னால் அதனை அரசாங்கத்தின் சாதனையாக ஏற்றுக்
கொள்வீர்களா என்று சொன்னால், ஏற்றுக் கொள்ள
மாட்டீர்கள்.

இயற்கையின் காரணமாக பல்வேறு பகுதிகளில் தண்ணீர்
கிடைத்து விட்டால் அதை அரசாங்கத்தின் சாதனையாக ஆக்கி
விடுகிற நீங்கள் 1983-லே அறிவிக்கப்பட்ட 5 ஆயிரம் போர்
வெல்களிலே எஞ்சியிருக்கிற இரண்டாயிரம் போர் வெல்களை
திரும்ப அமைக்க வேண்டும் என்று பல காலக்கட்டங்களில்,
தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர்களாக
இருந்தாலும் சரி, பொது உடைமைக்கட்சியைச் சார்ந்தவர்
களாக இருந்தாலும் சரி, எங்களுடைய திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தொடர்ந்து
வலியுறுத்திவருவதை ஏன் கவனத்தில் கொள்ளாமல் இருக்கிறீர்
கள் என்று கேட்டு, இன்றைக்கு உங்களுடைய அந்தச் செயலின்
மூலம் விவசாயிகளை மீண்டும் துன்புறுத்துகிற, வெந்த புண்
ணிலே வேல் கொண்டு பாய்ச்சுவதைப் போல் பாய்ச்சுகிற செய
லாகச் செய்கிறீர்கள். அந்த நிலைமையைத்தான் இந்த அரசு
உருவாக்கி வருகிறது என்பதை நான் சொல்லிக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே தொடர்ந்து இந்த 2 ஆயிரம் போர்வெல்களை
உடனடியாக அமைக்கின்ற நிலையை உருவாக்கிட வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டைப் பொறுத்த
வரையில் நீங்கள் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரை நிச்சய
மாக விடுவீர்கள் என்பதற்கு எந்தவித உத்திரவாதமும் இல்லாத
காரணத்தினால், விவசாயிகள் என்ன ஆவார்களோ என்ற
கேள்விக்குறிக்கு விடை இல்லாத காரணத்தினால், அங்கிருக்கிற
விவசாய தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காத நிலை
உருவாகும் என்று சொன்னால், கட்டாயமாக அந்தப் பகுதியை
பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். அன்றைக்கு நீங்கள் போர்வெல்களை அமைக்கின்ற
காலத்திலேயே 1983-லே ஒரு அறிவிப்பைச் செய்தீர்கள்.
அரசாங்கத்தின் சார்பாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற

ஒதுக்கப்பட்டிருக்கின்ற போர்வெல்களுக்கு மின் இணைப்பு என்றைக்கு கொடுக்கிறார்களோ, அன்றையத் தினத்திலிருந்துதான் கொடுக்கப்பட்ட கடன்களுக்கு வட்டி செலுத்தவேண்டும் என்று நீங்கள் அறிவித்தீர்கள்.

அப்படி அறிவித்ததற்குப் பின்னாலே, என்ன ஆகியிருக்கிறது என்று சொன்னால், என்றைக்கு விவசாயிகள் பாண்டை எக்ஸிகியூட் செய்துக் கொடுத்திருக்கிறார்களோ, என்றைக்கு பாண்டு எழுதிக் கொடுக்கப்பட்டதோ, அந்தத் தேதியிலிருந்து தான் வட்டி கணக்கிடப்பட வேண்டும் என்று இன்றைக்கு வற்புறுத்தி, அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வசூலிக்கின்ற நிலைமையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

ஆனால் அறிவிப்பு செய்தது என்றைக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படுகிறதோ அன்றையிலிருந்து அதன் வட்டி கணக்கிடப்படும் என்று சொன்ன நீங்கள், இன்றைக்கு மாறாக பாண்டு எழுதிக் கொடுத்த அந்த தேதியிலிருந்து வட்டி கணக்கிடுவது மிகவும் கொடுமையான செயல். சில இடங்களில் போர் வெல்களைப் போட்டதற்குப் பின்னாலே ஒரு ஆண்டு கழித்துக் கூட மின்சார இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். அப்படி ஒரு ஆண்டுக்குப் பின்னாலே மின்சார இணைப்பு கொர்டுக்கப்பட்டிருக்கிறது என்றால், மின்சார இணைப்பும் கிடைக்காமல், குழாய்களையும் பயன்படுத்த முடியாமல் விவசாயிகளால் எப்படி விவசாயம் செய்ய முடியும் என்பதை எண்ணிப்பாருங்கள். அப்போது ஆயில் என்ஜினுக்குக் கூட கடன் கொடுக்கப்படவில்லை. மோட்டாரை ஓட்டுவதற்கு மின் இணைப்பும் கொடுக்கப்படவில்லை. போர் வெல்லுக்கும் இணைப்புக் கொடுக்கப்படவில்லை, என்ற நிலையில் உள்ள விவசாயிகளை வட்டி கேட்பது நியாயம்தானா என்பதை எண்ணிப் பார்த்து, அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்து, உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு இந்த மீதம் உள்ள 2 ஆயிரம் போர்வெல்களையும் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் கண்டிப்பாக ஒரு புதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வாயிதாவைப் பொறுத்த வரையில் 43 கோடி ரூபாயை வசூலிப்பதற்கு நிர்ப்பந்தம் காட்ட வேண்டாம் என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 43 கோடி ரூபாய் என்பது ஒன்றும் பெரிய தொகை அல்ல அரசுக்கு சாதாரணமானதுதான். 150 கோடி ரூபாயை சிவில் சப்ளை துறையில் இழப்பு அடைந்து அதை தாங்கிக் கொண்டிருக்கிறது அரசு. 'சிவில் சப்ளை கார்ப்பொரேஷன் வேலை செய்வதற்கே ஆதாரமாக இருப்பது மூலப் பொருள்களை உற்பத்தி செய்து கொடுக்கின்ற தஞ்சை மாவட்டத்து விவசாயியும் ஏனைய





விவசாயிகளும்தான். ஆகவே, 150 கோடி ரூபாய் இழப்பை சிவில் சப்ளைஸ் துறை மூலம் தாங்கிக் கொண்டிருக்கிற இந்த அரசாங்கம் சாதாரணமான இந்த 40 கோடி ரூபாயை பெரிய தாக நினைக்கிறீர்கள் என்று சொன்னால் வாடுகின்ற விவசாயி களை மீண்டும் நீங்கள் துன்புறுத்துகிறீர்கள் என்றுதான் கருதத் தோன்றுகிறது. அந்த நிலையை இந்த அரசாங்கம் உருவாக்க வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு, அந்த 150 கோடி ரூபாயோடு இந்த 43 கோடி ரூபாயை ஒப்பிட்டு பார்த்து, சாதா ரண விவசாயிகளுக்கு அதனை தள்ளுபடி செய்து கொடுக்க வேண் டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த ஆண்டு அதை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நான் முன்னாலே கேட்டுக் கொண்டது போல இந்த அரசைப் பொறுத்த வரையில், விவசாயிகளிடத்திலே கூட்டுறவுச் சங்க கடன்களிலே கூட நிர்ப்பந்தப்படுத்துகிறீர்கள். 1981-லே போட்ட அரசாங்க உத்தரவின் விவரத்தின்படி எந்தப்பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பகுதியில் அணாவாரிச் சான் றிதழுக்குப் பதிலாக 50 சதவீதத்திற்கு 10 ஏக்கருக்கு குறைவாக இருப்பவர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு நிர்ப்பந்தம் வேண்டாம் என்று கூறியிருக்கிறீர்கள். அப்படி அன்றைக்குச் சொல்லிவிட்டு, இன்றைக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக் கிற, வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற மாவட்டங்களில் மீண்டும் நிலவரி வசூலிப்பை தொடங்குகிறீர்கள் என்று சொன் னால் நீங்கள் அறிவித்த கொள்கைக்கும், நடைமுறைக்கும் சம்பந்தம் இல்லாது இருப்பதை சுட்டிக் காட்டக் கடமைப்பட் டிருக்கிறேன். உங்களுடைய கொள்கைக்கும் செயலுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கலாம் வெளியிலே. ஆனால் அர சாங்கத்தைப் பொறுத்தவரையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு கண்டிப்பாக, கட்டாயமாக செயலாக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் துயர் துடைப்புப் பணிகளைச் சிறப்பாக செய்து கொண் டிருப்பதாக அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. நாங்களும் அவற்றை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தத் துயர் துடைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆண்டிற்காண்டு நிதியினை ஒதுக்கி வருகிறீர்கள். எல்லா ஆண்டு களிலும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்காக அரசாங்கத்தில் தொடர்ந்து ஒதுக்கி வருகிறீர்கள். இந்த ஆண்டிற்கு நீங்கள் அதற்காக 71 லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறீர்கள். இதற்கு முன்னாலே சென்ற ஆண்டு 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இதற்கு முந்தைய ஆண்டுகளில் பார்த்தால் 1974-75 ஆம் ஆண்டில் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் 1975-76 ஆம் ஆண்டில் 15 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு

பின்னால் எந்த ஆண்டிலும் 10 கோடி ரூபாய்க்கு குறைவாக
செலவு செய்யவில்லை. ஆனால் இந்த ஆண்டில் நீங்கள் இதற்காக
71 இலட்சம் ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். அரசாங்கத்தில்
இந்த ஆண்டு வறட்சி, வெள்ளம் போன்றவை வராது என்று
கருதுகிறீர்களா? சமீபத்தில் நம்முடைய வேளாண்மைத் துறை
அமைச்சர் அவர்கள் ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி
யிருப்பதாக அறிகிறேன். 13 கோடி ரூபாய் செலவில் ஆழமாக
போர்வெல் கிணறுகளை அமைத்து வறட்சியில் குடிதண்ணீர்
கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு
உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது கூட பல
பகுதிகள் பஞ்சப் பிரதேசமாக மாறியிருப்பதாகவும், மாடுகள்
குடிக்கக் கூட தண்ணீர் இல்லாமல் இருப்பதாகவும் சொன்னார்
கள். தஞ்சை மாவட்டம் போன்று இன்றைக்கு பல மாவட்டங்
கள் வறட்சிக்கு ஆளாகியிருக்கின்றன. தர்மபுரி மாவட்டத்தில்
அந்த மாவட்ட மக்கள் வெளியே செல்கிற நிலை ஏற்பட்டிருக்
கிறது. இந்த ஆண்டில் ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலைமை
குறித்து ஆராய்ந்து, அரசாங்கம் துயர் துடைப்புப் பணிகளுக்காக
செலவு செய்ய வேண்டியிருக்கும் என்பதை இன்றைக்கு வரை
யிலும் கணக்கு எடுக்க முடியாமல், அரசாங்கம் அறிவிக்க முடி
யாமல் இருக்கிறது. ஒட்டுமொத்தமாக கணக்கெடுப்பதற்கு
ஏற்ற வகையில் பல பகுதிகளிலும் வறட்சி வந்ததற்குப் பிறகு
கணக்கெடுக்க துவங்குவீர்களா? மத்திய அரசினுடைய உதவியை
கேட்பதில்கூட காலம் கடந்து கேட்கிற நிலைமை இருக்கிறது.
1983 ஆம் ஆண்டில் மத்திய அரசின் உதவியை வெள்ள நிவார
ணத்திற்கு கேட்ட போது காலத்தில் அதற்கான வேண்டுகோள்
வைக்காத காரணத்தால் நிதி ஒதுக்குவது கஷ்டமாக இருக்கிறது
என்று மத்திய அரசு சொன்னார்கள். அதற்குப் பின்னாலே
வேளாண்மைத் துறை இணைச் செயலாளர் வந்தபோது இந்த
அரசைப் பாராட்டியதாக குறிப்பிலே அறிவித்தீர்கள். அவர்கள்
என்ன சொன்னார்கள் என்றால் காலம் கடந்து இந்த அரசு அறி
வித்தாலும் கூட அப்படி அறிவித்ததன் காரணமாக முழுமையாக
கணக்கெடுப்பதற்கு உதவியாக இருந்தது என்றுதான் சொன்
னார்கள்.

நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்த அர
சாங்கத்தைப் பொறுத்த வரையில் வெள்ளத்தாலும் வறட்சி
யாலும் மக்களுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று
கணக்கெடுப்பதில் காலம் கடத்துவதற்கு காரணம் என்ன?
நீங்கள் மனப்பூர்வமாக மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று
கருதுவீர்களானால் முழுமையாக கணக்கெடுத்து செய்திருக்க
வேண்டும். உங்கள் கணக்கின்படி 102 கோடி ரூபாய்க்கு மேல்
விவசாயத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் 1983-ல்
என்ன செய்திருக்கிறீர்கள்? வேளாண்மைத் துறையில் 0.50
கோடி ரூபாய் கொடுத்து உரம், பூச்சி மருந்து முதலியவற்றை
கொடுக்கச் சொல்லிவிட்டீர்கள். அவர்களும் உரம், பூச்சி மருந்து





முதலியவைகளை கொடுத்து விட்டார்கள். ஆனால் 102 கோடி
ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. 1985 ஆம் ஆண்டிலே மட்டும்
வெள்ளத்தால் தஞ்சை மாவட்டத்தில் 120 கோடி ரூபாய்க்கு
மேல் விவசாய பொருள்களுக்கு உற்பத்தி இழப்பு ஏற்பட்டிருக்
கிறது. மாவட்ட அளவிலே இப்படி இழப்பு ஏற்பட்டிருக்கிறது
என்றால் அது நாட்டிற்கு ஒரு பெரிய பாதிப்பு ஆகும். ஆகவே,
அப்படிப்பட்ட நிலை வருகிற போது அந்த மக்களுக்கெல்லாம்
வேஷ்டி, சேலையும், 5 கிலோ அரிசியும் அரசு அளித்து விட்டால்
போதுமென்று நினைக்கிறீர்களா? இதுதான் இயற்கை துயர்
துடைப்புப் பணி என்று கருதுகிறீர்களா? மாண்புமிகு நாவலர்
அவர்களை நான் ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள்
அரசியலில் அடியெடுத்து வைத்தபோது பகுத்தறிவை அடிப்
படையாக வைத்து சமுதாய மாற்றத்தை உருவாக்க வேண்டு
மென்று கருதினீர்கள். இன்றைக்கு நீங்கள் நிதித்துறை அமைச்ச
ராக இருந்து கொண்டு ஆற்றுகிற பணியைப் பார்க்கிறபோது
மீண்டும் ஒரு அடிமைச் சமுதாயம் உருவாவதற்கு இந்த அரசு
அச்சாரம் போட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு நீங்கள் உறு
துணையாக இருந்து கொண்டிருக்கிறீர்கள் என்று மெத்த வருத்
தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத்
தலைவர் அவர்களே, அரசினுடைய வரவு என்ன, செலவு என்ன
என்று முழுவதும் விவரமாக எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.
எந்தச் செலவைக் குறைக்கலாம், எந்த வரவைப் பெருக்கலாம்
என்ற யோசனையை மாண்புமிகு உறுப்பினர் சொன்னால்
நல்லது. இந்தச் சமுதாயத்தை அடிமைப்படுத்த வேண்டிய
அவசியம் என்ன, அதற்கான தன்மை என்ன? அதிலே எங்க
ளுக்கு என்ன தனி இன்பம். ஆகவே, பேசுவது எனக்குப் பயன்
படுகிற அளவிற்கு, அரசாங்கத்திற்குப் பயன்படுகிற அளவிற்கு
கருத்தோடு பேசினால் நல்லது. மாறாக ஆத்திரத்தைக் கொட்டு
வது, வெறுப்புணர்ச்சியைக் கொட்டுவது என்றால் அதிலே
உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சி இருக்குமானால் அந்த மகிழ்ச்சி
யை அவர் பெறட்டும்.

(முற்பகல் 11.40)

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நான்
எரிச்சலின் காரணமாகச் சொல்வதாகச் சொல்கிறார்கள். அவர்
களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் அமைச்சராக திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த நேரத்திலே ஏறக்குறைய
20 கோடி ரூபாயை 1974-75-ல் செலவு செய்திருக்கிறீர்கள்.
அப்போது வேஷ்டியையும் சேலையையும் வாங்கிக் கொடுத்தீர்கள்.
அந்த உழைப்பின்
மூலமாக அவர்கள் பணத்தைப் பெற்று, அப்படிப் பெற்ற
முறையாக மக்களை உழைக்க வைத்து,

[திரு. மா மணிமாறன்] [1986 ஏப்ரல் 28

அந்தப் பணத்தில் அவர்கள் செலவு செய்யக்கூடிய நிலை
மையை அன்றைக்கு நீங்கள் உருவாக்கி வைத்தீர்கள். இன்றைக்கு
நீங்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்? ஏறக்குறைய
73 கோடி ரூபாயை செலவு செய்து கொண்டு இருக்கின்ற நீங்கள்
அரிசியையும், சேலையையும் கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்
கள். ஜனதா வேட்டி 6 ரூபாய், ஜனதா சேலை 15 ரூபாய்
ஆக ஒட்டுமொத்தமாக 21 ரூபாய் அளவிற்கு ஒரு குடும்பத்திற்கு
அளிக்கிறீர்கள். இந்த 21 ரூபாயைக் கொடுக்கிற நீங்கள்,
அவர்களுக்கு 2 நாளைக்கு வேலை கொடுத்து, 30 ரூபாய்
பணத்தைக் கொடுத்தால், அவர்கள் முறையாக நல்ல சேலை
யைக் கூட பார்த்து வாங்கிக் கொள்ள முடியும். இந்த
நிலையை நீங்கள் உருவாக்கினால், அவர்களுக்கு பணமும் கிடைக்
கும், உங்களுக்கும் வேலை நடக்கும். அது சாலை மேம்பாட்டு
திட்டமாக இருந்தாலும், குடிமராமத்தாக இருந்தாலும்,
இப்படிப்பட்ட ஆக்கபூர்வமான பணிகளை நீங்கள் முடிக்க
முடியும். அரசாங்கத்திற்கும் பலன் இருக்கும். மக்களின்
மரியாதையையும் காப்பாற்றுவதாக இருக்கும். ஆனால் நீங்கள்
செய்வதெல்லாம், அந்த மக்களைக் கையேந்துகிற ஒரு நிலை
மையை நீங்கள் உருவாக்கிக்கொண்டு இருப்பதுதான், என்பதை
நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேனே தவிர,
எரிச்சலால் அல்ல என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

பக்கத்திலே இருக்கிற பாண்டி மாநிலத்திலே நிவாரண
வேலையை எப்படி மேற்கொள்கிறார்கள். வெள்ளம் வந்த
தற்குப் பிறகு, முறையாக ஆட்களை அமைத்து, அவர்களுக்கு
எல்லாம் வேலை செய்யக்கூடிய நிலைமையை உருவாக்கி, அவர்
களுக்கு எல்லாம் பணத்தைக் கொடுத்து, பஞ்சத்தை நீக்குகிறார்
களே தவிர, உங்களைப் போல், இந்த அரசாங்கத்தைப் போல்,
ஒட்டுக்களை பெறுவதற்காக, அப்பாவி ஏழைகளிடத்திலே
இருக்கிற ஓட்டுக்களைப் பெறுவதற்காக, அரிசியையும், சேலை
யையும் 'கொடுத்து அவர்கள் வேலை வாங்கவில்லை. அவர்
களை அரசாங்கத்திடத்திலே கையேந்துவதற்கான நிலைமையை
உண்டாக்கவில்லை. வேலை செய்து, அந்த வேலையின் மூலமாக
அவர்கள் ஊதியத்தைப் பெறக்கூடிய நிலைமையை உருவாக்கி
யிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர்
அவர்களே, இந்த அரசு மக்களுக்குச் செய்கின்ற உதவியை
ஏதோ கையேந்தி வாங்குவது போல் உள்ள பொருளில் மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது சரியல்ல. மக்களை
அடிமைப்படுத்துகிற முறையில் பேசுவதும் சரியல்ல. இப்படி
செய்யக்கூடிய உதவிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



1986 ஏப்ரல் 28] [டாக்டர் கா. காளிமுத்து]

வேண்டாம் என்று கருதுகிறாரா? அரிசி கொடுக்கக்கூடாதா?
வேட்டி, சேலை ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கக் கூடாதா,
இது தவறு என்ற கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் சொல்கிறார்களா என்பது தெரியவில்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் மணிமாறன் அவர்கள் பேசுவதற்காக மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். கேள்வி கேட்ட
உறுப்பினர்களுக்குத் தான் பதில் சொல்வார்கள். சம்பந்தப்
பட்ட உறுப்பினர்தான்பிறகு பேச வேண்டும். இதற்கு முன்பு
இருந்த பேரவைத் தலைவர்கள்கூட இப்படிப்பட்ட விதி
முறையைத் தான் கடைப்பிடித்திருக்கிறார்கள்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அவர்களுக்கு எல்லாம் அரிசி
கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. நீங்கள்
பணம் கொடுங்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை.
நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் கொடுக்
கின்ற அரிசி, வேஷ்டி, சேலை இவைகள் எல்லாம் ஒட்டு
மொத்தமாக 50 ரூபாய் அளவிலேதான் இருக்கும். அதற்குப்
பதிலாக அவர்களுக்கு 5 நாட்களுக்கு அல்லது 10 நாட்களுக்கு
வேலை கொடுத்து, அதற்கு ஊதியமாக கொடுத்தால், அவர்கள்
அந்த ஊதியத்தை வைத்து பிழைப்பதற்கு வசதியாக இருக்கும்.
அரசாங்கத்திற்கும் பலன் இருக்கும் என்று சொல்கிறேனே தவிர,
நீங்கள் கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை.
சமுதாய சீர்திருத்தக் கருத்திலே உங்களை நான் கேட்டுக்கொள்வ
தெல்லாம் அரசாங்கம் இப்படிக் கொடுப்பதால்; அரசியலில்
நீங்கள் அவர்களை எக்ஸ்ப்ளாய்ட் செய்து கொள்கிறீர்கள் என்று
தான் சொல்கிறேன். அரிசி, வேஷ்டி, சேலை கொடுத்ததற்குப்
பின்னாலே தாய்மார்களிடம் என்ன சொல்கிறார்கள், அரசியல்
வாதிகள் அந்தச் சேலையை நாங்கள் தான் வாங்கிக் கொடுத்
தோம் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட அவலமான
நிலை இருப்பதை இன்றைக்கு நாம் பார்க்கிறோம். அது எந்த
கட்சியாக இருந்தாலும், இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.
மக்களுக்கு எல்லாம் வேலையைக் கொடுத்து, அதன் மூலமாக
அவர்களுக்கு ஊதியத்தைத் கொடுத்து, நாட்டின் உற்பத்தியைப்
பெருக்க வேண்டும் என்று நான் சொல்கிறேனே தவிர, உதவி
செய்ய வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. முறையாக
1975 ஆம் ஆண்டு செய்தார்களே அந்த மாதிரி செய்யவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வேறு ஒன்றும் இல்லை.

இன்னொன்று, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள்
வந்த பிறகு, கிராமப்புறத்திலே உள்ள கிராம நிர்வாக அதிகாரி
களை எல்லாம் வேலை நீக்கம் செய்திருக்கிறீர்கள். அப்படி
வேலை நீக்கம் செய்ததற்குப் பிறகும் கூட, இந்த அரசாங்கம்

[திரு. மா. மணிமாறன்] [1986 ஏப்ரல் 28

அவர்களுக்கு எல்லாம் வேலை கொடுப்பதற்கு முறையாக ஆய்வு
செய்து, பள்ளி இறுதி ஆண்டுத் தேர்விலே வெற்றி பெற்றவர்
களுக்கு எல்லாம் வேலையைக் கொடுத்து இருக்கிறீர்கள்.
அவர்கள் போக, பாக்கியுள்ள பள்ளி இறுதித் தேர்வில் தேர்வு
பெறாதவர்கள் இன்னும் ஏறக்குறைய இரண்டாயிரம் பேர்களுக்கு
மேல் இருக்கிறார்கள். பள்ளி இறுதியாண்டு தேர்வு பெற்றால்
அவர்களுக்கும் நீங்கள் வேலை கொடுப்பதாக அறிவித்தீர்கள்.
இதிலே நீங்கள் மனிதாபிமான உணர்வோடு அவர்களைப்
பார்க்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கேட்டுக்கொண்டு
இருக்கிறது. உச்ச நீதிமன்றம் இந்தப் பிரச்னையை மனிதாபி
மானத்தோடு பார்க்க வேண்டும் என்று சொன்ன பிறகும் கூட,
உங்களுடைய அறிவிப்புக்குப் பிறகும் கூட, இன்றைக்கு வரை
எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றவர்களும் பெறாதவர்களுமாக
2 ஆயிரம் பேர்களுக்கு மேல் இன்றைக்கு இருந்து கொண்டு
இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையை அரசாங்கம் பரி
சீலனை செய்யாமல் இருந்து கொண்டு இருக்கிறது. எனவே
உங்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த இரண்
டாயிரம் கிராம உத்தியோகஸ்தர்களை, அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி.
தேரவில்லை என்ற ஒரே காரணத்திற்காக புறக்கணிக்க
வேண்டாம். அவர்களுடைய கோரிக்கையை முறையாகப்
பரிசீலனை செய்து உச்ச நீதிமன்றம் கேட்டுக் கொண்டது
போல் இந்த இரண்டு ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்க
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒவ்வொரு கிராம உத்தியோகஸ்தருக்கு கீழே
பணி செய்யக்கூடிய கிராம ஊழியர்கள் 3 பேர்கள் இருக்கிறார்
கள். அவர்களிடத்திலே கூட கல்வித் தகுதி உள்ளவர்கள்
எல்லாம் இருக்கிறார்கள். அப்படி கல்வித் தகுதி உள்ளவர்களை
எல்லாம் நீங்கள் கிராம நிர்வாக அலுவலர்களாக பதவி உயர்வு
கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
கிராம அதிகாரிகளுக்கு கீழே வேலை செய்யக்கூடிய அந்த ஊழியர்
களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுத்து, அப்படி
நேர ஊழியர்களாக ஆக்கி, பல முன்னேற்ற வேலைகளை முழு
அவர்களிடம் கொடுப்பதற்கு வகை செய்ய வேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி உதவி செய்கிற நேரத்
திலே அவர்களைக் கூட நிலங்களுக்கு நீர்ப் பாய்ச்சுகின்ற, அந்த
முறை வைக்கின்ற நேரங்களிலே கூட அவர்களைப் பயன்
படுத்திக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, நிலச் சீர்திருத்தங்களிலே, தாழ்த்தப்பட்ட
சமுதாயத்திற்கு நிலங்களை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.
முன்னாலே இருந்த காங்கிரஸ் அரசாங்கம் தாழ்த்தப்பட்டவர்
களுக்கு உச்ச வரம்புக்கு மேற்பட்டு இருக்கிற நிலங்களை
எல்லாம் கையகப்படுத்தி கொடுக்கின்ற நேரத்திலே, ஆறாவது



1986 ஏப்ரல் 28] [திரு. மா. மணிமாறன்]

இடத்திலே தாழ்த்தப்பட்டவர்களை வைத்திருந்தார்கள். திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தான் அவர்கள்
இரண்டாவது இடத்திலே வைத்தார்கள். முதலிலே சாகுபடி
தாரர்கள், பிறகு ஆதிதிராவிடர்கள், மற்றவர்கள், 1977-லே
உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் காரணமாக உள்குத்தகை செல்லு
படியாகும் என்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கிவிட்ட
காரணத்தாலே, 1969-லே இயற்றிய ஒரு சட்டம் இன்றைக்கு
பயனடையாமல் போய் இருக்கிறது. 1969-லே குத்தகை ஆவணச்
சட்டம் உள்குத்தகை செல்லுபடியாகும் என்று உச்சநீதி மன்றத்
திலே தீர்ப்பாகிவிட்ட காரணத்தினாலே 1969-லே ஏற்பட்ட
குத்தகை ஆவணச் சட்டம் பயன் இல்லாமல் போயிருக்கிறது.
அப்படி பயன் இல்லாமல் போய் விட்ட காரணத்தினாலே உள்
குத்தகையை உறுதிப்படுத்த ஒரு சின்னச் சீட்டை கொடுத்து
விட்டால் போதும் குத்தகைதாரர் ஆகிவிடுகிறார். அந்தக்
காரணத்திற்காக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சார்ந்தவர்
களுக்கு உச்ச வரம்பின் கீழ் பெறும் நிலத்தை ஆதிதிராவிடர் பெற
முடியாத நிலையை காங்கிரஸ் அரசாங்கம் உருவாக்கினார்கள்.
இதை சமுதாய சீர் திருத்தத்தை விரும்பிய [illegible]
நீங்களெல்லாம் இருந்த அந்த காலத்தில், தாழ்த்தப்பட்ட
சமுதாயத்தின்மீது அக்கறை கொண்டு 1974-லே ஒரு உத்தரவு
போட்டு அவர்களுக்கெல்லாம் வரிசையில் இரண்டாவது இடத்
திற்கு மாற்றினீர்கள். இன்றைக்கு உள்குத்தகை செல்லுபடி
யாகும் என்ற காரணத்தினாலே, பினாமியாக, பல
விவசாயிகள் விவசாய குத்தகைதாரர்களாக மாறி இருக்கிறார்
கள். பினாமி ஒழிப்புக்கு மத்திய அரசோடு போராடிக் கொண்
டிருக்கின்ற இந்த அரசு தமிழ் நாட்டிலே உருவாகியிருக்கிற
பினாமியை ஒழிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்
கள்? எனவே, குத்தகை பதிவுக்கு ஒரு மாற்று சட்டத்தை
உருவாக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
[illegible] தயவுசெய்து அந்த உள்குத்தகை செல்லுபடியாகும்
என்ற உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னாலே ஒரு மறு
ஆய்வு செய்து ஒரு சட்டத் திருத்தத்தை செய்யவேண்டுமென்று
நான் கேட்டுக்கொண்டு, இன்னும் ஒன்றே ஒன்றை மட்டும்
உங்களிடம் கேட்டு விடைபெறலாம். என்று கருதுகிறேன்.

இப்படி உள்குத்தகை செல்லுபடியாகும் என்று சொல்லிவிட்ட
காரணத்தினாலே நீங்கள் 1 லட்சத்து 20 ஆயிரம் ஏக்கரை
எடுத்து விநியோகம் செய்திருக்கிறீர்கள். அந்த 1 லட்சத்து
20 ஆயிரம் ஏக்கரை எடுத்து விநியோகம் செய்ததில் ஏறத்தாழ
40 ஆயிரம் ஏக்கர்தான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு
கிடைத்திருக்கிறது. எஞ்சியிருக்கின்ற 70 ஆயிரத்துச் சொச்சம்
ஏக்கர் இன்றைக்கு மற்றவர்களிடத்திலே ஒப்படை சென்றிருக்
கிறது. எந்த நோக்கத்தோடு தாழ்த்தப்பட்டவர்களுக்கு உச்ச
வரம்பு நிலங்கள் வரவேண்டும் என்று ஒரு சட்டம் இயற்றி
னீர்களோ—தி.மு.க.வில் இருந்தபோது நீங்களும் சேர்ந்து இயற்றிய

[திரு. மா. மணிமாறன்] [1986 ஏப்ரல் 28

சட்டம்தான்— அந்தச் சட்டம் இன்றைக்கு பயன் இல்லாமல் போய்
40 ஆயிரம் பேர்தான் தாழ்த்தப்பட்டவர்களிடம் ஒப்படை செய்
திருக்கிறார்கள். இதற்குக் காரணம் பினாமியாக இன்றைக்குத்
தமிழகத்திலே குத்தகை ஆவண சட்டம் செயல்பட முடியாத
காரணத்தினாலே இந்தச் சட்டம் இருந்தும்கூட பயன்
இல்லாமல் இருக்கின்ற காரணத்திலாலே பல பினாமிகள்
உருவாக்கப்பட்டு தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் கிடைக்காத
நிலை இந்த அரசாலே இருக்கிறதென்பதை கவனத்தில் கொண்டு,
இதற்கு ஒரு மாற்று சட்டம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு குடியிருப்பு அனுபோகதாரர் சட்டம் 1971-லே நீங்களும்
கலைஞரோடு இணைந்து இந்தச் சட்டத்தைச் செய்தீர்கள்.
1971-க்கு முன்னாலே குடி இருந்தவர்களுக்கெல்லாம் அனுமதி
கொடுத்ததன் காரணமாக நீங்கள் அவர்களுக்கெல்லாம் பட்டா
செய்து கொடுத்திருக்கிறீர்கள். 1971-க்கு பின்னாலே சட்ட
மாற்றங்களோ, வேறு சட்டங்களோ வராததானால்
பல குடும்பங்கள், ஏழைகளாக இருக்கின்ற குடும்பங்கள்
இன்றைக்கு குடியிருப்பதற்கு ரொம்ப தர்மசங்கடமான நிலை
யில் என்றைக்கு காலி செய்யச் சொல்வார்களோ என்று அச்சத்
துடனும், முனிசீப் கோர்ட்டுகளில் 'எவிக்ஷன்' வழக்குகளுக்கு
ஆளாகிற காலகட்டத்தில் இந்த அரசில் இன்றைக்கு ஏழைகள்
இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே நான் கேட்டுக்கொள்வ
தெல்லாம் 1971-லே நீங்கள் குடியிருப்பு அனுபோகதாரர்
சட்டம் கொண்டு வந்தீர்களே அதேபோல இன்றைக்கு இந்த
அரசாங்கம் சட்டம் கொண்டு வந்து குடியிருக்கிறவர்களுக்கு
மாற்று உதவி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரணத்திலே நீங்களெல்லாம் உதவிசெய்
கின்ற நேரத்தில் பல பணிகளை இன்றைக்கு பாழுபட்டுக்
கொண்டிருக்கிறீர்கள். வெள்ள நிவாரணத்தைப் பொறுத்த
வரையில் இன்றைக்கு அதிகாரிகளும், அரசியல்வாதிகளும்
பங்குதாரர்களாக இருந்து பங்குபோட்டுக்கொண்டு சென்று
கொண்டிருக்கிறார்களே தவிர ஏழை எளியவர்களுக்கு பயன்
சரியாக போய் சேர முடியாத நிலைமைதான் இன்றைக்கு
இந்த அரசாங்கம் உருவாக்கிக்கொண்டிருக்கிறது. தஞ்சை
மாவட்டத்தை நிர்வாகத்திற்காக பிரிக்க இருக்கிறார்கள்.
அதை 3 என்று சொல்லி இருக்கிறார்கள்.
போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நிபுணர் குழு
போட்டு நீங்கள் ஆராய்வதற்கு முன்னாலே நீங்கள் மூன்று
மாவட்டங்கள் என்று சொன்னீர்கள். பின்னாலே 2 மாவட்
டங்களாகும் என்று சொன்னீர்கள். இறுதியாக 3 என்று
சொல்லிவிட்டீர்கள். நிபுணர் குழு அறிக்கை வருவதற்கு
முன்னாலே எந்த நிபுணர் உங்களிடத்திலே சொல்லி 3 ஆக
பிரிக்கவேண்டுமென்று சொன்னார்கள்? அப்படி 3 ஆக பிரிக்
கப்படும் என்று சொன்னதற்குப் பிறகு, பின்னாலே நிபுணர்



1986ஏப்ரல் 28] [திரு. மா. மணிமாறன்]

குழு அறிக்கை வரயிருக்கிறது என்று நீங்கள்
ஏன் சொல்லியிருக்கிறீர்கள். எனவே அதையும் பரிசிலனை
செய்து தஞ்சை மாவட்டத்தை, நிருவாக சௌகரியங்களுக்காக
பிரிக்க விரைவிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான்
கேட்டுக் கொள்கிறேன்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது வருவாய்த் துறை
யினுடைய கோரிக்கைகளாக நிலவரித் துறை, மாவட்ட நிர்
வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு,
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்கின்ற கோரிக்கைகளின் மீது
பேசுகின்ற வாய்ப்பு அளித்த மாண்புமிகு இதய தெய்வம்
டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி இங்கே
என்னுடைய கருத்துக்களை அகில இந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எடுத்துரைக்க கடமைப்
பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர், தமிழகத்தினுடைய நடமாடும்
பல்கலைக்கழகம், அருமை அண்ணன் நாவலர் அவர்கள்
இங்கே இந்த நிதி நிலை அறிக்கையின் மீது கொண்டுவந்திருக்
கின்ற பல்வேறு அறிக்கைகளை முறையாக சொல்கின்றபோது
அவர்கள் இந்த மாநிலத்திலே ஏறக்குறைய 19 மாவட்டங்கள்,
57 வருவாய் கோட்டங்கள், 167 வட்டங்கள், 1098 உள்வட்டங்
கள் இருக்கின்றன. அதுபோன்று வருவாய் கிராமங்களாக
17,029 கிராமங்கள் தமிழகத்திலே இருக்கின்றன என்ற நிலையை
இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-50)

அதிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்
தமிழகத்திற்கு முதல்வராக வந்த பிறகு எடுத்த சீரிய நட
வடிக்கையின் கீழ் பழைய கிராம உத்தியோகஸ்தர்கள் நீக்கப்
பட்டு அங்கே புதிதாக கிராம உத்தியோகஸ்தர்கள் நிய
மிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை
12,498 ஆகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

விவசாயிகளுக்கு, அடிப்படையான வாழ்வுக்கு உண்டான
வாய்ப்பை இந்த அரசு உருவாக்கித்தந்து அவர்கள் தொடர்பு
கொள்வதற்கு இந்த புதிய கிராம உத்தியோகஸ்தர்களை உரு
வாக்கித் தந்து இருக்கிற அரசு புரட்சித் தலைவர் அவர்கள்
அரசு என்பதை யாரும் மறந்து விட முடியாது. கிராமங்களில்
இருக்கிற ஏழை எளிய மக்கள் அவர்கள் தினந்தோறும்

தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக கிராம நிர்வாக அதிகாரிகளை சந்திக்கிற போது அவர்கள் இப்போது இருக்கிற சூழ்நிலையில் அந்த பகுதியில் இல்லாமல் இருக்கிற ஒரு சூழ்நிலை பரவலாக இருக்கிறது. இதனால் பழைய முறையே தேவலாம் என்று பொதுமக்கள் நினைக்கிற சூழ் நிலை இன்றைக்கு உருவாகிக்கொண்டு இருக்கிறது என்ற செய்தியை நான் இங்கே இந்த மன்றத்தின் வாயிலாக எடுத்து சொல்லி ஆக வேண்டும்.

கிராமத்தில் இருக்கிற கிராம உத்தியோகஸ்தர்கள் அந்த அந்த கிராமத்தில் இருப்பதற்கு உண்டான வாய்ப்பை அரசு குறிப்பாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் கூட பேசுகிறபோது அங்கே இருக்கின்ற அந்த கிராம நிர்வாக அதிகாரிகள் அவர்களுக்கு வீடுகள் இல்லாத காரணத் தால் அந்த கிராமப் பகுதியில் வசிக்க முடியாது என்றும், பல மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து பணியை செய்ய முடியாது என்ற காரணத்திற்காக நகர்புறங் களில் வாழ்கிற சூழ்நிலையை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், அந்த கிராம உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல அடிப்படையான, வீடுகளை கிராமப்புறங்களில் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அப்படி கட்டித்தருவதன் மூலமாகத்தான் ஏழை எளிய மக்கள் ரொம்ப தூரத்திற்கு அலையாமல் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எந்த நல்ல எண்ணத்தோடு இவர்களை போட்டார்களோ அந்த நல்ல பணி நிறைவேற்றுவதற்காக அவர்கள் கிராமப்புறங்களில் இருந்து பணியாற்றுவார்கள் என்பதற்காக அந்த சட்டத்தை நிறைவேற்றினார்களோ அந்த சட்டம் முழுமையாக நிறை வேறுவதற்கு ஒரு அரிய வாய்ப்பினை ஏற்படுத்தி அந்த அந்த கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அங்கேயே வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த வருவாய் துறை அறிக்கையில் கிராமச் சாவடிகள் கட்டப்போவதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். 50 சாவடிகள் கட்டுவதற்கு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். 50 மாட்டு தொட்டிகள் கட்டுவதற்கு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி ஒதுக்கி யிருப்பதை நான் மன்றத்தின் வாயிலாக வரவேற்கிறேன். எப்படி இதற்காக ஆகின்ற செலவுகளை நீங்கள் செலவு கணக் கில் கொண்டுவருகிறீர்களோ அதேபோல் வருவாய் துறையில் இருக்கிற இந்த கிராம அதிகாரிகளுக்கு வீடு கட்டுகின்ற பணத்தை யும் இதிலே சேர்த்து அவர்களுக்கு வீடு கட்டித்தர வேண்டும்





என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி கட்டித்தருவதன் மூலமாக கிராமப்புறங்களில் இருப்பவர்கள் அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு தினந்தோறும அந்த கிராம அதிகாரிகளின் பணி தேவைப்படுகிறது. அவர்கள் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து வருகின்ற நேரத்தில் அங்கே இராமங்களில இருந்து 40 மைல் 50 மைல்களுக்கு அப்பால் இருந்து வரும் விவசாயிகள் பொதுமக்கள் சந்திக்க முடியாத சூழ்நிலையிலும், மாவட்ட தாலுக்கா அலுவலகத்தில வாரத் திற்கு ஒரு முறை சந்திக்கிற சூழ்நிலை இருப்பதாலும் தயவு செய்து மாணபுமிகு நிதி அமைச்சர் அவர்கள், அவர்களை அந்த அந்த கிராமங்களிலே இருக்க வேண்டும் என்ற சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அவர்கள் அந்தஅந்த வட்டங்களில் பணியாற்ற அனுமதியை வழங்கினால் கூட நல்லது என்று நினைக்கிறேன். உள் வட்டங்களில் அவர்கள் பணியாற்ற வாய்ப்பு தருமாறு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். நிர்வாக வசதி கருதி; நிர்வாக நிலை கருதி, மக்களுடைய நியாயமான தேவைகளை கருதி போட்டு இருக்கின்ற நிர்வாகிகளை அந்த அந்தப் பகுதிகளில் பணியாற்ற வகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் கிராம நிர்வாக அதிகாரிகளை பாற்றுவதற்கு வாய்ப்பு. புரமோஷன் கொடுப்பதற்கான வாய்ப்புகளை ஏற் படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அவர்களுக்கு தேவையான ஊதிய உயர்வுகளை அளித்து இருப்பதற்கு நான் பாராட்டுகிறேன்.

மாவட்ட நலன்களுக்காக அமைக்கப்பட்டு இருக்கிற அந்த One Man Commission Report-ல் 184 குறைபாடுகளை நீக்குவதற்கு ஏறக்குறைய அரசு 164 குறைபாடுகளை நீக்கி அதிலே தேவையான நடவடிக்கைகளை எடுத்து இருப்பதற்கு இந்த மன்றத்தின் வாயிலாக மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களை பாராட்ட கடமைப்பட் டிருக்கிறேன். மீதமிருக்கின்ற 20 குறைபாடுகளை, மாவட்டங் களைப் பிரிப்பதன் மூலமாக, வட்டங்களைப் பிரிப்பதன் மூல மாக, பிர்க்காக்களைப் பிரிப்பதல் மூலமாக, தீர்க்கலாம்.

இன்றைக்கு மாவட்டங்களைப் பிரித்து, சிறப்பான முறை யில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் என்பதற்காக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. த. பழனி] [1986 ஏப்ரல் 28

அதேபோன்று வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதாக இங்கே நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன், வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிறபோது வேலூர் பல ஆண்டுகாலமாக, பழைய காலத்திலிருந்தே வடாற்காடு மாவட்டத்தின் தலைநகராக இருந்து வருகிறது. வடாற்காடு மாவட்டத்தை பிரிக்க வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால், அரசினுடைய செயற்குறிப்பு இருக்கிற காரணத்தால், வேலூரைத் தலைநகராகக் கொண்டிருக்கிற மாவட்டத்தை ஆற்காடு மாவட்டம் என்ற பெயரிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வெள்ள நிவாரணம், துயர் துடைப்புப் பணிகளுக்காக ரூ. 66.81 கோடியை மத்திய அரசு நிதி உதவியோடு மாநிலத்திலே தோன்றிய பல்வேறு இயற்கைச் சீற்றங்களை எதிர்த்து போராடிக்கொண்டிருக்கிற ஏழை எளியவர்களுக்கு நல்ல திட்டங்களை தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று நான் இங்கே எடுத்துச் சொல்லவேண்டும். அப்படி எடுத்துச் சொல்ல விரும்புவது, சாலைகள் பராமரிக்கப்படாமலும், ஏரி, குளங்கள் பல்வேறு இடங்களில் பாதிக்கப்பட்டும் இருக்கின்ற அந்த சூழ்நிலையில், விவசாயிகளுக்குப் பயன்படாவண்ணம் அவைகள் இன்னும் சீர்படுத்தப்படாமல் இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கின்ற அந்த மாவட்டத்திற்கு மேலும் நிதிகளை ஒதுக்குவதன் மூலமாக பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகளுக்கு போக்குவரத்து, நிவாரணம் செய்வதன் மூலமாக, மாவட்டத்திற்கு ஒரு சிறப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில், ராணிப்பேட்டை கோட்டம், அரக்கோணம், ஆற்காடு, வாலாஜாபாத், வேலூர், ஆரணி ஆகிய இடங்களில், 'வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற சாலைகள்' என்ற தலைப்பின் கீழ், அங்கே இருக்கிற மாவட்ட நிர்வாகிகளுக்கு எடுத்துச் சொல்லியும் கூட, அதற்குண்டான நிதிகள் இன்னும் ஒதுக்கப்படவில்லை. சீஃப் இன்ஜினியர், ஹைவேஸ் அவர்களுக்குப் பணம் தரப்படவில்லை என்ற சூழ்நிலையிலே, எங்களுடைய மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், இதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி, அங்கே சாலைகளை பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1986 ஏப்ரல் 28] [திரு. த. பழனி]

பல்வேறு சீற்றங்களிலே வறட்சி ஒரு பக்கம், எங்கள் மாவட்டத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறது. திருப்பத்தூர், வாணியம்பாடி, குடியாத்தம் போன்ற பகுதிகள் கடுமையான குடி தண்ணீர் பிரச்சினைக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றன. வறட்சியை வறட்சிக் காலத்தில், போர்க்கால அடிப்படையில் ஏற்று, அந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய குறைகளை, கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்ற வகையில் குடி தண்ணீரைக் கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் ஒதுக்கியிருக்கின்ற பணத்தை முழுமையாக, ஆண்டு தோறும் செலவழிக்கின்ற ஒரு சீரிய பணியினை அரசினுடைய இந்தத் துறை மேற்கொண்டாக வேண்டும். அப்படி மேற்கொண்டால், கிராமப் புறங்களிலே இருக்கின்ற ஏழை எளியவர்கள், மிகவும் பாதிக்கப்பட்டவர்கள், பிற்படுத்தப் பட்டவர்கள், தங்களுக்குத் தேவையான வசதிகளைப் பெறக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோளாக வைக்க ஆசைப்படுகிறேன். 10, 15 ஆண்டுகளாக வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிற ஏழை எளியவர்கள் புறம்போக்குகளில் இருக்கிறார்கள். புறம்போக்குகளைப் பொறுத்த வரையில், ஓடைப் புறம்போக்காக இருந்தாலும், மந்தைப் புறம்போக்காக இருந்தாலும், மயானப் புறம்போக்காக இருந்தாலும், ஆக எந்தப் புறம்போக்காக இருந்தாலும் பரவாயில்லை என்ற சூழ்நிலையில், 15, 16 ஆண்டுகளாக வீடுகளைக் கட்டிக் கொண்டு அந்தப் புறம்போக்குகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு பட்டா வழங்குகிற ஒரு திட்டத்தின் மூலமாக, பஞ்சாயத்து ஒன்றியங்களின் மூலம் அளித்தால் கூட, ஒரு சிறப்பான முன்னுதாரணத்தை ஏழை எளியவர்களுக்கு, பட்டாக்களைப் பெறுவதற்கு ஆன வாய்ப்பு ஏற்படும் என்கின்ற வகையில் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சி சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு வறட்சியாலும், வெள்ளத்தாலும் தமிழகத்தின் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பகுதி வறட்சியால் பாதிக்கப்

பட்டிருக்கின்றது. மற்றொரு பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. கடலோரம் இருக்கின்ற மதுராந்தகம், செங்கற்பட்டு, ஸ்ரீபெரும்புதூர், பொன்னேரி போன்ற பகுதிகளிலே வெள்ளத்தால் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய பகுதியிலே இருக்கிற பெரிய பகுதிகள் எல்லாம் அரசினுடைய பொதுப் பணித் துறை கடந்த காலத்திலே நல்ல முறையிலே பராமரிக்கத் தவறியதாலும் செப்பனிட மறந்ததாலும் தான் வெள்ளம் வருகிறபோது வெள்ளப் பெருக்கைத் தாங்காமல் உடைந்து விவசாயத்தைப் பெரிதும் பாதித்து இருக்கிறது.

(நண்பகல் 12-00)

மதுராந்தகம் ஏரி உடைபட்டு அங்கே இருக்கிற சாலையும் இருப்புப் பாதையும் பாதிக்கப்பட்டு அந்தப் பகுதியிலே இருக்கிற நிலங்கள் விவசாயத்திற்கே பயன்படுத்த முடியாத நிலையில் ஜல்லி போன்றவைகள் திட்டுத் திட்டாக விவசாய நிலங்களிலே ஏற்பட்டு மழை பெய்தாலும் அந்த நிலங்களிலே விவசாயம் செய்ய முடியாத அளவுக்கு இருக்கிறது. அந்த நிலங்களையெல்லாம் விவசாயத்திற்கு யோக்கியதை உள்ள நிலங்களாக மாற்றுவதற்கு இந்த அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் மத்திய அரசாங்கம் போர்க்கால நடவடிக்கை எடுத்து ஒரு மாதத்திற்குள்ளாக அந்த இருப்புப் பாதையைச் செப்பனிட்டு நல்ல முறையில் இன்றைக்கு அங்கே ரயில்கள் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. உடைபட்டிருக்கிற ஏரியில் இந்தக் கோடை காலத்திலே மழை பெய்தாலும் கூட தண்ணீர் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் இன்னும் பொதுப்பணித் துறை எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் அந்த மக்களுடைய பிரச்சினையிலே எந்த விதமான அக்கறையும் எடுத்துக் கொள்ளவில்லை. மதுராந்தகம் ஏரி உடைந்ததாலே அந்த ஏரியின் கீழ் இருக்கிற விவசாயிகள் சம்பாப் பருவத்திலே நெல் பயிரிட்டும் பயிர்கள் பாதிக்கப்பட்டு மகசூல் இல்லாமல் போய் விட்டார்கள். அவர்களுக்கு அரசு அளித்திருக்கிற நிவாரணம் ஒரு சில விழுக்காடுகள் கூட இல்லை. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நட்டத்தை ஈடு கட்ட அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் அதைப் பற்றி இந்த மன்றத்திலே ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். இன்றைக்கு அந்த விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற நட்டத்திற்குக் காரணம் பொதுப் பணித் துறையின் கவனக் குறைவு தானே தவிர, அரசின் கவனக் குறைவு தானே தவிர விவசாயிகளுடைய கவனக் குறைவு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



செங்கற்பட்டு மாவட்டத்திலே குறிப்பாக மதுராந்தகம் ஏரியிலே பெரிய ஷட்டர்களைப் பொருத்தியிருந்தால் அந்த ஏரி உடைப்பெடுக்காமல் தடுத்திருக்க முடியும். ஆகவே மதுராந்தகம் ஏரிக்கு ஷட்டர்களைப் பொருத்த வேண்டும். அப்படிச் செய்தால் தான் வருங்காலத்திலே உடைப்பெடுக்காமல் பாதுகாக்க முடியும். இதைத் தவிர நியமம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, திருநின்றவூர் ஏரிகள் எல்லாம் இருக்கின்றன. அந்தப் பெரிய ஏரிகளிலேயும் ஷட்டர்களைப் பொருத்த வேண்டும். திருநின்றவூர் ஏரிக்கு வருகிற தண்ணீர் அந்த அணைக்கட்டு செப்பனிடப்படாததால் தண்ணீர் வராத நிலைமை இருக்கிறது. அதையும் அரசு கவனிக்க வேண்டும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துத் தாலுக்காக்களிலேயும் போன பட்டத்திலே பயிர்கள் இல்லாமல் போய் விட்டன. அவர்கள் பயிருக்கு செலவு செய்த பணம் கூட அவர்களால் எடுக்க முடியாமல் போய்விட்டது. அதற்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று நான் ஏற்கனவே கேட்டிருக்கிறேன். அவர்களுக்கு நட்ட ஈடு கொடுக்கும் பணியிலே அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தை பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்க வேண்டும். அங்கே கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்கப்பட்ட கடன் வசூலை செய்து கொண்டிருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. மின்சாரத் துறையிலே belated payment surcharge என்ற தண்டத் தீர்வையை வசூல் செய்வதில் மிகவும் தீவிரமாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும். இந்த மாவட்டத்தைப் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவித்து கிஸ்தி வஜா செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையை இந்த மன்றத்தில் வைக்க ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமின்றி இன்றைக்கு நம்முடைய அரசு பெரிய பிர்க்காக்களைச் சிறிய பிர்க்காக்களாகப் பிரித்து பல பிர்க்காக்களை உருவாக்கியிருக்கிறது. ஆனால் தாலுகாக்கள் பெரிதாக இருக்கின்றன. எங்கள் செங்கல்பட்டு மாவட்டத்திலே ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, செங்கல்பட்டு தாலுக்கா, சைதாப்பேட்டை தாலுக்கா போன்ற பெரிய தாலுக்காக்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இதனால் நிர்வாகம் சரிவர நடக்காத நிலைமை இருக்கிறது. எனவே, சைதாப்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர், தாலுக்காக்களைப் பிரித்து பூவிருந்தவல்லி தாலுக்கா என்று உருவாக்க வேண்டும். சைதாப்பேட்டை பெரிய தாலுக்காவாக, ஜனத்தொகை அதிகமாக உள்ள தாலுக்காவாக இருக்கிறது. எனவே, அந்தத் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்க வேண்டும். சைதாப்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர், செங்கற்பட்டு ஆகிய மூன்று தாலுக்காக்களையும் பிரித்து நான்கு தாலுக்காக்களாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. ஜி ஆனந்த கிருஷ்ணா] [1986 ஏப்ரல் 28

தற்பொழுது பல மாவட்டங்கள் பிரிக்கப்படுகி. றன. எங்கள்
செங்கல்பட்டு மாவட்டமும் பெரிய மாவட்டமாக இருக்கிறது.
எனவே, செங்கல்பட்டு மாவட்டத்தையும் இரண்டாகப் பிரித்து
வடக்கு மாவட்டம், தெற்கு மாவட்டம் என்று ஆக்கவேண்டும்.
அந்தச் செயற்குறிப்பு தற்பொழுது அரசிடம் இல்லையென்
றாலும், இந்த ஆண்டிலாவது அரசினுடைய செயற்குறிப்பில்
-இதைச் சேர்த்துக்கொண்டு, எங்கள் மாவட்டத்தை இரண்
டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் பல பகுதிகளிலே
பட்டாக்கள் கொடுப்பதில் தடை இருக்கிறது. செங்கல்பட்டு
மாவட்டத்தில் சில பகுதிகளில் பெல்ட் ஏரியாவாக இருப்ப
தால் மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பட்டா கொடுக்கின்ற
அதிகாரம் இல்லை, அரசாங்கத்திற்குச் செல்ல வேண்டுமென்று
சொல்கிறார்கள். இப்படி அரசுக்குச் செல்வதால் தாமதம்
ஏற்படுகிறது. என்னுடைய தொகுதியிலே காமராஜ் நகர்
என்று ஆவடியிலே இருக்கிறது. அங்கே பட்டா கொடுக்க
லாம் என்று முடிவு செய்தாலும்கூட அரசுக்குச் செல்ல வேண்டி
யிருந்தாலும் அப்படி அரசுக்குச் சென்று பட்டாக்கள் கொடுக்க
லாம் என்று முடிவு செய்யப் பட்டாலும்கூட, எம்.எம்.டி.ஏ.
வின் ஒப்புதல் வேண்டுமென்று சொல்லப்படுவதால் தடை
ஏற்பட்டிருக்கிறது. ஏழைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய
இந்தப் பட்டாக்கள் அப்படிக் கொடுக்கப்படாமல் பல
ஆண்டுகளாகத் தேங்கிக் கிடக்கின்ற நிலைமை இருக்கிறது.
எனவே, எம்.எம்.டி.ஏ. ஆக இருந்தாலும் சரி, அரசாக இருந்தா
லும் சரி அல்லது அரசினுடைய மேல்மட்டத்தில் உள்ள
அதிகாரிகளாக இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட பட்டாக்
களை உடனடியாகக் கொடுக்கின்ற நிலைமைகளை ஏற்
படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்
பட்ட நிலைமை பூவிருந்தவல்லியிலும் பல கிராமங்களில்
இருக்கிறது. ஏழைகளுக்குப் பட்டாக்களைக் கொடுக்கின்ற
நேரத்தில் அவர்களிடத்தில் மனுக்களைப் பெற்ற சில மாதங்
களுக்குள்ளேயே கொடுக்கக் கூடிய நிலைமையை உருவாக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கிராமப்பகுதிகளில் ஐந்து
சென்ட் நிலத்தை அரசாங்கம் கொடுத்தது. இன்றைக்கு
அந்த 5 சென்ட் என்பது மூன்று செ. டாகக் குறைக்கப்பட்டி
ருக்கிறது. அப்படி மூன்று சென்ட் நிலத்தை பட்டாவாக இல
வசமாகக் கொடுக்கின்ற நேரத்தில், அந்த ஐந்து செ டுகளில்
மூன்று சென்டுகள் போக மீதியுள்ள இரண்டு செண்டுகளுக்கு
நம்முடைய அரசாங்கம் ஒரு ரீசனபிள் மார்க்கெட் வேல்யூவை
நிர்ணயித்து அவர்களுக்கு 5 சென்ட் நிலத்தைப் பட்டா
வாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 28] [திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

அதுமட்டுமல்லாமல், எங்கள் பகுதியிலே இன்றைக்கு
திலத்திலே இருக்கின்ற பெரும்பகுதி வீடுகள் அரசாங்கத்தின்
புறம்போக்கு நிலங்களில் இருக்கின்றன. ரிசர்வ் பாரஸ்ட்
ஏரியா என்று பல பகுதிகள் இருக்கின்றன. பட்டாபிராம்
பகுதி, அண்ணாநகர் ஆவடி போன்ற பல பகுதிகளில்
ரிசர்வ் பாரஸ்ட் ஏரியா இருக்கிறது. அதில் பல பகுதிகளை
ஸ்லம் க்ளீயரன்ஸ் போர்டு எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த
நிலங்களை லீஸ்-கம்-சேல் அக்ரிமெண்ட் என்ற முறையில் வாங்கி
பட்டா கொடுக்கும் நேரத்தில் அது ரிசர்வ் பாரஸ்டாக இருப்ப
தால் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற வேண்டு
மென்ற சிக்கலை உருவாக்கியிருக்கிறார்கள். நம்முடைய கன்சர்
வேட்டர் ஆப் பாரஸ்ட் அவர்கள் அது ரிசர்வ் பாரஸ்ட்
ஏரியா என்று சொல்கிறார்கள். அந்த ரிசர்வ்
பாரஸ்ட் ஏரியா முழுவதுமாக வீடுகளைக் கட்டிக்கொண்டி
ருக்கிறார்கள். அதன் ஒரு பகுதியிலே ஆவடியிலே ஹெவி
வெகிகிள்ஸ் பேக்டரி இருக்கிறது. அது ரிசர்வ் பாரஸ்ட் ஏரியா
என்று அரசினுடைய பதிவேட்டிலே இருக்கிறது. அதை
நீக்கி பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

மேலும், இன்றைக்கு பாஸ் புக் பற்றியெல்லாம் சொன்னார்
கள். இந்த பாஸ் புக் என்பது சட்டபூர்வமாக்கப்படாமல் இருப்ப
தால், அந்த பாஸ் புக்குக்கு ஒரு மதிப்பில்லாமல் இருக்கிறது. அந்த
பாஸ்புக்கை உடனடியாக சட்டபூர்வமாகக் கொண்டுவரவேண்டும்.
இன்றைக்கு தாசில்தார் அவர்களிடத்திலே, கம்யூனிட்டி
சர்ட்டிபிகேட், இன்கம் சர்ட்டிபிகேட் வேண்டுமென்றால்
அலைந்து கொண்டிருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம்.
உண்மையான மலைவாழ் மக்களாக இருந்தாலுங்கூட, இன்
றைக்கு எங்கள் பகுதியிலே காட்டு நாய்க்கர், கொண்டா
ரெட்டி வகுப்பினர் அதில் சேர்க்கப்பட வேண்டுமென்று தாக்கீது
அந்த அலுவலகத்தில் இருக்கிறது. ஆனால், பல பகுதி
களிலே இருந்து வேலைக்கு வந்து சேர்கின்றவர்கள், உண்மை
யான, காட்டு நாய்க்கராக இருந்தாலும், கொண்டா ரெட்டி
ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட சான்றிதழ்கள்
கிடைக்கவில்லை. ஆகவே, இந்த பாஸ் புத்தகங்கள் நிலத்
தைப் பற்றிய விவரங்களைக் கொண்டிருந்தாலும், எந்த
ஜாதியைச் சேர்ந்தவர்கள், எவ்வளவு வருமானம் உடையவர்
கள் என்ற விவரம் இருக்கும் வகையிலே அந்த பாஸ் புத்தகம்
அமைய வேண்டுமென்று என்னுடைய கருத்தாகத் தெரிவிக்கிறேன்.

இன்றைக்கு தாசில்தார் அவர்களிடமிருந்து இன்கம்
சர்ட்டிபிகேட் வாங்க வேண்டுமென்றால், ரெவின்யூ இன்ஸ்
பெக்டர், கிராம அதிகாரி போன்றவர்கள் எல்லாம் ஆராய்ந்து

பார்த்து, 10 நாட்களுக்குள் வேண்டுமென்றால், 2, 3
மாதங்கள் கழித்துதான் கொடுக்கிற நிலைமையிருக்கிறது.
எனவே, பாஸ் புக்கில் அவர்களுடைய நிலங்களைப் பொறுத்து
மட்டுமல்லாமல், அவர்களுடைய கம்யூனிட்டி, மற்றும் வரு
மானத்தைக் குறிக்கின்ற வகையிலும் அமையவேண்டுமென்பது
என்னுடைய கருத்து.

இன்றைக்குச் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் அடையா
ளம் இல்லாமல் இருப்பதாலே, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய
இலவச மின்சாரம் போன்றவை எல்லாம் கிடைக்காமல்
தடைபட்டிருக்கின்றன. இந்தச் சிறு விவசாயிகளுக்கும் பெரு
விவசாயிகளுக்கும் ஒவ்வொரு ஆண்டும் கணக்கெடுத்து, அடை
யாள அட்டை கொடுக்கப்பட வேண்டும். இந்த அடையாள
அட்டை கொடுப்பதாலே, அவர்கள் பெறக்கூடிய சலுகைகளை
எளிதில் பெற முடியும்.

இன்றைக்கு நம்முடைய பகுதியிலே, இலவச நில அளவை
மேம்பாடு திட்டம் என்ற திட்டத்திற்கு வகைசெய்யப்படுகிறது.
நில அளவை முதலிலே இலவசம் என்று சொன்னார்கள்.
இப்பொழுது ரூ. 16-லிருந்து ரூ. 30 வரை செலுத்த வேண்டு
மென்ற நிலை இருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா என்று
தெரியவில்லை. அப்படி என்றால், இலவசம் என்ற அந்த நில
அளவை மேம்பாடு திட்டத்தை, உண்மையாக, இலவசமாகச்
செய்யும் நிலைமையை அரசு உருவாக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு எஸ்டேட் அபாலிஷன் ஆக்ட்,
இனாம் அபாலிஷன் ஆக்ட் இருக்கிறது. அந்த ஆக்டுகளிலே
பல பட்டா நிலங்கள் கூட, புறம்போக்கு நிலங்களாக
அறிவிக்கப்பட்டு, அந்த விவசாய மக்கள், அதுகுறித்து, ஏ.எஸ்.ஓ.,
எஸ்.ஓ. விடம் சென்று முறையீடு செய்யாத காரணத்தாலே,
இன்றைக்குக் கூட புறம்போக்கு நிலங்களாகவே இருக்கின்றன.
அதற்கு ஒரு மாற்றுத் திட்டம் அரசு வைத்திருந்தாலுங்கூட
இந்த மாற்றுத் திட்டத்தின்மூலமாக, இன்றைக்குப் பட்டா பெறு
கின்றவர்கள் கூட, குறைவாக இருக்கிறார்கள். எனவே,
நில அளவை மேம்பாடு திட்டத்திலே இருக்கிற சீர்கேடுகளைப்
போக்கி, அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்குகின்ற ஒரு
நிலைமையை அரசு அறிவிக்க வேண்டும்.

இன்றைக்கு நகர்ப்புற நில அளவையில், டவுன் சர்வே என்று
சொல்கின்ற டவுன் சர்வே செய்யப்படாததாலே, பல இடங்
களிலே சாலைகள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. சமுதாய
நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்குச் சமூக



நிலம், சாலை நிலம் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தாலுங்கூட,
லான்ட் என்க்ரோச்மென்ட் செக்ஷன், 7, 6, 5 பிரிவுகளின்கீழ்
தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்றதே தவிர, அவர்
களை வெகு சீக்கிரமாகக் காலி செய்வதற்கேற்ற வகையில்
போதுமான நடவடிக்கை இல்லை. இன்றைக்கு எப்படி காட்டு
இலாகா நிலத்திலே ஆக்கிரமிப்பு செய்தால், அது ஒரு குற்றமாக
கருதப்பட்டு, பிராசிக்யூஷன் நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ,
அதே வகையில், இந்தச் சமுதாய நிலங்கள், முக்கியமான அரசு
நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டால்கூட, குற்றமாகக் கருதி,
பிராசிக்யூஷன் செய்கிற அளவிலே, லான்ட் அக்விசிஷன் ஆக்ட்
திருத்தப்பட வேண்டும்.

1950ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்தச் சட்டம்,
சமுதாய நலத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே நாவலர்
அவர்கள் இப்படிப்பட்ட கண்டிப்பான நடவடிக்கைகளை எல்
லாம் இதில் புகுத்தி நல்ல முறையிலே இந்தச் சட்டத்தை நடை
முறைப்படுத்த வேண்டும். என்னுடைய நகரத்தில் இருக்கின்ற
பகுதிகளில் அர்பன் லேண்ட் டாக்ஸ் விதிக்கப்படுகிறது. அர்பன்
லேண்ட் டாக்ஸ் விதிக்கப்படுகின்ற நேரங்களில் விவசாயிகள்
புஞ்சை நிலங்கள் வைத்திருக்கிறார்கள். அந்த புஞ்சை நிலங்
களில் வருஷத்திற்கு ஒரு முறை மிளகாய் போன்ற புஞ்சை
பயிர்கள் பயிரிட்டு மீதி 6 மாதங்கள் கரம்பாக இருக்கிறது.
அது கரம்பாக இருப்பதனால் இன்றைக்கு அர்பன் லேண்ட்
டாக்ஸ் விதித்த சில வருடத்திலே அந்த விவசாய நிலம் அர்பன்
லேண்ட் சீலிங்கிற்கு உட்படுத்தப்படுகிறது. அதனால்
இன்றைக்கு பல விவசாயிகள் உண்மையிலேயே விவசாயம் செய்தும்
கூட அர்பன் லேண்ட் டாக்ஸ் விதிக்கப்படுகின்ற கொடுமைக்கும்,
அர்பன் லேண்ட் சீலிங்கிற்கு உட்படுத்தப்படுகின்ற கொடுமைக்
கும் ஆளாகிறார்கள். எனவே அர்பன் லேண்ட் டாக்ஸ்,
அர்பன் லேண்ட் சீலிங் போன்றவைகளை ஆராய்ந்து அதற்கு
ஏற்ப திருத்தங்கள் கொண்டுவர வேண்டும். இன்றைக்கு அர்
பன் லேண்ட் டாக்சிலே அர்பன் லேண்ட் என்பதற்கு ஒரு
டெபனிஷன் இருக்கிறது. இதுதான் அர்பன் லேண்ட் என்
பதை கண்டிப்பாக வரையரைப்படுத்த வேண்டும். அர்பன்
லேண்ட் தவிர மற்ற புஞ்சை நிலங்களுக்கு எல்லாம் அர்பன்
லேண்ட் டாக்ஸ் கட்டுகின்ற நிலைமைகள் வரும். எனவே
உண்மையான விவசாயிகளை காப்பாற்றியாக வேண்டும்.

இன்றைக்கு இந்த அர்பன் லேண்ட் டாக்ஸ் மூலமாக பாதிக்
கப்பட்டவர்கள் முக்கியமாக ஏழை ஆதிதிராவிட மக்கள், தாழ்த்
தப்பட்ட மக்கள், படிப்பு அறிவில்லாத சிறிய விவசாயிகள் ஆகும்.
எனவே இந்த மாறுதலை கொண்டுவர வேண்டும்.

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா] [1986 ஏப்ரல் 28

இன்றைக்கு நாம் ஜில்லா என்றும், தாலுக்கா என்றும், பிர்க்கா என்றும் வைத்துக்கொண்டிருக்கிறோம். மொகலாயர் காலத்திலிருந்து இந்த முறைதான் இன்றைக்கும் கையாளப்படுகிறது. அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்த நிலப் பதிவேடுகள் தான் இன்றைக்கும் நம்முடைய தாலுக்காக்களில் இருக்கிறது. இன்றைக்கு ஒரு நிலத்திற்கு கிஸ்தி கட்ட வேண்டுமென்றால் அதற்கு 16 பதிவேடுகள் இருக்கின்றன. இந்த 16 பதிவேடுகளில் இன்றைக்கு இந்த நிலைமை இருப்பதால் ஒரு பதிவேட்டில் ஏதாவது ஒரு தவறு நடந்தால் கூட இந்த விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அந்தப் பதிவேடுகளில் குறிப்பிடுகின்றபோது பல தவறுகள் நேரக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்தப் பதிவேடுகளை குறைத்து விஞ்ஞான ரீதியாக ஒரே பதிவேடாக ஆக்க வேண்டும். அடங்கல், சிட்டா சார் பதிவேடு இவற்றை குறைப்பதால் இந்த அதிகாரிகளுடைய சுரண்டலிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்ற முடியும்.

மேலும் எங்களுடைய பகுதியிலே முன்னாள் இராணுவ வீரர்களுக்கு நிலம் பங்கீட்டிற்காக கூடம்பாக்கம் கிராமத்தில் ஒரு சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. 1945 ஆம் ஆண்டிலிருந்து 6 ஏக்கர் காட்டிலாக்கா நிலத்தை அவர்கள் செப்பனிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்திற்கு அரசாங்கத்தினால் பட்டா கொடுக்க இயலாது என்றார்கள். 3½ ஏக்கர் புஞ்சை, ஒரு ஏக்கர் நஞ்சை நிலம் வைத்துதான் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். நாம் 4½ ஏக்கர் நிலம் போதும் என்று சொல்லி அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்று நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமும், அரசிடமும் சொல்லி வழங்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோம். இன்றைக்கு அவர்களுக்குப் பட்டா கொடுக்காமல், அந்த பட்டா கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அவர்கள் 1945 லிருந்து கஷ்டப்பட்டு செப்பனிட்ட நிலத்தை புதியதாக வந்த கூட்டுறவுச் சங்கத்திற்கு கொடுத்துவிட்டு, இவர்களுக்கு கொடுக்காத ஒரு நிலைமை இருக்கிறது. இதனை தடுத்து நிறுத்த வேண்டும்.

(பிற்பகல் 12-20)

பல இராணுவ வீரர்கள் இன்றைக்கு எங்களுடைய பகுதிகளில் வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாகப் பட்டா கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பட்டா கொடுப்பதில் 1976 அக்டோபர் மாதத்திற்கு முன்பு இருப்பவர்களுக்குத்தான் பட்டா கொடுக்க முடியும் என்று ஒரு ஜி.ஓ. இருக்கிறது. அதனால் பலர் பல இடங்களில் பல வருடத்திற்கு முன்பாக வீடு கட்டியிருந்தாலும் கூட. அவர்களுக்கு பட்டா கிடைக்காத நிலைமை இருக்கிறது. அந்த ஜி.ஓ.-வைத் தளர்த்தி 1980, 1981 ஆம் ஆண்டுகளில் அந்த



1986 ஏப்ரல் 28] [திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

நிலத்தில் இருந்தாலும் கூட அவர்களுக்கும் பட்டா கொடுக்க வேண்டுமென்ற வகையில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

* திரு. மா. இன்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் முன்மொழியப்பட்டு இருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒருசில கருத்துக்களை முன் வைக்க வாய்ப்பு தந்தமைக்காக முதலிலே நான் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் வருவாய்த்துறையின் மூலம் பல சமுதாய நீதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள், காலம், காலமாக தீர்க்கப்படாமல் சமுதாயத்தில் மண்டிக் கிடந்த அழுக்கை நீக்குவதைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவர் அவர்களின் அரசு முயற்சி எடுத்து வெற்றி பெற்றிருக்கிறது. இவ்வாறு சமுதாயத்தில் மண்டிக் கிடக்கிற அழுக்குகளை நீக்க முடியும் என்பதை பொறுத்தவரையில் புரட்சித் தலைவரின் அரசுதான் முனைந்து செயல்பட்டு முதல்முறையாக அதனைச் செயல்படுத்திக் கொண்டு வந்திருக்கிறது. மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டதற்குப் பின்னாலும் கிராமங்களிலே மன்னர்களாக இருந்த மணியக்காரர்கள் ஒழிக்கப்படப் பின்னால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளைப் பொறுத்தவரையில் சில குறைபாடுகள் உடையவர்களாக இருக்கலாம். ஆனால் எடுத்துக்கொண்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்ற திட்டம் சாதாரணத் திட்டம் அல்ல; பல காலம் பலராலும் எண்ணப்பட்டு, அச்சப்பட்டு, அச்சப்பட்டு தாங்களாகவே ஒதுக்கி வைத்துவிட்ட திட்டமாகும். ஆனால் அந்த மணியக்காரர்களை ஒழித்து, அதாவது கிராமப்புறங்களில் இருந்த மிராசுகள் ஆட்சி முறையை ஒழிக்கின்ற காரியத்தைச் செய்தது புரட்சித் தலைவர் அரசுதான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்தத் திட்டத்தின் காரணத்தால்தான் மிகப்பெரிய சமுதாய நீதி ஏற்படுத்தப்பட்டு அதே நேரத்தில் ஆதி திராவிட மக்களும் கூட மணியக்காரர்களாகவும், கணக்குப் பிள்ளைகளாகவும் இந்த நாட்டிலே பதவிக்கு வர முடிந்தது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். 18 சதவீதம் ஆதிதிராவிட மக்கள் மணியக்காரர்களாகவும், கணக்குப் பிள்ளையாகவும் இருக்கிறார்கள். அது புரட்சித் தலைவர் அவர்கள் சமுதாயத்திற்கு ஏற்படுத்தித் தந்த நீதி என்பதையும் சமுதாயத்திலே மண்டிக் கிடந்த அழுக்கை இந்த அரசு நீக்கியது என்பதையும் இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. மா. சின்னராசு] [1986 ஏப்ரல் 28

வருவாய்த்துறையிலேயும் ஒரு சீர்திருத்தம் செய்வது பற்றிப் பலகாலம் பேசப்பட்டு வந்தது. ரெவின்யூ போர்ட் என்பது ஆங்கிலேயர்களுடைய ஆட்சிக்காலத்தில் அவர்களுடைய அதிகாரத்தினை நிலை நாட்டிக்கொள்வதற்காக, வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்காக, அதிகாரத்தைச் செலுத்துவதற்காக நியமிக்கப்பட்டிருந்த ரெவின்யூ போர்ட் என்பது எத்தனையோ பேர்களால் காலங்காலமாக சொல்லப்பட்டு வந்தாலும், புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில்தான் ஒழிக்கப்பட்டு அது இன்றைக்கு அரசாங்கத்தினுடைய நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் உள்ள துறையாக ஆகி இருக்கிறது. அப்படி ரெவின்யூ போர்ட் என்பது ஒழிக்கப்பட்டுவிட்டாலும் அதிலே தொடர்ந்து பல சீரமைப்புகளை அரசு மேற்கொள்ள வேண்டியுள்ளது. கமிஷனர் தலைமையிலே இருக்கிற நிர்வாகத்தை அரசு துறையிலே இருக்கிற செயலாளருடைய தலைமையிலே கொண்டு வர வேண்டும் என்பதைப் பற்றி அரசு பலமுறை பரிசீலித்து அவ்வப்போது அதற்கான வகையிலே மாறுதல்களைச் செய்து வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ரெவின்யூ போர்ட் ஒழிக்கப்பட்டதற்குப் பின்னால் நிர்வாகத்திலே நாம் எளிதாக விரைவாக இந்த வருவாய்த் துறையைப் பொறுத்த மட்டில் காரியங்களை ஆற்ற முடியும் என்ற பரந்த எதிர்பார்ப்பு வந்திருக்கிறது. இருந்தாலும் கூட இன்னும் கமிஷனராக இருப்பவர்களாக இருந்தாலும் சரி, வருவாய்த் துறையிலே இருந்தாலும் சரி, மற்ற துறைகளின் ஆணையாளர்களாக இருந்தாலும் சரி, அதேபோக்குத்தான் இன்னும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதை அரசு கவனத்தில் கொண்டு இன்னும் வேகமாகச் செயல்படுத்த வேண்டும். அரசினுடைய கொள்கைகளை நிறைவேற்ற அது விரிவுபடுத்தப்பட வேண்டும். அதற்கான மாறுதல்களைச் செய்ய வேண்டும். ரெவின்யூ போர்டிலே இருந்த நிலைமைகளை எல்லாம் முற்றிலுமாக மாற்றுவதற்கு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிற கருத்தைப் பொறுத்தவரையில் நிர்வாகத் திறமையை அதிகப்படுத்த வேண்டும். தாமதத்தைத் குறைக்க வேண்டும் என்ற வகையில் தான் மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகுதான் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு பெரிய மாவட்டங்களாக இருப்பவைகளைப் பிரிக்க வேண்டும் என்ற வகையில் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப் பிரிக்கப்பட்ட பின்னாலும், இன்னும் கூட அதிக நிர்வாகச் சுமையுள்ள மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்ற எண்ணத்தைத் தாங்கி இருக்கிற இந்தக் கொள்கைக் குறிப்பிலே புதிதாக அமைய இருக்கின்ற மாவட்டங்களைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



1986 ஏப்ரல் 28] [திரு. மா. சின்னராசு]

அப்படி எதையும் மக்களுக்காக சமுதாயத்திற்காக நாம் செய்ய
வேண்டும் என்று கடந்த காலத்தில் ஆண்டவர்கள் எண்ணத்
தவறிய காரணத்தினால், அப்படி மக்களுக்கு ஆற்ற வேண்டிய
சமுதாயப் பணிகளை ஆற்ற மறந்த காரணத்தினால், புரட்சித்
தலைவர் அவர்கள் கூடுதலாக அந்தப் பணிகளையெல்லாம் ஏற்றுக்
கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு
உறுப்பினர் மணிமாறன் அவர்கள் கூட கேட்டார்கள். வறட்சி
யில் 5 ஆயிரம் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும் என்று
சொன்னீர்களே, மூவாயிரம் தானே அமைக்கப்பட்டிருக்கிறது,
மீதி இரண்டாயிரம் எங்கே என்று கேட்டார்கள்.

சாதாரணமாக நம்முடைய கிராமப் பகுதிகளிலே சொல்
வார்கள், என்றும் கொடுக்கக்கூடிய ஒரு தாய் பிச்சை கொடுக்க
வில்லை என்றால் ''எப்போதும் கொடுக்காத மகராசிதான் எப்
போதுமே கொடுக்க மாட்டாள், என்றும் கொடுக்கக்கூடிய சண்
டாளி இன்றைக்கு ஏனோ கொடுக்கவில்லை'' என்றும் சொல்லு
வார்கள்.

அதுபோல நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் என்றும்
கொடுக்கக்கூடியவர்கள். அப்படி என்றுமே கொடுத்துக் கொண்
டிருக்கிற புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து ஏன் கொடுக்க
வில்லை என்று கேட்கிறார்கள். அவர்கள் ஆண்ட காலத்திலே
எதையுமே கொடுக்க மறுத்தவர்கள் அவர்கள். அவர்கள் காலத்
திலும் நாட்டில் வறட்சி நிலவியது. அப்போது ஒரு ஆண்டிற்கு
500 போர்வெல்கள், குழாய்க் கிணறுகள் போட்டிருந்தாலும் கூட,
கிட்டத்தட்ட அவர்களுடைய ஆட்சியில், வறட்சிக் காலத்தில்
குறைந்தது 2,500 போர்வெல்களையாவது போட்டிருக்க வேண்
டும். அப்படி போட்டிருந்தால் மீதம் இருக்கிற 2,500 போர்
வெல்களை இந்த ஆண்டில் மிக எளிதாக நிறைவேற்றி இருக்க
முடியும். ஆகவே அப்படி தாங்கள் ஆண்ட காலத்தில் மக்க
ளுக்கு நிறைவேற்ற வேண்டிய பணிகளை மறந்தவர்கள், புரட்சித்
தலைவர் அவர்களின் ஆட்சியிலே மக்களுக்கு ஆற்ற வேண்டிய
சமுதாயப் பணிகள் நிறைவேற்றப்படவே இல்லை என்று பேசுவது
அரசியல் காழ்ப்புணர்ச்சி உள்ளதாக இருக்கிறதே ஒழிய, அறிவு
பூர்வமாக ஏற்புடையதாக இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன்.

அடுத்து மனுநீதி திட்டம், மாஸ் கான்டாக்ட ப்ரோக்கிராம்,
என்ற பெயரில் அந்த திட்டம் இப்போது செயல்படுத்தப்படுகிறது.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரிடையாக கிராமங்களுக்குச்
சென்று ஒரு இடத்தில் கிராமச் சாவடியில் பல்லாயிரக் கணக்கான
மக்களின் குறைகளை கேட்கக் கூடிய அளவிற்கு மனுநீதி மேற்
கொள்ளப்படுகிறது. அவைகள் முழு அளவிற்கு தீர்க்கப்பட
வில்லை என்றாலும் கூட, மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்
களை நேரில் சந்தித்து குறைகளை சொல்ல முடியும் என்ற

நிலையை, ஏதோ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்றாலே சுலபமாக அணுக முடியாதவர்கள் என்ற நிலைமை மாறி, வருவாய்த் துறையின் பல்வேறு அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வட்ட ஆட்சியர், வட்ட துணை ஆட்சியர், வருவாய் வட்ட அதிகாரிகள் ஆகிய எல்லோரும், அவர்கள் இருக்கும் இடத்தில் கூட அல்ல, அவர்கள் மக்கள் இருக்கிற இடத்திற்கே சென்று குறைகளைக் கேட்கும் வகையில் அந்தத் துறை மூலம் ஒரு நிலைமை உருவாகியிருப்பது புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல அந்தத் துறையிலே பணியாற்றக் கூடிய பணியாளர்கள் அரசு ஊழியர்கள் இன்றைக்கு அவர்கள் எதிர் பார்க்கக் கூடிய அளவிற்கு எல்லாம் நன்மைகள் செய்யப்பட்டுஇருக்கின்றன. கிராமப்பகுதிகளிலே வாழுகின்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கு, வருவாய் வட்ட அதிகாரிகளுக்கு அவர்கள் பணிபுரியக் கூடிய அலுவலகத்தோடு இணைந்த குடியிருப்புகளை கட்ட வேண்டும் என்று பல ஆண்டுக்காலமாக சொல்லப்பட்டு வந்ததை, நிறைவேற்றி இன்று எல்லா இடங்களிலும் குடியிருப்புகளோடு அமைந்திருக்கிற அலுவலகங்கள் கட்டி முடித்திருக்கிறார்கள்.

காலம் காலமாக நிறைவேற்றப்படாத இதுபோன்ற பணிகளை புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தான் திட்டமிட்டு நிறைவேற்றி வருகிறது. இந்தத் துறை இந்த 8 ஆண்டுகளில் மிகவும் வளர்ச்சியடைந்திருக்கிறது. கடந்த காலத்தில் என்னென்ன வேலை பளு இருந்தது, பணிகளை விரைவுபடுத்த என்னென்ன கோப்பு மாற்றங்கள் செய்ய வேண்டும், என்னென்ன வகைகளில் அவைகளைப் பிரிக்க வேண்டும் என்றெல்லாம் பல பணிகள் வேறு எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு மாவட்டங்கள் பிரிக்கப்படுகின்றன. மிகப் பெரிய தாலுக்காக்களையெல்லாம் பிரித்து வருகிறோம். கோயம்புத்தூர் தாலுக்காவைப் பற்றி பலமுறை நான் வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். 4 தாலுக்காக்களில் உள்ள மக்கள் தொகைக்கு மேல் இந்த கோயம்புத்தூர் தாலுக்காவில் இருக்கிறது. கோவை மாநகராட்சிப் பகுதியில் இருக்கிற சுமார் 10 லட்சம் மக்களோடு, சுற்றிலும் இருக்கிற 5 பிர்க்காக்களும் அதைச் சுற்றி இருக்கிற பகுதிகளும் இந்த ஒரே தாலுக்காவில் அமைந்திருக்கிற காரணத்தால், ஒரு கம்யூனிட்டி சர்டிபிகேட் கொடுப்பது என்றாலும் கூட, அங்குள்ள தாசில்தார்களால் டெபுடி தாசில்தார்களால் கையெழுத்து போட முடியாத அளவுக்கு வேலைப் பளுவினால் அன்றாடப் பிரச்சினைகளே தேங்கி இருக்கின்றன. அத்தோடு அது மாவட்ட தலைநகராக இருக்கிற காரணத்தால் வி. ஐ. பி-க்கள்



சென்னை 600 008



வந்து போகக்கூடிய இடமாக, வெளி மாநிலத்திலிருந்தும்
பல அமைச்சர்கள் வந்து போகக்கூடிய இடமாக இருப்பதால்,
அங்குள்ள தாசில்தார்களுக்கும், மற்ற ரெவின்யூ துறை அதிகாரி
களுக்கும் உள்ள வேலை பளு சாதாரணமானது அல்ல.

எத்தனையோ மாவட்டங்களைப் பிரித்து புதிய மாவட்டங்கள்
உண்டாக்குகிற இந்த நேரத்தில் கோயம்புத்தூர் தாலுக்காவை
பிரிக்க வேண்டும். ஏனென்றால் கோயம்புத்தூர் தாலுக்கா
பரப்பளவில் மட்டுமல்லாமல், மக்கள் தொகையிலும் மிகப் பெரி
யது. அத்தோடு கோவை தாலுக்காவை பொறுத்த வரையில்
2 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அதைப் பிரிப்பதற்கான பரிந்துரை
யை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே தீர்மானமாக
போட்டு நிறைவேற்றி அரசாங்கத்தில் பரிசீலனைக்கு அனுப்பி
யிருக்கிறார்கள். சட்டமன்றத்தில் முன்னாள் வருவாய் துறை
அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அது குறித்து பரிசீலித்து சாதக
மாக முடிவு எடுக்கப்படும் என்று சொன்னதற்குப் பின்னாலும்
கூட, ஏனோ அது அப்படியே இருந்து வருகிறது என்பதை
நினைவு கூர்ந்து, கோயம்புத்தூர் தாலுக்காவை, ஏற்கெனவே
மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிந்துரை செய்தது போல் வடக்கு,
தெற்கு என்று இரண்டு தாலுக்காக்களாக பிரித்துத் தர வேண்டும்.
அதற்கான அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட
வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்
கிறேன்.

(பிற்பகல் 12-30)

அதேபோல இன்றைக்கு மாவட்ட நிர்வாகத்தில் பல சீர்
திருத்தங்களைச் செய்தும், இன்னும் நாம் செய்ய வேண்டிய
சீர்திருத்தங்கள் பல இருக்கின்றன. அம்புரோஸ் கமிட்டியின்
பரிந்துரைகளில் நாம் பெரும்பாலானவற்றை நிறைவேற்றி விட்
டோம் என்றாலும் மக்களுக்கு நிர்வாகத்தில் ஏற்படுகிற தாமதத்
தைக் குறைப்பதற்கு வளர்ச்சித் துறையென்றும், ரெவின்யூ
துறையென்றும் இரண்டாக இருக்கும் நிர்வாகத்தை ஒன்றாக
ஆக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அதற்கு
மேலே டிவிஷனல் டெவலப்மெண்ட் ஆபீஸ் இருக்கிறது. அதற்கு
மேலே கலெக்ட்ரேட் (மாவட்ட ஆட்சித் தலைவர்) அலுவலகம்
இருக்கிறது. காலப்போக்கில் இதை நாம் ரெவின்யூ துறையை
வளர்ச்சி அங்கங்களோடு இணைத்து பஞ்சாயத்து யூனியன் அளவில்
இருக்கிற பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களை ரெவின்யூ அலு
வலகத்தோடு இணைத்து இரண்டையும் ஒன்றாக ஆக்குவதன்
மூலம் நாம் நிர்வாகச் செலவுகளை பலவிதத்திலும் குறைக்க
முடியும். ஒரே நேரத்தில் எல்லா தேவைகளையும் மக்களுக்கு
ஒரே இடத்தில் நிறைவேற்றுகிற அளவிற்கு தாலுக்காவின் அளவு
குறைக்கப்பட்டு, பஞ்சாயத்து யூனியன் அளவில் ஒரு தாலுக்கா
என்ற அடிப்படையில் நிர்வாகச் செலவை குறைக்க முடியும்.

அதே நேரத்தில் மக்களுக்கான பணிகளையும் விரைந்து நாம்
செய்ய முடியும். தாலுக்கா அலுவலகங்களையும், பஞ்சாயத்து
யூனியன் அலுவலகங்களையும் இணைத்து ஒரே அதிகாரியின்கீழ்
இரண்டு பணிகளையும் வளர்ச்சிப் பணியானாலும், வருவாய்
பணியானாலும், செய்யக் கூடிய அளவிற்கு மிகப் பெரிய மாறுதலை
செய்வது சாலப் பொருத்தமாக இருக்கும்.

வளர்ச்சி மன்ற அமைப்புகள் ஏற்படுத்தப்பட்ட போது,
ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டபோது, இது எண்ணப்பட்ட
கருத்தாகும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.
அதேபோல மாவட்ட அளவில், கோட்ட அளவில் ஆர். டி. ஓ.,
டி. டி. ஓ. என்று இருப்பதை இணைத்து ஒரே அதிகாரியின்கீழ்
கொண்டு வந்தால் மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன் அளவில்,
கோட்ட அளவில், மாவட்ட அளவில் மூன்று படிகளாக ஒரு
நிர்வாகத்தை வளர்ச்சிப் பணிக்கென்று ஒன்றும், வருவாய்த்
துறைக்கென்று ஒன்றும் இல்லாமல் ஒரே துறையின்கீழ் கொண்டு
வருவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்
டும். இதை நீண்டகால திட்டமாக எடுத்துக் கொண்டாலும்
கூட இது மக்களுக்குத் தேவையான அவசியமான ஒன்று என்
பதை இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடக்கின்றன. மாவட்ட
அளவிலான வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் மாவட்ட ஆட்சித்
தலைவர் தலைமையில் நடக்கின்றன. இந்த வளர்ச்சி மன்றக்
கூட்டங்கள் ஆலோசனைக் கூட்டங்களாக கூட இன்றைக்கு
செயல்படுவதில்லை. வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் ஊராட்சி
ஒன்றியத் தலைவர்கள் வருகிறார்கள். அங்கே கட்சி மாச்
சரியங்களுக்கு அப்பாற்பட்டு எல்லா சட்டமன்ற உறுப்பினர்
களும் உட்கார்ந்து மாவட்ட அளவிலான தேவையான திட்டங்
களைப் பற்றியும், திட்டங்கள் நிறைவேற்றப்படுவதைப் பற்றியும்,
அதிக அளவில் விவாதிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த
மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக்கள் மாவட்ட ஆட்சித்
தலைவர் தலைமையின்கீழ் இயங்குகின்றன. அந்தக் குழுக்
களுக்கு அதிகமான அதிகாரங்களைத் தந்து அவைகள் சிறந்த
முறையில் அரசாங்கத்தின் திட்டங்களை நிறைவேற்றுவதை கண்
காணிப்பதற்கு அந்த மன்றங்களைப் பயன்படுத்தலாம். அந்த
மன்றங்களின் ஆலோசனைகள் நிச்சயமாக அரசினுடைய
பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்கிற நம்பிக்கை
அந்த வளர்ச்சி மன்றக் குழுக்களில் பணியாற்றுகின்ற பொது
நல ஊழியர்களுக்கு ஏற்படுகிற வகையில் மாவட்ட வளர்ச்சி
மன்றங்களின் கூடுதல் அதிகாரங்களுக்கு தேவையான அள
விற்கு நடைமுறையில் மாறுதல்களைச் செய்து தர வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.



மாவட்ட ஆட்சித்தலைவர் மாதத்தின் 30 நாட்களிலும்
நிர்வாகப் பணிகளைத் தான் செய்து வருகிறார்கள். ஸ்டேச்
சுடரி மீட்டிங்ஸ், சட்டப்பூர்வமான நிர்வாகப் பணிகள், மற்றும்
அவர் நீதிபதியாகவோ அல்லது தலைமை தாங்கி உட்
கார வேண்டிய மீட்டிங்குகளையோ நடத்துவதிலேயே அவ
ருடைய நேரம் சென்று விடுகிறது. ஆகவே வளர்ச்சிப் பணி
களை முழு அளவிற்கு பார்ப்பதற்கு மாவட்ட ஆட்சித்தலை
வருக்கு இன்றைக்கு இருக்கிற பணிமுறைகளில் 30 நாட்களும்
போதாது. ஆகவே மாவட்ட வளர்ச்சிப் பணிகளைப் பார்ப்
பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இணையாக ஒரு
டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் ஆபீசர் என்று ஒருவரை நியமிப்பது
குறித்தும் அரசு பரிசீலனை மேற்கொள்ள வேண்டும்.

இப்போது பழைய காலம் மாதிரியில்லை. புரட்சித் தலைவர்
அவர்கள் ஆட்சியில் நிறைவேற்றுகிற திட்டங்களில்
கோடிக்கணக்கிலே ரூபாயை மாவட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு
ஒதுக்குகிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவருடைய
நேரத்தை ஸ்டேச்சுடரி மீட்டிங்ஸ்ஸில் செலவிட முடியுமே
தவிர, மற்ற பணிகளுக்கு அவருக்கு நேரம் இருப்பதில்லை.
இதைக் கருத்தில் கொண்டு இந்த மற்றொரு அதிகாரியை
வளர்ச்சிப் பணிகளுக்கான அதிகாரியாக மாவட்ட அளவில்
நியமித்து, ரெவின்யூ துறை, வளர்ச்சித் துறை என்று இருப்
பதை ஒன்றாக இணைத்து, இந்த இரண்டு அதிகாரிகள்
மூலம் பணிகளை பகிர்ந்து செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்த
வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இறுதியாக வறட்சிப் பணிகள். கோயம்புத்தூர் மாவட்
டத்தைப் பொறுத்தவரையில் அது நிரந்தரமாக வறட்சிக்கு
உட்பட்ட பகுதியாகும். நமக்கு எந்த ஆண்டிலும் வறட்சி
இருக்காது என்று சொல்ல முடியாது. இதற்கு நிரந்தரமாக
ஒரு திட்டம் வேண்டும். அப்போது தான் வறட்சியைப்
போக்க முடியும் என்பது என்னுடைய பணிவான கருத்து.
அதற்குக் கூடுதலாக நீர் ஆதாரங்களை ஆராய வேண்டும்.
கேரளாவில் மேற்கு நோக்கி பாயும் நதிகளை திருப்புவதன்
மூலமும், இருக்கிற நீரை மிச்சப்படுத்தியும், கசிவுநீர்க் குட்டை
களை ஏற்படுத்தியும் ஓரளவிற்கு மேட்டுப்பாளையம், அவிநாசி,
பல்லடம் போன்ற பகுதிகளில் இருக்கிற வறட்சி நிலை
மையைப் போக்கி, குடிதண்ணீர் தட்டுப்பாடு இல்லாத பகுதி
யாக ஆக்குவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.
அதிக அளவில் கசிவுநீர்க் குட்டைகளை அமைப்பதற்கு அரசு
முன் வரவேண்டும். கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு பிரத்
யேகமாக அதனுடைய நிலைமையைக் கருதி அதிக நிதி
யொதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மா. சின்னராசு] [1986 ஏப்ரல் 28

ஆக நதி நீர்த் திட்டங்கள் மூலமும், அதேபோல் நிரந்தரத் திட்டங்கள் மூலமும், நிரந்தரமாக வறட்சிப் பகுதிகளை நீக்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நில சீர்திருத்தத்தை பொறுத்தவரையிலும் நான் பல முறை இங்கே வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். இந்த குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் அதிலே இருக்கிற ஒரு குறையை இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. இந்தச் சட்டத்தை பொறுத்த அளவில் நாம் இங்கே அனைத்துக் கட்சிக் காரர்களும் ஒன்றாகத்தான் இருக்கிறோம். குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று நாம் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். அதற்கான சட்டத்தை எல்லோரும் ஆதரித்து வந்திருக்கிறோம். ஆனால் இருக்கிற ஒரு தனி மனிதனுக்கு இழைக்கப்பட்டு இருக்கிற அநீதியைப் பற்றி நாம் அதிகமாகக் கவலைப்படவில்லை. சாதாரணமாக 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்துக்கொண்டு இருக்கிற சாதாரண விவசாயி அல்லது விதவைப் பெண்ணாக இருந்து, தான் விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருக்கக்கூடியவர்கள், தன்னுடைய நிலத்தை, ஏதோ ஒரு காரணத்திற்காக குத்தகைக்கு கொடுத்துவிட்டால், மீண்டும் அவர்கள் பெற முடியாது என்பது இன்றைக்கு உள்ள சட்டம். குத்தகையாவது அவர்கள் பெற முடியுமா என்றால், ஆண்டுக்காண்டு அதையும் நாம் தள்ளி வைத்துக் கொண்டு இருக்கிறோம். அதற்கு நிவாரணம் கொடுக்கிறோம். குத்தகை கொடுக்கவில்லை என்பதற்காக, யாருமே இன்று அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்ற முடியாது. அப்படி சட்டப் பாதுகாப்பு குத்தகைதாரர்களுக்கு இருக்கிறது. ஆனால் குத்தகைக்கு கொடுத்துவிட்டு தனக்கு வேறு வழியே இல்லை, வாய்ப்பே இல்லை, வாழ்வதற்கு வழியில்லை என்று பிச்சை எடுக்கக் கூடிய நிலையில் இருக்க கூடிய நிலச்சுவான்தாரர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு பெயர்தான் லேண்ட் லார்ட். 2 ஏக்கர் வைத்துக் கொண்டு, அந்த 2 ஏக்கரை ஒருவர் கையிலே கொடுத்துவிட்டு, அதைச் சாகுபடி செய்யக்கூட வழியில்லாமல் இருக்கக்கூடியவர் எப்படி லேன்ட் லார்டாக ஆக முடியும்? பெயர் இருக்கிற காரணத்தாலே அவர்கள் ஏதோ ஒரு பெரிய மிராசுதாரராக இருக்கிறார்கள் என்ற நிலையை நிச்சயமாக யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் 1977-ல் தேர்தல் பிரச்சாரத்தை துவக்கியபோது, எங்கள் ஊரிலே பேசுகிறபோது, கோயம்புத்தூரிலே சொன்னார்கள். 'ஒரு அரசாங்க உத்தியோகத்திலே இருப்பவர் தன்னுடைய உத்தியோகத்தின் காரணமாக தன்னுடைய நிலத்தை குத்தகைக்கு விட்டுவிட்டு, உத்தியோகம் முடிந்து மீண்டும் தன்னுடைய ஊருக்கு வந்து, தன்னுடைய குழந்தைகளுக்கு அந்த நிலத்தை சாகுபடி செய்து வாழ்வு அளிக்கலாம் என்று நினைக்



1986 ஏப்ரல் 28] [திரு. மா. சின்னராசு]

கிறபோது, அவனுக்கு அந்த உரிமை கிடையாது என்றால் இது என்ன நீதி' என்று கேட்டார்கள். அதை நான் இந்த நேரத்திலே நினைவு கூற விரும்புகிறேன். நிச்சயமாக சமுதாயத்திற்கு அளிக்கக்கூடிய நீதியாக இருக்காது. எனவே இந்தச் சட்டத்தை நாம் மறுபரிசீலனை செய்யவேண்டும். இந்த குத்தகைதாரர்கள் பாதுகாப்பு என்கிறபோது, நில உடைமையாளர்கள் தெரிந்தோ, தெரியாமலோ குத்தகைக்கு கொடுத்து அந்த நிலத்தை மட்டுமே நம்பி வாழ்பவர்கள் அவர்களுக்கும் பாதுகாப்பு வேண்டும் தன்னுடைய சொந்த நிலத்தை சாகுபடிக்கு என்று கேட்கிறபோது, அல்லது அவர்களுக்கு நியாயமான விலைக்குக் கொடுக்கிறோம் என்றாலும்கூட, அந்த பணத்தை வைத்து அவர்கள் வாழ முடியாது, நாம் கொடுக்கிற பணத்தை வாங்கி அவர்கள் வாழ முடியாது. நாட்டிலே வேலை வாய்ப்புக்கு நாம் அவர்களுக்கு உறுதி சொல்ல முடியாது. ஆகவே இந்த நேரத்திலே குத்தகை பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே நிச்சயமாக மறுபரிசீலனைக்கு, சமுதாய நீதிக்கான மறுபரிசீலனைக்கு நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதிலே கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு, இந்த நீதியை ஏற்படுத்துவதற்கு மாமன்ற உறுப்பினர் அனைவரும் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே வற்புறுத்தி, கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை விரிவாக விவாதம் செய்யப்பட வேண்டிய ஒரு முக்கியமான கோரிக்கை. ஆனால் நமக்கு எப்போதுமே நேரம் பத்தாது நாம் போய்க் கொண்டு இருக்கிறோம். இப்போது ஏதற்கும் இதே கதைதான். இந்த மானியக் கோரிக்கையிலே பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. கிராம நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரையில் முன் காலத்திலே இருந்த மணியக்காரர்கள், பரம்பரை முறை ஒழிக்கப்பட்டு கிராம அலுவலர்கள் என்று கிட்டத்தட்ட 12,500 பேர்கள் நியமிக்கப்பட்டு அந்த நிர்வாகம் கொஞ்சம் சீரமைக்கப்பட்டு உள்ளது உண்மை. ஆனால் அவர்களுடைய வேலைகளைப் பற்றி அரசு தொடர்ந்து ஆராயவேண்டியுள்ளது. அவர்களில் புதியவர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். சரியான முறையில் அவர்களுடைய நட வடிக்கைகளை நடத்துகிறார்களா? ஏழை மக்களுக்கு அடி மட்டத்தில் இருக்கக்கூடிய ஜனங்களுக்கு செய்யவேண்டிய பல கடமைகளை அவர்கள் ஆற்றவேண்டியுள்ளது. அதற்கு அவர்களுடைய காரியாலயங்கள் செயல்படக் கூடிய இடங்கள் இந்த மக்களால் அவர்களுடைய w th n r ach என்று சொல்வோமே, அவர்கள் எட்டிப் பிடிக்கக்கூடிய இடங்களில் அவர்களுடைய காரியாலயங்கள் இருக்கவேண்டும். மைய

[திரு. கு. ரமணி] [1986 ஏப்ரல் 28

மான இடத்திலே இருந்து அவர்கள் செயல்பட வேண்டும் என்பது முக்கியமான அம்சமாகும். சாதாரணமாக சிறு சிறு சர்டிபிகேட்டுகள் எல்லாம் அத்தாட்சிகள் எல்லாம் பெறுவதற்கு அவர்களைப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதிலே பல சிரமங்கள் இருக்கின்றன என்று மக்களிடமிருந்து நமக்கு பல பிரச்சனைகள் வந்து கொண்டு இருக்கின்றன. அவற்றையெல்லாம் அவ்வப்போது அரசு ஆராய்வதற்குதகுந்த நடவடிக்கைகளை எடுத்து, இதை மாற்றியமைத்து இன்னும் சிறப்பாகச் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(பிற்பகல் 12-40)

அதேமாதிரி நிர்வாகத் துறையிலே திரு.அம்பூரோஸ் அவர்களுடைய கமிட்டியினுடைய ஆலோசனைகள், பெருவாரியான ஆலோசனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று இந்தக் கொள்கைக் குறிப்பிலே கொடுக்கப்பட்டுள்ளது. 1,098 பிர்க்காக்கள், 167 வட்டங்கள், 57 விவசாய வருவாய் கோட்டங்கள் இந்த அளவுக்குச் சில விரிவான அளவுக்கு பிரிவினைகளை ஏற்படுத்தி நிர்வாகத்தைச் செம்மைப் படுத்தக் கொண்டுவரப்பட்டிருப்பதாக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த விஸ்தரிப்பு கொஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை. அதிகப்பமயான பிர்க்காக்களும், வருவாய் கோட்டங்களும், வட்டங்களும், உருவாக்கப்பட்டது உண்மை. ஆனால் இன்னும் பல இடங்களிலே பழைய நிலைமைகளே நீடிக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதிலே ஒன்று தான் நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் குறிப்பிட்டது.

அதேமாதிரி கோவை மாவட்டத்திலே பல்லடம் தாலுக்காவை எடுத்துக்கொண்டால் அதனுடைய தலைமையகம் இருப்பது வேறு இடத்திலே. அந்த தாலுக்கா ஒரு வறண்ட தாலுக்கா. விரிவான தாலுக்கா. அதற்கும் அதனுடைய தலைமையகம் இருக்கின்ற இடத்திற்கும் எட்டிப்பிடிக்கமுடியாத எண்ணற்ற கிராமங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பல இடங்கள், தமிழ்நாட்டிலே இருக்கின்றன. அவைகளைப் பரிசிலனை செய்து பிரித்து அமைப்பதற்கு இருக்கும்படியான இடங்களை இன்னும் வட்டங்களாக அதேமாதிரி வருவாய் கோட்டங்கள் கூட அதிகப்படுத்தும்படியான முறையில் நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். அப்போதுதான்மக்களுக்கு



1986 ஏப்ரல் 28] [திரு. கு. ரமணி]

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அது
அவ்வப்போது பிரச்சனைகள் தீர்வதற்கு, கால
உதவியாக இருக்கும். அதே மாதிரி பிரச்சனைகள் தீர்வதற்கு, கால
தாமதத்தைக் குறைக்க வேண்டும். தாமதமே ஏற்படாது
என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் இந்தத் தாமதம்
குறைக்கப்படவேண்டும். இப்பொழுதெல்லாம், விவசாயிகள்
அல்லது வேறு விதமான பொது மக்கள் தங்களுடைய பிரச்ச
னைகள்—இந்த வருவாய்த்துறையின் மூலம் தீர்க்கப்படவேண்
டிய பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்றன—இந்தப் பிரச்
சனைகளைத் தீர்ப்பதற்கு அவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய
காலம் ரொம்ப அதிகப்படியானது. சில சமயங்களில், சில
பிரச்சனைகள் வருஷக் கணக்கில் கூட தீர்க்கப்பட முடியாமல்
தேங்கிக் கிடக்கின்றன. அவற்றிலே இன்னும் நல்ல முறையில்
வேகமாக தீர்வு காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட
வேண்டும்.

இந்த முறை, கடுமையான வறட்சி நிலை. இயற்கை இடர்ப்பாடுகளைப்பற்றி இங்கே கொள்கைக் குறிப்பிலே விளக்கமாகப் பல விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கடுமையான வறட்சி நிலை. அதிலும் நான் இருக்கிற கோவை மாவட்டம் என்பது, எப்போதும் வறட்சி நிலை என்பது சரியானது. போன வருடம் கூட சரியான மழை இல்லை. 84லிலே குறைவான மழை. 85 நவம்பரிலே கடலோர மாவட்டங்களிலேயெல்லாம் புயல் காற்று, வெள்ளம். அந்த மாவட்டங்களில் பல்லா 5 மாவட்டங்களிலே 246 பேர்கள் உயிர் துறந்தனர். அதே யிரக்கணக்கான குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டன. இப்படிப் மாதிரி, ஆடு மாடுகள் ஏராளமாக உயிர் துறந்தன. என்பது பட்ட கடும் சேதம் இந்த வெள்ளத்தால் ஏற்பட்டது செலவழிக்க உண்மை. அதற்காக அரசு பெரும் தொகை சர்க்காருடைய வேண்டியது வந்தது. ஆனால் மத்திய ஏற்படும்போது உதவி இந்த மாதிரி கொடுமையான நிலைமை காலத்தில் போதிய உதவி கிடைப்பதில்லை, காலா நாம் கிடைப்பதில்லை என்பதும் உண்மை. இவைகளெல்லாம் என்னைக் எதிர்பாராதமுறையில் வரக்கூடிய நாச நஷ்டங்கள். நிறை கேட்டால் இதற்கு மத்திய சர்க்கார் முழு உதவி தந்து இப்படி வேற்ற வேண்டியது அவசியம். மாநில அரசு சாத்தியமல்ல. பணத்தை பூராவையும் செலவு செய்வதென்பது ஆளாகிறார் ஆகவே இதனால் மக்கள் பெரும் துன்பங்களுக்கு இருந்து கள். இது பல சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாக நிலைமைகளை கொண்டிருக்கிறது. இதற்கு சில முடிவான தடுத்து உண்டாக்குவதற்கு என்ன வழி? புயல் காற்றை நாம் வெள்ளச் நிறுத்த முடியாது. அதனாலே ஏற்படக்கூடிய பல சேதங்களைத் தடுப்பதற்கு, வெள்ளத் தடுப்பு போன்ற மாவட்ட நடவடிக்கைகளில் ஆராய்ச்சிகள் தேவை. அதற்கு தங்களுடைய நிர்வாகங்கள், வட்ட நிர்வாகங்களெல்லாம் அரசாங்கத்திற்கு அனுபவங்களை ஆழமாகப் பரிசீலித்து ஆலோசனைகளாக வைக்க வேண்டியிருக்கிறது.

1986, இந்த வருஷம் வறட்சிதான் கடுமையாக உள்ளது. 1 மாதம் 1½ மாதங்களுக்கு முன்னாலே இந்த வறட்சி ஆரம்பமாகிவிட்டது. பல கிராமங்களிலே குடிநீர் கிடைப்பதில்லை. கால்நடைகளைப்பற்றி சொல்லவே தேவையில்லை. ஏராளமான கால்நடைகளை இன்றைக்கு விவசாயிகள் விற்று விட்டுப் போகிறார்கள். அவர்கள், அவை களுக்கு தண்ணீரும் தீவனமும் அளிக்க முடியாது. ஆகவே இந்தச் சபையிலே இந்த வறட்சியைப்பற்றி ஒரு தனி விவாதம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் இந்த 'செஷன்' முடி வதற்குள்ளே, நிச்சயமாக விவாதம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

சேலம், பெரியார், கோவை, தர்மபுரி, நீலகிரி, நீலகிரி மாவட்டம் மலையாக இருப்பதால் தண்ணீர் இருக்கும் என்று எண்ணலாம். அங்கேயும் குடிநீர் பஞ்சம் இருக்கிறது. அதே போல் இராமநாதபுரம், வட ஆற்காடு போன்ற பல்வேறு மாவட்டங்கள் கடுமையான வறட்சியின் பிடிப்பில் இன் றைக்கு இருக்கின்றன. அதைப் பற்றி நாம் ஒரு சரியான விவாதத்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த தண்ணீர் கஷ்டத்தை முதலில் தீர்ப்பதற்கு உண்டான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல விவசாயிகளுக்கு நிலம் ஒப்படை செய்வதுபற்றி இதில் ஒரு கணக்கு இருக்கிறது. நமக்கு ஒரு காம்பரகன்ஸிவ் நிலசீர் திருத்த சட்டம் கொண்டு வந்து அதை உருவாக்கியும் நிறை வேற்ற முடியவில்லை. இந்த அரசு மட்டும் அல்ல. நம்முடைய நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து இந்திய அரசு அடிப்படையில் நலிந்த மக்களுக்கு நிலத்தைப் பகிர்ந்து கொடுக்க சமுதாய முன்னேற்றத்திற்காக, சமுதாய மறு மலர்ச்சிக்காக அஸ்தி வாரமாக இருக்கக்கூடிய அந்த நில விநியோகம் செய்ய நில பிரபுத்துவ சக்தியை உடைத்து எறிந்து மக்களுக்கு நிலம் கொடுப்பதற்கு உண்டான ஒரு சட்டத்தை கொண்டு வருவதற் கான நடவடிக்கையை இந்திய அரசு கொண்டு வரவில்லை. அதையும் சொல்லி சொல்லி 38 வருடங்கள் ஆகிவிட்டன. நடக்கவில்லை. இங்கேயும் ஒரு சட்டம் கொண்டு வந்து அதுவும் நடைமுறைப்படுத்த முடியாமல் போய் விட்டது. ஆனால் அதற்கு பிறகு இதைப்பற்றிச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் இந்த அரசுக்கு இல்லாமல் போய் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஆகவே திட்டவட்டமான நில சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து லட்சக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு நிலம் கொடுக்காமல் அடிப்படை சீர்திருத்தம் என்பது என்ன தான் கிராமங்களில் செய்தாலும் அது பழைய





கட்டிடத்திற்கு வெள்ளை அடிப்பது சுண்ணாம்பு அடிப்பதுபோல் தான் இருக்கும். நாம் சீர்திருத்தம் செய்து விட்டோம் என்று சொல்லுவது. அடிப்படைப் பொருளாதாரத்தை நீங்கள் கிராமத்தில் கொடுத்தால் தான் நல்லது. இந்த நில பிரபுத்துவ சக்தியை நீங்கள் அகற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அப்படிப்பட்ட ஒரு சட்டம் தேவை. இன்றைக்கு 5 ஆயிரம் பேருக்கு விவசாயிகளுக்கு கொஞ்சம் கொஞ்சம் நிலம் கொடுத்து இருக்கிறீர்கள். அதுவும் கொஞ்சம் நிலம்தான். அதில் 1515 பேர் ஆதி திராவிடர்கள், 3351 பேர் மற்றவர்கள், இதர சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லியிருக் கிறீர்கள். இந்த அடிப்படையான சீர்திருத்தத்தை இந்த அரசு ஆலோசனை செய்து அடுத்த சட்டமன்ற கூட்டத் தொட ருக்குள் ஒரு நில சீர்திருத்தச் சட்டத்தை கொண்டுவருவதற்கு விரிவான சட்டத்தைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டா கொடுப்பதில் இங்கே லட்சக்கணக்கானவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பட்டா கொடுக்கப்பட்டுத ளது என்பது அரசின் புறம்போக்கு நிலங்கள், அல்லது நத்தம் போன்ற இடங்கள். இப்படிப்பட்ட இடங்களில் தான் அந்த பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. நீண்ட நாட்களாக அரசின் நிலத்திலே விவசாயம் செய்யக்கூடிய பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் இருக்கிறார்கள். 10 வருடம், 15 வருடம், 20 வருடமாக விவசாயம் செய்துகொண்டு இருக்கிறார் கள். அவர்களுக்கு ஒரு பெரும் கஷ்டம் இருக்கிறது. இதை நான் பல தடவை இங்கே சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு மின் சார பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு ஒப்புதல் கிடையாது. அரசு கடன் கொடுப்பதற்கு அவர்களுக்கு வழி இல்லை. காரணம் நிலம் அவர்களுக்குச் சொந்தம் இல்லை. இந்த நிலையில் விவசாயிகள் 15 வருடம், 20 வருடம், 25 வருடங்களாக விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு நீங்கள் பட்டா கொடுக்கும்போது இதைப் பற்றி ஒரு சரியான கணக்கை புள்ளி விவரம் எடுத்து பல ஆண்டுக்காலமாக உழைத்துப்பயிர் செய்யக்கூடியவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டு இருக்கி றார்கள். இதற்கான உடனடி நடவடிக்கை தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே மாதிரி நிர்வாகத்தை எடுத்துக் கொண்டால் மாவட்ட ஆட்சித் தலைவர், வட்ட ஆட்சித் தலைவர் இவர்கள் எல்லாம் இருந்து நடத்தக்கூடிய நிர்வாகத்தில் பல சிக்கல்கள் இன்றைக்கு இருக்கின்றன. மக்களுடைய குறைகளை தீர்ப்பதற்கு அடி மட்ட மக்களோடு தொடர்பு இல்லை. ஆகவே தொடர்பு ஏற்படுத்தி

கொள்ள வேண்டும் என்று மாஸ் காண்டாக்ட் உண்டாக்கவேண்டும் என்று பேசி வருகிறோம். அது நல்ல வார்த்தை தான், பார்த்தால், ரொம்ப ஜனநாயக முறையாகதெரியும். இப்போது மனு நீதி நாள் என்று வைத்து இருக்கிறோம். அதைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சொல்லும்போது மிகவும் அழகாகச் சொன்னார்கள். இது குறையைத் தீர்க்கும் நாள் அல்ல. இது குறையைக் கேட்கும் நாள். ஏதோ கொடுத்திருக்கின்ற விண்ணப்பங்களை வாங்கி வைத்துக்கொண்டு, அந்த விண்ணப்பங்களில் எத்தனை விண்ணப்பங்களுக்குப் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கு இதுவரை இந்த அரசாங்கத்திடம் எப்போதாவது கிடைத்தது உண்டா? அநேகமாக இருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே அந்த விண்ணப்பங்கள் வாங்கப்படும். அதனால் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் க்யூவிலே நின்று, இன்றைக்கு விண்ணப்பங்கள் கொடுப்பதற்கு வெறுப்படைந்திருக்கிறார்கள். மனு நீதியும் அல்ல. ஒரு ஜனநாயக முறையில் நடந்தக் கூடிய நடவடிக்கை என்று சொன்னால் கூட, அந்த நீதிக்கு அர்த்தம் இல்லாமல் போய் விடும். It w ll ls its m an nç. ஆகவே இதை கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு என்ன வழி? ஜனங்கள் கொடுக்கக்கூடிய 'ஒவ்வொரு விண்ணப்பத்தின் பேரிலும், உண்டு, இல்லை என்ற ஒரு நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குச் சொல்லியாகவேண்டும்.

(பிற்பகல் 12-50)

உதாரணமாக சில பாங்குகளில் ஏழைப் பெண்களுக்கு, கடன் கொடுக்கிறார்கள். ஒரு விதவைப் பெண் இட்லி சுட்டு விற்பதற்குக் கடன் வழங்கவேண்டுமென்று கேட்டால், உடனே அந்தக் கலெக்டர் அந்த விண்ணப்பத்தை வாங்கி வைத்துக் கொண்டு, சிலருக்கு அந்த பாங்குக்குப் போய் அவரை அனுகுங்கள் என்று அவர்களுக்கும் கடிதம், இவர்களுக்கும் கடிதம் போடுகிறார்கள். பாங்குக்குப் போனால், உனக்கு இட்லி சுட்டு விற்பதற்கான கடன் கிடையாதம்மா, போய்விட்டு வாம்மா என்று சொல்கிறார்கள். இல்லையென்று ரொம்ப சுலபமாகச் சொல்கிறார்கள். இப்படிச் சொல்லி பல பேருடைய கடிதங்களை நானே திரும்பவும் கலெக்டருக்கு திருப்பி அனுப்பிக் கொடுத்தேன். அப்படிச் சொன்னால், திரும்ப இன்னொரு பாங்குக்குப் போகச் சொல்கிறார்கள். அப்படியானால், பாங்கினுடைய தயவுக்கும், கடைக்கண் கடாட்சத்திற்கும் நாம் பார்த்து நிற்கவேண்டும். இஷ்டம் இல்லையென்றால் இல்லை. இந்த நிலை மாற்றப்படவேண்டும். அது இல்லையென்றால், நாங்கள் கடன் கொடுக்கிறோம், ஏராளமான வசதிகள் செய்கிறோம் என்பதெல்லாம் வெறும் பேச்சோடு மட்டும் தான் நிற்கும்.





அடுத்து குறைந்தபட்சக் கூலிபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. நான் சுருக்கமாக சில விஷயங்களைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். குறைந்த பட்ச கூலி என்பது எப்படிப்பட்ட கூலி? ஒரு தொழிலாளர் உழைப்பு மாட்டோடு போய் உழைப்பைச் செலுத்தினால் தான் ரூ. 18 கூலி. நான் கேட்கிறேன். இதை ஒரு கூலி என்று எப்படிச் சொல்ல முடியும்? அதுவும் இன்றைக்கு? மாட்டை ஒரு ஜீவதையை வைத்துக் காப்பாற்ற வேண்டும். கலப்பையும் தன் கையில் வைத்து இருக்கவேண்டும். தன் உழைப்பையும் செலுத்தவேண்டும் அந்த ரூ. 18-க்கு. அவர்களுக்கு அந்த மாட்டினுடைய தீவனத்திற்குக் கூட அது போதாது. நாற்று நடுவது, களைகள் எடுப்பது இவைகளெல்லாம் பெண்கள் செய்வது. 5 மணி நேரத்திற்கு இடுப்பை வளைத்து, அந்தச் சேற்றில் நின்று வேலை செய்யக் கூடிய அந்தப் பெண்களுக்கு ரூ. 8 கூலி. எப்படி அவர்கள் உயிர் வாழ முடியும்? அவர்களுக்கும் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உட்பட, விலைவாசி கிராக்கிப்படி, விலையேற்றத்திற்கு என்று ஒரு அலவன்ஸ் இருக்கிறது. நாம் வாங்குகிறோம். அவர்களுக்கு எப்படி இந்த அலவன்ஸ் கேட்பதற்கு, வாங்குவதற்கு இருக்கிறது? ஆகவே இந்தக் கூலி முறைகள் நிச்சயமாக மாற்றியமைக்கப்பட வேண்டும். அண்மையிலே கமிஷன் எல்லாம் போட்டு ஏற்பாடு செய்தும், விலைவாசி ஏறுகிறது, நீங்கள் யாரும் கட்டுப்படுத்தமுடியாது. நம்மைக் கேட்டு விலை ஏறவில்லை. ஆகவே பொறுக்க முடியாத அளவிற்கு, முதுகெலும்பை முறிக்கிற அளவிற்கு விலைவாசி ஏறும் போது நாம் ஒரு நியாயம் வழங்கவேண்டும். அந்தக் கூலி முறையை அவர்களுக்கு வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முக்கியமான ஒரு விஷயம். பல விஷயங்கள் இருக்கின்றன. ஒன்றை மட்டும் கூறவிரும்புகிறேன். கொத்தடிமை முறையினை ஒழிக்கவேண்டும். 1976 ஆம் வருஷத்தினுடைய இந்திய அரசாங்கத்தினுடைய சட்டம், அந்தச் சட்டத்தை நிறைவேற்றி அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பது அந்தக் கொத்தடிமைகளை விடுதலை செய்வது, அவர்களுக்கு நிலங்களைக் கொடுப்பது, அதுவும் நம்முடைய கடமையாக இருக்கிறது. நாம் செய்கிறோம்.

அண்மையில் முக்கியமான ஒரு தகராறு வந்திருக்கிறது. அநேகமாக இந்த மன்றத்தில்கூட எங்களுடைய உறுப்பினர் தோழர், வி.பி. சிந்தன் அவர்கள் அன்றைக்கு எழுப்பினார்கள்.

** ** ** * *

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. கு. ரமணி] [1986 ஏப்ரல் 28

** ** ** **

(பிற்பகல் 1-00)

** ** ** **

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

** ** ** **

(பிற்பகல் 1-10)

** ** * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். திரு. கு. ரமணி குறிப்பிட்ட விவாகாரத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதோடு இதுவரை அது சம்பந்தமாக நடைபெற்ற விவாதங்களையும் நீக்க ஆணையிடுகிறேன். இப்பிரச்சினையை விடுத்து வேறு ஏதாவது கூறுவது என்றால் திரு. கு. ரமணி மேற்கொண்டு பேசலாம்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கம் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இதிலே எந்தவிதமான தகராறும் நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இப்போது பிரச்சினையாக இது வந்திருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன். மாவட்ட நிர்வாகத்தைப்பற்றி இப்படிப்பட்ட பல விமர்சனங்கள் அல்லது நடவடிக்கைகளிலே வந்திருக்கக்கூடிய தவறு

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



[86 ஏப்ரல் 28] [திரு. கு. ரமணி]

ளைப் பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டு வருகிறது. தர்மபுரி
ாவட்டத்தில் இதேமாதிரி, திரு. சீனிவாசன் என்ற ஒரு வக்கீல்,
ல சம்பந்தமான கேஸிலே மாவட்ட ஆட்சித் தலைவரே
வளியிட்ட உத்தரவு அது. அந்த உத்தரவை எதிர்த்து
ஹைகோர்ட்டிலே வந்து கேஸ் போட்டார்கள். கேஸ் போட்
தற்காக அந்தக் கோபத்தைப் பயன்படுத்திக்கொண்டு அந்த
க்கில் வீட்டுக்குள்ளே போலீசார் புகுந்து அடிதடி நடத்தி
வரைக் கைது செய்து அவர் பேரில் கேஸ் போடப்பட்டிருக்கிறது.
தற்கு ஹைகோர்ட்டிலே கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்
றது. இதெல்லாம் கோர்ட்டிலே நடந்து முடிந்திருக்கக்
டிய விஷயங்கள். இதை எல்லாம் ஏன் நான் உங்கள் ஞாப
த்திற்குக் கொண்டு வருகிறேன் என்றால் மாவட்ட ஆட்சித்
லைவர்களும், வட்டாட்சியரும். கோட்டாட்சியரும் அதே
ாதிரி பாராஸ்ட் டிப்பார்ட்மெண்டிலே இருக்கக்கூடிய உத்தி
யாகஸ்தர்களும் நமக்குத் தேவை. ஆனால் அவர்கள் மக்
ளுடைய உணர்வுக்கு நியாயம் வழங்கவேண்டும். அதை மீறி
வர்கள் நடக்கும்போது அதனைக் கண்டித்துத் தடுக்க
வண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த
றையில் நடந்துகொள்ள வேண்டும். நடவடிக்கை எடுக்க
வண்டும். கொடைக்கானலிலே நடக்கக்கூடிய விஷயத்தை
ான் சொன்னால், இதைக்கூட ஸ்பீக்கரிடத்திலே கொடுக்கத்
யார். அதை வைத்துக்கொண்டு என்ன நடவடிக்கை
டுக்க வேண்டுமோ அதை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்
காண்டு நான் சொல்லவேண்டிய பல விஷயங்களைச் சொல்ல
டியாத நிலைமையிலே அது கைவிட்டுப் போனது என்று
றி நான் உட்காருகிறேன்.

(பிற்பகல் 1-20)

6. அமைச்சரின் அறிக்கை.

உள்ளாட்சிகள் சட்டத்தைத் திருத்துவது குறித்து விதி 111-ன்
ழ் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித்
றை அமைச்சர் அவர்கள் 111-வது விதியின் கீழ் பேரவைக்கு
ர் அறிக்கையை வெளியிடுவார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர்
வர்களே, இந்தப் பேரவைக்கு முக்கியமான அறிக்கை
ன்றை தங்கள் அனுமதியோடு படிக்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஏப்ரல் 28

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் தேர்தல்களில் தனது கட்சி உறுப்பினர் வெற்றி வாய்ப்பை இழப்பதாகத் தெரிந்தால், தேர்தல் முடிவினை அறிவிக்காமல் முறைகேடாக நடந்து கொண்டுள்ளதாக அரசுக்குத் தெரிய வந்துள்ளது. இவ்வித முறைகேடுகள் உறுப்பினர்களை ஒத்துத் தெரிவு செய்வதிலும் (கோவாப்ட் செய்வதிலும்) ஏற்படக்கூடும். இதனைத் தவிர்க்கும் பொருட்டு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தை பின்வருமாறு திருத்தி அமைக்க அரசு முடிவு செய்துள்ளது :

''துணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கின்ற கூட்டங்கள் மற்றும் உறுப்பினர்களை ஒத்துத்தெரிவு செய்வதற்கான நோக்கத்திற்கான கூட்டங்கள் ஆகியவை, சம்பந்தப்பட்ட கோட்ட வளர்ச்சி அலுவலர்களால் கூட்டப்பட வேண்டும். ''

இந்தச் சட்டத் திருத்தம் விரைவில் கொண்டு வரப்பட உள்ளது. துணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கும் மற்றும் உறுப்பினர்களை ஒத்துத் தெரிவு செய்து கொள்ளும் கூட்டங்கள் கூட்டப்பட்டிருப்பின் அவைகள் மேற்கூறிய சட்டத் திருத்தம் அமலுக்கு வரும் வரை ஒத்தி வைக்கப்பட வேண்டும். இதேபோல் மேற்கூறிய காரணங்களுக்காக இனிமேல் கூட்டப்படும் கூட்டங்களும் மேற்கூறிய சட்டத் திருத்தங்கள் அமல்படுத்தப்படும் வரை அவ்வாறே ஒத்தி வைக்கப்படும். இதற்கான உத்தரவுகள் தனியே இன்று பிறப்பிக்கப்பட உள்ளன.

4. வரவு—செலவுத் திட்டம் 1986—87 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி):

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் நிலவரித் துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற மானியக் கோரிக்கைகளின்மீது நான் சார்ந்திருக்கின்ற காந்தி காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைப் பேச விழைகிறேன்.

இன்று எனது தொகுதியைப் பொறுத்தவரையில் அங்குள்ள மக்கள் நிலத்தடி நீரைப் பயன்படுத்தித்தான் குடிநீராகவும், மற்ற வகையான உபயோகங்களுக்கும் உபயோகப்படுத்துகின்ற சூழ்நிலை இருந்து வருவதன் காரணமாக சாத்தான்குளம் தாலுக்காவைத் வறட்சி தாலுக்காவாக அறிவிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் பன்னம்பாடி என்னும் கிராமத்திற்கு பக்கத்திலே நிலம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் சில பள்ளத்தாக்குகள் இருந்து வருவதன் காரணமாக அங்கே ஒரு கசிவுநீர்க் குட்டையை



1986 ஏப்ரல் 28] [திரு. எஸ். என். இராமசாமி]

அமைத்துத் தந்தால் அங்குள்ள ஆடுமாடுகளுக்கும், விவசாயிகளுக்கும் பயன்படுகிற நிலைமை ஏற்படும், ஆகவே அங்கே கசிவு நீர்க் குட்டையை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல விவசாய மக்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை வசூல் செய்வதிலே ஜப்தி நடவடிக்கை போன்றவை எடுத்து வசூல் செய்வதாகத் தெரிகிறது. அப்படி ஜப்தி நடவடிக்கை எடுக்கும்போதும் கடன் பெற்றவர்களுக்கும் தகவல் கொடுக்காமல் போலீஸைப் பின்னாலேயே அழைத்துக்கொண்டு, அவர்களுடைய இல்லங்களுக்குச் சென்று, அவர்களின் புழக்கத்திலே இருந்து வருகிற பொருட்களையும் மாடுகளையும் ஜப்தி செய்வதோடு கிராமங்களிலே அது குறித்து ஒரு பீதியையும் ஏற்படுத்தி வருகிறார்கள். அதுபோன்ற நிலைமை இருக்க வேண்டாம் எனக் கேட்டு இந்த நேரத்திலே அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல அரசுப் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்புகளை செய்து கொண்டிருக்கிறார்கள். அத்தோடு பாதைகள் பஸ்கள்போகிற இடங்கள், வண்டிகள் போகின்ற இடங்களில் கூட ஆக்கிரமிப்புகளைச் செய்து கொண்டு, அவைகளை அகற்ற முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அது போக்குவரத்திற்குப் பெரிதும் இடைஞ்சலாக இருக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகளை உடனடியாகத் திருத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சாத்தான்குளம் ஒரு பெரிய நகரமாக இருந்து வருவதன் காரணமாக சாத்தான்குளம் பஜார் ரோடில் இரு புறங்களிலும் கடைகள் நெருக்கமாக வந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கடைகளின் பக்கத்திலே தென் பகுதியைச் சார்ந்த இடத்தில் 7 கிணறுகள் மூடப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்டிடம் தெரிவித்து அதைத் திறந்துவிட வேண்டும் என்று கேட்டபோது, மூடி வைத்திருக்கிற பொது மக்கள் அதனை விடுவதற்கு தயாராக இல்லை என்று சொன்னார்கள். ஆகவே ரீ-சர்வேயிலே அந்த 7 கிணறுகளும் இருக்கின்றன. அந்த 7 கிணறுகளையும் உடனடியாகத் திறந்து தண்ணீரை வெளியே கொண்டு வந்து பொதுமக்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு வசதிசெய்து தரவேண்டும் அதன் மூலமாக என்று இந்த நேரத்திலே நான்கேட்டுக் கொள்கிறேன். அதேபோல ஏற்கனவே சென்ற ஆண்டில் ஆக்கிரமிப்புகளை அதிகமாக அகற்றியும்கூட, மீண்டும் அதேபோன்ற ஆக்கிரமிப்புகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குப் பதிலாக ஆக்கிரமிப்பு செய்திருக்கிற நிலங்களுக்கு சதுர அடிக்கு இந்த அளவிற்கு தீர்வைக் கட்ட வேண்டுமென்று அபராதக் கட்டணம் வசூல்செய்தால் தான் இந்த ஆக்கிரமிப்புகளைக் குறைக்க முடியும்.

சாத்தான்குளம் வட்டாட்சியரைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமை பொது மக்களுடைய குறைகளைக் கேட்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சாத்தான்குளத்தில் இருக்கிற வட்டாட்சியர் எந்தத் திங்கட்கிழமையும் மக்கள் குறைகளைக் கேட்டதாகத் தெரியவில்லை. அங்கேயுள்ள பொதுமக்கள் இதனை வருத்தமாகத் தெரிவிக்கிறார்கள். ஆகவே சாத்தான்குளம் வட்டாட்சியர் உடனடியாக மக்கள் குறைகளைக் கேட்க செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

அதேபோல கிராம நிர்வாக அதிகாரிகள் அந்தக் கிராமத்திலேயே குடியிருக்க வேண்டுமென்று நான் சொல்கிறேன். காரணம் என்னவென்றால் கிராமத்திற்குப் பல ஊர்களுக்கு அப்பால் அவர்கள் குடியிருந்து கொண்டு இருப்பதால் அவசரமான காலங்களில் அவர்களைத் தேடி அலைவதன் காரணமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டிய காரியங்கள் தடைபடுகின்றன. அவர்கள் நிலவரி வசூல் மற்றும் பஞ்சாயத்து வரிகளை வசூல் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சாத்தான்குளம் ட்ரெஷரி ஆபீஸ் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் அந்தக் கட்டடம் வாடகைக் கட்டடமாக இருந்து வருகிறது. வட்டாட்சியர் இல்லத்திற்கு எதிர்புறமாக அரசு நிலம் அதிகமாக இருக்கிறது. அந்த நிலத்தில் சாத்தான்குளத்தில் ட்ரெஷரி ஆபீசுக்கு கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ட்ரெஷரி ஆபீசில் கொடுக்கக்கூடிய வில்லைகள் பித்தளை வில்லைகள் இல்லாமல் அட்டை வில்லைகளைக் கொடுக்கிறார்கள். அந்த அலுவலகத்தில் பித்தளை வில்லைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அந்த ட்ரெஷரி ஆபீசில் பெஞ்சுகள், நாற்காலிகள், பேன்கள் போன்றவைகள் இல்லை. ஆகவே அவர்களுக்கு அவற்றைக் கொடுத்து அந்த வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து முக்கியமான விஷயம். அங்கே பணியாற்றுகிற அதிகாரி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு அலுவலகத்தை மூடிவிட்டு, வாரத்தில் ஐந்து நாட்கள் தான் வேலையென்று சொல்லி திங்கட்கிழமைதான் மறுபடியும் அலுவலகம் என்று சொல்கிறார். கார் டாக்ஸ் போன்றவற்றைக் கட்ட வேண்டுமென்றால் முடிவதில்லை. திருச்செந்தூரில் இருக்கிற ட்ரெஷரி ஆபீசில்





கட்டுங்கள் என்று சொல்கிற நிலை இருக்கிறது. ஆகவே ட்ரெஷரி ஆபீசர் பணியாற்றுவதை அமைச்சர் அவர்கள் கண்காணித்து அந்த அலுவலகம் நல்ல முறையில் செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல எங்களுடைய தொகுதியில் தாமிரபரணி ஆற்றின் கரை ஓரத்தில் ஆழ்வார் திருநகரி பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த குரங்கணி என்ற பஞ்சாயத்து 150 குடியிருப்புகளைக் கொண்ட ஊராகும். அங்கே இருப்பவர்களில் 50 பேர்களுக்கு கிட்டத்தட்ட 10 ஆண்டுக்காலமாக பட்டா வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்கு இன்னமும் பட்டா வழங்காத நிலை இருந்து வருகிறது. ஆகவே அந்தப் பகுதியைச் சார்ந்த சுமார் 50 குடும்பங்களுக்கு உடனடியாக பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது தாமிரபரணி பி. டபிள்யூ. டி. நிலமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால் தாசில்தார் அவர்கள் பி. டபிள்யூ. டி. மூலமாக பெர்மிஷன் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். பி. டபிள்யூ. டி. என்ஜினியர்கள் நேரிடையாகப் பார்த்து உடனடியாக பட்டா வழங்க வேண்டுமென்று சொல்லியும் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே உடனடியாக அந்த மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நிலவரித் துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் மானியக் கோரிக்கைகள்மீது இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களை ஒட்டியும் மதுரை, அண்ணா போன்ற பல மாவட்டங்களில் நிலவி வரும் கடுமையான வறட்சிபற்றி நிவாரண நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க வேண்டிய அவசியம் குறித்து என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்தும் ஒரு சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய சட்டமன்றப் பேரவையில் கடந்த ஜனவரி மாதம் நடந்த கூட்டத்திலும்சரி, அதற்குப் பின்னாலே நடைபெற்ற கூட்டத்திலும்சரி தமிழகத்தில் நிலவி வருகிற வறட்சி பற்றி கிட்டத்தட்ட எல்லாக் கட்சிகளிலும் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

[1986 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1.30)

திரு என். எஸ். வி. சித்தன் : குறிப்பாக நாங்கள் பேசுகிற நேரத்திலே பருவ மழை தொடர்ந்து பொய்த்துவிட்ட காரணத்தாலே, தமிழகத்திலே உள்ள பல்வேறு மாவட்டங்களில் வறட்சி நிலை கடுமையாக இருக்கிறது. குடிநீர்த் தட்டுப்பாடு என்பது ஆரம்பித்து விட்டது, வருகின்ற கோடைக் காலங்களில் இன்னும் கடுமையாக இருக்கும் என்பதைப் பல்வேறு கால கட்டங்களில் வலியுறுத்திச் சொன்னோம். எங்கள் கட்சியிலே மட்டும் அல்லாது, நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கூட மதுரை, அண்ணா மாவட்டம் முழுவதும் நிலவுகிற வறட்சி நிலை குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதில் சொல்கின்ற நேரத்திலே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், போதுமான நடவடிக்கைகள் எடுப்பதாக, எடுத்துக் கொண்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல்கள் எல்லாம், தமிழகத்திலே இருக்கிற கடுமையான வறட்சியைப் பற்றிய முழு விவரம் அரசுக்குக் கிடைக்கவில்லையோ என்ற ஐயம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு மாதங்களாகவே, செய்தித்தாள்கள் கூட தமிழகத்திலே இருக்கிற வறட்சியை பற்றி வெகு விரிவாக எழுதி இருக்கின்றன. குறிப்பாக, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு இந்த மாதம் 7-ஆம் தேதி அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்திருக்கிற ஒரு கட்டுரையில உள்ள குறிப்பை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். இந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தர்மபுரி மாவட்டத்திலே நிலவுகின்ற கடுமையான வறட்சியைப் பற்றி ஒரு கட்டுரையை எழுதி கட்டுரையின் நடுவிலே கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்கள்.

"Even during Novembe-, last year, when many districts in tho State were reeling under heavy rains and flood, Dharmapuri district averaged less than 2 cm. rains. In fact, most parts of Thalli and Hosur taluks went without even a single drop. The failure of monsoon and the government's lack of foresight has, brought agriculture to a near standstill in the affected taluks. Labour migration has begun" என்று எழுதிவிட்டு மேலே சொல்லுகிறார்கள்.

"For instance, nearly 60 families have moved across the border to Karnataka from modhur panchayat in Palacode taluk. The fact that Karnataka itself is in the grip of an unprecedented drought has not deterred them and the trickle of migration threatens to become a flood." என்று சொல்லிவிட்டு மேலும் தொடருகிறார்கள்.





"All the labourers who have now deserted their homes in Dharmapuri district, however, plan to come back with the first showers of this year's south-west monsoon, The same is the case. in village after village in Thalli and Hosur, which are closer to Karnataka.

In Hosur town itself the problem is so serious that the entire town may soon be starved of drinking water unless the administration moves fast."

என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் தர்மபுரி மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பாக இந்தக் கட்டுரை அமைந்திருந்தாலும் கூட, தமிழகத்திலே இருக்கிற பல்வேறு மாவட்டங்களில் இப்படிப் பட்ட நிலைதான் இருக்கிறது என்பதை நான் சொல்லிக்காட்டுவேன். ஆனால் அதே நேரத்திலே நம்முடைய அரசினுடைய நிர்வாக இயந்திரம் எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் கொடுத்து உள்ள இந்த வருவாய்க் கொள்கைக் குறிப்பே போதுமான சான்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இதிலே ஐந்தாவது பக்கத்திலே 'இயற்கை இடர்ப்பாடுகள்' என்ற தலைப்பிலே, 'பாதக பருவநிலை' பற்றி சொல்கிறபோது இந்த அரசினுடைய குறிப்பு சொல்கிறது, 1984-ஆம் ஆண்டு குறைந்த அளவு மழையே பெய்தமையால், அநேக மாவட்டங்களின் சில பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சனை நிலவியது. நாம் இப்போது 1986-ஆம் ஆண்டிலே இருந்து கொண்டு இருக்கிறோம். 1985-ஆம் ஆண்டைப் பற்றி விமர்சனம் வந்திருக்க வேண்டும். 1984-ஆம் ஆண்டைப் பற்றிச் சொல்லிவிட்டு, அந்த ஆண்டில் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். அப்படி சொல்லிவிட்டு, கீழே வருகிற நேரத்திலே ஒரு இடத்திலே சொல்கிறார்கள், ஏதோ போகிற போக்கிலே சுட்டிக் காட்டுவதைப்போல, "சமீபத்தில் மதுரை, அண்ணா மற்றும் கோயம் புத்தூர் மாவட்டங்களில் நேரிடையாகச் சென்று நிலைமையை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், ஆய்வு செய்து உள்ளார். மேலும், அவர் மதுரை, அண்ணா, பசும் பொன் முத்துராமலிங்கம், கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க முதல் கட்டமாக ரூ. 80 லட்சம் அனுமதிக்க பரிந்துரை செய்திருந் தார்". நல்லவேளை 80 லட்சம் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசு எவ்வளவு முனைப்பாக வேலைகளைச் செய்திருக்கிறது தெரியுமா? இந்தச் செயற்குறிப்பை அரசு பரிசீலித்து 10—3—1986 அன்று ரூபாய் 40 லட்சம் அனுமதித்தது பாதி அளவு. மேற் குறிப்பிட்ட ஐந்து மாவட்டங்களுக்கும் குடி நீர்ப் பிரச்சினையை சமாளிக்க கூடுதலாக தற்போது ரூ. 100 லட்சம் அனுமதிக்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்திருக்கிறார். இச் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

நாங்கள் சொல்கிறோம், கடந்த 3, 4 மாதங்களாக தமிழகம் வறட்சியின் கோரப் பிடியில் இருக்கிறது, கிராம மக்கள் குடிநீருக்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆடு, மாடுகள் தீவனத்திற்கு அலலல்பட்டுக் கொண்டு இருக்கிற நேரத்திலே, இன்றைக்கு வைத்திருக்கிற அறிக்கையிலே அரசின் பரிசீலனையில் உள்ளது என்று நிர்வாகம் ஏதோ சாவதானமாக, தன்னுடைய இஷ்டப்படியாக இந்தக் குறிப்பைக் கொடுத்திருக்கிறது.

மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த குறிப்பிலே, ஆறாவது பக்கத்திலே ''இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை அம்மாவட்டத்தில் நிலவிடும் குடிநீர்ப் பிரச்சனையை சமாளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் ரூ. 140.138 இலட்சம் நிதி அனுமதிக்க கோரியுள்ள செயற்குறிப்பினை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்'' என்று இருக்கிறது.

செங்கல்பட்டு, வடஆற்காடு, சேலம், புதுக்கோட்டை, தென்ஆற்காடு மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் நீங்கலாக மீதமுள்ள ஏனைய மாவட்டங்களின் குடிநீர் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக ரூபாய் 628.95 இலட்சம் நிதி அனுமதிக்க வேண்டிய ஒரு ஒட்டுமொத்த செயற்குறிப்பை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இந்த இரண்டு செயற்குறிப்புகளும் அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய தீவிர பரிசீலனை எப்போது முடிவு பெறும்? நமக்கு இருக்கின்ற பிரச்சினை இன்றைக்கு கிராமத்திலே குடியிருக்கின்றவர்கள், குடிநீருக்காக தாய்மார்கள் குடம் குடமாகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். குடிநீர் குடத்தினுடைய 'கியூ' வரிசை ஒவ்வொரு வாரிலும் இன்றைக்கு வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஆனால் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்; பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் முதல் பாராவையும் கடைசி பாராவையும் மட்டும் படித்துவிட்டு இடையிலே இருக்கக்கூடிய பாராக்களையெல்லாம் விட்டுவிட்டார்கள். ஆக 84-லிலே ஆரம்பித்து பிறகு 12—4—1985-லே 100 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. 16 மாவட்டங்களில் 2,898 பொதுக் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன. அதற்காகப் பணம் செலவழிக்கப்பட்டது. இராமநாதபுரம், பசும்பொன்முத்துராமலிங்கம், காமராஜர் மாவட்டங்களில் 504 உறைக் கிணறுகள்





அமைக்கப்பட்டன. பணம் செலவழிக்காமல் அமைக்கவும் முடியாது; ஒதுக்காமல் இவற்றை யாரும் தோண்டவும் வர மாட்டார்கள். 6 மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 635 புதிய குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டன. புதிய குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டன என்றால், அறுநூத்தி சில்லரை என்றால் அந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியமாதிரி சென்ற ஆண்டில் மட்டும் 5,000 குழாய் கிணறுகள் தஞ்சாவூரிலே போடுவதற்கு முயற்சி செய்து 3 ஆயிரம் குழாய்கள் போடப்பட்டன. இன்னும் 2 ஆயிரம் எங்கே என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் கேட்டார்கள். 99 குழாய்கள், ராசிபுரம், திருச்செங்கோடு நகராட்சிப் பகுதிகளில், 743 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் 669 இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. பொதுக் குடிநீர் குழாய்கள் ஆழப்படுத்துதல், புதிய குழாய் கிணறுகளை அமைத்தல் ஆகிய பணிகளுடன் லாரிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகப்பணிகளுக்கென ரூபாய் 46 லட்சம் திண்டுக்கல் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆக 84-லிருந்து ஒரேயடியாக தாண்டி 86-க்கு வந்திருக்கிறார்கள். பாராவை தாண்ட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இப்படி தலையிடுவார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் உங்கள் மூலம் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே நிலவி வருகின்ற கடுமையான குடிநீர்ப் பஞ்சத்திற்கு இது போதும் என்று அவர் ஏற்றுக்கொள்கிறாரா? யானைப் பசிக்கு சோளப் பொறி போல இல்லையா? இவைகள் எல்லாம் கடலிலே பெருங்காயத்தை கரைத்தது போல இல்லையா? இவைகளெல்லாம் நிர்வாக நடவடிக்கைகள். நான் காலத்தின் அருமை கருதி அவைகளைப் படிக்காமல் விட்டுவிட்டேனே தவிர இந்த அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை என்று நான் சொல்லவரவில்லை. ஆனால் அரசாங்கம் உண்மையான, பிரத்யட்சமான நிலையை உணரவில்லை. சில நாட்களுக்கு முன்னாலே இதே மன்றத்திலே நான் பேசுகிற போது கூட சொன்னேன். தமிழகத்திலே கடுமையான வறட்சி நிலவுகிறது. மைய அரசாங்கத்தை நாம் அணுக வேண்டும் (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்னால் நான் விடையளிக்கும் போது சொல்லலாம் என்றாலும் இப்போதே சொல்லி விடுவது நல்லது என்பதற்காகச் சொல்கிறேன். ஆரம்ப கட்டத்தில் போடுகின்றபோது இருக்கின்ற சூழ்நிலைகள் வேறு. இப்போது ஏற்படுகின்ற கடுமையான வறட்சி நிலைகூட. 1982—83, 1983—84-லே இருந்தளவு அவ்வளவு கடுமையான severe and drastic drought

என்பார்கள் அந்த நிலை இல்லை. அந்தத் தன்மையினுடைய அடிப்படையிலே வருகின்றபோது மெல்ல மெல்ல இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் ஆங்காங்கே நிலவுகின்ற நிலவரத்திற்கு ஏற்ப நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதையொட்டித்தான் அண்மையிலே உயர்மட்ட அதிகாரிகளெல்லாம் கூடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு இப்படி குடி தண்ணீர் தருவதற்கும் இந்த நிவாரண நடவடிக்கைகளை எல்லாம் மேற்கொள்வதற்கும் 13 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த 13 கோடி ரூபாய் ஒதுக்குவது என்று திட்டமிடுவதற்கு முன்னாலே இந்தப் புத்தகம் அச்சடிக்கப்பட்டுவிட்டது. தரப்பட்டு விட்டது. அது இப்போது சில நாட்களுக்கு முன்னாலே எடுக்கப்பட்ட முடிவு. இதை எல்லாம் என்னுடைய இறுதி உரையிலே சொல்வதாக இருந்தேன். இப்போதே தெளிவாகச் சொல்லிவிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் அளித்த கொள்கை விளக்கக் குறிப்பு, ஆனால் இப்போது எடுத்த முடிவு என்று மாண்புமிகு நிதி அமைச்சர் சொல்கிறார்கள். இந்த நிர்வாகம் எவ்வளவு சாவகாசமாக இருக்கிறது என்பதற்கு இது ஒரு ஒப்புதல் வாக்குமூலம். இன்றைக்கு வந்திருக்கிற அறிக்கை இதற்கு முன்னாலே, 2, 3 நாட்களுக்கு முன்னாலே வந்திருக்க வேண்டுமே; வராததனால் தானே நாங்கள் பேசுகிறோம். மேலும் நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள் 1981-82லே இருந்ததைப்போல கடுமையான வறட்சி இல்லை என்று. நான் அதைத்தான் சொல்கிறேன், அரசாங்கத்திற்கு பிரத்யட்சமான நிலை வரவில்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை அழைக்கிறேன் அல்லது அமைச்சர் பெருமக்கள் யாரையாவது நான் அழைக்கிறேன். தயவுசெய்து வாருங்கள் தமிழகத்திற்குப் போவோம். இதற்கு முன்னாலே இல்லாத கடுமையான வறட்சி இருந்துகொண்டிருக்கிறது. சில இடங்களில் வேண்டுமானால் மழை பெய்திருக்கலாம். உதாரணமாக (குறுக்கீடு) குற்றம் சாட்ட வேண்டும்; எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கிறேன் என்ற நினைவிலே சொல்லவில்லை. இருக்கிற நிலைமையை நான் சொல்கிறேன். உதாரணமாக என்னுடைய தொகுதி திருமங்கலத்தை எடுத்துக்கொள்ளுங்கள். குடிநீர் தட்டுப்பாடு என்றால் அந்த ஊருக்கு தெரியவே தெரியாது. ஆனால் அதே ஊரிலேகூட இன்றைக்கு குடம் ஒரே நீளமாக தேசிய நெடுஞ்சாலை மாதிரி, இப்படி பல ஊர்களில் குடிநீருக்காக ஏராளமான தாய்மார்கள் இரவிலே காத்திருந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்கிறேன்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சர்களை தமிழ்நாட்டுக்கு அழைக்கிறேன் என்று சொல்கிறார்கள். நாம் தமிழ்நாட்டில் தான் இருக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் சுற்றிக் கொண்டு தான் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைப்பது போல் இல்லை. தமிழ்நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து இந்த குடிநீர் பிரச்சினைப் பற்றி அறியாதவர்கள் அல்ல நாங்கள். மாண்புமிகு நாவலர் அவர்கள் சொல்ல வந்தது பஞ்சம் ஏற்பட்டது இல்லை, மத்திய அரசிடம் இதை காட்டினால் எந்த விதமான உதவியும் கொடுக்க மாட்டார்கள். மத்திய அரசிடமிருந்து உதவி பெறக்கூடிய அளவுக்கு நாட்டில் நிலைமை மோசமாக இல்லை என்று தான் விளக்கினார்களே தவிர வேறு ஒன்றும் அல்ல.

(பிற்பகல் 1.40)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கடுமையான வறட்சி நிலவுகிறது என்று சொல்லுகிறேன். அரசின் தரப்பில் 1984ஆம் ஆண்டில் இருந்ததை போல வறட்சி இல்லை என்று சொல்கிறார்கள். இந்த வாதமே தமிழக மக்களுக்கு போதுமானது என்று கருதுகிறேன்.

வறட்சியை நான் உண்மையில் உணர்ந்து சொல்கிறேன், கடுமையாக இருக்கிறது. அமைச்சர் பெருமக்கள் அங்கே போகவில்லை என்று சொல்லவில்லை. நிறைய அமைச்சர் பெருமக்கள் இருக்கிறார்கள். மாவட்டத்திற்கு ஒருவராக போய் உண்மை நிலையை அறிந்து பார்த்து அரசுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு துணையாகத் தான் நான் சொல்லுகிறேன். சற்று நேரத்திற்கு முன்னால் நம்முடைய குடிநீர் வாரியத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். இப்படி நிலைமை மோசமாகிக் கொண்டு இருந்தால் நான் இன்னும் சொல்லுகிறேன் இன்னும் 2, 3 மாதங்களில் மிகவும் கடுமையாக இருக்கும். போராட்டத்தை சந்திக்க வேண்டியதாக இருக்கும். நான் பயமுறுத்துவதாக எண்ண வேண்டாம். அரசுக்கு துணையாக சமாளிப்பதற்காகச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 1982–83, 1983- 84 ஆம் ஆண்டு கடுமை என்று சொன்னதற்கு காரணம் 19 மாவட்டங்களில் கிட்டத்தட்ட 17 மாவட்டங்களிலே வறட்சி நிலவிய காலம். இப்போது சில பல மாவட்டங்களில் கடுமையான வறட்சி இருக்கிறது. அந்த கடுமையான வறட்சி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 ஏப்ரல் 28

யில் ஒன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கிற பகுதி யாக இருக்கலாம். நான் அதை இல்லை என்று மறுக்கவில்லை. மிக அதிகமாக வெள்ளம் அடித்து வெள்ளச் சேதம் ஏற்பட்ட காலத்தில் கூட அதே நிலையில் கடுமையான வறட்சியும் ஒரு பகுதியில் இருந்தது. ஒரு பகுதியில் கடுமையான வெள்ளம் இருந்தது. ஆனால் நான் முன்பு குறிப்பிட்டதற்கு காரணம் 19 மாவட்டங்களில் 17 மாவட்டங்களில் வறட்சியாக இருந்த அளவுக்கு கடுமை இல்லை என்று சொன்னேனே தவிர சில பல மாவட்டங்களிலே கடுமையான வறட்சி இருக் கிறது. அதனையொட்டித் தான் இப்போது நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லக்கூடாது என்று நான் சொல்ல வர வில்லை. அவர்கள் எடுத்துச் சொல்லுகிற கருத்து அரசுக்கு மேலும் பல பணிகளை செம்மையாக மேற்கொள்வதற்கு பயன் படும். அந்த வகையில்தான் இவர்கள் எடுத்துச் சொல்லு வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக தமிழகம் என்று சொல்ல வேண்டாம் என்று தான் நான் சொல்லுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிற நேரத்தில் எச்ச ரிக்கையாக தான் பேசினேன். தமிழகத்தில் பல்வேறு மாவட் டங்களிலே இன்றைக்கு விவாதத்தை எடுத்துக்கொள்வோமே யானால் ஆளும் கட்சியில் இருப்பவர்களும், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எல்லோரும் இந்த கருத்தைத் தான் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அரசு கொஞ்சம் தீவிரமாக முனைந்து செயல்படவேண்டும். வருகின்ற மாதங்கள் கடும் கோடையாக இருப்பதால் கொஞ்சம் முனைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்லு கிறேன்.

2, 3 நாட்களுக்கு முன்னால் கூட நம்முடைய மன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. உ. சுப்பிரமணியம் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் ஒரு போராட்டத்திற்கு தலைமை வகித்து இதேபோல் குடிநீர் பற்றாக்குறை, வறட்சி நிலைமை போன்றவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு பிரச்சினைகளில் இன்றைக்கு எங்கள் கட்சியில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் தொகுதியைப் பற்றி சொல்லிருக்கிறார்கள். பின்னால் அதற்கு வருகிறேன். ஆகவே அரசு இன்றைக்கு தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த கொள்கைக் குறிப்பில் சொன்னதுபோல் தீவிர பரிசீல னையில் இருக்கிறது, தீவிர பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னால் இன்னும் 2, 3 மாதங்களில் மழைவந்த பிறகு இப்படி பரிசீலனைச் செய்து பிரயோசனம் இல்லாமல் போய்



1986 ஏப்ரல் 28] [திரு. என். எஸ். வி. சித்தன்]

விடும். ஆகவே செய்ய வேண்டிய உதவி காலா காலத்தில் போய்சேர வேண்டும் என்ற முறையில் நான் சொல்ல விரும்பு கிறேன். அந்த வகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணா மாவட்டம் சில பல மாதங்களுக்கு முன் னால் தொடங்கப்பட்டது. திண்டுக்கல் என்று சொன்னால் குடிநீர் பிரச்சினை என்பது ஆண்டு ஆண்டு காலமாக இருந்து கொண்டிருக்கிறது. அதுவும் கழிந்த ஆண்டு குடிநீர் பிரச்சினை மிக கடுமையாக இருந்தது. லாரிகள் மூலமாக பல்வேறு இடங் களில் பல இலட்சக்கணக்கான பணத்தைச் செலவழித்து ஓரள வுக்கு அந்த குடிநீர் பிரச்சினையை சமாளித்து இருக்கிறது. இன்றைக்கு ஒரு செய்தி கிடைத்து இருக்கிறது, திண்டுக்கல் குடிநீர்ப் பிரச்சினைக்கு 1960 ஆம் ஆண்டு காமராஜ் சாகர் அணை கட்டப்பட்டு குடிகனாற்றில் உள்ள பாசனத்திற்கு போக எஞ்சியுள்ள தண்ணீரை காமராஜ் சாகரில் தேக்கியதன் மூலமாக திண்டுக்கல் நகருக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்ற திட்டம் முன்னால் கொண்டு வரப்பட்டது. ஆனால் மக்கள் வளர்ச்சி அதிகமாக இருப்பதன் காரணமாக இந்தத் திட்டத் தின் மூலமாக மக்களுக்கு எதிர்பார்த்த அளவுக்கு குடிநீர் கிடைக்காத காரணத்தாலே 2—1—1985 அன்று 8 இலட்சத்து 97 ஆயிரத்து 200 ரூபாய் செலவிலே பேரணைக்கு அருகிலே வைகை ஆற்றின் குறுக்கே கிணறு தோண்டி அந்த கிணற்றின் மூல மாக தண்ணீர் கொண்டு வருவதற்கு முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டதாகவும், அதற்கு ஆரம்பக் கட்ட வேலைகளுக்காக குழாய்கள் எல்லாம் வந்து அந்தப் பகுதியில் சேர்ந்து இருப்ப தாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இதற்கிடையிலே இப்போது கிடைத்திருக்கிற தகவல், இந்தக் குடிகனாற்றின் பாசனக் கால்வாயின் மூலமாக, இரண்டு மூலமாக, 5,200 ஏக்கர் நஞ்சை நிலங்களை புஞ்சை நிலங்களாக மாறுதல் செய்துவிட்டு, அந்த நிலங்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய பாசனத்திற்கு தேவை யான தண்ணீரை திண்டுக்கல் நகர மக்களுக்கு குடிநீர் தேவைக்கு மாற்றுவதாக ஏற்பாடுகள் செய்து வருவதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. நம்மைப் பொறுத்தவரையில் எங்க ளைப் பொறுத்தவரையில், திண்டுக்கல் நகரத்திற்கு தண்ணீர் கொடுக்கக்கூடாது என்ற பிரச்சினை அல்ல. திண்டுக்கல் நகரத் திற்கு விரைவாக தண்ணீர் கொடுக்க வேண்டும். அதே நேரத் தில் பாசனத்திற்காக தண்ணீர் கொண்டுவந்தால், அதனுடைய விளைவுகள் எப்படியிருக்கும்? சற்றேறக்குறைய 5,000 ஏக்கர் நஞ்சை நிலங்களை புஞ்சை நிலங்களாக மாற்றுவோமேயானால், அதற்கான நஷ்ட ஈடு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்றும், அவர்கள் வழக்கு மன்றங்களுக்குக் போக மாட்டார்களா? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் போட்டிருக்கிற குடிதண்ணீர் திட்டத்திலே, சிக்கலை உருவாக்குகின்ற வகையிலே இது அமைந்திருக்கின்ற காரணத்தால் நான் தலையிடுகிறேன். இப்போது நாம் போட்டிருக்கிற ரூ. 9 கோடி அளவிலான பேரணைத் திட்டம் என்பது எந்த பாதிப்பும் இல்லாமல், திண்டுக்கல் குடிதண்ணீருக்காக போடப்பட்டிருக்கிறது. திட்டப் பணிகள் தொடங்கியிருக்கின்றன. வெகு விரைவிலே தண்ணீர் கிடைக்கும். திண்டுக்கல் நகரத்தைப் பொறுத்தவரைக்கும் நானே இரண்டு முறை போய், எல்லோரையும் அழைத்து கலந்து பேசி இருக்கிறேன். இப்போது அங்கே குடிதண்ணீர் பிரச்சினை இல்லை. மாண்புமிகு துணைத் தலைவர் இருக்கின்ற பகுதியிலே வறட்சி நிலவுகிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு சித்தன் அவர்கள் குடகனாற்றினுடைய திட்ட நோக்கத்திற்கு அப்பாற்பட்டு புதியதாக ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவருக்குக் கிடைத்த தகவல் எந்த அடிப்படையில் என்று விளக்கினால் நன்றாக இருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் இந்த அரசாங்கத்திடமிருந்து எந்த உறுதியை எதிர்பார்க்கிறேனோ, அந்த உறுதியை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குடகனாற்றுப் பகுதியின் 5,000 ஏக்கர் நஞ்சை நிலங்களை புஞ்சை நிலங்களாக மாற்றுவதாகவும், அதன் மூலமாக பாசனத்திற்கு வருகின்ற தண்ணீர் திண்டுக்கல்லுக்கு போவதாகவும் கூறப்படுகிறது என்ற தகவலின் காரணமாகத்தான் சொன்னேனே தவிர, மாண்புமிகு அமைச்சரவர்கள் இது சரியான தகவல் இல்லை என்று சொல்வார்களேயானால், இதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். வேறு ஒன்றுமல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குடகனாறு என்பது வேடசந்தூரில் இருக்கிறது. இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அதனால் தான் சொன்னேன். சொல்லக் கூடிய பூகோள அமைப்பில் அது ஒத்து வரவில்லை. கொண்டுவருவது வைகைப் பேரணைப் பகுதியிலிருந்து. குடகனாறு இருக்கிற பகுதியிலிருந்து இல்லை. ஆகவே அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இதிலே கொடுத்திருக்கிற தகவல் சரியானதல்ல.





திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூறுவது வைகையிலிருந்து சொல்லுகிறீர்களா, அல்லது குடகனாற்றிலிருந்து சொல்கிறீர்களா? குடகனாறு திண்டுக்கல்லுக்குக் கீழ்ப்பகுதியில் இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேள்விப்பட்டது, திண்டுக்கல் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, நிலக்கோட்டை பேரணைப் பகுதியிலிருந்து 9 கோடி சேங்ஷன் செய்து, அதிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் நிலை உள்ளது. ஆனால் அதை சமீபத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்—இதுவே கேள்விப்பட்டது தான்—அதையே மாற்றக்கூடிய அளவிலே, இந்தக் குடகனாறு என்பது அய்யம் பாளையம் அருகே வரக்கூடிய ஆற்றுக்குக் கூட நாங்கள் குடகனாறு என்ற பெயரை வைத்திருக்கிறோம். அந்தக் குடகனாற்றுத் திட்டத்திலிருந்து ஏற்கனவே திண்டுக்கல்லுக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தத் தண்ணீர் போதவில்லை. ஆகையால் அங்கே 5,000-ஏக்கருக்கு மேற்பட்ட நஞ்சை நிலங்களை புஞ்செய் நிலங்களாக மாற்றி, அங்கேயிருக்கின்ற தண்ணீரை எடுத்து அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படுத்த அரசாங்க அதிகாரிகளிடத்தில் ரிப்போர்ட் வாங்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது உண்மையா என்பதைத் தான் மாண்புமிகு சித்தன் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இதில் ஐயப்பாட்டிற்கு சிறிதுகூட இடமில்லை. ஆகவே பேரணையிலிருந்து ரூ. 9 கோடி செலவிலே திண்டுக்கல்லிற்குக் கொண்டு வரவேண்டுமென்பதும், வருகின்ற வழியிலே பல ஊர்களுக்குத் தருவது என்பதும், சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அதற்கு அடிக்கல்லும் நாட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னமாதிரி, அந்தத் திட்டப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதைப் பொறுத்தவரையில் எந்தவித மாற்றமும் இல்லை. குடகனாற்று ஒய்வில்லத்திலிருந்து வேண்டுமானால், இதைப் பற்றி யோசித்திருப்போமே தவிர, குடகனாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்படக் கூடிய நிலையில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. பல்வேறு மாவட்டங்களில் வறட்சி நிலவுகிறது என்ற தகவல்கள் வந்து கொண்டு இருக்கின்றன. குறிப்பாக எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் திரு. கதிர்வேலு மற்றும் ராஜாபாபு ஆகியவர்கள் சொன்னதைப் போல் வட ஆற்காடு மாவட்டத்திலே கடந்த 15 ஆண்டுகளாகவே மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. பாலாறு சர்டிபிகேட் வேண்டுமென்று கேட்டு அந்தப் பகுதியிலே உள்ள விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்காமல் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1–50)

அதைப்போலவே சற்று முன்பு நான் சொன்னதைப் போல் தர்மபுரி மாவட்டத்திலே கடுமையான வறட்சி நிலவுகிறது என்று திரு. தீர்த்தராமன் அவர்களும் திரு. வெங்கட ரெட்டி அவர்களும் சொல்லி இருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டம் கர்நாடக மாநிலத்தை யொட்டிய பகுதியாக இருக்கிறது. அங்கே இருக்கிற விவசாய விளை நிலங்களுக்கும் தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது. கர்நாடக மாநிலத்திலுள்ள அந்தப் பகுதிகளை அவர்கள் வறட்சிப் பகுதிகளாக அறிவித்திருக்கிறார்கள். அதைப் போலவே அதையொட்டியிருக்கிற தர்மபுரி மாவட்டத்தையும் வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கர்நாடக மாநிலத்தில் அந்தப் பகுதிகளுக்கு அண்மையிலே பாரதப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் வந்து பார்வையிட்டுச் சென்று இருக்கிறார்கள். அதையொட்டி இருக்கிற அந்தப் பகுதியையும் நம்முடைய அரசு வறட்சிப் பிரதேசமாக அறிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, இந்தியாவிலேயே மிகச் சிறந்த கிராமம் என்று 1979 ஆம் ஆண்டு ஜனாதிபதி பரிசு பெற்ற அம்மாடிமல்லாபுரம் என்ற பகுதியிலே உள்ள கிராமத்தில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை என்ற தகவல் எங்களுக்கு வந்திருக்கிறது. அது குறித்து விரைந்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரி வஜாவைப் பொறுத்த வரையில் இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே 49 ஆம் பக்கத்திலே பசலி-1394-ஐப்பற்றி சொல்லி இருக்கிறார்கள். அதாவது 1–7–1984 முதல் 30–6–1985 முடிய நிலவரி தள்ளுபடி செய்யப்பட்ட விவரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் நமக்கு வேண்டியது 1–7–1985 முதல் 30–6–1986 ஆம் ஆண்டிற்கான விவரங்கள்தான். நாம் இந்த வேளை பசிக்கின்றது என்று சொல்கிறோம். அவர்கள் போன வேளையிலே சாப்பாடு





போட்டோம் என்று சொல்கிறார்கள். இந்த வருடத்திற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கை பற்றி தரப்பட வேண்டும். இதிலே கூட கடைசியிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் 1–7–1985 முதல் 30–6–1986 வரை கேட்பு வசூல் நிலை பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கடுமையான வறட்சி நிலவுகிற இந்த நேரத்தில் உடனடியாகப் பாதிக்கப்பட்ட வறட்சிப் பிரதேசங்களை வறட்சிப் பிரதேசங்கள் என்று அறிவித்து வரி வஜா செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி உரிய நேரத்திலே வரிவஜா செய்யாத காரணத்தினாலேதான் கிராம அதிகாரிகள் வரி வசூலிக்கின்ற பிரச்சினையை ஆரம்பித்திருக்கிறார்கள். அதைத்தான் ஜனவரி மாதத்திலேயே நாங்கள் சொன்னோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இது சம்பந்தமாக அறிக்கையை அரசுக்கு அனுப்பி விட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அறிக்கையைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம், பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்றுதான் சொல்கிறார்கள். நிவாரண நடவடிக்கைகளின் பலன்கள் உரிய காலத்தில் அவர்களுக்கு போய்ச்சேருகின்ற முறையிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்திலே பல இடங்களிலே பாதிக்கப்பட்டிருப்பதால் அமைச்சர் அவர்கள் இன்றைக்கு வரி வஜா பற்றி அறிவிக்க வேண்டும். அப்படி ஒரு வேளை இன்றைக்கு அறிவிக்காவிட்டால் இது சம்பந்தமாக ஒரு வெள்ளை அறிக்கையை இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாக வைக்க வேண்டும்; அதன் மூலமாக வறட்சி நிவாரண நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள முடியும் என்று சொல்கிற நேரத்திலே போர்க்கால நடவடிக்கை என்று நான் சொல்ல மாட்டேன், இடைத் தேர்தல் கால நடவடிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி நிலையைப்பற்றி சொல்கிற நேரத்திலே குடிநீர்த் தட்டுப்பாடு பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் விவசாயம் அதனால் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் இல்லை. அந்த விவரத்தையும் கொடுத்திருப்பார்களானால் கொஞ்சம் பொருத்தமாக இருந்திருக்கும். வறட்சி நிவாரண நடவடிக்கை என்ற அடிப்படையில் கையிறைப்பான் என்று சொல்லக் கூடிய அடி குழாய் போடுகிறார்கள். அதிலே பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன என்று எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. உதாரணமாக பூமிக்கடியில் குழாய் போடுவதால் எவ்வளவு ஆழம் போடுகிறார்கள் என்பதற்கான கணக்கு வழக்கு சரியாக இல்லை. இவ்வளவு அடி போடுகிறோம் என்று சரி பார்ப்பதற்கான முறைகள் இல்லை. சென்ற ஆண்டு போடப்பட்ட குழாய்களிலே கூட இந்த ஆண்டு தண்ணீர் வற்றி விடக் கூடிய நிலைமைகள் இருப்பதால் நமக்குக் கொடுக்கின்ற கணக்குட்படி அவ்வளவு ஆழத்திற்குக் குழாய்களைப் போடுகிறார்களா என்று பரிசீலனை செய்வதற்கான முயற்சிகளை அல்லது அதை சரிபார்ப்பதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 ஏப்ரல் 28

இதுமாதிரிக் குற்றச்சாட்டுகள் வருகின்றன. அதைத் தவிர்ப்
பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு அடி
குழாய் போட வேண்டுமென்றால் 15 ஆயிரம் முதல்
25 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. ஆகவே அதற்காக
கொடுக்கிற முழுப்பணமும் பயன் எய்துகின்ற அளவுக்கு நட
வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி நிவாரணத்தைப் பொறுத்த வரையில் மத்திய
அரசிடத்திலிருந்து தாராளமாக உதவியை நாடலாம். பல
இடங்களில் வறட்சி இருக்கிற காரணத்தினால் மத்திய அரசாங்
கம் உதவி அதன் மூலம் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்
கொள்ள வேண்டும். நீண்டகாலக் கூட்டுறவுக் கடன்
வட்டியைத் தள்ளுபடி செய்யாமல் அதற்குத் தண்ட வட்டி
போட்டு வசூலிக்கிறார்கள், இதனால் விவசாயிகளுக்கு அதிக
மான சுமை ஏற்படுகிறது. கால்நடைகளுக்குத் தீவனம் இல்லா
மல் விவசாயப் பெருமக்கள் கால்நடைகளை விற்கிற நிலை இருக்
கிறது. உதாரணமாக பாதி விலைக்கு விற்கக் கூடிய நிலைமை
இருப்பதால் கால்நடைகளுக்குப் போதிய தீவனங்கள் கிடைப்ப
தற்கான வழிவகைகளை அரசு செய்ய வேண்டும்.

தமிழகத்தில் ஆண்டுதோறும் எப்படி வறட்சி வருகிறதோ
அதைப் போல வெள்ளமும் வருகிறது. ஆனால் வெள்ள நிவா
ரணப் பணியைப் பொறுத்த வரையில் எங்களுக்குக் கிடைக்கின்ற
தகவல் என்னவென்றால் வெள்ளச் சேதத்தைப் பார்க்கப்
போகின்ற அதிகாரிகள் உடனடியாகப் போவது இல்லை; ஒரு
வாரம் அல்லது பத்து நாட்கள் கழித்துப் போகிறார்கள் என்று
தகவல் வருகிறது. இப்படிப் போகின்ற நேரத்தில் அங்கே அந்த
வெள்ளம் வடிந்து போயிருக்கிறது. அதனால் உண்மையான
நிலைமை அவர்களுக்குத் தெரிவதில்லை. அதற்குள் அங்கே
இருப்பவர்கள் சாதாரணமான ஒரு சுவற்றை வைத்துக் கட்டி
விடுகிறார்கள்; ஓலை வேய்ந்து விடுகிறார்கள். எப்படி அவர்
களுக்கு நிவாரண உதவி போகும்? எனவே, தாசில்தார் போன்ற
வர்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் வெள்ளம்
வந்த ஒன்றிரண்டு நாட்களிலேயே அந்தப் பகுதிகளுக்குப் போய்ப்
பார்த்தால் உண்மையான நிலைமையை அறிய முடியும்; அதன்
மீது நிவாரண வேலைகளை எடுப்பதற்கு உதவியாக இருக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நிவாரண உதவிகளைக் கொடுக்கின்ற பொழுது
குடிசைகளாக இருந்தால் முழுவதுமாகக் கொடுக்கிறார்கள்.
ஆனால் கொஞ்சம் செங்கல் சுவர் வைத்து, ஓலை வேய்ந்த
குடிசையாக இருந்தால் முழுத் தொகையும் கிடைப்பதில்லை
என்று சொல்கிறார்கள். எனவே, கஷ்டப்படுகின்ற அவர்களது
நிலைமையைப் பார்த்து, அவர்களுடைய பொருளாதார நிலை
யைப் பார்த்து ஒரேமாதிரியான உதவித் தொகையைக் கொடுக்க
வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 28] [திரு. என். எஸ். வி. சித்தன்]

300 ரூபாய் என்று கொடுக்கப்படுகின்ற உதவித் தொகையைப்
பொறுத்த வரையில் இந்தத் தொகை முழுமையாக 100-க்கு
5 பேர்களுக்கு மேல் கொடுக்கப்படுவதில்லை என்று என்னிடத்திலே
சொல்கிறார்கள். 75 ரூபாய் அல்லது 50 ரூபாய் என்று
தான் அவர்களுக்குப் போய்ச் சேருகிறது என்று சொல்கிறார்
கள். அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற முழுத்தொகையான
300 ரூபாயை வாங்குகின்றவர்கள் '100-க்கு 5 பேர்களுக்கு மேல்
இல்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, கொடுக்கப்
படுகின்ற தொகை எல்லோருக்கும் முழுமையாகக் கிடைக்கின்ற
வகையில் அமைய வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்
கிறேன்.

ஒரே வீட்டிலே ஐந்து குடும்பங்கள் குடியிருந்தால் 300 ரூபாய்
பிரித்துக் கொடுக்கப்படுகிறது. இப்படி 50 ரூபாய், 60 ரூபாய்
என்று பத்து பதினைந்து நாட்களுக்குப் பிறகு வந்தால் அதனால்
அவர்களுக்குப் பயனில்லாமல் போய் விடும். ஆகவே, முழுத்
தொகையையும் உரிய காலத்தில் கொடுப்பதற்கு அரசாங்கம்
பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளப் பகுதிகளில் நிவாரண உதவியாக ஐந்து கிலோ
அரிசி கொடுக்கிறார்கள். இதை 15 கிலோவாக அதிகரித்துக்
கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, வெள்ளத்
தால் வாடியிருப்போர்களுக்கு வாரி வாரி வழங்க வேண்டுமென்று
கூட சொல்லவில்லை, இப்படி வாடியிருப்பவர்களுக்கு 15 கிலோ
அரிசியாவது கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையாவது
அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவைகளெல்லாம் தற்காலிகமாக எடுக்கப்படுகின்ற நட
வடிக்கைகள்தான்; உடனடியாகப் பசியைத் தீர்க்கின்ற நட
வடிக்கைகள்தான். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம்
வருவதைத் தடுக்கின்ற முறையில் நீண்டகாலத் திட்டமாக
என்ன இருக்கிறது? தொலைதூர நோக்கத்தோடு எந்தத் திட்டம்
செயல்பட இருக்கிறது? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு
மென்றால், ஒரு இடத்தில் இந்த ஆண்டில் வெள்ளம் வந்து
பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அடுத்த ஆண்டில் அந்தப் பகுதியில்
வெள்ளம் வரக்கூடாது. அதற்கான நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும். அடையார் பகுதியிலே சுவர் கட்ட வேண்டுமென்று
சொல்கிறார்கள். பள்ளப் பகுதியிலே அடுத்த ஆண்டில் மழை
வந்தால் வெள்ளத்தால் பாதிக்கப்படாத அளவிற்கு அரசாங்கம்
நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைத் தொலைதூர நோக்
கோடு பார்த்து, நிரந்தரமான ஏற்பாட்டைச் செய்வதற்கான
நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

கடலோரங்களில், ஆற்றோரங்களில் உள்ள தாழ்வான பகுதி
களில் வாழ்பவர்களுக்காக, குடிசைப்பகுதிகளில் வாழ்பவர்
களுக்காக ஒரு 'இன்ஷ்யூரன்ஸ்' திட்டத்தைக்கொண்டு வருவதற்
கும் அரசாங்கம் யோசிக்கவேண்டும். அந்தப் பகுதி மக்களிடத்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 ஏப்ரல் 28

திலே சுமாராக ஒரு தொகையை வசூலித்துக் கொண்டு அதன்மூல மாக இன்ஷ்யூரன்ஸ் செய்தால் ஒப்படிப்பட்ட இயற்கை உற் பாதங்களினால் பாதிக்கப்படுகின்றபொழுது மிகவும் பாதுகாப் பாக இருப்பதற்கு இந்த இன்ஷ்யூரன்ஸ் தொகை உதவியாக இருக்கும். ஆகவே, அரசாங்கம் இதை அருள்கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ரெவின்யூ போர்டைப் பற்றிச் சொல்லியாக வேண்டும் இந்த வருவாய் வாரியத்தைக் கலைத்து விட வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலேயிருந்தே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்திலேயிருந்தே, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தமிழ கத்தின் முதலமைச்சராக இருந்த காலத்திலேயிருந்தே ஆய்வு செய்யப்பட்டு, அந்த ஆட்சிக் காலத்தில் இந்த வருவாய் வாரியம் கலைக்கப்பட்டிருக்கிறது. இது கலைக்கப்படும் நேரத்தில் அதில் சிறப்பு ஆணையாளர்களாகப் பணியாற்றியவர்கள், பல்வேறு மண்டலங்களாகத் தமிழகம் பிரிக்கப்பட்டு அந்த மண்டலங் களுக்கு அந்த அதிகாரிகள் அனுப்பப்பட்டு, வேளாண்மை முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், சமுதாய முன்னேற்றம் ஆகிய பணிகளைக் கவனிப்பதற்காக அனுப்பப்பட வேண்டு மென்று குறிப்பு இருந்ததாகக் கேள்விப்படுகிறேன். அப்படி அது உண்மையாக இருந்தால், அதிகாரிகள் அப்படி அனுப்பப் பட்டிருக்கிறார்களா என்று பார்த்தால், வருவாய் வாரியம் கலைக்கப்பட்டதற்குப் பின்னர், அந்த அதிகாரிகள் சென்னை யிலேயேதான் இருந்துகொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பல்வேறு மண்டலங்களாகப் பிரித்து, அந்த அதிகாரிகளை அந்த மண்டலங்களுக்கு அனுப்பினால், பின் தங்கிய மாவட்டங் கள் முன்னேறுவதற்கு இந்தப் பழுத்த அனுபவம் மிக்க அதிகாரி களின் அனுபவம் பயன்படும். அதன் மூலம் பிற்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதற்குத் துணையாக இருக்கும். எனவே, அரசாங் கம் இதனைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுதெல்லாம் பத்திரிகைகளிலே பார்க்கிறோம், ரியல் எஸ்டேட் என்று முழுப் பக்க அளவில் விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் இரயிலிலே போகின்றபொழுது பார்க்கிறோம். இரயில் பாதை ஓரங்களில் உள்ள முக்கியமான விளைநிலங்கள்கூட இன்றைக்கு ரியல் எஸ்டேட்டுகளாக மாறிக் கொண்டு இருக்கின்றன. இதற்கெல்லாம் அரசாங்கத்தின் தடை இருந்தாலும் முனைப்பாகப் பின்பற்றுவதில்லை. நஞ்சை நிலங் கள் குறிப்பாக விவசாய நிலங்களாக இருந்தால் அந்த நிலங்களில் வீடு கட்டக்கூடாது என்பதைக் கண்டிப்பாக அமல் செய்ய வேண்டும் அப்படிப்பட்ட நிலங்களில் வீடுகள் கட்டுவதைத் தடுக்க வேண்டும். ரியல் எஸ்டேட் என்ற முறையில் இலட்சக்கணக்கான



1986 ஏப்ரல் 28] [திரு. என். எஸ். வி. சித்தன்]

ரூபாய்களைக் குறிப்பிட்ட நபர்கள் பெறுகின்ற நிலைமை இருக் கிறது. இதைத்தடுத்து நிறுத்த வேண்டும். விளைநிலங்களில் வீடு கட்டக்கூடாது என்ற தடையை நாம் கண்டிப்பாகக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நில அளவை மேம்பாட்டுத் திட்டம் என்ற அந்தத் திட்டம் நல்ல திட்டம்தான். இந்தத் திட்டம் ஆரம்ப காலத்திலே எடுக்கப்பட்ட நேரத்தில் இலவசமாக அளவை செய்வதாக அறிவித்ததாகத் தெரிகிறது. ஆனால் இப்பொழு தெல்லாம் ஏக்கருக்கு 16 ரூபாய் அல்லது 30 ரூபாய் கட்டணம் கட்ட வேண்டுமென்று இருக்கிறது. அப்படிக் கட்ட வில்லை என்றால் என்ன நிலை? அப்படிக் கட்டணம் செலுத்தவில்லையென்றால், ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் மூலமாக அவர்களே வசூலிக்கிற முறை இருப்ப தாகத் தெரிகிறது. இந்த நில அளவைப் பொறுத்தவரையிலே, அரசாங்கத்திற்கு அதிக நிதி வரப்போவதில்லை. ஆகையினால், இலவசமாகச் செய்துகொடுக்க வேண்டுமென்ற யோசனையை நான் சொல்கிறேன்.

(பிற்பகல் 2-00)

அடுத்தபடியாக 23 ஆம் பக்கத்திலே, கரூர் திண்டுக்கல் அகல ரெயில் பாதைக்கு நிலம் ஒதுக்குவதிலே 23 ஏக்கர் என்று போட்டி ருக்கிறார்கள். அது தவறாக இருக்குமோ என்று கருதுகிறேன். அந்தக் கரூர் திண்டுக்கல் அகலரெயில் பாதைத் திட்டம் விரைவாக நிறைவேற்றப்படவேண்டுமென்று நாம் குரல் கொடுக்கிறோம் ஆனால் அதே நேரத்திலே, அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தை அல்லது மத்திய அரசாங்கத்திற்கு, அல்லது ரெயில்வே துறைக்குக் கொடுப்பதற்குப் பரிசீலனை செய்து கொண்டிருக் கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பரிசீலனை தேவையே இல்லை. விரைவாகக் கொடுக்கலாம். அப்படிக் கொடுப்பதிலே ஏதாவது தடங்கல் இருக்குமானால், முட்டுக்கட்டை இருக்கு மானால், அதை நிவர்த்தி செய்து கொடுக்கவேண்டும். என்ன காரணத்தினால் இந்தக் குறிப்பிலே அப்படி இருக்கிறது என்ற விவரம் எனக்குத் தெரியவில்லை.

அடுத்தபடியாக, மாவட்டங்கள் பிரிவினை. இன்றைக்குக்கூட நான் பத்திரிகையிலே பார்த்தேன். நம்முடைய நெல்லை மா வட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. சட்டமன்றம் கூடுகிற நேரத்திலே, சட்ட மன்றத்திலே இந்த அறிவிப்பு வந்திருக்குமானால், இன்னும்

கொஞ்சம் நன்றாக இருந்திருக்கும். ஆனாலுங்கூட பிரிக்க வேண்டுமென்ற உணர்வு வந்து, அதுவும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பெயர், பிரிக்கப்படுகிற மாவட்டத்திற்குச் சூட்டப்பட வேண்டுமென்று சொன்ன இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

மாவட்டங்கள் பிரிக்கப்படுகிற நேரத்திலே பக்கத்திலே இருக்கிற கிராமங்கள் எல்லாம், அந்தத் தலைநகரைத்தை ஒட்டி இருக்கவேண்டுமென்பது நாம் ஏற்றுக்கொண்ட முடிவு. ஆனால் பிரிக்கப்பட்ட இராமநாதபுரத்திலே, சில கிராமங்கள் பக்கத்திலே இருக்கிற தலைநகரத்தோடு சேர்த்துக் கொள்ளப்படாமல், நீண்ட தூரத்திலே இருக்கிற மாவட்டத் தலைநகரோடு சேர்க்கப்பட்டி ருப்பதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சான்று சொல்ல வேண்டுமானால், இராமநாதபுரம் மாவட்டம் பிரிவினையில் சில பகுதிகள் நீண்ட தூரத்திலிருக்கிற இராமநாதபுரத்தில் சேர்க்கப்பட்டுள்ளதை மாற்றி, அண்மையில் உள்ள பசும்பொன் மாவட்டத்தில் சேர்க்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அது பற்றிய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உதாரணத் திற்குச் சொல்ல வேண்டுமானால், கண்ணங்குடி வட்டாரத்தில் உள்ள பல ஊர்கள் மிக அருகில் உள்ள தேவகோட்டைக்குப் பதில் தூரத்தில் உள்ள திருவாடானை தாலுகாவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

சருகணி பிர்க்காவில் உள்ள 12 பஞ்சாயத்துக்களை அருகா மையில் உள்ள பசும்பொன் மாவட்டத்தில் சேர்க்க ஏற்பாடு செய்யவேண்டும் என்ற கோரிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்று எல்லா பகுதிகளிலும் இருக்கிற ஊர்களிலே, பக்கத் திலே இருக்கிற மாவட்டத் தலைநகரங்களோடு சேர்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டாவைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்கள் போது மானவையாக இல்லையென்று நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். அந்தப் புள்ளி விவரத்தைப் படித்தால் நிறைய நேரம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். பல்வேறு மாவட்டங்கள் பற்றி கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரம், 4, 5, 6, 8 என்ற முறையிலேதான் இருக்கிறது. இந்தத் துறை இன்னும் கொஞ்சம் சரியான நடவடிக்கைஎடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாவடி கட்டுவதைப் பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பிலே நான் பார்க்கிறேன் அதிலே அரிசனங்கள், பொருளாதாரத்திலே பின்தங்கிய மக்கள் வாழ்கிற குடிசைப் பகுதிகளில், சாவடி கட்ட வேண்டுமென்ற திட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே இருந்தது. இலவசமாக கட்டப்படுகிற திட்டம். அந்தத் திட்டம்



பின்னாலே நிறுத்தப்பட்டு, இப்பொழுது மறுபடியும் தொடங்கி யிருக்கிறது. ஆனால் அந்தத் திட்டத்திற்கான முழுமை செலவையும் அரசே ஏற்றுக்கொண்டு, கிராமப் பகுதியிலே வாழ் கின்றவர்கள், ஓலைக் குடிசையிலே வாழ்கின்றவர்கள்— ஆடு மாடுகள் என்று வாழ்கின்ற இடத்தில் என்று சொல்வது அவர் களைக் குறைத்து மதிப்பிடுவதாக இருக்கும்— மிகவும் வறிய சூழ்நிலையிலே இருக்கிறவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் ஒரு சாவடி இருக்குமானால், வெயில் காலங்களில், மழைக் காலங்களில் அவர்களுக்குத் துணையாக இருக்கும், பொதுப் பிரச்னையிலே துணையாக இருக்கும். அந்த முறையிலே அதற் காக நிதி உதவியை அதிகமாகக் கொடுக்கவேண்டும். தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் என்று சொல்லக்கூடிய என். ஆர். இ. பி. [illegible] பாதியும், மிகுதியைப் பஞ்சாயத்துக்களும் போடுகின்ற முறையிலே, இந்தக் கொள்கைக் குறிப்பிலே நான் பார்க்கிறேன். முழுமையாக அரசாங்கம் கொடுத்து, அந்த மாதிரி சாவடிகள் கட்டுகிற திட்டத்தைப் புதுப்பிக்க வேண்டு மென்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலம் கடந்து விட்டதன் காரணமாகவும், இப்பொழுது நான் பேசத் தொடங்கினால் 1 மணி நேரமாவது வேண்டுமென்ற காரணத்தினாலும் மாண்புமிகு உறுப் பினர்கள் அத்தனை பேரும் தாங்க மாட்டார்கள் என்ற காரணத் தினாலும், பசி வந்து விட்டதன் காரணமாகவும், என்னுடைய பதிலை நாளைக் காலை 9 மணியிலிருந்து 10 மணி வரை வைத்துக்கொள்ளலாம் என்றும் எனவே, நாளைக் காலை கேள்வி நேரத்தை மாற்றிவிட்டு 9 மணியிலிருந்து 10 மணி வரை பதில் உரையை வைத்துக்கொள்ளலாம் என்றும் தங்களுக்குத் தெரிவித் துக்கொள்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானம்.

### விதி 32-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக் கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெறவேண்டும் என்றுள்ள தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (29—4—1986) தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (29-4-1986) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-04 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

70. கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பயணிகள் பேருந்துகளுக்கு 23—3—1986 முதல் 1—4—1986 முடிய உள்ள காலத்திற்குச் செலுத்தக் கூடிய வரியினின்று விலக்களிப்பது குறித்து உள் துறையின் 7-3-1986 ஆம் நாளிட்ட 582 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

71. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சாராய (சில்லறை விற்பனை கடைகள்) விதிகளை வகுப்பதுகுறித்து மதுவிலக்கு— ஆயத்தீர்வை துறையின் 18—6—1985 ஆம் நாளிட்ட 593 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட [அறிவிக்கை தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

147. கோரிக்கை எண் 1—நிலவரித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

148. வருவாய்த்துறையின் 1986-87 ஆம் ஆண்டிற்கான சாதனை அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

149. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் வனம் மற்றும் மீன்வளத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை (தமிழ் ஆங்கிலம்).

150. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) போக்குவரத்துத்துறை பற்றிய பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).



இணைப்பு.

(251-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

1. முன்னுரை.

1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வருவாய் வாரியம் என்ற அமைப்பு கலைக்கப்பட்டு, வருவாய் மற்றும் நில நிருவாகம் குறித்த அலுவல்கள் மாநில அளவில் அதிகார வரம்புகொண்ட மூன்று ஆணையர்களிடம் வருவாய் நிருவாகம், நில நிருவாகம் மற்றும் நிலச் சீர்திருத்தம் ஒப்படைக்கப் பட்டது. மாவட்ட வருவாய் மற்றும் பொது நிர்வாகம், நிலவரி மற்றும் தொடர்புடைய மேல் வரிகள் விதித்தல் மற்றும் வசூலித்தல், கடன்கள், நில வருவாய் ஆவணங்கள் பராமரித்தல் ஆகிய அலுவல்கள் வருவாய் நிருவாகத் துறையின் பொறுப்பில் உள்ளன. நில எடுப்பு, நில உரிமை மாற்றம், நில ஒப்படை, வீட்டு மனை ஒப்படை மற்றும் நிலப் பட்டாக்கள் வழங்கல் குறித்த அலுவல்கள் நில நிருவாகத் துறையின் பொறுப்பிலும், நிலச் சீர்திருத்தம் மற்றும் நில குடிவாரம் குறித்த செயலாக்கப் பணிகள் நில சீர்திருத்தத் துறையின் பொறுப்பிலும் ஒப்படைக்கப்பட்டன. சிறப்பு ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையரின் கட்டுப்பாட்டில், வேளாண்மை வருமான வரி விதித்தல் மற்றும் வசூலித்தல் ஆகிய பணியினை வேளாண்மை வருமான வரி ஆணையர் பொறுப்பிலும், மற்றும் நகர்புற நிலவரி விதிப்பு நகர்புற நிலவரி இயக்குநர் பொறுப்பிலும் ஒப்படைக் கப்பட்டுள்ளன. நகர்புற நிலவரி வசூல் உரிய மாவட்ட ஆட்சியரின் பொறுப்பில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

2. மாவட்ட அளவில் பணிகள், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களால், கோட்ட ஆட்சியர், வட்ட ஆட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர்கள் உதவியுடன் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் தற்போது 19 மாவட்டங்கள், 57 வருவாய் கோட்டங்கள், 167 வட்டங்கள், 1,098 உள் வட்டங்கள் மற்றும் 17,029 வருவாய் கிராமங்கள் உள்ளன.

2. கிராம நிருவாகம்.

புதிய முழு நேர கிராம நிர்வாக அலுவலர்கள் முறை 14-11-1980 முதல் அமுலுக்கு வந்தது. முதலில் 12,550 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 52 பணியிடங்கள் அதிகமாக தோற்றுவிக்கப் பட்டதாக பின்னர் தெரிய வந்தது. அவற்றைக் குறைத்து, மொத்தத்தில் 12,498 பணியிடங்களுக்கு அனுமதிக்கப்பட்டது.

எனவே, தற்போது உள்ள கிராம நிருவாக அலுவலர்கள் பணியிடங்கள் 12,498 ஆகும். முன்னாள் கிராம அதிகாரிகளுள் தகுதியுடையோர் மாநில தேர்வு காண் குழு மூலமும் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமும் நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு நில அளவை மற்றும் கிராம நிருவாகம் ஆகியவற்றில் பயிற்சி அளித்து, அவற்றுள் தேர்ச்சி பெற்றபின் கிராம நிர்வாக அலுவலர்களாக நியமிக்கப்பட்டு விட்டனர்.

2. புதிய கிராம நிருவாக அலுவலர்களை மாவட்டத்திற்குள் ஒரு கிராமத்திலிருந்து மற்றோரு கிராமத்திற்கு மாற்றம் செய்ய இயலும். முழு நேர அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து சலுகைகளும் கிராம நிருவாக அலுவலருக்கும் பொருந்தும். முன்பிருந்த பகுதி நேரக் கிராம அதிகாரிகள் அமைப்பில், தாழ்த்தப்பட்டோருக்கு உரிய விழுக்காடு பணியிடங்கள் ஒதுக்கப்படவில்லை. தற்போது, புதிய முறையில் தாழ்த்தப்பட்டோருக்கு உரிய பணியிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கிராம நிருவாக அலுவலர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதற்கான ஆணையும் வெளியிடப்பட்டு விட்டது.

3. பகுதி நேரக் கிராம ஊழியர்களான, கிராமக் காவலர்கள், கிராமப் பணியாளர்கள், மற்றும் பாசன காவலர்கள் தொடர்ந்து பணியில் உள்ளனர். அவர்களுக்கெனத் தனியாக, 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊழியர்கள் பணி விதிகள் என்ற பணி விதிகள் இயற்றப்பட்டன. அவர்களது ஓய்வு பெறும் வயது 60 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவர்கள் 1—3—1986 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ. 300 மதிப்பூதியமாகப் பெற்று வருகின்றனர்.

### 3. மாவட்ட வருவாய் நிருவாகம் குறித்த ஒரு நபர் குழு.

மாவட்ட வருவாய் நிருவாகத்தை சீரமைக்க வேண்டுமென்ற கிராம மக்களின் நெடுநாள் ஆவலைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மாவட்ட வருவாய் நிருவாகத்தின் திறனை உயர்த்தி நிருவாகத்தை சீரமைக்கவும் கிராம மக்களின் நலன் கருதி குறைகளை விரைவில் தீர்த்து வைக்கவும் அரசு பலவகையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கென திரு. எஸ். பி. அம்புரோஸ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு 184 பரிந்துரைகளை கொடுத்துள்ளது. அவை பெரும்பாலும் தற்போதுள்ள நடை முறைகளை எளிமைப் படுத்துவது, பயனற்ற பணியை களைவது, கோட்பாடுகளை வகுத்துக்கொண்டு, நேர்வுகளை விரைவில் முடிப்பது.



வசதிகள் செய்து கொடுப்பது,
வருவாய் அலுவலர்களுக்கு திடீரெனச் சென்று
வருவாய்த் துறை அலுவலகங்களுக்கு சோதனையிடுவது,
அங்கு பராமரிக்கப்படும் பதிவேடுகளை வருவாய் அலுவலர்
மாவட்ட ஆட்சியர்களும், மாவட்ட பார்வையிடுவது,
களும் நேரடியாகச் சென்று களப் பணிகளை அலுவலகங்களிலும் சில
வட்ட அலுவலகங்களிலும், கோட்ட ஆட்சியர்களுக்கு ஜீப்
பதவிகளை ஏற்படுத்துவது, வட்ட மாவட்ட வருவாய்
வழங்குவது, மாவட்ட ஆட்சியரும் செலவிடும் காலங்
அலுவலர்களும் சுற்றுப் பயணங்களில் கையகப்படுத்தும்
களை குறைப்பது, நிலவரி மற்றும் நிலத்தை செய்வது, மாவட்ட
முறையில் நடைமுறை மாற்றங்கள், அலுவலர்களுக்கும்,
ஆட்சியர்களுக்கும், மாவட்ட வருவாய் ஆட்சியர்களுக்கும் நிதி
கோட்ட ஆட்சியர்களுக்கும், வட்ட அதிகாரங்களை பகிர்ந்து
மற்றும் நிருவாகம் சம்பந்தமாகவும் இந்த பரிந்துரைகளை
கொடுப்பது சம்பந்தமானது ஆகும். 164 பரிந்துரைகள்
அரசு கவனமாக பரிசீலித்து இதுவரை 20 பரிந்துரை
மீது ஆணை பிறப்பித்துள்ளது. மீதமுள்ள
கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

### 4. வருவாய்த்துறை ஆட்சி வரம்பு.

முக்கிய இடம்
நிர்வாக அமைப்பில் கிராமத்தை அடுத்து ஒரு நபர்க் குழுவின்
வகிப்பது பிர்க்கா (குறுவட்டம்) ஆகும். பிர்க்காக்களின்
(அம்புரோஸ் குழு) பரிந்துரைகளுக்கேற்ப இருந்ததை 1980–81
எண்ணிக்கையை 1977–78-இல் 774 ஆக
இல் 1,098 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அலுவலகம்
2. வருவாய் நிர்வாக அமைப்பில் வட்ட தற்போதுள்ள வட்ட
அதிமுக்கியமான இடத்தை வகிக்கிறது. குறைத்து நிர்வாகத்
அலுவலகங்களின் வேலைப் பளுவைக் துணை
திறனை மேம்படுத்தும் பொருட்டு 33 சார்நிலை வட்டங்களாகத்
வட்டங்கள் 1977–78-ஆம் ஆண்டிலிருந்து ஆண்டில் நீலகிரி
தரமுயர்த்தப்பட்டுள்ளன. 1978–79-ஆம் பிரிக்கப்பட்டு
மாவட்டத்தில் கூனூர் வட்டம் இரண்டாகப் 1985-
கோத்தகிரி என்ற புது வட்டம் அமைக்கப்பட்டது. மாவட்டத்திலிருந்து
ஆம் ஆண்டில் பிரிக்கப்படாத மதுரை பிரிக்கப்பட்டு எஞ்சிய
நிலக்கோட்டை வட்டம் இரண்டாகப் புதிய வட்டம்
மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி என்ற மாநிலத்திலுள்ள வட்டங்
உருவாக்கப்பட்டதன் மூலம் இம் 167-ஆக அதிகரிக்கப்பட்
களின் எண்ணிக்கை 166-லிருந்து
டுள்ளது.

மற்றும் வட்டங்கள்
3. கிராமங்கள், குறுவட்டங்கள் அடுத்து வருவாய்க்
ஆகியவற்றை அதிகப்படுத்தி சீரமைத்ததை என கருதப்பட்டது.
கோட்டங்களையும் சீரமைத்தல் அவசியம் அருப்புக்கோட்டை,
1978 இலிருந்து 1984 வரை நாகர்கோவில்,

கூடலூர், தாராபுரம், கடலூர் மற்றும் திருப்பூர் ஆகிய ஆறு வருவாய்க் கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1985-ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி, அண்ணா மாவட்டத்தில் பழனி மற்றும் கொடைக்கானல் ஆகிய மூன்று வருவாய்க் கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் மூலம் வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கை 1977–78-இல் 48-லிருந்து 1984–85 இல் 57 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

4. வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து 'இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் மற்றும் விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராசர் மாவட்டம் ஆகியவற்றை அமைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. புதிய மாவட்டங்கள் 15—3—1985-லிருந்து செயல்படத் துவங்கியுள்ளன.

5. மூன்று மாவட்டத் தலைமையிடங்களிலும் நவீன நகரங்களை உருவாக்க அரசு முடிவெடுத்ததின் அடிப்படையில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக பெருந்திட்டக் குழு மிகச் சிறந்த திட்டத்தினை தயாரித்து அளித்தது. குழு தயாரித்த பெருந்திட்ட வரைபடங்களை அரசு ஏற்றுக்கொண்டு நிலங்களை கையகப் படுத்துவதற்கான ஆணைகளை வெளியிட்டுள்ளது. மூன்று மாவட்டத் தலைமையிடங்களிலும் கட்டிடங்கள் கட்டுவதற்காக நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடுகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

6. மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட அண்ணா மாவட்டம் அமைப்பதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அப்புதிய மாவட்டம் 15—9—1985 முதல் செயல்படத் துவங்கியுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து அமைக்கப்பட்ட தலைமையிடங்களில் புதிய நகரங்கள் உருவாக்குவது போன்று அண்ணா மாவட்டத்திலும் புதிய கட்டமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

7. திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பது குறித்த அறிக்கையினை வல்லுனர் குழு அரசுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. வட ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தென்னாற்காடு மாவட்டங்கள் குறித்த அறிக்கைகளை வல்லுநர் குழு அரசுக்குச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.



8. அடுத்த கட்டமாக திருநெல்வேலி மற்றும் வட ஆற்காடு மாவட்டங்கலைப் பிரித்து அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. பொதுமக்களின் வசதியைக் கருத்திற் கொண்டு வருவாய் நிர்வாக ஆட்சி வரம்பின் அளவு தொடர்ந்து மறு பரிசீலனை செய்யப்பட்டும் தேவைக்கேற்ப அதில் மாறுதல்கள் செய்யப்பட்டும் வருகின்றன.

5. இயற்கை இடர்பாடுகள்.

பாதக பருவநிலை:

1984-ஆம் ஆண்டு குறைந்த அளவு மழையே பெய்தமையால், அநேக மாவட்டங்களல் சில பகுதிகளில் குடிநீர் பிரச்சினை நிலவியது. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கைகளுக்கும் மற்றும் தலைமைச் செயலர் தலைமையில் நடைபெற்ற உயர் மட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கும் ஏற்ப ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்கள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள பொதுக் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிகளுக்காக அரசு ரூபாய் 100 இலட்சம் தொகையை 12—4—85ல் அனுமதித்தது. இந்த நிதி சென்னை, தஞ்சை மற்றும் நீலகிரி நீங்கலாக 16 மாவட்டங்களுக்கு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் பகிர்ந்தளிக்கப்பட்டு முழுவதும் செலவிடப்பட்டது.

2. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கைகளின்படி இது வரை 16 மாவட்டங்களில் 2,898 பொதுக் கிணறுகள் ஆழப் படுத்தப்பட்டுள்ளன. இராமநாதபுரம், பசும்பொன் முத்து ராமலிங்கம் மற்றும் காமராஜர் மாவட்டங்களில் 504 உறைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

3. மேலும், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, தர்மபுரி மற்றும் பெரியார் ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 635 புதிய குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு அனுமதி வழங்கியது. விருதுநகர் திண்டுக்கல், ராசிபுரம் மற்றும் திருச்செங்கோடு நகராட்சிகளில் 99 குழாய்க் கிணறுகள் அமைக்க அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் இதுவரை 743 குழாய்க் கிணறுகலை அமைத்துள்ளது. அவைகளில் 669 குழாய்க் கிணறுகள் பயன் தருகின்றன.

4. பொதுக் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், புதிய குழாய்க் கிணறுகள் அமைத்தல் ஆகிய பணிகளுடன் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் முதலிய பணிகளுக்கென ரூபாய் 46.60 இலட்சம் நிதியை அரசு அனுமதித்துள்ளது.

5. சமீபத்தில் மதுரை, அண்ணா மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நேரிடையாகச் சென்று நிலைமையை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் ஆய்வு செய்து உள்ளார். மேலும், அவர் மதுரை, அண்ணா, பசும்பொன் முத்து ராமலிங்கம், கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க முதல் கட்டமாக ரூபாய் 80 இலட்சம் அனுமதிக்க பரிந்துரை செய்திருந்தார். இந்த செயற் குறிப்பை அரசு பரிசீலித்து 10—3—1986 அன்று ரூபாய் 40 இலட்சம் அனுமதித்தது. மேற்குறிப்பிட்ட ஐந்து மாவட்டங் களுக்கும் குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க கூடுதலாக தற் போது ரூபாய் 100 இலட்சம் அனுமதிக்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்திருக்கி றார். இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

6. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை அம் மாவட்டத்தில் நிலவிடும் குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் ரூபாய் 140.138 இலட்சம் நிதி அனுமதிக்க கோரியுள்ள செயற்குறிப்பினை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்துள்ளார். செங்கல்பட்டு, வட ஆற்காடு, சேலம், புதுக்கோட்டை, தென் ஆற்காடு மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் நீங்கலாக மீத முள்ள ஏனைய மாவட்டங்களின் குடிநீர், பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக ரூபாய் 628.95 இலட்சம் நிதி அனுமதிக்க வேண்டி ஒரு ஒட்டுமொத்த செயற்குறிப்பை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இந்த இரண்டு செயற்குறிப்புகளும் அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது.

7. மாநிலத்தில் எந்தப் பகுதியிலும் வரும் கோடைகாலங்களில் எழும் குடிநீர்ப் பற்றாக்குறை நிலைமையை திறம்பட சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு துவங்கியுள்ளது.

**வெள்ள நிவாரணப் பணிகள், நவம்பர், 1985 :**

இவ்வருடம் வடகிழக்குப் பருவக்காற்று சிறிது காலதாமத மாகத் தொடங்கியது. அதாவது 1—11—1985-ம் நாள் தொடங்கியது. சென்னை நகரில் 3—11—1985-ம் தேதி மழை ஆரம்பித்தது. வங்கக் கடலில் தென்மேற்குப் பகுதியில் குறைந்த அழுத்தமாக உருவான காற்றழுத்த மண்டலம் புயலாக உருவாகி தமிழ்நாட்டில் மாமல்லபுரத்தில் 13—11—1985 அன்று இரவு 8—30 மணிக்கு கரையைக் கடந்தது. இதன் விளைவாக 11—11—1985 மற்றும் 12—11—1985 ஆகிய இரு தினங்களில் தமிழ்நாட்டில் சென்னை நகர் மற்றும் கடலோரப் பகுதிகளான தஞ்சாவூர், செங்கல்பட்டு, தென்னாற்காடு மற்றும் வடாற்காடு





மாவட்டத்தின் சில பகுதிகளில் பலத்த மழையும் மணிக்கு 55
முதல் 65 கிலோ மீட்டர் வரை சூறைக்காற்றும் வீசியது. இவ்
வாண்டில் 3—11—1985 முதல் 13—11—1985 முடிவான
மிக்க குறைந்த கால அளவான பத்து தினங்களில் மட்டுமே
வழமையாக வடகிழக்குப் பருவக்காற்று காலங்களில் பெறக்
கூடிய மழை அளவைவிட இரண்டு மடங்கு மழை பெய்தது.
செங்கல்பட்டு, தென்னாற்காடு, மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்
களில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களை கணக்
கிட்டுப் பார்த்தாலே மேற்படி வெள்ளத்தின் சீற்றம் எந்த
அளவிற்கு கடுமையாக இருந்தது என்பது விளங்கும்.

**சென்னை நகர் :**

சென்னை நகரில் 1,106 குடிசைப் பகுதிகள் பாதிக்கப்பட்டன.
16 பேர்கள் உயிரிழந்தனர். 11,263 வீடுகள் முழுமையாகவும்,
1,16,117 வீடுகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டன.

**செங்கற்பட்டு மாவட்டம் :**

மதுராந்தகம் ஏரியில் உடைப்பு எடுத்ததால் 20 கிராமங்கள்
பாதிக்கப்பட்டன. சுமார் 7.86 இலட்சம் மக்கள் பாதுகாப்பான
இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டனர். 57 பேர்கள் உயிரிழந்
தனர். 8,698 கால்நடைகள் மடிந்தன. 24,846 வீடுகள்
முழுமையாகவும், 1,12,126 வீடுகள் பகுதியாகவும் சேத
மடைந்துள்ளன.

**தஞ்சாவூர் மாவட்டம் :**

தஞ்சாவூர் மாவட்டத்தில் பரவலாக 1—11—1985 முதல்
11—11—1985 தேதி வரை பலத்த மழை பெய்தது. கடலோரப்
பகுதிகளில், மழையின் வேகம் கடுமையாக இருந்தது. 18 பேர்
கள் உயிரிழந்தனர். 8,705 வீடுகள் முழுமையாகவும், 63,660
வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்தன. 132 கால்நடைகள்
உயிரிழந்தன. 66,658 ஹெக்டேர்ஸ் விஸ்தீரணமுள்ள நெற்
பயிர்கள் வெள்ளத்தினால் சேதமடைந்தன.

**வடாற்காடு மாவட்டம் :**

நெடுஞ்சாலை மற்றும் ஊரகச் சாலைகள் வெள்ளத்தினால்
பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக பல இடங்களில் செய்தித்
தொடர்பு பாதிக்கப்பட்டது. 20 நபர்கள் உயிரிழந்தனர். 568
கால்நடைகள் மடிந்தன. 15,494 வீடுகள் முழுமையாகவும்,
16,592 வீடுகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டன.

தென்னார்க்காடு மாவட்டம் :

இம்மாவட்டத்தில் 9 வட்டங்கள் பாதிக்கப்பட்டன. 3—11—1985 முதல் 13—11—1985 வரை இம்மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்தது. தாழ்வானப் பகுதிகளில் இருந்த மக்கள் பள்ளிக்கூடம் மற்றும் பொது இடங்களுக்கு அப்புறப் படுத்தப்பட்டனர். இம்மாவட்டத்தில் உள்ள தொண்டி ஆற்றின் மேல் உள்ள பாலத்தில் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப் பட்ட தந்தை பெரியார் போக்குவரத்து பேருந்து விபத்தினால் 55 நபர்கள் உயிரிழந்தனர். இம்மாவட்டத்தில் மொத்தமாக 135 பேர்கள் உயிரிழந்தனர். 6,094 கால்நடைகள் மடிந்தன. 14,198 வீடுகள் முழுமையாகவும், 1,02,263 வீடுகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டன.

(i) நிவாரண பணிகள் :

வெள்ளம் மற்றும் புயல், நலிவுற்ற பிரிவினருக்கு சொல்லொணாத் துயரத்தை ஏற்படுத்துகிறது. மத்திய அரசு இப்பிரச்சினையில் மிகுந்த கவனத்தை செலுத்தி வருகிறது. இயற்கை இடர்கள் வருவதற்கு முன்னரும் வந்த பின்னரும், எடுக்க வேண்டிய நிவாரண நடவடிக்கைகளுக்கு தகுந்த திட்டம் உள்ளது. 12—11—1985 அன்று பிற்பகல் 12-30 மணி அளவில் அரசு தலைமைச் செயலாளர் உயர்மட்ட அளவில் துறைத் தலைவர்களை அழைத்து ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அத்தியாவசிய பொருட்களைச் சேகரித்து வைப்பதற்கு மாவட்டாட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள். நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செயலாக்க அரசு இயந்திரத்தினை விழிப்புடன் இருக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. விமானப்படை மற்றும் கப்பற்படை ஹெலிகாப்டர் மூலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டது. தாழ்வான பகுதிகளில் இருந்த மக்களை அப்புறப் படுத்தி பள்ளிக்கூடங்கள் மற்றும் சத்துணவு மையக்கட்டிடங்களில் அமர்த்தப்பட்டார்கள். அவர்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நடமாடும் மருத்துவக் குழுக்கள் தேவையான மருந்துகளுடன் அனுப்பப் பட்டன. இலவச அரிசி, மண்ணெண்ணெய் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு சேலை, வேட்டி வழங்கப்பட்டது.



நிதி ஒதுக்கீடு :

நவம்பர் 1985-ல் ஏற்பட்ட வெள்ளத்தினாலும், வீசிய புயலினாலும் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிட தில்லியிலிருந்து மத்திய குழு, '22—11—1985-லிருந்து 25—11—1985 வரை முகாமிட்டது. தமிழ்நாடு அரசு ரூபாய் 6,681.40 இலட்சம், வெள்ள நிவாரணப் பணிகளுக்காக பல துறைத் தலைவர்களுக்கும் மற்றும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சியர்களுக்கும் வழங்கியுள்ளது. அதன் விபரம் வருமாறு :—

| | துறையின் பெயர். | ஒதுக்கீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர்கள் .. .. .. | 1,784.69 |
| 2. | தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள்). | 1,228.86 |
| 3. | தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) .. | 900.00 |
| 4 | தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) .. | 80.00 |
| 5 | தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலைகள்). | 70.08 |
| 6 | சென்னை மாநகராட்சி .. .. .. | 1,515.44 |
| 7 | நகராட்சி நிர்வாக இயக்குநர் .. .. | 234.92 |
| 8 | பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநர். | 30.00 |
| 9 | இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் துறை .. | 0.05 |
| 10 | சமூகநலத்துறை இயக்குநர் .. .. .. | 118.17 |
| 11 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை இயக்குநர். | 5.20 |
| 12 | கைத்தறித்துறை இயக்குநர் .. .. .. | 27.51 |
| 13 | ஊரகத்துறை இயக்குநர் .. .. .. | 30.09 |
| 14 | தொழில் வணிகத் துறை இயக்குநர் .. .. | 100.00 |
| 15 | மின்சார வாரியம் .. .. .. | 100.00 |
| 16 | வேளாண்மைத்துறை இயக்குநர் .. .. | 127.60 |
| 17 | எண்ணெய் வித்துத்துறை இயக்குநர் .. | 10.00 |
| 18 | தோட்டக்கலைத் துறை இயக்குநர் .. .. | 5.00 |
| 19 | தலைமைப் பொறியாளர் (விவசாயப் பொறியியல்.) | 10.65 |
| 20 | கால்நடைத் துறை இயக்குநர் .. .. | 35.89 |

| துறையின் பெயர். | ஒதுக்கீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 21 டேப்கோ மற்றும் தமிழ்நாடு மாமிசக் கழகம் .. | 10.00 |
| 22 மீன்வளத் துறை இயக்குநர் .. .. .. | 16.57 |
| | 100.00 |
| 23 வீட்டு வசதி வாரியம் .. .. .. .. | 24.62 |
| 24 குடிநீர் வடிகால் வாரியம் .. .. .. | 25.15 |
| 25 சென்னை மாநகர குடிநீர் வாரியம் .. .. | 80.00 |
| 26 தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் .. .. | 4.00 |
| 27 தமிழ்நாடு உப்பு உற்பத்திக் கழகம் .. .. | 7.00 |
| 28 காதி மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் .. | |
| மொத்தம் .. | 6,681.40 |

(ii) புயல் பாதுகாப்பு இல்லம் :

புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதுகாக்கப்பட்ட
கடலோர வாழ் மக்களுக்காக அரசு இதுவரை 110 புயல் பாது
காப்பு இல்லங்கள் கட்ட உத்திரவிட்டுள்ளது. 50 இல்லங்கள்
ஐரோப்பிய பொருளாதார உதவி முதல் கட்டமாக அரசு அனு
மதித்துள்ளது. 25 இல்லங்கள் இந்திய செஞ்சிலுவை சங்க
உதவியுடனும், 5 இல்லங்கள் மகாராஷ்டிர அரசின் உதவியுடனும்,
2 இல்லங்கள் யூனிசெப் உதவியுடனும் கட்ட உத்திரவிட்டுள்ளது.
கூடுதலாக 20 இல்லங்கள் ஐரோப்பிய பொருளாதார உதவியில்
இரண்டாவது கட்டமாக கட்ட உத்திரவிடப்பட்டுள்ளது. அரசு
மேலும் 8 இல்லங்கள் பிரதமர் நிதியிலிருந்து கட்ட உத்திரவிடப்
பட்டுள்ளது. மேற்கூறிய 110 இல்லங்களில் இதுவரை 81 புயல்
பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

2. புயல் பாதுகாப்பு இல்லங்கள் அதிகமாக கடற்கரை ஓரங்
களில் அரசு கட்டிடமோ அல்லது பள்ளிக்கூடமோ இல்லாத
இடங்களில் அமைந்துள்ளது. முக்கியமான மருத்துவ முதல்
உதவி வசதிகள், பொது சமையலறை மற்ற தானிய வகைகள்
வைக்க வசதிகள் கழிவறை வசதிகள் புயல் பாதுகாப்பு இல்லங்
களில் உள்ளது. இவை வெள்ளக் காலத்திலும் உபயோகமாக
உள்ளது. பருவமழை இல்லாத காலங்களில் இவ்வில்லங்கள் சமூக
ஊழியம் பொதுமக்களுக்கு மருத்துவ இல்லம் மற்றும் தையல்
வகுப்பு நடத்த உபயோகப்படுத்தப்படுகிறது. இவை அரசு உத்
திரவுடன் வாடகை பெற்று நடைபெற்று வருகிறது.



## தீ விபத்து

பொதுவாக தீ விபத்து எளியவர்கள் வசிக்கும் குடிசைப்
பகுதிகளில் ஏற்படுவதால், பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும்
ஏழைகள். அவர்களுக்கு தங்களது வீடுகளைத் திரும்பக் கட்ட
அரசு உதவி உடனடியாகத் தேவைப்படுகிறது.

2. தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுடைய குடிசை முழு
மையாகப் பாதிக்கப்பட்டிருப்பின் ரூபாய் 300-ம், பகுதி பாதிக்கப்
பட்டிருப்பின் ரூபாய் 150-ம் தருவதற்கு, பாதிக்கப்பட்டவரின்
குடும்ப மாத வருமானம் ரூபாய் 200 அல்லது அதற்குக் கீழே
இருத்தல் வேண்டும். இத்துடன் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட
ஒவ்வொரு குடும்பமும் இலவசமாகத் தரப்படும் 5 கிலோ அரிசி,
1 லிட்டர் மண்ணெண்ணெய் (சில விதிமுறைகளுக்கு உட்பட்டு)
மற்றும் 1 வேஷ்டி அல்லது லுங்கி மற்றும் 1 புடவை அடங்கிய
ஒரு ஜோடி துணி வகைகள் பெறுவதற்கு தகுதியுடையதாகும்.

3. தீ விபத்தில் உயிரிழப்போரின் நேர்வில் அக்குடும்பத்தின்
வாரிசுதாரருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து
ரூபாய் 2,000 வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது.

6. நிலமற்ற ஏழை மக்களுக்கு பயிரிடத்தக்க நிலம் ஒப்படை செய்தல்.

நேரடியாகப் பயிர்த் தொழிலில் ஈடுபடக் கூடிய நிலமற்ற
ஏழை மக்களுக்குப் பயிரிடத்தக்க தரிசு நிலங்கள் இலவசமாக
ஒப்படை செய்யப்படுகின்றன. ஐந்து நபர்களோ அல்லது அதற்குக்
குறைவாகவோ உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்
றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக வருமானமிருப்
பின் அவர் ''ஏழை'' எனக் கருதப்படுகிறார். அவ்வாறே, ஒரு
குடும்பத்தில் 5 நபர்களுக்கு மேல் இருப்பின் அக்குடும்பத்தின்
மாத வருமானம் ரூ. 250 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால்
குடும்பத் தலைவர் ''ஏழை'' என்று கருதப்படுகிறார்.

2. பயிரிடத்தக்க நிலங்கள் தகுதியுள்ளவர்களுக்கு பின்
வரும் முன்னுரிமை அடிப்படையில் ஒப்படை செய்யப்படுகின்றன.

(1) போரில் வீர மரணம் அடைந்த அல்லது இயலாமை
யுற்ற, எல்லைப் பாதுகாப்புப் படையினர், பிரதேச இராணுவட்
படையினர் ஆகியோர் உட்பட முன்னாள் இராணுவத்தினரின்
குடும்பங்களுக்கு ;

(2) நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடி
யினருக்கும்.

(2-அ) உரிமையாளராகவோ அல்லது குத்தகைதாரராகவோ நேரடியாகப் பயிரிட்டு வருபவர்களின் நிலங்கள், பொதுக் காரியத்திற்காகக் கையகப்படுத்தப்பட்டதனால் அவர்கள் வைத்திருந்த நிலத்தின் அளவு 3 ஏக்கர் புன்செய் நிலத்தை அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலத்தை விடக் குறைந்து போயிருந்தால் அவர்களுக்கும் நிலம் ஒதுக்கப்படுகிறது. அவ்வாறு, கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு ஒதுக்கப்படும் நிலத்தின் மதிப்பு அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

(2-ஆ) 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டத்தின் (மத்திய சட்டம் 19/1976)-ன்படி கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ;

(3) முன்னாள் துப்பாக்கிப் படையினர், அசாம் எல்லைப் பாதுகாப்பு முன்னாள் படையினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் மற்றும் அவர்களது விதவைகள்.

(4) பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாய் நாட்டிற்குத் திரும்பி வந்தவர்கள்.

(5) தங்கக் கட்டுப்பாடு ஆணையின் காரணமாக பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் ;

(6) ஏனைய நிலமற்ற ஏழைகள்;

(7) விடுவிக்கப்பட்ட சிறைக்கைதிகள்.

3. பயிரிடுவதற்காக நிலம் ஒப்படை செய்யப்படுவதில் மேற்கூறிய முன்னுரிமை வரிசைப்படி, போரில் வீர மரணமடைந்த அல்லது இயலாமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர், பிரதேச இராணுவத்தினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களுக்கு அடுத்த உயர் முன்னுரிமை நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள் பழங்குடியினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

4. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப் பரப்பும் சேர்த்து மொத்தம் 3 ஏக்கர் புன்செய் நிலமாக அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலமாக உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் விலை அதிகமானதால், அங்கு ஒருவருக்கு உயரளவு புன்செய் நிலமாயிருந்தால் ஒரு ஏக்கர் புன்செய் நிலமோ நன்செய் நிலமாயிருந்தால் அரை ஏக்கர் நன்செய் நிலமோ ஒப்படை செய்யப்படுகின்றன.



5. பயிரிடத்தக்க தரிசு நிலங்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. நிலம் ஒப்படை செய்யப் பட்டவர், அவ்வாறு நிலம் ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குள் ஒப்படை நிலத்தில் பயிர் செய்ய வேண்டும். 10 ஆண்டு காலத்துக்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி உரிமை மாற்றம் செய்யவோ கூடாது. ஆனால், பயிரிடுவதற்காக கடன் வாங்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கலாம். நிலம் ஒப்படை செய்யப்பட்டவரே நிலத்தைப் பயிரிட வேண்டும் அல்லது அவருடைய குடும்ப உறுப்பினரோ கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளரோதான் அந்த நிலத்தைப் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தைப் பயிரிடக் கூடாது.

6. 1—4—1985 முதல் 31—3—1986 வரை பயனடைந் தோரின் எண்ணிக்கையும், ஒப்படை செய்யப்பட்ட பயிரிடத் தக்க தரிசு நிலங்களின் பரப்பையும் காட்டும் விவர அறிக்கை பின்வருமாறு :—

1—4—1985 முதல் 31—3—1986 வரை பயனடைந்தோரின் எண்ணிக்கையும், ஒப்படை செய்யப்பட்ட பயிரிடத்தக்க தரிசு நிலங்களின் பரப்பையும் காட்டும் விவர அறிக்கை.

| வரிசை எண்ணும், மாவட்டமும். | ஆதி திராவிடர்/ பழங்குடியினர். | மற்றவர்கள். | பரப்பு. | பரப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | ஏக். செ. | ஹெக்.ஏர். |
| 1 செங்கற்பட்டு .. .. | 223 | 430 | 641.90 | 259.77.5 |
| 2 வடாற்காடு .. .. | 558 | 147 | 1,013.64 | 410.22.0 |
| 3 தென்னாற்காடு .. .. | 160 | 305 | 200.07 | 80.97.0 |
| 4 திருச்சிராப்பள்ளி .. .. | 132 | 158 | 444.65 | 179.95.0 |
| 5 தஞ்சாவூர் .. .. .. | .. | 36 | 10.24 | 4.14.5 |
| 6 மதுரை .. .. .. | 9 | 223 | 543.06 | 219.77.5 |
| 7 இராமநாதபுரம் .. .. | 4 | .. | 4.00 | 1.62.0 |
| 8 திருநெல்வேலி .. .. | 99 | 283 | 629.48 | 254.75.0 |
| 9 கோயம்புத்தூர் .. .. | 8 | 7 | 25.07 | 10.14.5 |
| 10 சேலம் .. .. .. | 48 | 330 | 696.22 | 281.76.0 |
| 11 தருமபுரி .. .. .. | 17 | 312 | 480.70 | 194.54.0 |
| 12 நீலகிரி .. .. .. | .. | .. | .. | .. |
| 13 புதுக்கோட்டை .. .. | .. | 115 | 87.19 | 35.28.5 |
| 14 பெரியார் .. .. .. | 9 | 3 | 12.02 | 4.86.5 |
| 15 கன்னியாகுமரி .. .. | .. | 128 | 37.38 | 15.13.0 |
| 16 காமராஜர் .. .. .. | 14 | 114 | 136.64 | 55.30.0 |
| 17 பசும்பொன் முத்துராமலிங்கம் .. | 432 | 707 | 818.35 | 331.18.0 |
| 18 அண்ணா .. .. .. | 2 | 58 | 116.26 | 47.05.0 |
| மொத்தம் .. | 1,715 | 3,351 | 5,896.87 | 2,386.46.0 |

[1986 ஏப்ரல் 28

## 7. வீட்டுமனை ஒதுக்குதல்

வீட்டு மனைகள் ஒதுக்குத் திட்டம், நத்தம் மற்றும் ஏனைய புறம்போக்குகளில் ஆட்சேபனையற்ற ஆக்கிரமிப்புகளை முறைப் படுத்துவதின் மூலமாக பரந்த அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ''ஏழை'' என்ற சொல்லின் பொருள் பயிரிடத்தக்க தரிசு நிலங்களுக்கு பின்பற்றப்படுகிறபடியே வீட்டு மனைகளுக்கும் பின்பற்றப்படுகிறது. வீட்டு மனைகள் கீழ்க்கண்ட முன்னுரிமையின் அடிப்படையில் ஒப்படை செய்யப்படுகின்றன :—

1. போரில் வீர மரணமடைந்த அல்லது இயலாமையில் உள்ள இராணுவ வீரர்களின் குடும்பங்கள் நாட்டு எல்லைப் பாதுகாப்பு படையினரும், பிராந்திய இராணுவப் படையினரும் இதில் அடங்குவர்.

1. (அ) சுதந்திரப் போராட்ட வீரர்களும் அவர்களின் சட்டபூர்வமான வாரிசுதாரர்களும்.

2. நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர்.

(ஆ) 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 19/1976) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்.

3. போர் முனைகளில் பணியாற்றுவோர் ; இதில் எல்லை பாதுகாப்புப் படையினரும் அடங்குவர்.

4. முன்னால் இராணுவ வீரர்கள், இதில் முன்னாள் எல்லைப் பாதுகாப்புப் படையினரும் அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினரும் அடங்குவர்.

5. பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்கள்.

6. தங்கக்கட்டுப்பாடு ஆணையினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள்.

7. நிலமற்ற பிற ஏழைகள்.

வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ள அனைத்து மக்களுக்கும் வீட்டுமனைகள் வழங்க வேண்டும் என்று சுதந்திர தின விழாவில் (15—8—1984) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க ஒரு குடும்பத்தின் மொத்த ஆண்டு வருமானம் ரூ. 3,500-க்கு குறைவாக இருந்தால் அத்தகைய குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்களாக கருதப்பட்டு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய



1986 ஏப்ரல் 28]

நகரங்கள் தவிர பிற இடங்களில் 30–6–1984 வரையுள்ள ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைகள்வழங்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பெரிய நகரங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவது பற்றிய செயற் குறிப்பு ஆய்வில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1986ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் வரை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு 1,08,319 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தவிர இருபது அம்சத் திட்டத்தின் [பிரிவு 9(அ)] கீழும், வீட்டுமனை ஒப்படை செய்யப்பட்டு வருகிறது. 1985ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ஒன்றாம் நாளிலிருந்து 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள்வரை 1,79,400 வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட 83,414 வீட்டு மனைகளும், பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட 4,032 வீட்டு மனைகளும், இதில் அடங்கும். அதன் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண்ணும், மாவட்டமும். | ஆதிதிராவிட இனத்தவர். | மலைவாழ் இனத்தவர். | மற்றவர். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 செங்கல்பட்டு .. .. .. | 2,916 | 16 | 1,748 | [illegible] |
| 2 வட ஆற்காடு .. .. | 14,139 | 681 | [illegible] | 20,376 |
| 3 தென் ஆற்காடு .. .. | 3,436 | 2,321 | 2,460 | 8,217 |
| 4 திருச்சிராப்பள்ளி .. .. | 27,033 | 40 | 25,435 | 52,508 |
| 5 தஞ்சாவூர் .. .. | 4,514 | .. | 5,243 | 9,757 |
| 6 மதுரை .. .. .. | 4,752 | 141 | 16,719 | 21,612 |
| 7 இராமநாதபுரம் .. .. | 1,220 | 21 | 3,621 | 4,862 |
| 8 திருநெல்வேலி .. .. | 6,392 | .. | 6,600 | 12,992 |
| 9 கோயம்புத்தூர் .. .. .. | 4,443 | 29 | 2,447 | 6,919 |
| 10 சேலம் .. .. .. | 5,248 | 564 | 2,556 | 8,368 |
| 11 தர்மபுரி .. .. .. | 535 | 19 | 2,818 | 3,372 |
| 12 நீலகிரி .. .. .. | 728 | 195 | 534 | 1,457 |
| 13 புதுக்கோட்டை .. .. | 680 | [illegible] | 4,573 | 5,259 |



| | | | | |
|---|---|---|---|---|
| 14 பெரியார் .. .. .. | 3,966 | .. | 275 | 4,241 |
| 15 கன்னியாகுமரி .. .. | 9 | 5 | 297 | 311 |
| 16 காமராஜர் .. .. .. | 3,135 | .. | 3,809 | 6,944 |
| 17 அண்ணா .. — — | 268 | .. | 1,803 | 2,071 |
| 18 பசும்பொன் முத்துராமலிங்கம் .. | .. | .. | 5,461 | 5,461 |
| மொத்தம் .. | 83,414 | 4,032 | 91,954 | 1,79,400 |

[1986 ஏப்ரல் 28

சென்னை மாநகரத்தில் குடிசைப்பகுதி மேம்பாட்டுச் சட்டத்
தின்கீழ் அறிவிக்கையிடப்படாத பல்வேறு குடிசைப் பகுதிகளில்
உள்ள குடிசைகள் ஆக்கிரமிப்பு முறைப்படுத்தல் பற்றிய பிரச்
சினையை அரசு பரிசீலித்து, சென்னை மாநகரத்தில் ஆங்காங்கே
விரவிக் கிடக்கின்ற ஆட்சேபனையற்ற குடிசைப் பகுதிகளைத்
தவிர ஏனைய எல்லாக் குடிசைப் பகுதிக்கும் தமிழ்நாடு குடிசைப்
பகுதி மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் மேம்படுத்துவதற்காக
அறிவிக்கையிடப்படவேண்டுமென்றும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்
களை விலை ஏதுமின்றி குடிசைமாற்று வாரியத்திடம் ஒப்படைக்க
வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. குடிசை மாற்று
வாரியம் இப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு
அனுபோகதாரரிடமிருந்து மனை ஒன்றுக்கு ரூ. 7,700-ம் மேம்
பாட்டுச் செலவு ஏதேனுமிருந்தால் அதனையும் பெற்றுக்கொண்டு
குத்தகைப் பத்திரம் எழுதிக்கொடுக்கும். நிலத்தின் பரப்பு
750 சதுர அடிக்கு அதிகமாயிருந்தால், உயர் அளவு. அரையனை
என்ற வரையறைக்குட்பட்டு, அந்த இடம் எப்படி உள்ளதோ
அதே நிலையில் கொடுத்துவிடுவது என்ற அடிப்படையில் நில
ஒப்படை செய்யப்படும். தமிழ்நாடு குடிசைப் பகுதி மேம்பாட்டுச்
சட்டத்தின் கீழ் மேம்படுத்துவதற்காக அறிவிக்கையிடப்படா
ததும், ஆட்சேபனையற்றதும் ஆங்காங்கே விரவிக் கிடப்பது
மான ஆக்கிரமிப்புகளை பொறுத்த வரையில் மனை ஒன்றுக்கு
ரூ. 7,700 வசூலித்து வீட்டுமனை ஒப்படை செய்யப்படும். மனை
யின் உச்சவரம்பு 750 சதுர அடியாக இருக்கும். வீட்டுமனை
பட்டா பெற்ற அனைவருக்கும் ஜாதி, இன வேறுபாடின்றி
தேசிய வங்கிகளில் ஒப்படை செய்த வீட்டுமனையை அடமானம்
வைத்து வீடு கட்டுவதற்குத் தேவையான பணத்தை கடனாகப்
பெறுவதற்கு அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

''வீட்டுக்கு ஒரு மரம் வளர்த்தல்'' திட்டத்தை செவ்வனே
செயல்படுத்துவதற்காக அரசு நிலங்களில் வீட்டுமனை அளிக்கப்
பட்ட ஒவ்வொருவரும் வீட்டின் முன் பக்கத்தில் அல்லது புறக்
கடையில் குறைந்தது ஒரு மரமாவது வளர்க்க வேண்டும் என்ற
நிபந்தனை கொண்டு வரப்பட்டுள்ளது.

8. வளர்ச்சியை ஊக்குவிக்க அளிக்கப்பட்ட அரசு நிலங்கள் :

19 அரசு நிறுவனங்களுக்கும் மற்றும் இதர நிறுவனங்
களுக்கும் உரிமை மாற்றம் செய்ய அரசு ஆணைகள் பிறப்பித்
துள்ளது. அவற்றுள் கீழ்க்கண்ட நிறுவனங்கள் குறிப்பிடத்
தக்கவைகளாகும் :—

1. பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டம், சிவகெங்கை
வட்டம், கண்ணாயிருப்பு மற்றும் மாத்தூர் கிராமங்களில்
திருச்சி எஸ். பி. சர்க்கரை நிறுவனத்தினர் சர்க்கரை ஆலை
நிறுவ 18.57 ஏக்கர் நிலத்தை நிலக்கிரயம் மற்றும் இதர கிரயங்
களை வசூல்த்துக்கொண்டு நிலஉரிமை மாற்றம் செய்வதற்காக.



1986 ஏப்ரல் 28]

2. சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வெள்ளக்கல்பட்டி
கிராமம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 110/22 கி.வா.
சப்-ஸ்டேஷன் அமைக்க 10.95 ஏக்கர் நிலத்தில் உரிமை மாற்ற
ஆணையை எதிர்நோக்கி தமிழ்நாடு மின்சார வாரியம் முன்
நுழைய அனுமதி வழங்கப்பட்டது.

3. கூட்டு கிராம வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர்
மேம்பாட்டிற்காக பல்வேறு பயிற்சிப் பிரிவுகள் நிறுவ தமிழ்
நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்
கோரும் நிலங்களை நிலக்கிரயமின்றி அக்கழகத்திற்கு ஒப்படை
செய்ய ஆணையிடப்பட்டது.

4. தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம்,
வி. மங்களம் கிராமம், நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனுக்கு
இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கும் 630 மெகா வாட்
தெர்மல் பவர் நிலையம் அமைப்பதற்கும் 96.96.0 ஹெக்டேர்
நிலங்களை நிலக்கிரயம் வசூலித்துக்கொண்டு நில உரிமை
மாற்றம் செய்வதற்காக.

5. தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம்,
கூனங்குறிச்சி கிராமத்தில் இரண்டாம் சுரங்கம் வெட்டுக்காக
நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு 10.99.5 ஹெக்டேர்
நிலத்தை நிலக்கிரயம் மற்றும் இதரக் கட்டணங்களை வசூ
லித்துக் கொண்டு உரிமை மாற்றம் செய்வதற்காக.

6. சென்னை மாவட்டம், மைலாப்பூர் வட்டம், மற்றும்
கிராமத்தில் குச்சுப்புடி ஆர்ட்ஸ் அகடமி நிறுவனத்திற்கு நாட்டிய
பள்ளி அமைக்க 5 மனை நிலத்தை நிலக்கிரயம் வசூலித்துக்
கொண்டு நில உரிமை மாற்றம் செய்வதற்காக.

7. செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அச்சரப்
பாக்கம் கிராமம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு
இணையம் லிமிடெட்டிற்கு குளிர்பதன மையம் அமைப்பதற்
காக 9.29 ஏக்கர் நிலத்தை நிலக்கிரயம் மற்றும் இதரக்
கட்டணங்களை வசூலித்துக்கொண்டு நில உரிமை மாற்றம்
செய்வதற்காக.

9. மத்திய அரசின் துறைகளுக்கு மாற்றப்பட்ட அரசு நிலங்கள்.

மாநிலத்தின் பொருளாதார நிலைமையை மேம்பாடு
செய்யும் வகையில் மத்திய அரசு பல துறைகளுக்கும் நிறுவனங்
களுக்கும் நிலமதிப்பைப் பெற்றுக்கொண்டும், சில சமயங்களில்
தொகை ஏதும் பெறாமலும் மாநில அரசு நிலங்களை ஒதுக்கி
வருகிறது.

[1986 ஏப்ரல் 28

2. மத்திய அரசின் பணிகளுக்காக , அதன் பல்வேறு துறைகளுக்கு மாற்றப்பட்ட மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்ட மாநில அரசின் நிலங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| தொடர் என்னும் மாற்றப்பட்ட அரசு நிலம் பற்றிய விவரங்களும். (1) | துறையும், எந்நோக்கத்திற்காக நிலம் மாற்றப்பட்டது என்பதும். (2) | நிலம் மாற்றப்பட்ட அரசாணை என்னும் பிறப்பிக்கப்பட்ட நாளும். (3) |
|---|---|---|
| 1 சென்னை மாவட்டம், கோட்டை தண்டையார்பேட்டை வட்டம், வேப்பேரி கிராமத்தில் 1803 ஆம் எண் நி.அ. புலத்தில் 0.38 ஏக்கர் நிலம். | கடற்படைத் துறைக்கு சாலை அமைக்க 10 ஆண்டு காலத்திற்கு நிலம் குத்தகைக்கு வழங்கப்பட்டது. | வருவாய்த்துறையின் 14-10-85 நாளிட்ட 1441 ஆம் எண் அரசாணை. |
| 2 காமராஜர் மாவட்டம், சாத்தூர் வட்டம், திருத்தங்கல் கிராமத்தில் 885/3 ஆம் எண். நி.அ. புலத்தில் 3.50 ஏக்கர் நிலம். | மத்திய ஆயத்துறையின் துணை ஆட்சியர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலக கட்டிடம் கட்டுவதற்காக நில மதிப்பு வசூலிக்கப்பட்டு, அத்துறைக்கு நிலம் மாற்றப்பட்டது. | வருவாய்த் துறையின் 29-1-1986 நாளிட்ட 85 ஆம் எண் அரசாணை. |

3. ஸ்ரீஹரிகோட்டாவில் செயற்கைக்கோள் ஏவுதளத்திற்காக "அபாய இடம்" அமைப்பதற்காக மத்திய அரசின் விண்வெளி ஆராய்ச்சித் துறையிடமிருந்து நில மதிப்பை வசூலிப்பதன்பேரில், செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி வட்டம், கரிமணல் கிராமத்தில், புறம்போக்கு நிலங்களை அத்துறைக்கு மாற்றுவதற்கு 1982 ஆம் ஆண்டு மே திங்களில் அரசு ஆணையிட்டது. தேவையான நடைமுறைகளை அனுசரித்த பின்னர், ஸ்ரீஹரிகோட்டா ஆராய்ச்சித் திட்டத்திற்காக ( SHAR ) 1,683.25 ஏக்கர் புறம்போக்கு நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4. விரைவு போக்குவரத்துத் திட்டத்திற்காக இரயில்வே துறையினருக்கு சென்னை மாநகரில் 18 எக்டேர் 60 ஏர் 15 ச.மீ. பரப்பளவுள்ள நிலத்தினை இலவசமாக நிலமாற்றம் செய்து 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசு ஆணையிட்டது.



1986 ஏப்ரல் 28]

5. கரூரிலிருந்து திண்டுக்கல்வரை அகல இருப்புப் பாதை போடுவதற்காக திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் 22.57 எக்டேர் புறம்போக்கு நிலங்களை மாற்றிக் கொடுக்குமாறு தெற்கு இரயில்வே கேட்டுக்கொண்டதை இவ்வரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

## 10. பொதுமக்கள் தொடர்புத் திட்டம்.

மனுநீதித் திட்டம் மற்றும் குறைதீர்க்கும் நாள் என அழைக்கப்படும் மக்கள் தொடர்பு திட்டம் 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் திருத்தி அமைக்கப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் [மாவட்ட வருவாய் அதிகாரிகள்] வருவாய் கோட்ட அதிகாரிகள் ஆகியோரிடம் மட்டுமே மனுநீதித் திட்டத்தை நடத்தும் பொறுப்பு விடப்பட்டுள்ளது. மேலும், கோட்ட அதிகாரிகள், தங்களது அதிகார வரம்பின்கீழ் வரக்கூடிய ஒவ்வொரு வட்டத்திலுமுள்ள ஒரு கிராமத்தில், ஒவ்வொரு மாதமும் மனுநீதித் திட்டத்தை நடத்தவேண்டும். மாவட்ட வருவாய் அதிகாரியும், மாவட்ட ஆட்சித் தலைவரும், ஒவ்வொரு கோட்டத்திலும் சுழல் முறையில் கூட்டம் நடத்த வேண்டும். இத்திட்டத்தில் முதல் கட்டப் பணியாக, அதிகாரி ஒருவரை மனுநீதித் திட்டம் நடத்த நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு ஆறு வாரத்திற்கு முன்னதாக, முன்னறிவிப்புடன் சம்பந்தப்பட்ட கிராமத்திற்கு அனுப்பி, பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று இவ்வாறு பெறப்பட்ட மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகிறது. இரண்டாவது கட்டப் பணியாக, சம்பந்தப்பட்ட அதிகாரி, மனுக்கள் அனுப்பப்பட்ட துறை அதிகாரிகளுடன் நிர்ணயிக்கப்பட்ட நாளன்று கிராமத்திற்குச் சென்று, ஒவ்வொரு மனு குறித்தும் இறுதி ஆணை பிறப்பிக்க வேண்டும். இவற்றின் முடிவு, மனுநீதித் திட்ட நாளன்று பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

### குறை தீர்க்கும் நாள் :

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கோட்ட அதிகாரிகள், வட்ட ஆட்சியர் ஆகியோர் தங்களது தலைமை இடங்களில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மனுதாரர்களுக்குப் பேட்டியளித்து மனுக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ; மற்றும் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் மனுக்கள்மீது, "குறைகள் குறித்து அளிக்கப்படும் மனு" என்று முத்திரையிடப்பட்டு அவை குறித்து உரிய வகையில் உரிய நேரத்தில் முடிவெடுப்பதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

[1986 ஏப்ரல் 28

11. தண்ணீர் கட்டண விதங்கள்.

இம்மாநிலத்திலுள்ள நிலங்கள் பொதுவாக நன்செய், புன்செய் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. மண்வளம் வேளாண்மை விளைபொருட்களின் விலை, அண்மையிலுள்ள பாசன வாயில்கள் ஆகியவை போன்றவற்றின் அடிப்படையில் 'நன்செய்' 'புன்செய்' நிலங்களுக்கு தண்ணீர் தீர்வை நிர்ணயிக்கப்படுகிறது. நன்செய் நிலங்களுக்கு விதிக்கப்படும் வரியில் ஒரு பகுதி தண்ணீர் தீர்வையாகும். அரசு நீர்ப்பாசன ஆதாரங்கள் வாயிலாக பாசனம் பெறும் புன்செய் நிலங்களைப் பொறுத்தமட்டில், அந்நிலங்களுக்கு விதிக்கப்படும் நிலவரியுடன் தண்ணீர் தீர்வையும் கூடுதலாக விதிக்கப்படுகிறது. தர வீதங்கள் அடிப்படையில் தண்ணீர் தீர்வை விதிக்கப்படுகிறது. இது பாசன வாயில்களின் வகையைப் பொறுத்து வேறுபடுகிறது. பெரிய பாசனத் திட்டங்கள், நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மற்றும் சிறப்புச் சிறுபாசனத் திட்டப் பணிகளினால், பாசனம் பெறும் பகுதிகளில் தனித் தண்ணீர் தீர்வை விதங்கள் நடைமுறையில் உள்ளன.

2. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் தீர்வை சட்டத்தின்கீழ் கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி முறையே நன்செய் நிலங்கள் இதர நிலங்களின்மேல் விதிக்கப்படுகின்றன.

3. மாநிலத்திலுள்ள தண்ணீர்த் தீர்வை வித அமைப்பு முழுவதையும் சீரமைப்பதுபற்றி ஆராய அரசு அமைத்த குழு தனது அறிக்கையை அரசிடம் 1979 ஆம் வருடம் அளித்தது. அக்குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்தது. அக்குழுவின் பரிந்துரைகள் பெற்ற பிறகு தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் அரசு விவசாயிகளுக்கு அளித்துள்ள பல சலுகைகளையும் கருத்திற்கொண்டு அதன் விளைவுகளை ஆராய்ந்து அறிக்கையை ஆறு மாதங்களுக்குள் சமர்ப்பிக்க ஒரு நபர் குழுவினை அரசு நியமித்தது. குழுவின் நடவடிக்கை காலம் 8-7-1986 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. குழுவின் இறுதி அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்பு அவற்றின்மீது முடிவு எடுக்கப்படும்.

12. வேளாண்மை வருமான வரி.

தமிழ் நாட்டில் வேளாண்மை வருமான வரி 1955 ஆம் ஆண்டிலிருந்து செயலிலுள்ளது. 1955 ஆம் ஆண்டு சென்னை மலைத்தோட்ட வேளாண்மை வருமான வரிச் சட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டபோது, காபி, தேயிலை, ரப்பர், ஏலக்காய், சின்கோனா போன்ற மலைத்தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட்டது. 1958



1986 ஏப்ரல் 28]

ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதிலும் மலைத் தோட்டம் அல்லாத பயிர்களுக்கு வேளாண்மை வருமான வரி விதிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது வரி விலக்கு வரம்பு ரூ. 10,000 ஆகும். வரி இணக்கத் திட்டத்தின்படி வரிவிலக்கு வரம்பு 20 தர ஏக்கர் ஆகும். மலைத் தோட்டப் பயிரைப் பொறுத்தவரை 100 தர ஏக்கர் வரை வரி இணக்க வசதி அளிக்கப்படுகிறது. மலைத் தோட்டப் பயிரல்லாத ஏனைய பயிர்களுக்கு அத்தகைய வரம்பு ஏதுமில்லை. தர ஏக்கர் என்பது அந்நிலத்தில் பயிரிடப்படும் பயிரின் தன்மையை பொறுத்து கணிக்கப்படுகின்றது.

2. முந்தைய ஆண்டின் (கணக்காண்டு) மொத்த வேளாண்மை வருமானத்தின் மீது ஒவ்வொரு நிதியாண்டிலும், வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகின்றது. தற்பொழுது செயலில் உள்ள வருமான அடிப்படையிலான வரி வீதமும், நில வரம்பின் அடிப்படையிலான இணக்க வரி வீதமும் வருமாறு :

வருமான அடிப்படையிலான வரி வீதங்கள்.

1. மொத்த வேளாண்மை வருமானத்தில் முதல் ரூ. 8,000-க்கு—வரி கிடையாது.

2. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 7,000-க்கு— ரூபாய்க்கு 25 காசு.

3. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு— ரூபாய்க்கு 30 காசு.

4. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு—ரூபாய்க்கு 35 காசு.

5. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு—ரூபாய்க்கு 45 காசு.

6. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 20,000-க்கு—ரூபாய்க்கு 55 காசு.

7. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 50,000-க்கு—ரூபாய்க்கு 60 காசு.

8. மொத்த வேளாண்மை வருமானத்தில் எஞ்சிய தொகைக்கு—ரூபாய்க்கு 65 காசு.

ஆனால்,

(1) ரூ. 10,000-க்கு மேற்படாத மொத்த வேளாண்மை வருமானத்திற்கு வரி செலுத்த வேண்டியதில்லை.

[1986 ஏப்ரல் 28

(2) மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000-க்கு மேற்
பட்டு ஆனால் ரூ. 11,100-க்கு மேற்படாதபொழுது அது குறித்து
செலுத்தத்தக்க வேளாண்மை வருமான வரியானது மொத்த
வேளாண்மை வருமானம் ரூ. 10,000-ஐ விட எவ்வளவு அதிக
மாக உள்ளதோ, அத்தொகையில் ஐம்பது சதவீதத்திற்கு மேற்
படக்கூடாது.

(3) மேலும், ஒவ்வொரு கம்பெனியைப் பொறுத்த வரையில
மொத்த வேளாண்மை வருமானம் முழுமைக்கும், உயரளவு
விதத்தில் வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட வேண்டும்.

நில வரம்பின் அடிப்படையிலான இணக்க வரிவிதிப்பு :

| நிலப்பரப்பு. | | | | தர ஏக்கர் இணக்க வரி விதிப்பு |
|---|---|---|---|---|
| | | | | ரூ. பை. |
| 1 முதல் 20 தர ஏக்கருக்கு | .. | .. | .. | வரி இடையாது. |
| 2. அடுத்த 5 தர ஏக்கருக்கு | .. | .. | .. | 15.00 |
| 3. அடுத்த 5 தர ஏக்கருக்கு | .. | .. | .. | 20.00 |
| 4. அடுத்த 5 தர ஏக்கருக்கு | .. | .. | .. | 30.00 |
| 5. அடுத்த 5 தர ஏக்கருக்கு | .. | .. | .. | 40.00 |
| 6. அடுத்த 10 தர ஏக்கருக்கு | | .. | .. | 50.00 |
| 7. அடுத்த 10 தர ஏக்கருக்கு | | .. | .. | 60.00 |
| 8. அடுத்த 10 தர ஏக்கருக்கு | | .. | .. | 70.00 |
| 9. அடுத்த 10 தர ஏக்கருக்கு | | .. | .. | 80.00 |
| 10. எஞ்சிய தர ஏக்கருக்கு | .. | .. | .. | 100.00 |

மேலும் ஒவ்வொரு கம்பெனியையும் பொறுத்த வரையில்,
65, 65-ஏ பிரிவுகளின்கீழ் செலுத்தத்தக்க மொத்த வரி எந்த
அளவு நிலப்பரப்புக்கு மேற்சொன்ன 65, 65-ஏ பிரிவுகளின்
கீழ் வேளாண்மை வருமான வரியை இணக்கம் செய்துகொள்ள
கம்பெனி அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நிலப்பரப்பு முழு
வதற்கும் உயரளவு விதத்தில் விதிக்கப்பட வேண்டும்.

3. வேளாண்மை வருமான வரி ஆணையர், வேளாண்மை
வருமான வரித்துறையின் தலைவர் ஆவார். அவர் சிறப்பு
ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையரின் நிர்வாகக்
கட்டுப்பாட்டின்கீழ் பணியாற்றுகின்றார்.



1986 ஏப்ரல் 28]

4. வேளாண்மை வருமான வரியில் பெருமளவு வருவாய்,
மலைத்தோட்டப் பயிரிலிருந்து கிடைக்கின்றது. தற்பொழுது
மொத்த வருவாயில் 90 விழுக்காடு இதிலிருந்து கிடைக்கின்றது.
மலைத் தோட்டம் மற்றும் மலைத் தோட்டமல்லாத பகுதி
களில் வேளாண்மை வருமான வரி மதிப்பீடு மற்றும் வரிவசூல்
பணியை வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் செய்து வரு
கின்றனர். இதற்காக, வருவாய் வசூல் சட்டத்தின் கீழ்
வருவாய் வசூல் செய்யும் அதிகாரிக்குள்ள அதிகாரம் இவர்
களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

5. 1980-81 முதல் 1985-86 வரையிலான வரிவிதிப்பு ஆண்டு
களில் வருமானத்தின் அடிப்படையிலும் இணக்க வரியின் கீழும்
வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :

மலைத் தோட்டம் :

| ஆண்டு. | வருவாய் அடிப்படை. | இணக்க முறை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1980-81 .. | 991 | 3,618 | 4,609 |
| 1981-82 .. | 1,020 | 3,550 | 4,570 |
| 1982-83 .. | 1,000 | 3,660 | 4,660 |
| 1983-84 .. | 920 | 3,714 | 4,634 |
| 1984-85 .. | 913 | 3,705 | 4,618 |
| 1985-86 .. (31-12-1985 வரை). | 875 | 3,798 | 4,673 |

மலைத் தோட்டமல்லாதவை :

| ஆண்டு. | | வருவாய் அடிப்படை. | இணைக்கு முறை. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (5) | (6) | (7) |
| 1980-81 | .. | 4,429 | 27,736 | 32,165 |
| 1981-82 | .. | 3,992 | 28,621 | 32,613 |
| 1982-83 | .. | 3,901 | 26,360 | 30,261 |
| [illegible]-84 | .. | 3,814 | [illegible] | [illegible] |
| 1984-85 | .. | 3,736 | 23,824 | 27,560 |
| 1985-86 (31-12-1985 வரை). | .. | 3,692 | 24,753 | 28,445 |

6. இத்துறைக்குப் புதிதாக வந்த அலைத்து வேளாண்மை
வருமான வரி உதவி ஆணையர்களுக்கும், வேளாண்மை வருமான
வரி அதிகாரிகளுக்கும் விரிவான பயிற்சித் திட்டம் ஒவ்வொரு
ஆண்டும் தயாரிக்கப்பட்டு, வேளாண்மை வருமான வரி தொடர்
பான பல்வேறு சட்டங்கள், கணக்குகள் குறித்து 9 நாட்களுக்குப்
பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் பங்கு கொள்வோருக்கு பல்
வேறு தொழில்களில் வல்லுநத்துவம் பெற்ற துறைகளிலிருந்து
வரவழைக்கப்பட்ட வல்லுனர்கள் பயிற்சி வகுப்புகளை
நடத்துகின்றனர். ஏனைய உதவி ஆணையர்களுக்கும்
வேளாண்மை வருமான வரி அதிகாரிகளுக்கும் நனைவூட்டுப்
பயிற்சியும் அளிக்கப்படுகிறது. வேளாணமை வருமான வரி
மதிப்பீட்டை முடிவு செய்வதற்கு இப்பயிற்சி அவர்களுக்கு
மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது.

13. நகர்ப்புற நிலவரி :

அறிக்கையிடப்பட்ட சில பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்
களைப் பொறுத்த வரையில், தமிழ் நாடு 1966-ம் ஆண்டு
நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ், நகர்ப்புற நிலவரி செலுத்தத்
தக்கதாகும். ரயத்துவாரி வரி, வீட்டு வரி, மனை வரி, போன்ற
வற்றிற்குப் பதிலாக நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது. இச்
சட்டம், சென்னை மாநகரில் 1-7-1963 ஆம் நாள் முதலும்
கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களிலும்
மதுரை மாநகரிலும் இச்சட்டம் 1-7-1971 ஆம் நாள் முதலும்
செயலுக்கு வந்தது. சென்னை புறநகர்ப்பகுதி கிராமங்களில்
1-7-1975 முதல் இச்சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.





2. சென்னை மாநகரில் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம்
செயலுக்கு வந்தபோது 1-7-1963 அன்று இருந்த நிலத்தின்
அங்காடி மதிப்பைக் கொண்டு அதில் 0.4 சதவீதம் என்ற விகிதத்
தில் நகர்ப்புற நிலவரி கணக்கிடப்பட்டுள்ளது. இச்சட்டம்
அவ்வப்போது திருத்தப்பட்டது. 1-7-1975-லிருந்து சென்னை
மாநகர எல்லையோரப் பகுதிகளுக்கும் இச்சட்டத்தை நீட்டித்து
1-7-1971 அன்று இருந்த அங்காடி மதிப்பைக் கொண்டு
நகர்ப்புற நிலவரியைச் கணக்கிடுவதற்கு வகை செய்து 1975-ம்
ஆண்டு இச்சட்டம் இறுதியாகத் திருத்தப்பட்டது. 0.5 சத
வீதத்திலிருந்து 1 சதவீதம் வரை இருந்த வீதம் 0.7 சதவீதத்தி
லிருந்து 2.0 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது. நகர்ப்புற
நிலங்களை குடியிருப்புக் காரியங்களுக்கும், குடியிருப்பு அல்லாத
காரியங்களுக்கும் பயன்படுத்துவதில் வேறுபாடு கொண்டு
வரப்பட்டு வெவ்வேறு விகிதத்தில் வரி விதிக்கப்பட்டது.

3. மேலே கூறப்பட்ட 1975 ஆம் ஆண்டைய திருத்தப்பட்ட
நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் மேல் பலமுறையீடுகள் செய்யப்
பட்டதன் பேரில், வருவாய்த்துறையின் 27-12-1976ம் நாளிட்ட
2625-ம் எண் அரசாணையில் பல சலுகைககளை அரசு வழங்கி
யது. தற்போது வரையறுக்கப்பட்டுள்ள வரி வீதம் வருமாறு:—

சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | முதல் இரண்டு மனைகளுக்கு | இல்லை. | |
| 2. | மொத்தப் பரப்பு 5 மனைகளுக்கு மேற்படாமல இருந்தால். | அங்காடி மதிப்பில் 0.7 சதவிதம் | இரண்டு மனைகளுக்கு மேல் உள்ள பரப்புக்கு. |
| 3. | மொத்தப் பரப்பு 5 மனைகளுக்கு மேற்பட்டு ஆனால் 10 மனைகளுக்கு மேற்படாமல இருந்தால். | அங்காடி மதிப்பில் ஒரு சதவிதம் | இரண்டு மனைகளுக்கு மேல் உள்ள பரப்புக்கு. |
| 4. | மொத்தப் பரப்பு 10 மனைகளுக்கும் மேற்பட்டு ஆனால் 20 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில 1.5 சதவிதம் | இரண்டு மனைகளுக்குப் மேல் உள்ள பரபபுக்கு. |
| 5. | மொத்தப் பரப்பு 20 மனைகளுக்கு மேற்பட்டு இருந்தால். | அங்காடி மதிப்பில் 2 சதவிதம் | இரண்டு மனைகளுக்கு மேல் உள்ள பரப்புக்கு. |



சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | முதல் மூன்று மனைகளுக்கு | இல்லை. | |
| 2 | மொத்தப் பரப்பு 7 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் 7 சதவிதம் | மூன்று மனைகளுக்கு மேல் உள்ள பரப்புக்கு. |
| 3 | மொத்தப் பரப்பு 7 மனைகளுக்கு மேற்பட்டு ஆனால் 10 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் ஒரு சதவிதம் | மூன்று மனைகளுக்கு மேல் உள்ள பரப்புக்கு |
| 4 | மொத்தப் பரப்பு 10 மனைகளுக்கு மேற்பட்டு ஆனால் 20 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் 1.5 சதவிதம் | மூன்று மனைகளுக்கு மேல் உள்ள பரப்புக்கு. |
| 5 | மொத்தப் பரப்பு 20 மனைகளுக்கு மேற்பட்டு இருந்தால். | அங்காடி மதிப்பில் 2 சதவிதம் | மூன்று மனைகளுக்கு மேல் உள்ள பரப்புக்கு. |

மேலும் சட்டத் திருத்தத்தை எதிர் நோக்கி அரசாணைகளின் மூலம் கீழ்க்காணும் சலுகைகள் அரசால் அளிக்கப்பட்டுள்ளன:—

(1) நில உடமையாளர் தனது நிலத்தில் உள்ள கட்டிடத்தை முழுவதுமான தன் சொந்த குடியிருப்புக்கு உபயோகப் படுத்தினால், அந்த நிலத்தில் கட்டப்பட்டிருக்கும் கட்டிடத்திற்கும் அதை சுற்றியுள்ள நிலத்திற்கும் அவருக்கு விதிக்கப்படும் நகர்ப்புற நிலவரியிலிருந்து 50 விழுக்காடு வரி குறைத்து சலுகை அளிக்கப்படுகிறது.

(2) கல்வி, அற நிலைய, சமய சம்பந்தமான நிறுவனங்கள் தங்களுக்குச் சொந்தமான காலி நிலம் மற்றும் கட்டிடங்கள் மூலம் வரும் வருவாயினில் 90 விழுக்காடுக்கு மேல் அந்த நிறுவன சம்பந்தமான காரியங்களுக்கு பயன்படுத்தப் பட்டால் மேற்படி நிறுவனங்களுக்கு நகர்ப்புற நிலவரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது.

(3) 1977-ம் ஆண்டு தமிழ்நாடு குடிசை குடியிருப்பு ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 3 (பி)-ன் கீழ் குடிசை குடியிருப்பாக அறிவிக்கப்பட்ட எல்லா நிலங்களுக்கும் நகர்ப்புற நிலவரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

(4) சங்கீதம், நாடகம், திரைப்படப் பிடிப்பு நிலையங்கள் மற்றும் இதர கலை நிகழ்ச்சிகள், நடத்தும் சபாக்களுக்கு விதிக்கப்படும் நகர்ப்புற நிலவரியில் 50 விழுக்காடு சலுகை அளிக்கப் படுகிறது.

(5) எல்லா திரைப்பட அரங்கங்களுக்கும் விதிக்கப்படும் நகர்ப்புற நிலவரியிலிருந்து 10 விழுக்காடு சலுகை அளிக்கப்படுகிறது.

(6) சிறு தொழில்கள் மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு விதிக்கப்படும் நகர்ப்புற நிலவரியிலிருந்து முறையே 25 விழுக்காடு மற்றும் 10 விழுக்காடு வரிச் சலுகை அளிக்கப் படுகிறது.

(7) மேலும் நன்செய் மற்றும் புன்செய் பயிர் செய்யப்படும் வேளாண்மை நிலங்களுக்கும் நகர்ப்புற நிலவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

4. மேலே வழங்கப்பட்ட சலுகைகளை சட்டப்படி செயல்திறனாக்க ஒரு சட்ட முன்வடிவினை கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளது. இந்த வரைவு சட்ட முன்வடிவு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.





5. தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 25-6-1981-ம் நாளிட்ட அரசாணை எண் 1455-ன்படி திருநெல்வேலி நகர்ப்புற கூட்டுப்பகுதிகளுக்கும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நகரங்களிலுள்ள பிற பகுதிகளுக்கும் 1-7-1981-ம் நாளிலிருந்து நீட்டிக்கப்பட்டுள்ளது.

6. சென்னை உயர்நீதி மன்றம், நில உடமைதாரரின் மொத்த நிலங்களின் மீது படிப்படியாக விதிக்கப்படும் நகர்ப்புற நிலவரி, சொத்தின் மீது போடப்படும் வரி என்றும், இதனை நிலத்தின் மீது போட்ட வரி என்ற நோக்கில் எடுத்துக் கொள்ள இயலாது என்றும், அது மாநில அரசின் அதிகாரத்தின் எல்லைக்குள் இல்லை என்றும், எனவே 1966 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் பிரிவு 6(பி) செல்லத்தக்கதல்ல எனவும் தீர்ப்பளித்துள்ளது.

7. சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பினை எதிர்த்து அரசு டில்லி உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதி மன்றத்தின் ஆணையை நிறுத்தி வைப்பதற்கு தடையாணை உத்திரவு பிறப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. 3-2-1986 அன்று உச்சநீதி மன்றத்தில் சிறப்பு அனுமதி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

14. நிலச் சீர்திருத்தம் :

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்ச
வரம்பை நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61)
6-4-1960 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. 5 பேர்
கொண்ட குடும்பம் ஒன்றிற்கு உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு
ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு கூடுதல் நப
ருக்கும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்றும்
ஆனால் அதுவும் சேர்த்து மொத்த உச்சவரம்பு 60 ஸ்டாண்
டர்டு ஏக்கருக்கு மேற்படக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்
டது.

2. இந்த உச்சவரம்பு குறைக்கப்பட்டு மூலச் சட்டத்தின்
மூலம் அளிக்கப்பட்டிருந்த சில விதிவிலக்குகள் 17/70 ஆம் சட்டத்
தினாலும் அடுத்து இயற்றப்பட்ட பிற சட்டங்களாலும் ரத்து
செய்யப்பட்டன. 5 அல்லது அதற்கும் குறைவான பேர்கள்
கொண்ட குடும்பத்திற்கு உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்க
ராகும். 30-11-1985 ஆம் நாள் வரையில் நில உச்சவரம்பு
சட்டத்தின்கீழ் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு :—

| | | ஏக்கர். |
|---|---|---|
| 1. உபரியாக அறிவிக்கப்பட்ட பரப்பு | .. | 1,63,398 |

2. நிலத்தை அரசு வசம் எடுத்துக் கொண்டுள்ள பின்னரும் தடையாணையின்கீழ் உள்ள பகுதி. — 26,798

3. (அ) தகுதிவாய்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட பரப்பு. — 1,20,901

(ஆ) தமிழ்நாடு சர்க்கரை கழகத்திடம் ஒப்படைத்த பரப்பு. — 4,041

(இ) உபரி நில விநியோக விதிகளின் 13 ஆம் விதியின் கீழ் ஒதுக்கி வைக்கப்பட்டவை. — 9,976

4. பயனடைந்தோர் :

| பயனடைந்தோர். | நபர்கள். | பரப்பு (சாதாரண ஏக்கர்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆதிதிராவிடர் .. .. | 41,684 | 46,186 |
| பழங்குடியினர் .. .. | 77 | 114 |
| ஏனையோர் .. .. .. | 52,946 | 74,601 |
| மொத்தம் .. | 94,707 | 1,20,901 |

5. வழங்க வேண்டி இருக்கும் பரப்பு : 1,679 ஏக்கர்.

உபரி நிலங்கள் விநியோக விதிகளின்கீழ் உயர்ந்த பட்சமாக 3 ஏக்கர் புன்செய் நிலத்தையோ அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலத்தையோ தகுதிவாய்ந்தவர்களுக்கு ஒப்படை செய்யப்படுகிறது.

நில உச்சவரம்பினைச் செயல்படுத்துவதும், உபரி நிலங்களை வழங்குதலும் இருபது அம்சத் திட்டத்தின் (நெம்பர்-4) ஒரு பகுதியாகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இலக்கான 10,000 ஏக்கர்களுக்கு 31-3-1985 வரை தகுதிவாய்ந்த நபர்களுக்கு 5,000 ஏக்கர்கள் வரை விநியோகிக்கப்பட்டுள்ளன. நிலச் சீர்திருத்தங்களை விரைந்து செயல்படுத்துவதற்கு நடைமுறையில் சில இயல்பான இடையூறுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று



வழக்குகள் விசாரிக்கப்பட்டு முடிக்கப்படு
நீதி மன்றத்தில் வழக்குகள் ஆவதேயாகும். ஆகவே, நில நடுவர்
வதற்கு அதிக காலம் ஆவதேயாகும். ஆகவே, நில நடுவர்
மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து செய்து கொள்ளப்படும் மேல்
முறையீடுகளையும் பரிசீலனை மனுக்களையும விசாரிக்க ஆதி
காரம் அளித்து, தனி மேல் முறையீட்டு நடுவர் மன்றத்தை
அமைக்க முடிவு செய்யப்பட்டது. இந்நோக்கத்திற்காக பிப்ர
வரி 1984 இல் சட்டம் தகுந்தவாறு திருத்தப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969).

தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை
ஆவணத் திருத்தச் சட்டத்தின் மூலம் (திருத்தச் சட்டம் 45/
1981) மூலச் சட்டத்தில் சேர்த்துள்ள புதிய பிரிவு 5-ஏ
வட்ட அளவில் ஆலோசனைக் குழு அமைக்க வழி வகை செய்
கிறது. இந்த ஆலோசனைக் குழுவின் (5 உறுப்பினர்கள்)
ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த
நிலமற்ற விவசாயத் தொழிலாளி ஒருவரும், ஒரு பயிரிடு
குத்தகைதாரரும், மூன்று சமூகப் பணியாளர்களும் உறுப்பினர்
களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழு அவ்வட்டத்தைச்
சேர்ந்த ஆவண அதிகாரிக்கு குத்தகை ஆவணங்கள் தயாரிக்
கும் அலுவலில் உதவி செய்யும். இந்த ஆலோசனைக் குழுவின்
முக்கிய அலுவல் வட்டத்திலுள்ள நிலச் சொந்தக்காரரின் பெயர்,
முகவரி, இடையாள், குத்தகைதாரரின் பெயர் முதலிய
விவரங்களைச் சேகரிக்கவும், இச்சட்டத்தின் கீழ் குத்தகை
தாரரைப் பதிவு செய்ய ஆவண அதிகாரிக்கு பரிந்துரைப்
பதும் ஆகும். இக்குழுக்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி,
மதுரை, திருநெல்வேலி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் 57
வட்டங்களில் முதற் கட்டமாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த
மாவட்டங்களிலுள்ள ஏனைய வட்டங்களிலும், எஞ்சிய
மாவட்டங்களிலும் கூட இந்த குழுக்கள் அமைப்பது பற்றி பரி
சீலிக்கப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தின் கீழ் 31–10–1985 வரை 4,39,590 குத்தகை
தாரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மொத்தப் பரப்பு
6,36,692 ஏக்கராகும்.

3. தமிழ்நாடு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (விவசாய நிலங்களின் நிர்வாகத்தினைச் சீர்படுத்துதல்) சட்டம் 1961 (தமிழ்நாடு சட்டம் 57/1961).

இச்சட்டத்தின் கீழ் 726 வழக்குகள் முடிவு செய்யும் பொருட்டு
வருவாய் கோட்ட ஆட்சியர்களிடம் நிலுவையில் உள்ளன.
தமிழ்நாடு பயிரிடு குத்தகைக்காரர்கள் (தனி விதிந் துறைகள்
சட்டம் 1984 (தமிழ்நாடு சட்டம் 29/84) செயலாக்க

பட்டுவிட்டதால் தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டம் தவிர எல்லா மாவட்டங்களுக்காக நிலுவையில் உள்ள குத்தகை வழக்குகளை முடிவு செய்வதற்காக நான்கு வருவாய் நீதி மன்றங்கள் தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் கோவை மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கூடுதலாக 7 வருவாய் நீதிமன்றங்கள் ஏற்படுத்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

4. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்கல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 40/1971) 31—10—1985 வரை வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்கள் விவரம் தருமாறு.—

| | |
|---|---|
| ஆதி திராவிடர் .. .. .. .. | 98,968 |
| பழங்குடியினர் .. .. .. .. | 244 |
| பிற்பட்டோர் .. .. .. .. | 48,910 |
| ஏனையோர் .. .. .. .. | 31,961 |
| மொத்தம் .. | 1,80,083 |

881 இனங்கள் விசாரணையில் உள்ளவை. 211 வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளவை.

5. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு ஊரகக் கைவினைஞர்களை (குடியிருப்பு உடைமை உரிமை வழங்கல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 38/1976).

31–10–1985 ஆம் நாள் வரையில் வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்கள் வருமாறு :—

| | |
|---|---|
| ஆதி திராவிடர் .. .. .. .. | 37 |
| பழங்குடியினர் .. .. .. .. | 15 |
| பிற்பட்டோர் .. .. .. .. | 230 |
| ஏனையோர் .. .. .. .. | 116 |
| மொத்தம் .. | 398 |

| | |
|---|---|
| விசாரணையில் உள்ள இனங்கள் .. | 411 |
| நீதிமன்றத்தில் உள்ளவை .. | 3 |



6. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம் இச்சட்டம் கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்திற்கு பொருந்தும்.

தமிழ்நாட்டில் கிழக்கு தஞ்சாவூர் பகுதி நீங்கலாக மற்றப் பகுதிகள் 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் தற்போது அமுலில் உள்ளது. கிழக்கு தஞ்சாவூர் பகுதியில் உள்ள வேளாண் தொழிலாளர்களுக்கு 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியச் சட்டத்தின் கீழ் கூலி வழங்கப்படுகிறது. மேற்கண்ட சட்டங்களின்கீழ் வழங்கப்படும் கூலி விகிதங்களில் மாறுபாடுகள் உள்ளன. இந்நிலையில் விவசாய தொழிலில் அமைதியின்மையை தோற்று விப்பதால், இதனைத் தவிர்க்க மாவட்டம் முழுவதற்கும் ஒரே மாதிரியான விவசாயக் கூலி வீதங்கள் அமுல்படுத்துவது பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. மேற்படி முடிவு எடுப்பதற்கு முன் உழுதல், விதைத்தல், நாற்று நடுதல் போன்ற வேலைகளில் ஈடுபடும் நபர்களுக்கு தினக் கூலி ரூ. 9-லிருந்து 11 ரூபாயும், களை எடுத்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுவோருக்கு தினக்கூலி ரூ. 7 லிருந்து 8 ரூபாயும் உரிய வயதடையாதவர்களுக்கு தினக்கூலி ரூ. 5-லிருந்து ரூ. 6 ஆக கிழக்கு தஞ்சை பகுதியில் உயர்த்தி அரசு 13–6–1985 நாளிட்ட வருவாய் நில எண். 881 படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1. உரிய வயது வந்தோர் :

| | |
|---|---|
| (அ) உழுதல், விதைத்தல், நாற்றுப் பதித்தல், செப்பனிடுதல், கத்தரித்து ஒழுங்கு படுத்துதல், நிலங்களையும் வாய்க்கால்களையும் பராமரித்தல், விதைப்பதற்கும் நடவு நடுவதற்கும், நிலத்தை தயார் செய்தல். | நாள் ஒன்றுக்கு 7 லிட்டர் நெல்லும் ரூ. 2.80-ம் வழங்கப்படும் அல்லது நாள் ஒன்றுக்கு ரூ. 11 வழங்கப்படும். |
| (ஆ) நாற்று நடுதல், களையெடுத்தல் அல்லது திட்டவட்டமாக குறிப்பிடப்படாத ஏனைய வேளாண்மை தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு. | நாள் ஒன்றுக்கு 6 லிட்டர் நெல்லும் ரூ. 1.80-ம் வழங்கப்படும் அல்லது நாள் ஒன்றுக்கு ரூ. 8 வழங்கப்படும். |

2. உரிய வயதடையாதவர்கள் :

| | |
|---|---|
| அனைத்து வகை வேளாண்மை தொழில்களுக்கு. | நாள் ஒன்றுக்கு 4 லிட்டர் நெல்லும், ரூ. 1.50-ம் வழங்கப்படும் அல்லது நாள் ஒன்றுக்கு ரூ. 6 வழங்கப்படும். |

[1986 ஏப்ரல் 28

உழுதல் தவிர ஏனைய வேளாண்மை பணிகளுக்கு வேலை நேரம் நாளொன்றுக்கு 7 மணியும், உழவுக்கு மட்டும் 5 மணியும் நேரமாகும்.

7. 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம் :

தனி நபர் குழுவின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு தொழிலாளர் நலத்துறையின் 2-4-1985 ஆம் நாளிட்ட 866 ஆம் அரசாணையில் வரையறுத்துள்ளவாறு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்கள் விவரம் பின்வருமாறு :—

1. தொழிலாளியின் ஏர் மற்றும் மாட்டுடன் உழுதல்— நாளொன்றுக்கு ரூ. 18.

2. நிலக்கிழாரின் ஏர் மற்றும் மாட்டுடன் உழுதல்— நாளொன்றுக்கு ரூ. 11.

3. நெல் அறுவடை— நாளொன்றுக்கு ரூ. 11 அல்லது கண்டு முதலில் 1/8 பாகத்தில் தொழிலாளியின் பங்கில் பண மதிப்பு இவற்றில் எது அதிகமோ அத்தொகை.

4. பிற பயிர்கள் அறுவடை—நாளொன்றுக்கு ரூ. 11.

5. நாற்று நடுதல்/களை எடுத்தல்—8 ரூ. நாளொன்றுக்கு.

6. ஏனைய விவசாய, வேலைகள் அண்டை வெட்டுதல், நிலத்தை சீர்படுத்துதல், மரம் ஏறுதல், தேனீ வளர்த்தல், கோழி வளர்த்தல் மற்றும் பால் பண்ணையில் வேலை ஆகியவை உட்பட—நாளொன்றுக்கு ரூ. 10.

7. இணைந்து வாழும் தொழிலாளி உள்ளுறைத் தொழிலாளி —மாதம் ஒன்றுக்கு ரூ. 210.

இந்த ஊதிய வீதம் 5-4-1983 முதல் அமுலில் இருந்து வருகிறது.

15. நகர்ப்புற நில உச்சவரம்பு.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக, பல்வேறு காரணங்களால், நகர்ப்புறப் பகுதி மக்கள் தொகை பெருமளவு அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம், கிராமங்களிலுள்ள மக்களுக்கு பெரும் அளவில் வேலை வாய்ப்பு அளிக்கின்ற தொழிற்சாலைகளும், ஏனைய நிறுவனங்களும், நகர்ப்புற பகுதிகளில் வளர்ந்து வருகின்றபடியால், கிராம மக்கள், கிராமங்களை விட்டு வெளியேறுகின்றனர். சிறு நகரங்கள், நடுத்தர நகரங்கள் ஆகியவற்றில்



1986 ஏப்ரல் 28]

மக்கள் சென்று குடியேறுவதை விட பெருநகரங்களிலும் அதிகப்
பரப்பளவுள்ள மாநகர்களிலும் மக்கள் சென்று குடியேறுவது
அதிகமாகும். இதனால் கட்டுக்கடங்காது குடிசைகள் பெருகி
வருவதாலும், சுகாதாரமற்ற வாழ்க்கைச் சூழல்கள் பெருகி வரு
வதாலும், பொருளாதார சமூக சிக்கல்கள் ஏற்படுகின்றன.
எனவே, அரிதாகக் கிடைக்கும் நகர்ப் பகுதிகளைப் பயன்படுத்து
வதை முறைப்படுத்தி முறையாக மேம்படுத்துவது, ஒரு சிலரிடமே
நிலங்கள் குவிந்து, அதனால் ஊகவாணிகம் நடப்பதை தடுப்
பதும் அவசியமாகும் எனக் கருதப்பட்டது.

2. நகர்ப்புற பகுதிகளிலுள்ள நிலங்களின் விலை வெகுவாக
உயர்ந்திருக்கின்றது. இதன் பலனாக, அரிதாக கிடைக்கும் மதிப்பு
மிக்க நகர்ப்புற நிலங்களை வாங்கி முடக்கி வைப்பதும், பின்னர்
அதிக விலைக்கு விற்க முயலும் ஊகவாணிகம் நடத்துவதும்
பெருகிவிட்டது. தனிப்பட்ட ஒருவர் வைத்துள்ள நிலங்களுக்கு
உச்சவரம்பு விதிக்கலாம் என்றும், நியாயமான அளவிற்கு அதிக
மாக நகர்ப்பகுதி நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பதைத்
தடை செய்யலாம் என்றும், இவ்வாறு செய்தால், இப்பிரச்சினை
களுக்கு தீர்வு காண முடியுமென்றும் கருதப்பட்டது. தனியாரின்
உடைமையில் உள்ள நிலங்களின் அளவுக்கு உச்சவரம்பு விதித்தும்,
வீடுகளின் அளவை வரையறுத்தும் நகர்ப்பகுதி நிலங்கள்
அனைத்தையும் சமுதாய உடைமையாக்குவதே இதன் நோக்க
மாகும். இந்நோக்கத்துடன் தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு,
நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்துதல்)
சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 34/1976) இயற்றப்
பட்டது.

3. இச்சட்டத்தின் மூன்று முக்கிய அம்சங்கள் வருமாறு :

(1) தனிப்பட்ட ஒருவர், ஒரு குடும்பம், ஒரு நிறுவனம், ஒரு கம்பெனி அல்லது ஒரு குழு அல்லது தனிப்பட்டவர்கள் சேர்ந்த ஒரு சங்கம் வைத்திருக்கின்ற வெற்று நிலத்தின் மீது உச்சவரம்பு விதித்தல் ;

(2) எதிர் காலத்தில் கட்டப்படும் வீடுகளின் பரப்புக்கு உச்சவரம்பு விதித்தல் ;

(3) நகர்ப்பகுதி சொத்தை உரிமை மாற்றம் செய்து கொடுப்பதை முறைப்படுத்தல் ஆகியவையாகும்.

4. இச்சட்டத்தைச் செயலாக்குவதில், பொதுமக்கள் அடைந்த இடர்ப்பாடுகள் குறித்து எண்ணற்ற முறையீடுகளும், பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகளும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பொது மக்களின் வேண்டுகோளை கருத்திற்கொண்டு குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டு

[1986 ஏப்ரல் 28

34-ம் சட்டத்தை நீக்கி தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்சவரம்பு—முறைப்படுத்துதல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம், 24/1978) அரசு இயற்றியது. நகர்ப்பகுதி சொத்துக் களை அரசுடமை ஆக்குவதென்ற குறிக்கோளைக் கடைப்பிடிக் கும் பொருட்டும், பழைய சட்டத்தின் இடர்ப்பாடான விதித் துறைகளின் மூலம், பொதுமக்களுக்கு ஏற்படும் தொல்லைகளை நீக்கும் பொருட்டும், பொது மக்களின் கோரிக்கைக்குச் செவி சாய்க்கும் வண்ணம் இச்சட்டம் இயற்றப்பட்டது.

5. தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) சட்டத்தின் 14, 15, 20 (3), 27, 48 ஆகிய பிரிவுகள் நீங்கலாக ஏனைய பிரிவுகள் 3–8–1976 ஆம் நாளி லிருந்து செயலுக்கு வந்தன. 14, 15, 20 (3), 27, 48 ஆகிய பிரிவுகள் 17–5–1978 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன.

6. புதிதாக இயற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 24/1978) சென்னை நகர்ப்புற கூட்டுப் பகுதியின் பரப்பு 1,400 சதுர கிலோ மீட்டரிலிருந்து 575 சதுர கிலோ மீட்டராகக் குறைக்கப்பட்டுள்ளது. ஏனைய நகர்ப்புறக் கூட்டுப் பகுதிகளைப் பொருத்தமட்டில், எல்லையோரப் பகுதிகளை நீக்கியதன் மூலம், அவை மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியாகக் குறைந்துள்ளது.

7. இச்சட்டம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி நகரக் கூட்டுப்பகுதி களில் செயலில் உள்ளது.

8. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகர் கூட்டுப்பகுதி ஒவ்வொன் றிலும் தனிப்பட்ட ஒருவரோ, ஒரு குடும்பமோ, ஒரு தொழில் நிறுவனமோ நிலம் வைத்துள்ளவரை அனுமதிக்கப்பட்ட உச்ச வரம்பின் விவரம் பின்வருமாறு :—

தமிழ்நாடு சட்டம் 24/1978.

| நகர்க்கூட்டுப் பகுதி. (1) | | வகைப் பாடு. (2) | தனிப் பட்ட ஒருவர். (3) | ஒரு குடும்பம் (4) | தொழில் நிறு வனம். (5) |
|---|---|---|---|---|---|
| சென்னை | .. | 1 | 500 | 2,000 | 2,000 |
| மதுரை | .. | 11 | 1,500 | 3,000 | 3,000 |
| கோயம்புத்தூர், | .. | | | | |
| திருச்சிராப்பள்ளி, | .. | | | | |
| சேலம். | .. | | | | |
| திருநெல்வேலி | .. | 111 | 2,000 | 4,000 | 4,000 |



1986 ஏப்ரல் 28]

9. இச்சட்டத்தின் செயல் வரம்பிலிருந்து, பயிரிடும் நிலங்கள்
முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. பயிரிடப்படாத நிலமாகப்
பெருந்திட்டத்தில் காட்டப்பட்டு, அவை தொடர்ந்து பயிரிடும்
நிலமாகப் பயன்படுத்தப்பட்டு வருமானால், இந்நிலங்களுக்குச்
இச்சட்டம் பொருந்தாது. ஆனால் வேளாண்மை அல்லாத வேறு
பணிகளுக்காக இந்நிலங்கள் பயன்படுத்தப்படுமானால், இச்
சட்டம் அத்தகைய நிலங்களுக்குப் பொருந்தும்.

10. விற்பனைப் பத்திரம், ஏனைய பத்திரங்கள் ஆகியவற்
றில் குறிப்பிட்டுள்ள நிலங்கள் வெற்று நிலங்களா அல்லது பயிரி
டும் நிலங்களா என்பது குறித்து தகுதி வாய்ந்த அதிகாரிகளால்
சரிபார்க்கப்பயன்படும் வகையில், 1908 ஆம் ஆண்டு பத்திரப்
பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்வதற்காகப் பத்திரங்களை
தாக்கல் செய்யும்போது உரிமை மாற்றம் செய்து கொடுப்பவரும்,
செய்துகொடுக்கப்பெறுபவரும், எல்லா நேர்வுகளிலும் படிவம் XIII
அமைந்த உறுதி மொழியை இரட்டையாகத் தாக்கல் செய்ய
வேண்டும் என்று பத்திரப்பதிவு செய்யும் அதிகாரிகள் வலியுறுத்த
வேண்டும் என்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

11. இச்சட்டம் செயலுக்கு வந்த நாளன்று, உச்ச வரம்பிற்கு
கூடுதலாகக் காலி நிலம் வைத்துள்ள ஒவ்வொருவரும் அவ்வாறு
கூடுதலாக வைத்துள்ள நிலம் குறித்த அறிக்கை ஒன்றை அப்
பகுதியின் அதிகார வரம்பப் பெற்றுள்ள தகுதிவாய்ந்த அதி
காரிகளிடம் தாக்கல் செய்யவேண்டும். பொதுமக்களும், நிறுவனங்
களும், வணிகப் பேரவைகளும், முறையீடு செய்ததின் காரணமாக
இந்தியக் குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டு 34-ம் சட்டத்
தின்படி 6(1) விவர அறிக்கையைத் தாக்கல் செய்வதற்குறிய
கடைசி நாள் மேற்கொண்டு 697 நாட்கள் நீட்டிக்கப்பட்டது.
தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நகர்ப்புறப் பகுதி நில (உச்சவரம்பு
முறைப்படுத்துதல்) சட்டத்தின் (சட்டம் 24/78) 7(1)-வது பிரி
வின் கீழ் விவர அறிக்கை தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாள்
14—8—1978 ஆம் நாளோடு முடிவடைந்தது. பொதுமக்களும்,
வணிகப் பேரவைகளும் கேட்டுக்கொண்டதன் பேரில் இந்த விவர
அறிக்கையை தாக்கல் செய்யும் கால வரம்பு ஒரு திங்கள் கால
அளவிற்கு அதாவது 14—9—1978 ஆம் நாள் வரையில் நீட்டிக்
கப்பட்டது. 1976 ஆம் ஆண்டுச் சட்டத்தின் விதித்துறைகளின்
படி, தாக்கல் செய்யப்பட்ட 15,889 அறிக்கைகள் உச்சவரம்பு
அளவிற்குள் வருகின்றன என அறிவிக்கப்பட்டது. எஞ்சியுள்ள
1982 அறிக்கைகள் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு
வருகின்றன. தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கைகளையொட்டி
கையகப்படுத்தலில் கிடைக்கப் பெறும் உபரியாகவுள்ள காலி நில

களின் பரப்பளவு 2,639 ஹெக்டேர், 84 ஏர், 17 சதுர மீட்டர்கள்
ஆகும். தகுதிவாய்ந்த அதிகாரிகள் அந்த விவர அறிக்கைகளைப்
பரிசீலித்து வருகின்றனர். 555.55.51 சதுர மீட்டர் பரப்பள
வுள்ள காலி நிலம் உபரியாக உள்ளது என்று அறிவிக்க 549 அறிக்
கைகள் மீது அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த அறிக்
கைகள், தமிழ்நாடு 1978 ஆம் நகர்ப்புற பகுதி நில (உச்ச வரம்பு
முறைப்படுத்துதல்) சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் கீழ் தமிழ்நாடு
அரசிதழில் வெளியிடப்படுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்
ளன. 31-12-1985 ஆம் நாள் வரையில் 454 இனங்களில் உபரி
யான 425 ஹெக்டேர் 96 ஏர் 27 சதுர மீட்டர் பரப்பளவு வெற்று
நிலம் குறித்து மேற்படி சட்டத்தின் 11(3) ஆம் பிரிவின் கீழ்
அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. 339 இனங்களைப்
பொறுத்த மட்டில் 361 ஹெக்டேர், 14 ஏர், 08 சதுர மீட்டர்
பரப்பளவுள்ள வெற்று நிலம் சுவாதீன உரிமையில் எடுத்துக்
கொள்ளப்பட்டுள்ளது. பொருத்தமான அதிகாரிகள், மேற்படி
சட்டத்தின் 9 முதல் 11 வரையிலான பிரிவுகளின்கீழ் அந்த
அறிக்கைகளை பரிசீலித்து வருவதால், மி கயான வெற்று
நிலத்தில் பரப்பளவு எவ்வளவு என்பதை இந்நிலையில்
துல்லியமாக மதிப்பிட இயலாது.

12. நகர்ப்புறக் கூட்டுப்பகுதி ஒவ்வொன்றிற்கும் வகையகப்
படுத்தப்படும் மிகையான வெற்று நிலங்களுக்கு வழங்கத்தக்க
ஈட்டுத் தொகை குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| நகர்ப்புறக் கூட்டுப்பகுதி. (1) | தமிழ்நாடு வகை. (2) | 1978 ஆம் ஆண்டு 24-ஆம் சட்டம் வழங்கத்தக்க தொகை. (3) |
|---|---|---|
| சென்னை .. .. | 1 | ஒரு சதுர மீட்டருக்கு 50 ரூபாய்க்கு மேற்படாமல். |
| மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் .. | 11 | ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய்க்கு மேற்படாமல். |
| திருநெல்வேலி .. | 111 | ஒரு சதுர மீட்டருக்கு 16 ரூபாய்க்கு மேற்படாமல். |

13. இச்செயல் நோக்கத்திற்காக, இம்மாநிலத்திலுள்ள நகர்ப்
புறக் கூட்டுப் பகுதி ஒவ்வொன்றும் முறையான நகர்ப் பகுதி
வளர்ச்சிப் பணியையும், அது தொடர்பான ஏனைய நடவடிக்
கைகளையும் மேற்கொள்வதற்காக நகர்ப்புற கூட்டுப்பகுதியில்
அப்பகுதி அமைந்துள்ள இடம், பகுதி, நகர்க் கூட்டுப் பகுதியில்

அமைந்துள்ள அந்நிலத்தின் பொதுப்பயன் நகர்ப்புறக் கூட்டுப்
பகுதியிலுள்ள அந்நிலத்தின் பயன்பாடு ஆகியவற்றைக் கருத்
தில் கொண்டு வெவ்வேறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
அரசு எடுத்துக் கொண்ட மிகையான வெற்று நிலங்களுக்கு இழப்
பீட்டுத் தொகை வழங்குவது தொடர்பாக இதுவரையில் 21.92
இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

14. அரசு வெற்று நிலத்தைக் கையகப்படுத்தும்போது, அந்
நிலத்திற்காக வழங்கத்தக்க மொத்தத் தொகையில் 25 சதவீதத்
தொகையை அல்லது 25,000 ரூபாயை இவற்றில் எத்தொகை
குறைவானதோ, அத்தொகையை உடனடியாக வழங்கவேண்டும்.
எஞ்சியுள்ள தொகையை வெற்று நிலத்தை அரசு எடுத்துக்கொண்
டுள்ளதாகக் கருதப்படும் நாளிலிருந்து 15 ஆண்டு கால அளவில்,
ஆண்டு ஒன்றிற்கு 6 சதவீத வட்டியுடன் சம ஆண்டுத் தவணை
களில் வழங்க வேண்டும்.

15. மத்திய, மாநிலஅரசுகள், அரசுநிறுவனங்கள், உள்ளாட்சி
மன்றங்கள் அட்டவணையிடப்பட்ட வங்கிகள், வீட்டு வசதிக்
கூட்டுறவுச் சங்கங்கள், சமய அறக்கட்டளை நிறுவனங்கள் முதலி
யவை வைத்துள்ள நிலங்களுக்கு இச்சட்டத்தின் விதித்துறைகள்
பொருந்தாது.

16. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு 24 ஆம் சட்டத்தின் 20 ஆம்
பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் விதித்துறைகளை செயற்
படுத்தியதில் நடைமுறை இடர்பாடுகள் இருந்தன. இவ்விடர்பாடு
களை களையும் பொருட்டு மேற்கூறிய 20 ஆம் பிரிவைச்சேர்ந்த
(3) உட்பிரிவிற்குப் பதிலாக தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்
பகுதி நில (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) (தமிழ்நாடு சட்டம்
14/1979) திருத்தச் சட்டத்தின் மூலம் புதிய உட்பிரிவு ஒன்று
சேர்க்கப்பட்டுள்ளது. பொது அறக்கட்டளைகள் அல்லது சமயப்
பொறுப்பு கழகங்கள் (வஃப் வாரியம் உட்பட) எதுவும் உச்ச
வரம்புக்குக் கூடுதலாக உள்ள நிலங்களை முழுமையாகவோ
அல்லது அவற்றில் ஒரு பகுதியையோ விற்பனை செய்தல், அடை
மானம் வைத்தல், தானமாகக் கொடுத்தல், குத்தகைக்கு விடுதல்
ஆகியவற்றின் மூலமோ அல்லது பிற வழிகளிலோ உரிமை மாற்றம்
செய்யக்கூடாது என்றும், அவ்வாறு செய்யப்படும் உரிமை மாற்
றம் சட்டப்படி செல்லாது என்றும், இச்சட்டம் வகை செய்
கிறது. மேலும் பொது அறக்கட்டளைகள் அல்லது சமயப்
பொறுப்புக் கழகங்கள் (வஃப் வாரியம் உட்பட) வைத்துள்ள
நிலங்கள் பொது அறப்பணிகளுக்கு அல்லது சமயப்பணிகளுக்குத்
தேவைப்படுவதும், பயன்படுவதும், அற்றுப்போகுமானால், மேற்
கூறிய தமிழ்நாடு சட்டத்தின் விதித்துறைகள் அவற்றிற்கும்
பொருந்தும். மேற்கூறிய தமிழ்நாடு சட்டத்தின் III ஆம்
அத்தியாயத்தின் விதித்துறைகளுக்கிணங்க, அத்தகைய மிகை
வெற்று நிலங்களை அரசு கையகப்படுத்தும்.

[1986 ஏப்ரல் 28

17. பொதுக் காரியங்கள் அல்லது யாதொரு தனி நபருக்கும் இடர்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு விலக்களிக்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு.

18. மேற்சொன்ன சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட மிகையான வெற்று நிலங்கள் மேற்சொன்ன சட்டத்தின் 24 ஆம் பிரிவின் விதித்துறைகள் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் இயற்றப் பட்ட விதிகளின் 23 ஆம் விதி ஆகியவற்றின்படி ஒதுக்கீடு செய் யப்படுகின்றன. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புறப்பகுதி நில (உச்ச வரம்பு கட்டுதல்—முறைப்படுத்தல்) சட்டத்தின் 11 (3) ஆம் பிரிவின் கீழ் கையகப்படுத்தப்பட்ட வெற்று நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்காக விண்ணப்பதாரர் பலருடைய தகுதி குறித்து மதிப்பிடுவதற்காகவும், அரசுக்குப் பரிந்துரைப்பதற் காகவும் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

19. மேற்சொன்ன சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட வெற்று நிலங்களில் 121 ஹெக்டேர் 38 ஏர், 65 சதுர மீட்டர் நிலத்தை, அரசுத்துறைகள் அரசுக் கழகங்கள், வீட்டு வசதி வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரசு 31—12—1985 வரை ஒதுக்கீடு செய்துள்ளது.

16. வருவாய்த்துறை கட்டிடங்கள்.

கடந்த சில வருடங்களாக மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள், நிர்வாகத் திறமையைக் கருதி இரண்டாக மற்றும் மூன்றாகப் பிரிக்கப்படும் போதும், வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் வருவாய்த்துறை அலுவலகங்களை சொந்தக் கட் டிடங்களில் அமர்த்தும் பொருட்டும், அரசு அதி முக்கியத்துவம் கொடுத்து, புதிய கட்டிடங்கள் கட்ட ஆணை பிறப்பித்து வரு கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் :

இம்மாநிலத்தில் 19 மாவட்டங்கள் உள்ளன. வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடங் கள் கட்ட அரசு அனுமதித்து ஆணையிட்டுள்ளது.

கோட்டாச்சி அலுவலகங்கள் :

இம்மாநிலத்தில் 57 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் உள்ளன. 1978-79 ஆம் ஆண்டிலிருந்து 1984-85 வரை விருத் தாச்சலம், பெரியகுளம், சிவகங்கை, அருப்புக்கோட்டை, திருநெல்வேலி, கடலூர், ஈரோடு, சங்கரி, தஞ்சாவூர், காஞ்சிபுரம் மேட்டூர், பட்டுக்கோட்டை, திண்டிவனம் மற்றும் குன்னூர் ஆகிய கோட்டங்களுக்கும் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. திருப்பூர் மற்றும் கடலூர் கோட்டங்களில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.



1986 ஏப்ரல் 28]

1986-87 ஆம் ஆண்டில் தாராபுரம் கோட்டாட்சி அலுவலகத் திற்குப் புதிய கட்டிடம் கட்டவும், செங்கல்பட்டு கோட்டாட்சி அலுவலகத்தில் கழிப்பறை வசதி செய்துதரவும் கருதியுள்ளது.

வட்டாட்சி அலுவலகங்கள் :

இம்மாநிலத்தில் 167 வட்டாட்சி அலுவலகங்கள் உள்ளன. 1979-80 ஆம் ஆண்டிலிருந்து 1984-85 ஆம் ஆண்டு வரை எழும்பூர்—நுங்கம்பாக்கம், பாலக்கோடு, காரைக்குடி, விருதுநகர் பேராவூரணி, கோத்தகிரி, ராஜபாளையம், நத்தம், புரசைவாக் கம்—பெரம்பூர், ராசிபுரம், திருநெல்வேலி, பண்ருட்டி, பட்டுக் கோட்டை, மைலாப்பூர்—திருவல்லிக்கேணி, மேட்டுப்பாளையம் ஆகிய வட்டாட்சி அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டப் பட்டுள்ளன. திருவாரூர், கும்மிடிப்பூண்டி, குடவாசல், மதுக் கோட்டை மற்றும் மாம்பலம்—கிண்டி ஆகிய இடங்களில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

1986-87 ஆம் ஆண்டில் தேவக்கோட்டை, கோட்டை— தண்டையார்பேட்டை, மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் புதிய வட்டாட்சி அலுவலகங்கள் கட்ட கருதியுள்ளது.

குடியிருப்புகள் ;

பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கென அலுவலகம் இணைந்த குடியிருப்புகள் :

இம்மாநிலத்தில் 1,098 பிர்க்காக்கள் உள்ளன. 1978-79 ஆம் ஆண்டிலிருந்து பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கென அலுவலகம் இணைந்த குடியிருப்புக்களைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் படிப்படியாக அரசு நிறைவேற்றி வருகிறது. இது வரை அனுமதி வழங்கப்பட்டுள்ள 983 குடியிருப்புக்களில், 771 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவை கட் டப்பட்டு வருகின்றன. சென்னை மாவட்டத்தில் உள்ள 20 பிர்க்காக்கள் நீங்கலாக இன்னும் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ள பிர்க்காக்கள் 95 ஆகும்.

1986-87 ஆம் ஆண்டில் 3 பிர்க்கா வருவாய் ஆய்வாளர் களுக்கு அலுவலகம் இணைந்த குடியிருப்பு கட்டுவதற்கு அனுமதி வழங்கக் கருதியுள்ளது.

[1986 ஏப்ரல் 28

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர்களுக்கான குடியிருப்புக்கள் :

1986-87 ஆம் ஆண்டில் அருப்புக்கோட்டை, திருப்பூர் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள கோட்டாட்சியர்களுக்கும், வானூர், கந்தர்வக்கோட்டை மற்றும் ஊத்துக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள வட்டாட்சியர்களுக்கும் குடியிருப்புக்கள் கட்டித்தர அரசு கருதியுள்ளது.

கிராமச்சாவடிகள் மற்றும் கால்நடைப்பட்டிகள் :

சமுதாயத் தேவையின் பொருட்டு, புதிய கிராமச்சாவடிகள் மற்றும் கால்நடைப்பட்டிகள் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டலாம் என்ற ஆணை வழங்கப்பட்டுள்ளது. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் வழிமுறைகளின்படி மேற்படி திட்டத்தின் கீழ் கட்டப்படும் கட்டடங்களின் மொத்த செலவில் பொருள், மதிப்பு, மற்றும் தொழிலாளர் சம்பள மதிப்பு 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் இருக்க வேண்டும். ஆனால், நடைமுறையில் கிராமச்சாவடி மற்றும் கால்நடைப்பட்டிகள் கட்டுவதற்கான மொத்த செலவில், பொருட்செலவு 50 விழுக்காட்டிற்கும் அதிகமாவதால் மேற்படி கூடுதலான செலவினத்தை வருவாய்த்துறையின் வருடாந்திர நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஈடு செய்யப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டில், 50 புதிய கிராமச்சாவடிகள் அமைக்க ரூ. 13.92 இலட்சமும், 50 புதிய கால்நடைப்பட்டிகள் அமைக்க 5.28 இலட்சமும் அரசு ஒப்பளித்துள்ளது.

மோட்டார் வாகனங்கள் :

மாவட்டங்களில் சமூக பொருளாதாரத் திட்டங்களை வெகு விரைவில் செயலாற்றுவதற்கு வருவாய் அலுவலர்களுக்கு மோட்டார் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2. 1985-86 ஆம் ஆண்டின் மாவட்டங்களில் முக்கிய நபர்களின் உபயோகத்திற்கென 9 புதிய அம்பாசிடர் சிருந்துகளும், பழைய ஈப்புகளை கழிவு செய்து அவைகளுக்குப் பதிலாக 18 ஈப்புகளும், ரூ. 20,25,359 செலவில் வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



3. புதிதாக ஏற்படுத்தப்பட்ட காமராஜர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களுக்கு ரூ. 6,46,226.30 செலவினத்தில், கீழ்க்கண்ட வாகனங்கள் வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம். | முக்கிய நபர்கள் உபயோகத்திற்கென ஒரு அம்பாசடர் சிருந்து. | மாவட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களின் அலுவலக உபயோகத்திற்கென இரண்டு அம்பாசடர் சிருந்துகள். | தனி வட்டாட்சியருக்கு (வரவேற்பு) ஒரு ஈப்பு. |
| காமராஜர் மாவட்டம் .. | முக்கிய நபர்களின் உபயோகத்திற்கென ஒரு அம்பாசடர் சிருந்து. | மாவட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரின் அலுவலக உபயோகத்திற்கென இரண்டு அம்பாசடர் சிருந்துகள். | தனி வட்டாட்சியருக்கு (வரவேற்பு) ஒரு ஈப்பு. |

(4) அதே போல், புதிதாக அமைக்கப்பட்ட அண்ணா மாவட்டத்திற்கும் ரூ. 4,13,263.15 செலவில் கீழ்க்கண்ட வாகனங்கள் வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| முக்கிய நபர்களின் உபயோகத்திற்கென ஒரு அம்பாசடர் சிருந்து. | மாவட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களின் அலுவலக உபயோகத்திற்கென இரண்டு அம்பாசடர் சிருந்துகள். | தனி வட்டாட்சியர் (வரவேற்பு) மற்றும் வாடிப்பட்டி வட்டாட்சியருக்கு இரண்டு ஈப்புகள். |

மரத் தளவாடங்கள்

பல்வேறு வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு மரத்தளவாடங்கள் வாங்குவதற்காக 1985–86ஆம் ஆண்டில் ரூ. 3.39 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

படிப்படியாக வருவாய் அலுவலகங்களிலுள்ள பழைய மரத் தளவாடங்களில் 10 விழுக்காடு களைந்து அதற்குப் பதிலாக புதிய மரத்தளவாடங்கள் மற்றும் பல வருவாய் அலுவலகங்களுக்கு குடிநீர் குளிர்விப்புப் பெட்டிகள் வாங்க 1986–87ஆம் ஆண்டில் ரூ. 5.85 இலட்சம் ஒதுக்கீடு செய்ய அரசு எத்தனித்துள்ளது.

### 17. நிலவரி மற்றும் செல்வரி.

#### (அ) நிலவரி முதலியவற்றைத் தள்ளுபடி செய்தல்.

1390ஆம் விளைச்சல் (பசலி) ஆண்டில் சிறு உழவர்களிடமிருந்தும், வளவாய்ப்பு ஏதுமில்லாத வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் வாழும் உழவர்களிடமிருந்தும் வலுக்கட்டாயமாக நிலவரி வசூலிப்பதில்லை என்பது அரசின் கொள்கையாக இருந்தது. இதற்காக அரசு 1981ஆம் ஆண்டு மே திங்களில் பின்வரும் விளக்கங்களை வெளியிட்டது—

(i) ஜப்தி நடவடிக்கைக்காக 10 ஏக்கரும் அதற்கு மேற்பட்ட நிலத்தை சொந்தமாகக் கொண்டு பயிரிடுபவர்கள் சிறு உழவர்களாகக் (ஏழை உழவர்களாக) கருதப்படமாட்டார்கள். மொத்தப் பரப்பளவில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டு விளைச்சல் கிடைத்தால் நில வரி, தக்காவி, அரசுப் பாக்கித் தொகை ஆகியவற்றிற்காக ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

(ii) உழவர் ஒருவர் 10 ஏக்கரும் அதற்கு மேற்பட்டும் சொந்தமாகக் கொண்டு பயிரிட்டு அதில் ஒரு பகுதியில் அவருக்கு 50 சதவிகிதமும் அதற்கு குறைவாகவும் பலன் கிடைத்தால் பாதிக்கப்பட்ட பரப்பளவிற்கு அவருக்கு தள்ளுபடி கிடைக்கும். இந்தப் பகுதியைப் பொருத்தமட்டில் பாக்கித் தொகை வசூலிப்பது தள்ளிவைக்கப்படும். ஆனால் 50 சதவிகிதமும் அதற்கு மேற்படும் விளைச்சல் கிடைத்த எஞ்சிய நிலப்பகுதியில் பாக்கித் தொகை வசூலிக்க ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கலாம்.

(iii) உழவர் ஒருவர் 10 ஏக்கருக்கு குறைவாக நிலத்தை வைத்திருந்து பயிரிட்டு அதில் 50 சதவிகிதமும் அதற்கு மேல்பட்டு அவருக்கு விளைச்சல் கிடைக்குமானால் இயல்பான போக்கில் நிலுவையையும் நடப்பு கேட்புத் தொகையும் வசூலிக்கப்



பட வேண்டும். எனினும், ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதில்லை.

(iv) உழவர் ஒருவர் 10 ஏக்கருக்கு குறைவாக வைத்திருந்து பயிரிட்டு அதில் ஒரு பகுதியில் அவருக்கு 50 சதவிகிதமும் அதற்குக் குறைவாகவும் விளைச்சல் இருக்குமானால் அப்பகுதிக்கு வரித்தள்ளுபடி கிடைக்கும். நிலுவைகள் வசூலிப்பது ஒத்தி வைக்கப்படும். 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டு பயிர் விளைச்சல் கிடைத்த எஞ்சிய பகுதியைப் பொறுத்தவரையில் நடப்பு நிலுவைக் கேட்புத் தொகை வசூலிக்கப்படவேண்டும். எனினும் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை.

2. பசலி ஆண்டு 1394-ல் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

இராமநாதபுரம் மாவட்டம்:

பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி, இராமநாதபுரம் மற்றும் திருவாடானை வட்டங்களில் 383 கிராமங்கள் முழுமையாகவும் திருவாடானை வட்டத்தில் இரண்டு கிராமங்கள் பகுதியாகவும் இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்டன. 1,83,384 ஹெக்டேர் நஞ்சை மற்றும் புஞ்சை நிலத்தில் பயிர்கள் பாதிக்கப்பட்டன. ரூ. 46,03,806 நிலவரி தள்ளுபடி செய்ய அரசு அனுமதி வழங்கியது.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் :

மானாமதுரை, இளையான்குடி, திருப்பத்தூர் ஆகிய மூன்று வட்டங்களில் [illegible] கிராமங்கள் தண்ணீர் பற்றாக்குறையினால் முழுமையாகப் பாதிக்கப்பட்டன. 23,586 ஹெக்டேர் நஞ்சை நிலங்களுக்கும் 37,268 ஹெக்டேர் புஞ்சை நிலங்களுக்கும் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டது. ரூ. 37,00,760-க்கு நிலவரி தள்ளுபடி செய்ய அரசு அனுமதித்துள்ளது.

காமராசர் மாவட்டம்

அருப்புக்கோட்டை கோட்டத்தில் உள்ள திருச்சுழி, அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் வட்டங்களில் 220 கிராமங்கள் முழுமையாகவும் 80 கிராமங்கள் பகுதியாகவும் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டன. போதுமான மழை இன்மையால் 19,044.44 ஹெக்டேர் நஞ்சை நிலங்களும் 38,018.18 ஏக்கர் புஞ்சை நிலங்களும் பாதிக்கப்பட்டன. ரூ. 12,12,660.55 நிலவரி ரத்து செய்ய அரசு அனுமதித்துள்ளது.

மதுரை மாவட்டம் :

மதுரை வடக்கு, மேலூர், திருமங்கலம் மற்றும் நிலக்கோட்டை ஆகிய வட்டங்களுள் 76,781.19 ஏக்கர் நெற்பயிர் 'துங்கரோ' மற்றும் மஞ்சள் நோயினால் பாதிக்கப்பட்டன. ரூ. 23,17,117.62 நிலவரி தள்ளுபடி செய்யவும், குறுகிய காலக்கடன்களை நடுத்தர காலக் கடன்களாக மாற்ற ஏதுவாக 'அனாவரி' சான்றிதழ் வழங்கவும் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

17 [ஆ]. பசலி 1394-ல் வசூல் செய்யப்பட்ட நிலவரி.

பசலி 1394-ல் (அதாவது 1—7—1984 முதல் 30—6—1985 வரை) நிலவரி (தலவரி மற்றும் தலமேல்வரி உட்பட) வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 33,75,66,796. இந்த தொகை சென்ற 14 வருடங்களில், அதாவது, பசலி 1380 முதல் 1394 வரையிலான காலக்கட்டத்தில் அதிக வசூலில் முதல் இடத்தை பெற்றுள்ளது.

தவிர, 1394-ம் பசலியில் மேற்சொல்லப்பட்ட ரூ. 33.76 கோடி வசூலை எந்தவித கடுமையான ஜப்தி போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளாமலேயே வசூல் செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த சாதனை, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் சிறந்த வழிகாட்டுதலாலும் அவரது தெளிவான தீர்க்கமான ஆய்வின் விளைவாலும் மற்றும் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரின் சீரிய தலைமையின் கீழ் அந்தந்த மாவட்ட வருவாய் அதிகாரிகள், கூடுதல் மாவட்ட ஆட்சியர்கள், ஏனைய வருவாய்த்துறை அலுவலர்கள் ஆகிய அனைவரது ஒத்துழைப்பும், ஒருங்கிணைந்த செயலாக்கப்பணியாலும் சாத்தியமாயிற்று. கேட்பு, வசூல் மற்றும் நிலுவை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

பசலி 1394 (1—7—1984 முதல் 30—6—1985 வரை)

| (1) | கேட்பு. (2) ரூபாய். | வசூல். (3) ரூபாய். | நிலுவை. (4) ரூபாய். |
|---|---|---|---|
| நிலுவை .. | 50,76,55,009 | 17,63,72,999 | 33,12,82,010 |
| நடப்பு .. | 23,93,64,750 | 16,11,93,797 | 7,81,70,953 |
| மொத்தம் .. | 74,70,19,759 | 33,75,66,796 | 40,94,52,963 |



பசலி 1395 (1-7-1985 முதல் 30-6-1986—7-2-1986) வரை.

| (1) | கேட்பு. (2) ரூபாய். | வசூல். (3) ரூபாய். | நிலுவை. (4) ரூபாய். |
|---|---|---|---|
| நிலுவை .. | 43,39,35,544 | 5,68,15,911 | 37,71,19,633 |
| நடப்பு .. | 7,89,83,061 | 2,18,74,657 | 5,71,08,404 |
| மொத்தம் | 51,29,18,605 | 7,86,90,568 | 43,42,28,037 |

18. இடைத் தரகர்களை ஒழித்தலும் ரயத்துவாரியாக மாற்றுதலும்

அரசுக்கும் நிலத்தை உழுபவருக்கும் இடையிலான ஜமீன் இனாம், கீழ்காணியாட்சி, உடைமைகளையும் மற்றும் இதர சிறப்பு உரிமை முறையையும் ஒழிக்கும் பணி அரசால் பல்வேறு சட்டங்களின் கீழ் அமுலாக்கம் செய்யப்பட்டு இப்பணியின் பெரும்பகுதி முடிவுற்றுள்ளது. இது அரசின் பெரும் விவசாயச் சீர்திருத்தம் ஆகும்.

இவ்வினத்தில் முன்னேற்றம் கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஏற்பட்டுள்ளது:—

(அ) தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம் 1948 (சட்டம் XXVI/48)—

| (1) | மொத்த உடைமைகள். (2) | பரப்பு (ச.கி. மீட்டரில்). (3) |
|---|---|---|
| (1) அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த உடைமைகள். | 5,134 | 29,931.21 |
| (2) 31—12—1985 வரை நிலவரித் திட்டம் செயல்படுத்தப்பட்ட பரப்பு. | 5,134 | 29,931.21 |
| (3) நிலுவை .. .. | இல்லை. | இல்லை. |

(ஆ) தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம் 26/1963 (1963).

| (1) | மொத்த உடைமைகள். (2) | பரப்பு (ச.கி. மீட்டரில்). (3) |
|---|---|---|
| (1) அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட உடைமைகள். | 2,129 | 4,139.43 |
| (2) 31—12—1985 வரை நில வரித் திட்டம் செயல்படுத் தப்பட்ட பரப்பு. | 2,097 | 4,070.20 |
| (3) நிலுவை .. .. | 32 | 69.23 |

(இ) தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலு மான) சட்டம் 1963 (சட்டம் 30/63).

| (1) | மொத்த உடைமைகள். (2) | பரப்பு (ச.கி. மீட்டரில்). (3) |
|---|---|---|
| (1) அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட மொத்த உடைமைகள். | 13,565 | 4,049.02 |
| (2) 31—12—1985 வரை நிலவரித் திட்டம் செயல்படுத்தப்பட்ட பரப்பு. | 13,565 | 4,049.02 |
| (3) நிலுவை .. .. | இல்லை. | இல்லை. |

(ஈ) தமிழ்நாடு குத்தகை நிலங்கள் ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலு மான) சட்டம் 1963 (சட்டம் 27/1963).

| (1) | மொத்த உடைமைகள். (2) | பரப்பு (ச.கி. மீட்டரில்). (3) |
|---|---|---|
| (1) அரசால் எடுத்துக்கொள்ளப் பட்ட மொத்த உடைமைகள். | 13 | 83.20 |
| (2) நிலவரித் திட்டம் செயல்படுத் தப்பட்ட பரப்பு. | 13 | 83.20 |
| (3) நிலுவை .. .. | இல்லை. | இல்லை. |



(உ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்து வாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1969 (சட்டம் 24/69).

| (1) | மொத்த உடைமைகள். (2) | பரப்பு (ச.கி. மீட்டரில்). (3) |
|---|---|---|
| (1) அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட மொத்த உடைமைகள். | 10 | 324.10 |
| (2) நிலவரித் திட்டம் செயல்படுத் தப்பட்ட பரப்பு. | 3 | 146.18 |
| (3) நிலுவை .. .. | 7 | 177.92 |

2. சட்டம் 26/63-ன் கீழ் பாக்கியுள்ள 32 இனாம் எஸ் டேட்டுகளில் 15 இனாம் எஸ்டேட்டுகளுக்கு டெல்லி உச்சநீதிமன்ற தடையாணை தற்போதுதான் நீக்கம் செய்யப்பட்டு நிலவரித் திட்டப் பணிகள் மேற்கொள்ள மேல் நடவடிக்கை தொடரப் படுகிறது. இரண்டாங்கட்டளை என்ற கிராமத்தில் நிலவரித் திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது. இக்கிராமத்திற்கு 1986ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வருவாய்த்துறைக்கு தூய கணக்கு கள் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பாக்கியுள்ள 16 இனாம் எஸ்டேட்டுகள் தடையாணையால் நிலுவையில் உள்ளன.

ரயத்து வாரிப்பட்டா வழங்குதலும் மற்றும் பயனடைவோரும்.

3. 31—12—1985 வரை பல்வேறு சட்டங்களின் கீழான விதிமுறைகளின்படி ரயத்துவாரிப் பட்டா வழங்கப்பட்டுள்ள பட்டாதாரர்களின் எண்ணிக்கை கீழ்க்காணும் பட்டியலில் காணப்படுகிறது :—

| சட்டத்தின் பெயர். (1) | பயனடைந்தோர் எண்ணிக்கை. (2) | பட்டா வழங்கப் பட்ட நிலப்பரப்பு (ஹெக்). (3) |
|---|---|---|
| (1) தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம் 1948 (சட்டம் XXVI/48) | 23,33,840 | 18,17,390 |

[1986 ஏப்ரல் 28

| சட்டத்தின் பெயர். (1) | பயனடைந்தோர் எண்ணிக்கை. (2) | பட்டா வழங்கப்பட்ட நிலப்பரப்பு (ஹெக்). (3) |
|---|---|---|
| (2) தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம் 1963 (சட்டம் 26/63). | 3,56,038 | 1,93,806 |
| (3) தமிழ்நாடு இனாம்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம் 1963 (சட்டம் 30/63). | 5,11,150 | 3,64,246 |
| (4) தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம் 1963 சட்டம் (27/63). | 6,003 | 5,606 |
| (5) கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம் 1969 (சட்டம் 24/1969). | 6,468 | 10,771 |

ஒழிப்புச் சட்டங்களுக்குப் புறம்பாகப் பட்டா வழங்குதல்.

4. தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக
மாற்றுதலுமான) சட்டம் 1948 அமுல்படுத்தப்பட்ட பின்னர்
தான் அரசின் நடைமுறை ஆணைகளின்படி பட்டா வழங்கு
வது தளர்த்தப்பட்டதால் அரசால் அச்சட்டத்தின்கீழ் எடுத்துக்
கொள்ளப்பட்ட உடைமைகளின் மிகப் பெரும்பான்
மையான நபர்கள் பல ஆண்டுகளாக நிலங்களைக் கைப்பற்றி
யும், ஆளுகையிலும் வைத்திருந்தும், அவர்கள் சட்டத்தின் பல
விதிகளின் கீழோ அல்லது அரசின் ஆணைகளுக்குக் கீழோ வரா
மையால் பட்டாபெறும் வாய்ப்பை இழந்துள்ளனர் என்பது
காணப்பட்டது. எனவே அரசு 1971-ல் விளம்பரப்படுத்தப்
பட்ட நாளுக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடர்ந்து
அனுபவத்தில் வைத்திருந்த நிலங்களுக்கும் கைப்பற்றுதாரர்
களுக்கும் பட்டா வழங்கப்படுதல் வேண்டும் என்றும் ஆணை
பிறப்பித்தது. இச்சலுகை பின்னர் சட்டம் 26/63 மற்றும்
30/63-ன் கீழ் வரும் இனங்களுக்கும் நீடிக்கப்பட்டது.

இன்று வரை 22,527 பேர்கள் உடைமைகள் ஒழிப்புச்
சட்டங்களுக்குப் புறம்பாகப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளால்
பயன் அடைந்து 34,191 ஹெக்டேர் நிலங்களுக்குப் பட்டாக்கள்
வழங்கப்பட்டுள்ளன.



1986 ஏப்ரல் 28]

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள ஜென்மம்
உடைமைகள் ஒழிப்பு.

5. நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் மிகப் பெரு
பான்மை நிலப் பரப்பைக் கைவசம் வைத்திருந்த ஜென்
மிகள் சாகுபடி உரிமைகளை வழங்கி குத்தகைக்கு விட்டு
வந்தனர். அக்குத்தகை உரிமை 1929 ஆம் ஆண்டின் மல
பார் குத்தகைதாரர்கள் சட்டத்தினால் ஏற்புடையதாக்
கப்பட்டு குத்தகைதாரர்கள் பயிரிடும் நிரந்தர உரிமையை
பெற்று விட்டனர். ஜன்மம் உரிமை முறையை நீக்கி கைப்
பற்றுதாரர்களுக்கு அவ்வுரிமையை வழங்கவே கூடலூர் ஜென்
மம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம்
1969 (சட்டம் 24/1969) இயற்றப்பட்டது. இச்சட்டம்
27-11-1974 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.
அதன்படி 324.10 சதுர கிலோ மீட்டர் கொண்ட நிலப்
பரப்பு அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு, நில அளவைப்
பணி முடிக்கப்பெற்றது. இப்பரப்பு முழுவதுக்குமான ரயத்
வாரி பட்டா வழங்குவதற்கான சட்ட பூர்வ விசாரணை
பணியும் முடிக்கப்பட்டு விட்டது. சில ஜென்மம் உடைமை
களை கைப்பற்றில் வைத்திருப்பவர்கள் அவர்கள் கைப்
பற்று நிலங்களுக்கு இச்சட்டம் செல்லுபடியாகாதென வா
திட்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் செய்த ரிட் மனுக்கள்
23-9-1976 அன்று தள்ளுபடி செய்யப்பட்டன. ஆனால்
அவர்களில் சிலர் டெல்லி உச்ச நீதி மன்றத்திற்கு மேல்
முறையீடு செய்து தடையாணையும் பெற்றுள்ளனர். உச்ச
நீதி மன்றத்தில் மாற்றப்பட்ட தடையாணையின்படி கூடலூர்
வட்டத்தில் தடையாணைக்குட்பட்ட பகுதியின் சட்டப்
பூர்வ விசாரணை வரையிலான நிலவரித் திட்டப் பணிகள்
வரை நடைபெற்று, அத்துடன் நிறுத்தப்பட்டுள்ளன.
31-12-1985 வரை நிலவரித் திட்டம் 146.18 ச.கி.மீ. பரப்பில்
செயல்படுத்தப்பட்டுள்ளது. ரயத்துவாரிப் பட்டாக்கள் 10 771
ஹெக்டேர் நிலப் பரப்புக்கு 6,468 பேர்களுக்கு வழங்க
பட்டுள்ளன. 177.92 ச.கி. மீட்டரில் நிலவரித்திட்ட அமுலாக்
கம் உச்ச நீதிமன்றத்தின் தடையாணை நீக்கத்தை எதிர்பார்த்து
நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வரியற்ற நிலங்களின் மீது ரயத்துவாரித் தீர்வை
விதிக்கும் சட்டம், 1973.

6. 1859 ஆம் ஆண்டிலிருந்து சில ரயத்துவாரி நிலங்கள்
அவற்றின் மீதான 20 தடவை ஆண்டுத் தீர்வையை செலுத்தி
விட்டு நிலவரி விதிக்கப்படாமல் வரியில்லாமல் கைப்பற்றில் உள்
ளன. வேறு சில நிலங்கள் நிலவரியை சலுகை விகிதத்தில்
செலுத்தியபடி கைப்பற்றில் உள்ளன. இவை வரியற்ற நிலங்
கள் என சொல்லப்படுகின்றன. இவற்றிற்கும், மற்ற ரயத்து
வாரி நிலங்களுக்கும் உள்ள ஒரே வித்தியாசம் என்னவெனில்
முன்னதில் ரயத்துக்கள் ஆண்டு தோறும் தீர்வை செலுத்துகின்

றனர். பின்னதில் சில இனங்களுக்கு தீர்வையே கிடையாது. மற்றும் சில இனங்களுக்கு சலுகை தீர்வை வசூலிக்கப்படுகிறது என்பதே. 1972 ஆம் ஆண்டில் அத்தகைய வரியற்ற வரி குறைந்த நிலங்களை ஒழித்து அவற்றை ஏனைய ரயத்து வாரி நிலங்களுக்குள்ளது போன்ற தீர்வை முறையே அமுல் படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இச் சட்டத்தின்படி, இந்த நோக்கத்தை அடைவதற்கு 1972 வரியற்ற நிலங்களுக்கு (வரி விதித்தல் சட்டம்) 31/73, 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் தேதி அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

6. (1) இச் சட்டம் தமிழ்நாட்டில் 12 மாவட்டங்களில் 4,777.23 ஹெக்டேர் விஸ்தீரணத்திற்கு வரியற்ற நிலங்கள் என உள்ளனவற்றிற்குப் பொருந்தும். இதனுடன் 231.56 ஹெக்டேர் நிலங்கள் ''மோஹினி இனாம் நிலங்கள்'' என்ற பெயரில் தஞ்சாவூர் மாவட்டத்தில் சட்டத்தின் 2-வது ஷெட்யூலில் காணப்படுகின்றன.

(2). மோஹினி நிலங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கும்பகோணம், மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் நன்னிலம் ஆகிய வட்டங்களில் மத சம்பந்தமான நிலங்களின் கைப்பற்றில் உள்ளன. சட்டத்தின் பட்டியலுக்கு மேலும் கூடுதலான வரியற்ற நிலங்களுக்கு இணைப்புப் பட்டியல் தயாரித்து 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் விளம்பரம் மூலம் சேர்க்கப்பட்டது.

இச் சட்டத்தை (31/73) அமுலாக்கம் செய்ய சட்டப் பிரிவு 8-ன் கீழ் மாவட்டம் வாரியாக அறிவிக்கைகள் (பெரியார் மாவட்டம் தவிர) அரசின் ஏற்புடன் பிரசுரிக்கப்பட்டன.

இச் சட்டத்தின் கீழ் இதுவரை 97 கிராமங்களில் 76.02 ச.கி. மீட்டருக்கு பணி முடிவுற்றுள்ளது. பாக்கியுள்ள 19.10 ச.கி.மீ. பரப்பில் இச் சட்டம் அமுல் படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

வருவாய் பின் தொடர்பணி

7. மாநிலத்தில் சில பகுதியில் காலப் போக்கில் அசல் நில அளவை உருவழிந்துள்ளதாலும், உள்ள ஆவணங்களைக்கொண்டு பராமரிப்புப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலாமையாலும் அரசின் ஆணை பெற்று அப்பகுதிகளில் மறு நில அளவை மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து அங்கு நில உடமைகளை மேம்படுத்தி பராமரிப்புக்குகந்ததாகச் செய்ய மறு நிலவரித் திட்டம் மேற்கொள்வதற்குப் பதிலாக வருவாய் பின்தொடர்ப் பணி மேற்கொள்ளப்படுகிறது. வருவாய்ப் பின் தொடர் பணிக்கும் மறு நிலவரித் திட்டத்திற்கும் இடையான





முக்கியமான வேறுபாடு மண் நயனம் வகைப்பாடு, தீர்வை விதிப்பு வீதம் ஆகியவை வருவாய் பின் தொடர் பணியில் மாற்றப்படுவதில்லை என்பதே. மறு நில அளவை ஆவணங்களைக் கொண்டு நில உடமைகளை மேம்படுத்தியும் பழைய தீர்வை விகிதங்களை அப்படியே வைத்துக் கொண்டும் ஒரு புது கிராம ஆவணங்களின் தொகுப்பு தயாரிக்கப்படுகிறது.

வருவாய் பின் தொடர் பணி கீழ்க் காணும் வட்டங்களில் முடிக்கப் பெற்றுள்ளது

| மாவட்டம் | வட்டம். | பரப்பு. (ச.கி.மீ.) | பயனடைந்தோர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பெரியார் | கோபிசெட்டிப் பாளையம் | 657.67 | 88,182 |
| டி | சத்தியமங்கலம் | 729.07 | |
| டி | பவானி | 699.17 | 47,202 |
| டி | ஈரோடு | 1,548.79 | 139.632 |
| தென்னாற்காடு | கடலூர் | 649.13 | 64,785 |
| டி | திண்டிவனம் | 1,404.14 | 41.476 |
| சேலம் | மேட்டூர் | 237.67 | 9.646 |
| மதுரை | கொடைக்கானல் | 392.10 | 16,687 |
| நீலகிரி | கூடலூர் | 413.06 | 961 |

[1986 ஏப்ரல் 28

வருவாய் பின் தொடர்பணி மேற்காணும் மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளது அதன் விவரம் வருமாறு

| மாவட்டம். | வட்டம். | மொத்த விஸ்திரணம் (ச.கி.மீ.) | பணி முடிவு பெற்றவை (ச.கி.மீ.) | பணி நிலுவையிலுள்ளவை. (ச.கி.மீ.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| பெரியார் | தாரர்புரம் | 767.20 | 310.19 | 457.01 |
| | காங்கேயம் | 491.54 | 113.07 | 378.47 |
| வடஆற்காடு | திருவண்ணாமலை. | 264.56 | 105.92 | 158.64 |
| | வேலூர் | 60.87* | .. | 60.87 |
| | வாணியம்பாடி | 23.66* | .. | 23.66 |
| நீலகிரி | உதகமண்டலம் | 1,195.03 | 334.51 | 820.52 |
| | கூனூர் | 223.33 | .. | 228.33 |
| | கோத்தகிரி | 279.99 | .. | 279.99 |

தஞ்சாவூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரே நிலவரித் திட்ட அலுவலர் பணிபுரிகிறார். அவரின் கீழ் தஞ்சாவூர், மதுரை, திருவண்ணாமலை, தாராபுரம் கூனூர் ஆகிய இடங்கள்கிளை நிலவரித் திட்ட அலுவலகங்கள் எஞ்சிய நிலவரித் திட்டப் பணிகளையும் சட்டம் 31/73-ன் கீழ் நிலவரித் திட்டப் பணிகளையும் மற்றும் வருவாய்ப் பின் தொடர் பணிகளையும் மேற்கொண்டு இயங்கி வருகின்றன.

'ல்வேறு உடமைகள் ஒழிப்புச் சட்டங்களின்கீழ் ஈட்டுத்தொகை மற்றும் அரசுக் கொடைகள்:

8. நில உடைமையாளர்கள் மற்றும் இனாம்தாரர்கள் ஆகியோரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களில் மேல் முறையீடுகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இவைகளைத் தவிர ஏணைய நிலங்களுக்குப் பல்வேறு ஒழிப்புச் சட்டங்களின்கீழ் அனுமதிக்கப்படும் ஈட்டுத்தொகை நிர்ணயிக்கப்

(*) திருத்திய பரப்பளவு அனுசரிக்கப்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 28]

கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மதம் சார்ந்த நிறுவனங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவற்றின் கைவசமிருந்த உடமைகளுக்கு நட்ட ஈட்டுத் தொகை அரசுக் கொடையாக ஆண்டு தோறும் அச்சட்டங்களில் வரை செய்துள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

504-ஏ. ஏனைய பொதுவான பொருளாதாரப்பணிகள் குறித்த மூலதனச் செலவு ஏ.பி. ஜமீன்தார் முறை ஒழிக்கப்படுவதன் மேல் நிலக்கைப் பற்றுதாரர்களுக்கு இழப்பீடு முதலியன. மேற்கண்ட அரசுத் தலைப்பின் கீழ் கொடுக்கப்படும் நட்ட ஈடுகள் குறித்த குறிப்பு:

அரசுக்கும், ஜமீன், கீழ்க்காணியாட்சி, இனாம் மற்றும் இதர சிறப்பு உரிமம் முறைகளின் கீழ் நிலத்தை உழுபவருக்கும் இடையில் தரகர்களை ஒழிப்பதற்கென அரசு பல்வேறு ஒழிப்புச் சட்டங்களை உருவாக்கியுள்ளது. அச்சட்டங்களின்கீழ் ரயத்துவாரி நிலவரித் திட்டம் அமுலாக்கப்படும்போது இறுதியில் இடைத்தரகர்களான ஜமீன்தார், இனாம்தார் போன்ற நிலச்சுவான்தார்களுக்கு நட்ட ஈட்டுத் தொகை வழங்க வழிவகை செய்துள்ளது. இத் தொகை நிலவரித் திட்டம் அமுலாக்கப்பட்ட பிறகே நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, உடைமைகளை அரசு எடுத்துக்கொள்ளும்போது இடைத்தரகர்களுக்கு (ஜமீன்தார், இனாம்தார்) ஒரு தோராயமான தொகை வழங்கப்படுகிறது. இதற்கு ''இடைக்காலத் தொகை'' எனக் கூறப்படுகிறது. மத நிலையங்கள், தர்ம சத்திரங்கள், கல்வி-நிறுவனங்கள் போன்றவைகளுக்கு ஆண்டு தோறும் ஈட்டுத் தொகையாக கொடுப்பது ''தஸ்திக் கொடை'' எனப்படும். இத்தொகை உடைமைகளின் ஆண்டு அடிப்படை தொகையாக நிர்ணயம் செய்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பல்வேறு சட்டங்களின் கீழ் இதுவரை 21,816 உடைமைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நிலவரித் திட்டம் அமுலாக்கப்பட்டது. அவ்வுடைமைகளின் நிலச்சுவான்தார்களுக்கு இறுதி நட்ட ஈட்டுத் தொகையாக இதுவரை ரூ. 7,66,42,915.22 பல்வேறு சட்டங்களின் கீழ் தீர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. அதுபோல இடைக்காலத் தொகையாகவும் ரூ. 2,45,28,874.17 வழங்கப்பட்டன. மத, தர்ம, மற்றும் கல்வி நிலையங்களுக்கு அதாவது சமய சார்புடைய நிறுவனங்கட்கு அவர்களது பணிகள் தடையின்றி நடைபெறுவதற்கும் இச் சட்டத்தின் கீழ் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்வதற்கும் ''தஸ்திக் கொடை'' ஆண்டு தோறும் வழங்கப்படுகின்றன. இதுவரை ரூ. 8,15,148.28 தஸ்திக் படி வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு ஒழிப்புச் சட்டங்களின் கீழ் தஸ்திக் படி, இறுதி நட்ட ஈட்டுத்தொகையை தஸ்திக் கொடை உட்பட நிர்ணயிக்கும் பணி நிலவரித்திட்ட இயக்குநரைச் சார்ந்ததாகும். ஒவ்வொரு உடைமைக்கும் நிர்ணயிக்கப்பட்ட தொகையைத் தனித்தனியே ஒவ்வொன்றிற்கும் அரசின் ஒப்புதல் பெறப்பட்டே வழங்கப் படுகின்றன. பெரும்பாலும் தமிழ் நாட்டில் எல்லா உடைமை களும் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டன. எஞ்சிய 49 உடை மைகள் நீதி மன்ற தடையாணைகளால் பாதிக்கப்பட்டுள்ளன. அவைகள் தடையாணை நீங்கிய பின் அரசால் எடுத்துக் கொள்ளப் படும்.

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசப் பிரிவினையை "படாஸ்கர் அவார்டி"ல் செயல்படுத்திய வகையில் தமிழ் நாட்டிற்கு 112 உடைமைகள் வந்து சேர்ந்துள்ளன.

சட்டம் XXVI/48 பிரிவு 54 (பி)ன் கீழ் முன்னாள் நிலச் சுவான்தார்களுக்கு (ஆந்திரா, தமிழ்நாடு) மாநிலம் முழுமைக்கும் நட்ட ஈட்டுத் தொகை வழங்க 12¼ கோடி ரூபாய் ஒதுக்கப்பட் டுள்ளது. இது சம்பந்தமான ஆந்திர பிரதேச அரசுடன் தமிழ் நாடு அரசு கடித தொடர்பில் உள்ளது. தமிழ்நாடு பொறுத்த வரையில் இதுவரை நட்ட ஈட்டுத் தொகையாக ரூ. 7,66,42,945 நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளன.

சென்ற நிதியாண்டில் 1985—86ல் "ஏஏ. இழப்பீடு" தலைப் பின்கீழ் ரூ. 1,50,000-ம் "ஏபி. இடைக்காலத் தொகை" தலைப் பின்கீழ் ரூ. 75,000ம் ஒதுக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு முடிய தொகை ரூ. 89,560.90 "ஏஏ. இழப்பீடு" என்ற தலைப்பிலும், தொகை ரூ. 38,743.90 "ஏபி. இடைக்காலத் தொகை" என்ற தலைப்பிலும் செலவழிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய தொகையை செலவழிக்க முடியாமைக்கு காரணம் சிவில், நீதி மன்றங்களில் உள்ள இனங்கள் முடிவுறாததினாலும் மற்றும் நிலுவையினங்கள் நீக்கப்பெறாததும் ஆகும். 1986—87-க்கு தஸ்திக் படியைப் பொறுத்த வகையில் மத நிலையங்களுக்குத் தொகை ஏசி. ரூ. 27,50,000 சமயம் தர்ம சத்திரங்களுக்கு தொகை ஏடி. ரூ. 7,45,000 அறநிலையம் கல்வி நிறுவனங்களுக்கு தொகை எயி. ரூ. 11,000 கல்வி நிதி ஒதுக்கிடு நிதியாண்டு 1986—87-க்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

நிலவரித் திட்ட இயக்குநர் இழப்பீடு தொகையை நிர்ணயித்து சம்பந்தப்பட்ட எஸ்டேட் ஒழிப்பு மன்றத்தில் வைப்புத்தொகை யாக அனுப்பப்பட்டுள்ளன. இம்மன்றங்களின் நில உரிமைதாரர் களுக்கு பல்வேறு சட்டங்களின் உட்பிரிவில் உள்ள அதிகாரங் களுக்கு இணங்க தொகை பிரித்து வழங்கப்படுகின்றன.





நில அளவைப் பணிகள்.

தமிழ்நாட்டில் உள்ள கிராம மற்றும் நகர்ப்புறங்களுக்குரிய படங்களைத் தயாரித்து அவற்றைப் பராமரிப்பதும் நில அளவை மற்றும் நிலப் பதிவேடுகள் துறையின் பொறுப்பாகும். நகரத்தி லுள்ள பகுதிகளிலும், விவசாயப் பகுதிகளிலும் தேவைக்கேற்ப மூல அளவை, மறு அளவை அல்லது துணை அளவை இத்துறை யில் மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறு அளவை செய்து கிராம படங்கள், வட்டப் படங்கள், மாவட்டப் படங்கள் மற்றும் நகரப் படங்கள் இத்துறையில் தயாரிக்கப்படுகின்றன. நகரப் படங் களுடன் மேலும் நகரிலுள்ள ஒவ்வொரு நபரின் நிலச் சொத்தின் எல்லைகள், பரப்பு முதலியவைகள் அளவை செய்யப்பட்டு (பிளாக்)(வார்டு) மற்றும் நகரப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. கைப்பற்றிலுள்ள நிலங்கள் நாளது தேதி வரை ஏற்படும் பாகப் பிரிவினை, கிரயம் பரம்பரை பாத்தியம் தானமாகக் கொடுத் தல் அல்லது பரிவர்த்தனை போன்றவற்றால் ஏற்படும் மாறுதல் களை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மேற்கொண்டு அவற்றைப் பராமரித்து வருவதும் இத்துறையின் பொறுப்பாகும்.

நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் நில அளவை துறைக்கும் துறைத் தலைவர் ஆவார். அவருக்கு நில அளவைத் தொடர்பாக நில அளவைப் பிரிவு செயல் முறைகளில் உதவு வதற்கு நில அளவை மற்றும் நில அளவை பதிவுருக்கள் துறை, கூடுதல் இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் இத்துறை யில் மூன்று மண்டலத் துணை இயக்குநர்களும், இவர்களின் கீழ் மாவட்ட நில அளவை அலுவலகங்களில் பணியாற்ற 19 உதவி இயக்குநர்களும், 10 தனி உதவி இயக்குநர்களும் உள்ளனர். தலைமையிடமாகிய சென்னையில், நில அளவை மத்திய அலு வலகம், ஒரு துணை இயக்குநரின் கீழ் இயங்கி வருகிறது. இத் துணை இயக்குநருக்கு உதவியாக, வரைபடப் பிரிவுக்கு ஒரு உதவி இயக்குநரும், ஆவணப் பிரிவுக்கு ஒரு உதவி இயக்குநரும், நிழற்பட சிங்கோ அச்சகத்திற்கு ஒரு பணி மேலாளரும், மற்றும் அலுவலக நிர்வாகத்தைக் கவனிக்க ஒரு நிர்வாக அலுவலரும் செயல்பட்டு வருகின்றனர். இத்தலைமை அலுவலகம், அரசுத்துறை சம்பந்தப்பட்ட படங்களைத் தயாரிப் பதுடன், வருவாய்த்துறை மற்றும் நில அளவைத் துறை ஆகிய வற்றிற்குத் தேவையான கருவிகளையும், மற்றும் இதரப் பொருள் களையும் வாங்கி வழங்குவதற்கான பணிகளையும் மேற்கொண் டுள்ளது. வரைபடம் தயாரிப்பில், தனி உத்திகளைக் கையாள் வதின் மூலம் தயாரிப்புத் தன்மையின் தரத்தை மேம்படுத்தும் வகையில் நவீன வரைபடக் கருவிகள் "ஸ்கிரைபின்" மேஜைகளும் உபயோகிக்கப்படுகின்றன.

புதிய திட்டம் :

ஏற்கனவே தீவிர உட்பிரிவுத் திட்டத்தின் கீழ் இருந்த 49 வட்டங்களில் நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டப்பணி 1985–86ஆம் ஆண்டில் இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இத்துடன், 'நத்தம் அளவை' விவசாயத்திற்குப் பயன்படாத விவசாய நிலங்களை அளித்தல் முதலிய புதிய திட்டமும், மலைவாழ் பழங்குடியினருக்கும் பட்டா வழங்குவதற்கு குன்றுகள் அளவை, முதலிய திட்டங்களைத் தொடர அரசு கருதியுள்ளது.

நில அளவை ஆவணங்களைப் பராமரித்தல்:

நில அளவை ஆவணங்களைப் பராமரிக்கும் பணி, வட்ட ஆட்சியர்களால், அவர்களின் கீழ் உள்ள நில அளவை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களின் உதவியுடன் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இப்பணி வருவாய் கோட்ட அதிகாரிகளால், மேற்பார்வையிடப்படுகிறது. இப்பணியின் முன்னேற்றத்தை மாவட்ட நில அளவை அலுவலக உதவி இயக்குநர் (நில அளவை தொடர்பான பணிகளில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்) உதவியுடன் மாவட்ட ஆட்சியர் அல்லது துணை ஆட்சியாளர் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரிகள் ஆய்வு செய்கின்றனர். மாநில அளவில் நில நிருவாக சிறப்பு ஆணையரால் இப்பணி ஆய்வு செய்யப்படுகிறது. பராமரிப்புப் பணியில் பட்டா மாறுதலில் உட்பிரிவு செய்ய வேண்டிய, அல்லது வேண்டாத இனங்களும் புதிய உட்பிரிவில் ஏற்படுத்தக் கோரும் மனுக்களும், எல்லை குறித்துக் காண்பிக்கக் கோரும் மனுக்களும், எல்லை கற்களை ஆய்வு செய்தலும், காணாமல் போன கற்களைப் புதுப்பிப்பதும் அடங்கும்.

நகர்ப்புற அளவை:

நகர்ப்புறத்தில் முதல் அல்லது மறுநில அளவைக்குப் பின் நில அளவைத் துறையினரால் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு நில அளவைத் துறை பணியாளர்கள் உதவியுடன் வருவாய்த் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறையினரால் கோரப்பட்ட விகிதாசாரப்படி, நில அளவைச் செலவு தொகையை அவர்கள் ஏற்றுக் கொண்டதால், இந்த அளவை மேற்கொள்ளப்பட்டது. இந்த வருடத்தில் அறிக்கைப்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோடு மற்றும் ஆத்தூர், நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம் ஆகிய நகரங்களின் நகர அளவை முடிக்கப்படும். மேலும் 1986–87ஆம் ஆண்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் அம்பத்தூர், ஆவடியிலும், சேலம் மாவட்டத்தில் குமாரபாளையம், அக்ரஹாரத்திலும், தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரியிலும், நகர அளவை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.





தெரு அளவை :

நகர பஞ்சாயத்துக்கள் மற்றும் பஞ்சாயத்துக்கள் எல்லைக்குட்பட்ட தெருக்கள், சந்துக்கள், ஆகியவை தெரு நில அளவை செய்யப்படும். இந்த அளவையில் ஏற்படும் செலவுத் தொகையில் 1/3 பாகம் ஏற்றுக் கொள்வதாக சம் பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் ஒத்துக் கொண்டு, தெருக்களை அளவை செய்து தருமாறு கேட்டுக் கொள்வதன் பேரிலேயே இப்பணி இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது. செங்கல் பட்டு மாவட்டத்தில் மாமல்லபுரம் தெரு அளவையும், தென் ஆற்காடு மாவட்டத்தில் நெய்வேலி நகராட்சி விரிவுபடுத்தப் பட்ட பகுதிகளில் நகர அளவையும், மாமல்லபுர பஞ்சாயத் தும், நெய்வேலி நகராட்சியின் வேண்டுகோளின் பேரில் அளவையை மேற்கொள்ள இத்துறை தீர்மானித்துள்ளது.

நத்தம் அளவை:

கிராமங்களிலுள்ள நத்தங்கள் விரிவாக தற்போது அளவை செய்யப்படவில்லை. நத்தப் புலங்களின் வெளி எல் லைகள் மட்டும் நிர்ணயிக்கப்பட்டு, குடியிருப்புக்களிலுள்ள முக்கியமான பொதுக் கட்டிடங்கள் மட்டுமே விளக்கினமாகக் குறிக்கப்படுகின்றன. தமிழ்நாடு பட்டா பதிவுப் புத்தகச் சட்டம் நிறைவேறி வெளியிடும்போது, 1986–87ஆம் ஆண்டில் விரிவான நத்தம் அளவை பணியினை மேற்கொள்ள இத்துறை தீர்மானித்துள்ளது.

நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்:

மறு நில அளவை மேற்கொள்ளப்படாததால் நில அள வைப் பதிவு ஆவணங்களை இன்றைய நிலைக்கேற்ப மாற்றி அமைப்பது மிக அவசியமென உணரப்பட்டது. இந்த நோக் கத்தை குறைந்த செலவிலும், குறைந்த கால அளவிலும் அடை வதற்கு நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் 1979ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் கிராமத்திலுள்ள எல்லா பயிர் விளை நிலங் களிலும் துணை அளவை மேற்கொள்ளப்பட்டது. இதில் புலங்களுக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வெளி எல்லையை எதுவும் மாற்றாமல், புலத்தில் அடங்கியுள்ள புதிய உட்பிரி வுக்கு மட்டுமே அளவைச் செய்யப்பட்டது. மேலும் துணை நில அளவையும் வருவாய் தொடர் பணியையும் ஒருங்கே இணைத்து நில அளவைக்கென ஏற்படுத்தப்பட்ட அலுவலகத்தி லேயே நில அளவைத் துறை அலுவலர்களைக் கொண்டு ஒரு நில அளவை ஆய்வாளர் மற்றும் தனி வட்டாட்சியர் ஆகி யோரின் தலைமையின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு புலத்திலும் மேற்கொள்ள வேண்டிய மற்றும் பரிசீலனையில் காணாமல் போன கற்களைப் புதுப்பித்தும் புதிய விளக்கிகள் மற்றும் தேவையான புதிய உட்பிரிவுகள் அளக்கப்பட்டும், 'அ' பதிவேடு, சிட்டா, அடங்கல், புலப் படச் சுவடி, கிராமப் படம் ஆகியவற்றில் திருத்தங்கள் மேற் கொண்டு அவை புதிதாகத் தயாரிக்கப்பட்டன. இப்புதிய ஆவணங்களின் அடிப்படையில் ஒவ்வொரு பட்டாதாரருக்கும் அவரது அனுபவத்தில் உள்ள நிலத்தை குறித்து விவரங்களுடன் நிலத்தின் தோராய படத்துடன் புதிய பட்டா வழங்கப் பட்டது. வழங்கப்பட்ட பட்டாக்களில் ஏதேனும் தடைகள் இருப்பின், அதனைக் கேட்டறிந்து, ஆவணங்கள் சரி செய் யப்பட்டு, வட்டாட்சியருக்கு பராமரிப்பிற்காக வழங்கப்படு கின்றன. இந்த எளிய நடைமுறையினால், கிராமங்களின் ஆவணங்கள் சுமார் 10 மாத காலத்திற்குள் நவீனப்படுத்த இயலுகிறது. அதே சமயம், இதற்காகும் செலவு, கிராமத் திற்கு மறு நில அளவையும், வருவாய் தொடர் பணியும் மேற்கொண்டால், ஏற்படும் செலவைக் காட்டிலும் குறை வானதேயாகும்.

1979 ஆம் ஆண்டில் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் 30 வட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த 28 அலகுகளை ஏற்படுத்துவதற்கு அத்தியாவசியத் தேவையாக பெரும்பாலும் வருவாய் பணியாளர்களுக்கு மட்டுமே அரசின் அனுமதிப்பெறப்பட்டது. 1982 ஆம் ஆண்டு அத்திட்டத்தின் நடைமுறை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் பயன்குறித்து திருப்தி அடைந்தபடியால், 1982 ஆம் ஆண்டில் கூடுதல் அலுவலர்களை நியமிக்க அரசு அனுமதி அளித்து, 70,485 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள 99 வட்டங்களில் 108அலகுகள் ஆரம்பிக்கப்பட்டன. முதல் பகுதியாக களப்பணி 30-9-1985ல் முடிக்கப்பட்டு அலுவலகத் தொடர் பணி 31-3-1986 உடன் முடிவுற உள்ளது.

முதற் கட்டமாக 31—1—1986 வரை வெற்றிகரமாக இத்திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட பல்வேறு பணிகளின் விவரம் பின்வருமாறு.

| | கிராமங்களின் எண்ணிக்கை. | பரப்பளவு ச.கி.மீ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மொத்த பரப்பளவு .. | 9,942. | 70,485 |
| அளக்கப்பட்ட பரப்பளவு .. | 9,942 | 70,485 |





| | கிராமங்களின் எண்ணிக்கை. | பரப்பளவு ச.கி.மீ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 3. தூய கணக்குகள் ஒப்படைக்கப்பட்ட பரப்பு. | 9,684 | 68,054 |
| 4. பட்டா வழங்கப்பட்ட பரப்பு .. | 9,922 | 70,238 |
| 5. மத்திய நில அளவை அலுவலகத் திற்கு அனுப்பப்பட்ட பரப்பு. | 8,095 | 55,485 |
| 6. 13-வது இறுதி விளம்பரம் செய்யப் பட்ட பரப்பு. | 8,308 | .. |
| 7. அளக்கப்பட்ட உட்பிரிவுகளின் எண்ணிக்கை. | .. | 86,58,973 |
| 8. புதுப்பிக்கப்பட்ட உட்பிரிவுகளின் எண்ணிக்கை. | .. | 25,51,982 |
| 9. ஆக்கிரமிப்புகள் தெரிவிக்கப்பட்ட எண்ணிக்கை. | .. | 85,213 |
| 10. அளந்து குறிக்கப்பட்ட விளக்கிகளின் எண்ணிக்கை. | .. | 7,04,093 |
| 11. முடிக்கப்பட்ட ஆட்சேபணைகளின் எண்ணிக்கை. | .. | 2,51,813 |
| 12. தர மாற்றம் தேவையினை அறி விக்கப்பட்ட இனங்களின் எண் ணிக்கை. | .. | 28,158 |
| 13. வழங்கப்பட்ட பட்டாக்களின் எண் ணிக்கை. | .. | 75,00,280 |
| 14. பயனடைந்தோரின் எண்ணிக்கை | .. | 1,09,38,665 |

[1986 ஏப்ரல் 28

| திட்டத்தின் பயன். | தனிப்பட்டா எண்ணிக்கை. | கூட்டுப் பட்டா எண்ணிக்கை. | மொத்த எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பு. | 31,50,383 | 22,09,602 | 53,59,985 |
| 2. நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்திற்குப்பின். | 53,02,093 | 19,98,187 | 73,00,280 |

இரண்டாவது கட்டமாக 49 வட்டங்களில் 31—1—1986 வரை இத்திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட பல்வேறு பணிகளின் விவரம் பின்வருமாறு :—

| | கிராமங்களின் எண்ணிக்கை. | பரப்பளவு ச.கி.மீ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. மொத்த பரப்பளவு .. .. | 4,939 | 27,894 |
| 2. அளக்கப்பட்ட பரப்பளவு .. | 236 | 1,363 |
| 3. பட்டா வழங்கப்பட்ட பரப்பு .. | 2 | 4 |
| 4. அளக்கப்பட்ட உட்பிரிவுகளின் எண்ணிக்கை. | 1,07,317 | 1,52,693 |
| 5. புதுப்பிக்கப்பட்ட கற்களின் எண்ணிக்கை. | 25,192 | 37,278 |
| 6. ஆக்கிரமிப்புகள் தெரிவிக்கப்பட்ட எண்ணிக்கை. | 762 | 1,782 |
| 7. அளந்து குறிக்கப்பட்ட விளக்கிகளின் எண்ணிக்கை. | 13,229 | 20,192 |
| 8. முடிக்கப்பட்ட ஆட்சேபணைகளின் எண்ணிக்கை. | .. | .. |
| 9. தரமாற்றம் தேவையினை அறிவிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை. | 278 | 278 |
| 10. வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. | 203 | 449 |
| 11. பயனடைந்தோரின் எண்ணிக்கை. | 320 | 834 |



1986 ஏப்ரல் 28]

| திட்டத்தின் பயன். | தனிப் பட்டா எண்ணிக்கை. | கூட்டுப் பட்டா எண்ணிக்கை. | மொத்த எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பு. | 224 | 335 | 559 |
| 2. நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்திற்கு பின்பு. | 296 | 153 | 449 |

வட்ட அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்ட கணக்குகளை நாளது தேதிக்கு துல்லியமாக வைத்துக் கொள்ள கணக்குகளை சீராகப் பராமரிக்கும் (Re-Vamping Scheme) திட்டத்திற்கு முன்னோடித் திட்டமாக (Pil.t Scheme) செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி வட்டத்திலும் மதுரை மாவட்டத்தில் மேலூர் வட்டத்திலும் சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டத்திலும் ஆக மூன்று வட்டங்களிலும் 5—2— 1986 முதல் செயல்படுத்தப் பட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டத்தின் பயனறிந்து, கணக்குகளை சீராகப் பராமரிக்கும் திட்டம் (Re-Vamping Scheme) இதர பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

### நில அளவை மத்திய அலுவலகம்.

வரைப்படப் பிரிவு :

நில அளவை மத்திய அலுவலகத்தில் உள்ள வரைப்படப் பிரிவின் முதன்மையான பணி கிராமம், நகரம் மற்றும் தெரு பஞ்சாயத்துக்களின் படம் மற்றும் வட்ட, மாவட்ட, மறுபதிப்புப் படம் தயாரிப்பதாகும். தற்போது நாட்டில் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு, இதில் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கான கிராமப் படங்களை இன்றைய நிலவரத்திற்கேற்ப மறு பதிப்பு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியில் அளக்கப்பட்ட 3,397 கிராமப் படங்களின் படங்களை மாவட்டங்களிலிருந்து பெற்று மறுபதிப்பு தயாரித்து அச்சிடப்பட்டு பராமரிப்புக்காக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றில் 844 கிராமங்களின் படங்கள் தயாரிப்பும், பதிவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதைத் தவிர 30 பஞ்சாயத்துக்களுக்கும் ஆவணங்கள் மாவட்ட அலகுகளிலிருந்து பெறப்பட்டன. இவற்றில் 27 பஞ்சாயத்துக்களுக்கு அலுவலகப் பணி முடித்து படங்கள் அச்சிடப்பட்டு, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கு பராமரிப்புக்காக வழங்கப்பட்டன.

போட்டோ சிங்கோ அச்சகம்:

போட்டோ லித்தோ கிராபி உத்திகளைக் கையாண்டு அரசுத் துறைகளுக்குத் தேவையான படங்கள், சார்ட் முதலான வற்றையும் கிராம, வட்ட மற்றும் நகரப் படங்கள் கருப்பு மற்றும் ஆறு வண்ணங்களிலும் மறு பதிப்பு செய்து அச்சிடுவது போட்டோ சிங்கோ அச்சகத்தின் முதன்மையான பணியாகும். இதைத் தவிர, அரசின் பிற துறைகளுக்கும் உள்ளாட்சித்துறை மற்றும் பிற மாநிலங்களின் அரசுகளாலும் கேட்கப்படும் படங்களை அச்சிட்டுத் தரும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. பிற அரசுத் துறைகளுக்காக செய்யப்படும் பணிகளுக்கான செலவு நில அளவைத் துறை நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாத லால், இவ்விலாக்காக்களுக்காக செய்யப்படும் பணிகளுக்குரிய செலவுத் தொகையை அவர்களிடமிருந்து சரிக்கட்டும் பட்டியல் மூலம் வசூலிக்கப்படுகிறது. இவ்வாறாக போட்டோ சிங்கோ அச்சகம் அரசுக்கு வருவாயை ஈட்டித் தரும் அலகாக இயங்கு கிறது.

மேற்படி அச்சகம் பணி மேலாளரின் மேற் பார்வையிலும் அவருக்கு உதவியாக உள்ள உதவிப் பணி மேலாளரின் மற்றும் பல பிரிவு பணியாளர்களின் உதவியுடனும் இயங்கி வருகிறது. இவ்வச்சகம் கிராம ஆவணங்களை 1:5000 என்ற மெட்ரிக் முறையில் போட்டோ எடுத்து மறு மதிப்பு செய்யப்படுகிறது.

பண்டக நிருவாகப் பிரிவு:

நில அளவை துறைக்கும், சுற்றுக் குழு அலுவலர்கள், மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியவர்களுக்கும் தேவைப்படும் தியாட லைட், நில அளவைகள் கருவிகள், சங்கிலி மற்றும் கிராஸ்டர் வரைப்படம் கருவிகள் மற்றும் இதரப் பொருள்கள் சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தால் வாங்கப்பட்டு சம்பந் தப்பட்டவர்களுக்கு முக்கியமாக வருவாய்த் துறைக்கு அவர் களின் தேவைக்கேற்ப விநியோகம் செய்யப்படுகிறது.

19. நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டம்:

1972 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டம் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும், ஒரு கோடிக்கு மேல் நில உரிமைப் பதிவேடு புத்தகங்கள் பட்டாதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்நில உரிமைப் பதிவேடு புத்தகம், நிலப் பட்டாதாரர்கள் தங்களிடமுள்ள நில உடைமைகளின் நாளது வரையிலான விவரங்களை உள்ளடக்கியுள்ளது. இது வருவாய்த்துறை நிர்வாகத்திற்கு ஒரு பயனுள்ள புத்தகமாக உதவும். ஆனால் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நில உரிமைப் பதிவேடு புத்தகம் சட்ட அடிப்படையில் இல்லை. நிதித் துறையைச்



சார்ந்த மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை,
முன்னோடி ஆய்வு ஒன்றை மேற் கொண்டது. அதன்படி நில
உரிமைப் பதிவேடு திட்டத்தைத் திறமையான முறையில்
செயல்படுத்துவது பற்றி ஆய்வு செய்ய முன்னாள் வருவாய் வாரி
யத்தின் நிலவரி ஆணையாளரின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டது.
உழவர்கள் பயனடையும் வகையில் நில உரிமைப் பதிவேடு
மாற்றி அமைக்கப்பட வேண்டுமென அக்குழு கருத்து தெரிவித்
தது. நிதி உதவும் நிறுவனங்கள் மற்றும் கடன் வழங்கும் நிறு
வனங்கள் ஆகியவை நில உரிமைப் பதிவேட்டைத் தாக்கல்செய்த
வுடன் கடன்கள் வழங்க இயலும் வகையில் நில உரிமைப் பதி
வேட்டுக்கு சட்டத் தகுதி நிலை கொடுக்க சட்டமியற்றவும்,
பதிவு அலுவலகங்களில் நில விற்பனை, அடமானம் போன்ற
சொத்து மாற்றம் பற்றிய ஆவணங்களைப் பதிவு செய்யும்போது
பதிவுகளைச் செய்வதற்காகவும் நில உரிமைப் பதிவேடு
கொண்டு வரப்பட வேண்டும் என வலியுறுத்தப்படவும் குழு
பரிந்துரை செய்தது.

2. மேற்சொன்ன நோக்கங்களுக்காக தமிழ்நாடு நில
உரிமைப் பதிவேடு சட்டம், 1983 (1986 ஆம் ஆண்டு 4-வது
சட்டம்) இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, நிலத்தின்
உரிமையாளர் ஒவ்வொருவருக்கும், அவர், அந்த வட்டத்தில்
சொந்தமாக வைத்துள்ள நிலங்களுக்கு நில உரிமைப் பதிவேடு
ஒன்றை வட்டாட்சியர் வழங்குவார். நில விற்பனை, கொடை,
அடமானம், பரிவர்த்தனை மற்றும், 'செட்டில்மெண்ட்' மூலமாக
அல்லது வேறு வகையில் ஏதேனுமொரு நிலத்தை உரிமை மாற்
றம் செய்வதற்காகத் தாக்கல் செய்யப்படும் பத்திரம் எதையும்
அந்நிலம் தொடர்பான நில உரிமைப் பதிவேட்டைத் தாக்கல்
செய்தாலன்றி பத்திரம் பதிவு செய்யும் அலுவலர் பதிவு செய்யக்
கூடாது. கடன் வழங்கும் நிறுவனங்கள் கடன் வழங்கக்கூடாது.
வீட்டுமனை நிலங்களுக்கும் நில உரிமைப் பதிவேடு வழங்கவும்
இச்சட்டம் வகை செய்கிறது.

3. இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட வேண்டிய விதிகள் இயற்
றப்பட்டவுடன் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad
5 Puthaghalavam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.

2936

வெளியீடு 4-11-1986] [Issued 4-11-1986

886/87

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயல்க வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 29, 1986 - தொகுதி 24 எண் 3

Tuesday, 29th April 1986 - Volume 24 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly, Secretariat, Fort St. George, Madras - 600009**

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

உள்ளடக்கம்

29—4—1986


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1 | வினாக்கள்-விடைகள்— | |
| | உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 407—430 |
| 2 | இரங்கல் தீர்மானம்— | |
| | பேரவை உறுப்பினர் திரு. மு. பிச்சை அவர்கள் மறைவு குறித்து | 431—441 |
| | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 431—433 |
| | திரு. உ. சுப்பிரமணியன் | 433—434 |
| | திரு. சு. பாலன் | 434 |
| | திரு. கு. ரமணி | 434—435 |
| | திரு. பொ. உத்திராபதி | 435—436 |
| | திரு. குமரி அனந்தன் | 436—438 |
| | திரு. ஆர். செங்காளியப்பன் | 438—439 |
| | திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் | 439 |
| | திரு. கே. முத்துவேல் | 439—440 |
| | திரு. கு. தமிழரசன் | 440 |
| 3 | அறிவிப்பு— | |
| | பேரவை அலுவல் .. .. .. | 441 |
| 4 | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் | 443 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, ஏப்ரல் 29, செவ்வாய்க்கிழமை

சித்திரை 16, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு''

நேற்று இருந்தவன் ஒருவன், இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

### 1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

#### கும்பகோணத்தில் புதிய பொறியியற் கல்லூரி.

**வினா 1466—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்தில் பொறியியற் கல்லூரி தொடங்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

**விடை :**

இல்லை.

2—

#### கடையம் ஒன்றியத்தில் சாலை வசதி.

**வினா 1558—மாண்புமிகு வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஒன்றியம் கோவிலூற்று அண்ணாநகர், மற்றும் அஞ்சாங்கட்டளை பகுதி மக்கள் ஆகியோர் சாலை வசதி செய்து தரக் கோரி மனு ஏதேனும் அரசுக்குத் தந்துள்ளனரா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை —

திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம் கோவிலூற்று அண்ணாநகர் மற்றும் அஞ்சாங்கட்டளை பகடை மக்கள் ஆகியோரிடமிருந்து சாலை வசதி செய்து தரக் கோரி மனு ஏதும் வரவில்லை.

3—

நயினார்குளம் சாலையின் தடுப்புச்சுவரை பழுதுபார்த்தல்.

வினா 1546—திரு. மாண்புமிகு வே. சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலச்செவல் நகர பஞ்சாயத்து கீழச்செவல் மற்றும் நயினார்குளம் பகுதி பொது மக்களிடமிருந்து, நயினார்குளம் செல்லும் சாலையின் தடுப்புச் சுவர் சரிந்து விட்டதை சரி செய்ய வேண்டி மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை :

(அ) மற்றும் (ஆ) மேலச்செவல் பேரூராட்சி கீழச்செவல் நயினார்குளம் சாலையில் தடுப்புச் சுவர்கள் சரிந்து உள்ளதை பழுதுபார்த்து புதுப்பித்து கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4—

நத்தம் தொகுதியில் சாலை வசதிகள்.

வினா 1670—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி சாணார்பட்டி யூனியன் பூவக்கிழவன் பட்டிக்கு சாலை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா ?

விடை :

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், திம்மணநல்லூர் ஊராட்சி, ஜோத்தாம்பட்டியிலிருந்து பூவக்கிழவன்பட்டிக்கு 1.4 கி. மீ. தூரத்திற்கு மண்சாலை ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலை மராமத்துப் பணி வரும் நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.



5—

வினா 1675—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், அஞ்சுகுழிப்பட்டி கிராமத்தின் காலனிக்கு தெருவசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், சாலை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா ?

விடை ;

(அ) மற்றும் (ஆ) சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் அஞ்சுகுழிப்பட்டி கிராம அரிசன காலனிக்கு சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக 1985–86 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கழிவு நீர் வரத்து கட்டப்பட்டு காலனி பாதை சமப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அரிசன காலனி நெடுஞ்சாலை ஊராட்சி நிதியிலிருந்து உடன் செய்ய உரிய நடவடிக்கை சாணார்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6—

வினா 1677—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம் மருநூத்து ஊராட்சி, சரவணப்புதூருக்கு சாலை வசதி செய்து தர அரசு திட்டமிட்டுள்ளதா ?

விடை :

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், மருநூத்து ஊராட்சி, சரவணப்புதூர் சாலை அமைக்க 0.2 கி.மீ. தூரமுள்ளது. மீதமுள்ள தூரங்கள் பட்டா நிலங்களின் வழியாக சாலை அமைக்க வேண்டியுள்ளது. நில உரிமையாளர்கள் சாலை அமைக்க நிலம் விட்டுக் கொடுத்தால், சாலையை முழுமையாக அமைக்க இயலுமென சாணார்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் தெரிவித்துள்ளார்.

1986 ஏப்ரல் 29]

7—

மாம்பழம் உற்பத்தி.

வினா 1811—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1983–84 ல் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மாம் பழத்தின் அளவு என்ன ?

விடை :

1983–84 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் மாம்பயிரின் உற்பத்தி அளவு 70,549 மெட்ரிக் டன்கள் அல்லது 0.71 இலட்சம் மெட்ரிக் டன்கள் மட்டும்.

8—

சின்ன முளையூரில் எருக்கலை ஓடைக்குத் தடுப்புச் சுவர்.

வினா 2261—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், சின்னமுளையூரில் மழைக்காலங்களில் தண்ணீர் ஊருக்குள் சென்று, வீடுகளுக்கு சேதம் விளைவிப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்குத் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா ?

விடை :

(அ) மற்றும் (ஆ) ஆம். சின்னமுளையூர் கிராமம், எருக்கலை ஓடை எனப்படும் காட்டாற்று ஓடையின் கரை அருகே அமைந்துள்ளது. இவ்வோடை பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் இல்லை. இருப்பினும் வெள்ள சேதத்தை தவிர்க்க தடுப்புச் சுவர் கட்ட மதுரை கோட்ட செயற் பொறியாளரால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடு அரசுக்கு கிடைத்தபின், பரிசீலிக்கப்பட்டு நிதி நிலைக்கேற்ப ஒப்புதலளிக்கப் படும்.

9—

வாச்சான்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனைக்கு கட்டிடம்.

வினா 2301—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி வாச்சான்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவ மனைக் கட்டிடம் முடிவு பெறாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?



1986 ஏப்ரல் 29]

விடை :

(அ) வாச்சான்பட்டி கிராமத்திற்கென 'கிழவளவு' என்ற இடத்தில் கால்நடை மருந்தகம் கட்டப்பட்டுள்ளது. கால் நடை மருத்துவமனை அல்ல.

(ஆ) கால்நடை மருந்தகத்திற்கான கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதற்கான மின் இணைப்பு ஏற்படுத்த மேலூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஒப்பந்தம் கேட்டுள்ளார். அப்பணி முடிந்து, கால்நடை பராமரிப்பு துறைக்கு ஒப்படைக்கப் பட்டவுடன், நிரந்தரக் கட்டடத்தில் கால்நடை மருந்தகம் செயல்படும்.

10—

கொட்டம்பட்டி மேலூர் ஒன்றியங்களில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப்பணிகளுக்கென செலவு.

வினா 2318—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் (N R E P) 1980–81, 1981–82, 1982–83, 1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டுகளில் கொட்டம்பட்டி மற்றும் மேலூர் ஊராட்சி ஒன்றியங்களில் எவ்வளவு தொகை செலவு செய்யப் பட்டது ?

(ஆ) அதன் மூலம் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகளின் விவரம் என்ன ?

விடை :

(அ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளுக் குச் செலவு செய்யப்பட்ட தொகை :—

| வரிசை எண்ணும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும். | 1980–81. | 1981–82. | 1982–83 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. மேலூர் .. .. | 1.32 | 5.74 | 8.62 |
| 2. கொட்டம்பட்டி .. | 4.15 | 36.29 | 7.75 |
| மொத்தம் .. | 5.47 | 42.03 | 16.37 |

| வரிசை எண்ணும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும். | 1983—84. | 1984—85. | மொத்தம் |
|---|---|---|---|
| | (5) | (6) | (7) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. மேலூர் .. .. | 5.10 | 5.14 | 25.92 |
| 2. கொட்டம்பட்டி .. | 11.70 | 14.41 | 74.30 |
| மொத்தம் .. | 16.80 | 19.55 | 100.22 |

(ஆ) எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் :—

| வரிசை எண்ணும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும். | 1980—81. | 1981—82. | 1982—83 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. மேலூர் .. .. | 71 | 67 | 31 |
| 2. கொட்டம்பட்டி .. | 109 | 249 | 133 |
| மொத்தம் .. | 180 | 316 | 164 |

| வரிசை எண்ணும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும். | 1983—84. | 1984—85. | மொத்தம். |
|---|---|---|---|
| | (5) | (6) | (7) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. மேலூர் .. .. | 8 | 31 | 208 |
| 2. கொட்டம்பட்டி .. | 94 | 99 | 684 |
| மொத்தம் .. | 102 | 130 | 892 |



11—

### திருவாதவூரில் கால்நடை மருந்தகம்.

வினா 2329—திரு. க. வெ. வீராணம்பலம் : மாண்புமிகு ... அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியம் திருவாதவூரில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

12—

### திருவில்லிபுத்தூரில் துணை வேலை வாய்ப்பு அலுவலகம்.

வினா 2511—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜ் மாவட்டம், திருவில்லிபுத்தூர் நகரில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் (Sub Employment Office) அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலை யாது ?

விடை :

(அ) மற்றும் (ஆ) : காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூரில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

13—

### சப்தகிரி இரும்பு உருக்காலைக்கு மின் இணைப்பு வழங்கல்.

வினா 2558—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி வலையப்பட்டி உபமின் நிலையம் எதிரே அமைந்துள்ள 'சப்தகிரி' இரும்பு உருக்காலைக்கு மின் இணைப்பு கொடுப்பதில் முறைகேடு நடந்ததாக கோட்டப் பொறியாளர் மீது 1983 ஆம் ஆண்டு 9 ஆம் மாதத்தில் மின்வாரிய தொழிலாளர்கள் அரசிடம் புகார் செய்தனரா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) இது தொடர்பாக திருவில்லிபுத்தூர் கோட்டப் பொறியாளர் மீது விசாரணை நடத்தியதில் சப்தகிரி ஸ்டீல் ரோலிங் மில்லுக்கு மின் இணைப்பு கொடுத்ததில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என்று விசாரணையில் தெரிய வந்தது.

14—

சென்னை—ஆத்தூர் வழித்தடத்தில் பழைய பேருந்துகளை மாற்றுதல்.

வினா 2894—திரு சி. பழனிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-ஆத்தூர் திருவள்ளுவர் துரித பேருந்து தடம் எண் 504-ல் விடப்படும் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் விடும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) எத்தனை ஆண்டுகளுக்குப் பின் புதிய பஸ் வழித் தடத்தில் ஓட அனுமதிக்கப்படுகிறது.

விடை :

(அ) மற்றும் (ஆ) : சென்னை-ஆத்தூர் வழித்தடம் எண் 504-ல் மூன்று ஆண்டுகாலமாக இயக்கப்பட்ட பேருந்து மாற்றப்பட்டு 1-12-1985-லிருந்து ஒரு புதிய பேருந்து இயக்கப்படுகிறது.

பொதுவாக ஒரு பேருந்து மூன்று ஆண்டுகள் வரை ஓட்டிய பின் அதன் நிலைமையைக் கருத்தில் கொண்டு நான்காவது ஆண்டில் அது மாற்றப்பட்டு புதிய பேருந்து இயக்கப்படுகிறது.

15—

திருவில்லிப்புத்தூர் வத்திராயிருப்பு பகுதிகளில் தன்னிறைவு திட்டப்பணிகள்.

வினா 3082—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்* கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு பகுதியில் தன்னிறைவு திட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட வேலைகள் யாவை?

(ஆ) அவற்றின் மதிப்பீடுகள் எவ்வளவு ?

விடை :

(அ) மற்றும் (ஆ) : பேரவையின் முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

*442ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



16—

வினா 3124—திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு பகுதியில் தன்னிறைவு திட்டத்தில் இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் பாக்கி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முடிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

17—

திருவில்லிப்புத்தூர் வத்திராயிருப்பு பகுதிகளில் உறைவிந்து தொழில் நுட்ப முறை.

வினா 3143—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர், வத்திராயிருப்பு பகுதிகளிலுள்ள துணை நிலையங்களில் உறைவிந்து தொழில்நுட்ப முறையை விஸ்தரிக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

விடை—

தற்போது இல்லை. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உறைவிந்து தொழில்நுட்ப முறையினை தமிழ்நாடு முழுவதும் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

18—

சங்கரன்பந்தல் அரசு மருந்தகத்தை மருத்துவ மனையாக்குதல்.

வினா 3805—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்பந்தலில் உள்ள அரசு மருந்தகத்தை அரசு மருத்துவமனையாக்கி படுக்கை வசதியை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா ?

விடை—

தற்போது பரிசீலனையில் இல்லை.

[1986 ஏப்ரல் 29

19—

வயகல்லூர் சாலையை பழுது பார்த்தல்.

வினா 3837—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் வயகல்லூர் சாலை சுமார் 18 ஆண்டுகளாக பழுது பார்க்கப்படாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பழுது பார்க்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் சரியான பெயர் வைக்கலூர் சாலை என்பதாகும். இச்சாலையின் நீளம் (கி. மீ. 0/0 முதல் 3/2 வரை) 3.2 கி. மீ. ஆகும். இச்சாலை முழுவதையும் அமைத்து மேம்பாடு செய்யும் பணி அரசினால் 1972 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டு அமைப்புப் பணி நடைபெற்று வந்தது. இந்நிலையில் மேற்படி சாலைப் பணியை கண்காணிப்பு மற்றும் இலஞ்ச ஒழிப்புத் துறையினர் புலனாய்வு செய்தமையால் அமைப்புப் பணி தடைப்பட்டது. பின் இச்சாலைப் பணியை தொடர்ந்து செய்ய கண்காணிப்பு மற்றும் இலஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநர் அனுமதி அளித்துள்ளார். எனவே எஞ்சியப் பணிகளை எடுத்துச் செய்வதற்காக விரிவான மதிப்பீடுகள் இத்துறையின் கள அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டதும் இத்துறையின் விதிமுறைகளை அனுசரித்து இப்பணி செயல்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

20—

குடவாசல் அரசு கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக்கும் திட்டம்.

வினா 4152—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு முதல்அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

" தஞ்சை மாவட்டம், குடவாசல் அரசு கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவ மனையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ? "

விடை—

தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1986 ஏப்ரல் 29]

21—

பழவாற்றுக் கரைகளை பலப்படுத்தல்.

வினா 4219—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

" வெள்ளக்காலங்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகின்ற பழவாற்றுக் கரையை பலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உள்ளதா ? "

விடை—

பழவாற்றுக் கரைகளை பெரிய அளவில் பலப்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை. வெள்ளக்காலங்களில் வெள்ளம் வழிந்தோடு மிடங்களில் வெள்ள நிவாரணப் பணியின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் தேவையான அளவு கரைகளை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

22—

பந்தநல்லூரில் கால்நடை மருத்துவமனை.

வினா 4220—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் பந்தநல்லூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்தும் நிறைவேற்றப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை அரசு அறியும்.

(ஆ) நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

23—

திருவண்ணாமலை-சென்னை பாயின்ட்-டு-பாயின்ட் பேருந்துப் பணி.

வினா 4292—திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து சென்னைக்கு பாயின்ட்-டு-பாயின்ட் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1986 ஏப்ரல் 29

24—

கண்ணம்மநாயக்கனூர் அரிசனங்களுக்கு இலவச வீடுகள்.

வினா 4334—திரு ஆ. நடராசன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) பேரூர் தொகுதி மதுக்கரை ஒன்றியம் கண்ணம்மநாயக்கனூரில் வாழும் அரிசன குடும்பங்கள் எவ்வளவு ?

(ஆ) அவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர திட்டம் உண்டா ?

விடை—

(அ) 80 குடும்பங்கள்.

(ஆ) இல்லை.

25—

மேலூர் தொகுதி அட்டபட்டி அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா 4361—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி அட்டபட்டி கிராமத்தில் மூன்று ஆண்டுக்கு முன் தீ விபத்தால் வீடுகள் இழந்த அரிசனங்களுக்கு நிலப்பட்டா வழங்கிட NREP திட்டத்தின் மூலம் வரிசை வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

26—

மேலூர் கால்நடை மருந்தகக் கட்டிடத்தை பழுது பார்த்தல்.

வினா 4379—திரு க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி (கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நடைபெற்றுவரும்) கால்நடை மருந்தகத்தின் கட்டடங்களை பழுதுபார்க்க அரசு நடவடிக்கைகளை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?



1986 ஏப்ரல் 29]

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேலூர் கால்நடை மருந்தகக் கழிப்பறைகள், ரண சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை கட்டடங்கள் பாதிப்பு ஏற்பட்டன. ரண சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை கட்டடங்கள் பழுது பார்த்து நல்ல நிலையில் உள்ளன. கழிப்பறைகள் பழுது பார்க்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் வீட்டு வசதித் திட்டங்கள்.

27—(வினா 4408)—திரு தெ. பெருமாள் : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் வீட்டுவசதித் திட்டங்கள் நிறைவேற்றும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

விடை—

இல்லை.

வாழைப் பழ உற்பத்திப் பெருக்கம்.

28—(வினா 4425)—திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவிற்கு வாழைப்பழ உற்பத்தியை பெருக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

இல்லை.

ஆதிதிராவிடர்களுக்கு உழவு மாடுகளுக்கான தொகையை உயர்த்தல்.

29—(வினா 4528)—திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிட நலத்துறை வாயிலாக அரிசனங்களுக்கு உழவு மாடு வாங்க வழங்கப்படும் ரூபாய் 600ஐ ரூ. 3,000 ஆக உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

[1986 ஏப்ரல் 29

போக்குவரத்துக்கழகப் பேருந்துகளில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள்.

30—(வினா 4543)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்பட்டுள்ளதா?

(ஆ) பொருத்தப்படாத பேருந்துகளும் உண்டா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உண்டு.

தனியார் நிறுவனங்களில் ஆதிதிராவிடர்களுக்கு இட ஒதுக்கீடு.

31—(வினா 4562)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் உள்ள தனியார் நிறுவனங்களிலும், ஆதி திராவிடர்கள் ஒதுக்கீடு மூலம் வேலை வாய்ப்பு பெற அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

விடை—

சட்ட ரீதியாக ஆதிதிராவிடர்களுக்கு தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்ய இயலாது. எனவே தனியார் நிறுவனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து, வேலைவாய்ப்பு அளிக்க வழிவகை செய்யும் பொருட்டு, தனியார் நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுப்பதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

பொன்னமராவதி பாப்பாயி ஆச்சி அரசு மருத்துவமனையில் காலரா வார்டு ஆரம்பிக்கும் திட்டம்.

32—(வினா 4594)—திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி பாப்பாயி ஆச்சி அரசு மருத்துவமனையில் காலரா வார்டு தனியாக ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உடளதா?

விடை—

தற்சமயம் பரிசீலனையில் இல்லை.



1986 ஏப்ரல் 29]

தஞ்சையில் வீட்டு வசதி வாரிய அலுவலகம்.

33—(வினா 4773)—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் இருந்த வீட்டுவசதி வாரிய அலுவலகம் திருச்சி பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் தஞ்சைக்கு மாற்றப்படுமா?

விடை—

(அ) ஆம், தஞ்சை வீட்டுவசதிப் பிரிவு 1977-ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி வீட்டுவசதிப் பிரிவுடன் இணைக்கப் பட்டது.

(ஆ) தஞ்சையில் தனியாக வீட்டுவசதிப் பிரிவு உருவாக்கும் கருத்துரு தற்போது வீட்டுவசதி வாரியத்திடம் இல்லை.

வெள்ளார் கிராமக் கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம்.

34—(வினா 5159)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் வெள்ளார் கிராமக் கால்நடை மருந்தகத்திற்கு கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்த ஆண்டு தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1986 ஏப்ரல் 29

## குட்டப்பட்டி மருந்தகத்தை மருத்துவமனையாக்கல்.

35—(வினா 5183)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம் குட்டப்பட்டியில் உள்ள அரசு மருந்தகத்தை படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

## மீஞ்சூரில் நிலத்தடி நீரில் உப்புத் தன்மையை அகற்றல்.

36—(வினா 5346)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அருகே உள்ள மீஞ்சூரில் நிலத்தடி நீரில் கடல்நீர் கலந்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், உப்புத் தன்மையை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இவ்வாறு கடல்நீர் ஊடுருவுவதை தடுக்கும் வழிமுறைகளுக்கான விரிவான ஆய்வு ஒன்று ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது. அவற்றின்படி, கடற்கரை நெடுகிலும் ஆரணி ஆற்றில் உள்ள இலக்குமிபுரம் அணைக்கட்டையும், கொரத்தலை ஆற்றில் உள்ள வள்ளூர் அணைக்கட்டையும் தற்போது உள்ள ஏரிகளின் மூலம் இணைத்து, இரண்டு ஆறுகளிலும் வெள்ளப் பெருக்கின்போது ஏற்படும் நீரை நிலத்தடி நீர்த்தாங்கிகளின் உள்ளே செலுத்தினால் உவர் நீர் ஊடுருவுவதை தடுக்கலாம் என்று அறிய வந்துள்ளது. இதற்கான மேல் நடவடிக்கைகளை சென்னை பெருநகர் குடிநீர் வாரியம் மேற்கொள்ளும்.



1986 ஏப்ரல் 29]

## தாடண்டர் நகர் காலியிடத்தில் சிறிய கடைகள் அமைக்கும் செயற்குறிப்பு.

37—(வினா 5441)—திரு. சைதை கா. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான தாடண்டர் நகர் காலியிடத்தில் சிறிய கடைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் அதற்கான திட்டத்தினை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் உள்ள அரசின் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அண்ணா சாலை ஒட்டியுள்ள மதில் சுவர் உள்ள இடத்தில் சிறிய கடைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## தென்காசியில் வீட்டு வசதித் திட்டங்கள்.

38—(வினா 5713)—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்காசியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) நிலம் வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டபின் திட்டங்கள் தீட்டப்படும்.

[1986 ஏப்ரல் 29

### மந்தைவெளி, மயிலாப்பூர் பேருந்து நிலையங்கள்.

39—(வினா 5730)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மந்தைவெளி, மயிலாப்பூர் நிலையங்களில் நெருக்கடி காரணமாக பேருந்துகளை பட்டினப்பாக்கம் பேருந்து நிலையம் வரை நீட்டிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

இல்லை.

மந்தைவெளியில் இப்போதுள்ள பணிமனையை அருகில் உள்ள இடத்திற்கு மாற்றிவிட்டு, பணிமனையாக உள்ள இடத்தையும் பேருந்து நிலையமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மயிலாப்பூரில் தற்பொழுது உள்ள பேருந்து நிலையம் பயணிகள் மிகுதியாக ஏறும் இடமென்பதால், அந்த பேருந்து நிலையத்தை மாற்ற இயலாது.

### கூடலூர் வட்டத்தை பிரிக்கும் திட்டம்.

40—(வினா 5960)—திரு. கே. உச்சி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தை கூடலூர், பந்தலூர் வட்டங்களாகப் பிரிக்க மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து குறிப்பு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் வருவாய் பின்தொடர் பணிகள் முடிவடைந்ததும் இச்செயற்குறிப்பினைப் புதுப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.



1986 ஏப்ரல் 29]

### செங்கோட்டையிலிருந்து விடப்படும் விரைவுப் பேருந்துகளை மாற்றும் திட்டம்.

41—(வினா 6045)—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டையிலிருந்து விடப்படும் திருவள்ளுவர் பஸ்களை மாற்றி புதிய பஸ்களை அனுமதிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டையிலிருந்து விடப்படும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஐந்து பேருந்துகளைத் தவிர மற்ற பேருந்துகள் இரண்டரை ஆண்டு களுக்கும் குறைவாக ஓடிய புதிய பேருந்துகளாகும். இந்த ஐந்து பேருந்துகளும் விரைவில் புதிய பேருந்துகளாக மாற்றப்படும்.

### தஞ்சாவூர்-சென்னை சொகுசு விரைவுப் பேருந்தினை மாற்றும் திட்டம்.

42—(வினா 6127)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர்-சென்னை இடையே ஓடும் சொகுசு திருவள்ளுவர் விரைவுப் பேருந்துகள் மோசமான நிலையிலிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றி புதிய சொகுசுப் பேருந்துகள் விட அரசு முன்வருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர்-சென்னை வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கி வந்த அனைத்து பழைய சொகுசுப் பேருந்துகளும் மாற்றப்பட்டு 2-9-1985 முதல் சாதாரண புதிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

[1986 ஏப்ரல் 29

தஞ்சை மாவட்டத்தில் புதிய பேருந்து வழித்தடங்கள்.

43—(வினா 6260)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் வட்டத் தலைமையிடத்திற்கு திருவாரூர், மயிலாடுதுறைப் பகுதிகளில் இருந்து போதிய பேருந்து இல்லாமல் பொதுமக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகம் திருவாரூரிலிருந்து நன்னிலம் வழியாக நாள் ஒன்றுக்கு 14 பேருந்துகளை 82 நடைகளும், மயிலாடுதுறையிலிருந்து நாள் ஒன்றுக்கு 13 பேருந்துகளை 52 நடைகளும் இயக்கி வருகிறது. இருப்பினும் பெருகிவரும் போக்குவரத்து அவசியம் கருதி நன்னிலம்-மயிலாடுதுறை மற்றும் நன்னிலம்-திருவாரூர் ஆகிய வழித்தடங்களில் ஒரு நகரப் பேருந்தினை பல்திசை வழித்தட உரிமத்தின் அடிப்படையில் இயக்குவதற்குரிய செயற்குறிப்பு சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) பேருந்து இயக்கும் பொருட்டு தற்காலிக உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் மேல் நடவடிக்கை சோழன் போக்குவரத்துக் கழகத்தால் மேற்கொள்ளப்படும்.

தலைஞாயிறு-பட்டுக்கோட்டை பேருந்துப்பணி.

44—(வினா 6294)—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறிலிருந்து வேதாரண்யம் வழியாக பட்டுக்கோட்டைக்கு பேருந்து விடும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

(ஆ) அதன் விவரம் யாது ?



1986 ஏப்ரல் 29]

விடை—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகம், தலைஞாயிறிலிருந்து வேதாரண்யம் வரை இரண்டு புறநகர் பேருந்துகள் மற்றும் ஒரு நகரப் பேருந்தை நாள் ஒன்றுக்கு 18 நடைகளும், மற்றும் வேதாரண்யத்திலிருந்து பட்டுக்கோட்டைக்கு 5 புறநகர் பேருந்துகளை நாள் ஒன்றுக்கு 26 நடைகளும் இயக்கி வருகிறது. 1985 ஆம் ஆண்டுக்கான அனைத்து புதிய வழித் தடங்களிலும் பேருந்துகள் தீர்மானித்தபடி இயக்கப்பட்டு விட்டதாலும், மேற்கூறிய வழித் தடப் பகுதியில் தற்போது இயங்கும் பேருந்துகள் போதுமானதாக உள்ளது எனக் கருதுவதாலும், தலைஞாயிறிலிருந்து பட்டுக்கோட்டை (வழி) வேதாரண்யம் வழித் தடத்தில் தற்போது பேருந்து இயக்கும் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

தலைஞாயிறு—கும்பகோணம் பேருந்துப்பணி.

45—(வினா 6295)—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறிலிருந்து கும்பகோணத்திற்கு பேருந்து விடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகம், தலைஞாயிறு—திருத்துறைப்பூண்டி வழித் தடப் பகுதியில் ஒரு நகரப் பேருந்தினை 14 நடைகளும், தலைஞாயிறிலிருந்து மன்னார்குடி வரை இரண்டு புறநகர் பேருந்துகளை 8 நடைகளும் இயக்கி வருகிறது. மேலும், மன்னார்குடி-கும்பகோணம் வழித்தடப் பகுதியில் 10 புறநகர்ப் பேருந்துகளை 48 நடைகளும் இயக்கி வருகிறது.

1985 ஆம் ஆண்டிற்கான அனைத்துப் புதிய வழித் தடங்களிலும் புதிய பேருந்துகள் தீர்மானித்தபடி இயக்கப்பட்டு விட்டதாலும், மேற்படி வழித் தடத்தில் தற்பொழுது இயங்கும் பேருந்துகள் போதுமானது எனக் கருதுவதாலும், தலைஞாயிறிலிருந்து மன்னார்குடி வழியாக கும்பகோணத்திற்கு பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

தலைஞாயிறு—மயிலாடுதுறை பேருந்துப்பணி.

46—(வினா 6297)—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறிலிருந்து மயிலாடுதுறைக்கு பேருந்து விடும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

(ஆ) எப்போது முதல் அந்தத் தடத்தில் பேருந்துகள் ஓடத் தொடங்கும்.

விடை—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகம், தலைஞாயிறிலிருந்து திருத்துறைப்பூண்டி வரை ஒரு நகரப் பேருந்தினை 14 நடைகளும், திருத்துறைப் பூண்டியிலிருந்து மயிலாடுதுறை வரை 13 புறநகர்ப் பேருந்துகளை நாள் ஒன்றுக்கு 52 நடைகளும் இயக்கி வருகிறது. 1985 ஆம் ஆண்டிற்கான அனைத்துப் புதிய வழித் தடங்களிலும் பேருந்துகள் தீர்மானித்தபடி இயக்கப்பட்டு விட்டதாலும், மேற்கண்ட வழித் தடப் பகுதிகளில் தற்போது இயங்கி வரும் பேருந்துகள் போதுமானது எனக் கருதுவதாலும், தலைஞாயிறிலிருந்து மயிலாடுதுறை வரை தற்போது பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

தலைஞாயிறு—மன்னார்குடி பேருந்துப்பணி.

47—(வினா 6298)—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறிலிருந்து ஆலத்தம்பாடி வழியாக மன்னார்குடிக்கு பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) அதன் விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : சோழன் போக்குவரத்துக் கழகம், தலைஞாயிறிலிருந்து ஆலத்தம்பாடி வழியாக திருத்துறைப்பூண்டி வரை ஒரு மினி பேருந்தை 6 நடைகளும், திருவாரூரிலிருந்து



ஆலத்தம்பாடி வழியாக பொன்னிரை வரை ஒரு நகரப் பேருந்தினை 10 நடைகளும் இயக்கி வருகிறது. மேலும் மன்னார்குடியிலிருந்து விக்கிரவாண்டியம் வரை ஒரு நகரப் பேருந்தினை 38 நடைகள் நாள் ஒன்றுக்கு இயக்கி வருகிறது. விக்கிரவாண்டியத்திலிருந்து பொன்னிரை வரையிலான 5 கி.மீ. தூரப்பகுதி மண் சாலையாக இருப்பதால், தலைஞாயிறிலிருந்து மன்னார்குடி வரை (வழி) ஆலத்தம்பாடி பேருந்து இயக்க இயலாது என சோழன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மருதமலை—வெள்ளலூர் பேருந்துப்பணி.

48—(வினா 6652)—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விவாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருதமலையிலிருந்து வெள்ளலூருக்கு போத்தனூர் வழியாக பேருந்து விடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) ஒரு வழித் தடத்தில் நகரப் பேருந்து இயக்க வேண்டுமானால் வழித்தடத்தின் ஏதாவது ஒரு திருப்பு முனை மாநகராட்சி எல்லைக்குள் இருக்க வேண்டும். ஆனால் மேற் குறித்த வழித்தடத்தில் மருதமலை, வெள்ளலூர் ஆகிய இரு பகுதிகளும் நகர எல்லைக்கு அப்பாற்பட்டுள்ளதால் அவ்விரு இடங்களுக்கிடையே நகரப் பேருந்து விட இயலாது.

மதுரை பெரியார் பேருந்து நிலையம்.

49—(வினா 6717)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திற்கு முன்னால் உள்ள புதிய பஸ் நிலையம் இன்னும் உபயோகிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

விடை—

(அ) மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்திர வின் பேரில் மதுரை பெரியார் பேருந்து நிலயத்திற்கு முன் புறமாக அமைந்துள்ள அங்காடிகளுக்கு உட்புறமாக உள்ள காலி இடம் தற்பொழுது பேருந்து நிலையமாக உபயோகப்படுத்தப் பட்டு வருகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேலும் நகராட்சிகள் சேர்க்கப்படல்.**

50—(வினா 6762)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேலும் கூடுதலாக நகராட்சிகள் சேர்க்கப்பட்டு உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அவை யாவை ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் முதல் திட்டம் முதல் மூன்றாம் கட்டம் வரை, 1982–83 ஆம் ஆண்டி லிருந்து, 1984–85 ஆம் ஆண்டு வரை 81 நகராட்சிகள்/நகரியங் கள் சேர்க்கப்பட்டன. 1985–86 ஆம் ஆண்டில் நான்காம் கட்ட மாக ஈரோடு, சேலம், பொள்ளாச்சி, உதகமண்டலம், கரூர், கூனூர், விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, திருப்பூர், அம் பத்தூர் நகரியம், திருநெல்வேலி, மேட்டூர் நகரியம், கத்தி வாக்கம் நகரியம், மயிலாடுதுறை, சிதம்பரம், காரைக்குடி, கோபிச்செட்டிப் பாளையம், மேட்டுப் பாளையம், பாளையங் கோட்டை, ஆத்தூர், மன்னார்குடி, கோவில்பட்டி, தாராபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய 25 நகராட்சி/நகரியங்கள் சேர்க்கப் பட்டுள்ளன. ஆக, தற்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து (106) நகரியங்களும்/நகராட்சிகளும் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப் பட்டுவிட்டன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் • உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதை குறிக்கும்.



**2. இரங்கல் தீர்மானம்.**

**பேரவை உறுப்பினர் திரு. மு. பிச்சை அவர்கள் மறைவு குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காமராஜர் மாவட்டம் அருப்புக்கோட்டை தொகுதியில் இருந்து இரு முறை இப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் திரு. மு. பிச்சை அவர்கள் நேற்று மாலை (28–4–1986) எதிர் பாராத விபத்தில் மறைந்த துயரச் செய்தியை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர் மானத்தை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன். "இனிய பண்பும், நல்ல உள்ளமும், செயலாற்றல் கொண்டவரும், இப்பேரவையில் காமராஜர் மாவட்டம் அருப்புக் கோட்டை தொகுதியிலிருந்து இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருமாகிய திரு. மு. பிச்சை அவர்கள் நேற்று மாலை (28–4–86) எதிர்பாராத விபத்தில் மறைந்த துயரச் செய்தியை கேட்டு இப்பேரவை வருந்துகிறது. அன்னாரின் குடும்பத் தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும். இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

சில நாட்கள் வரையிலும் இந்த அவையில் பணியாற்றிக் கொண்டிருந்த அருப்புக்கோட்டை தொகுதியினுடைய சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் திரு. மு. பிச்சை அவர்கள் நேற்று எதிர்பாராத வகையில் வேன் விபத்து ஒன்றிலே சிக்கி உயிர் இழக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டது என்ற செய்தி நம் முடைய நெஞ்சையெல்லாம் உருக்கத்தக்க வகையிலும் நமக் கெல்லாம் 'அதிர்ச்சி தந்து துக்கத்தையும் துயரத்தையும் அளிக்கின்ற வகையில் அமைந்திருப்பதை நாம் நன்கு உணர் வோம். திரு. பிச்சை அவர்கள் மற்றொருவருக்கு உதவுவதற்காக சென்று அவரும் விபத்தில் சிக்கிக்கொள்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெரும் தலைவர் திரு. முத்துசுப்பு என்பவர் ஜீப்பிலே வந்திருக் கிறார். அங்கு சிறு மழை பெய்ததன் காரணமாக ஜீப் கவிழ்ந்து அவருடைய கால் முறிவு ஏற்பட்டு அந்த முறிவு ஏற்பட்டதினால் சிகிச்சை அளிப்பதற்காக முதலில் இரட்டை மாட்டு வண்டியிலே அவரை அழைத்து கொண்டுவர முயன்று அதற்கு பிறகு விரை வாக அருப்புக்கோட்டைக்கு கொண்டுவர வேண்டும் என்பதற்காக வழியிலே வந்த வேன் ஒன்றை நிறுத்தி அந்த வேனில திரு. முத்துசுப்பு அவர்களும், அருப்புக்கோட்டைத் தொகுதி எம். எல். ஏ. திரு. பிச்சை அவர்களும் மற்ற சில நண்பர்களும்

ஏறிக்கொண்டு மிக வேகமாக அந்த வேன் அருப்புக்கோட்டைக்கு வந்திருக்கிறது. இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலே அந்த வேனுடைய டயர் வெடித்ததன் காரணமாக அந்த வேன் சாலையிலே தாறுமாறாக ஓடி அங்கிருந்த பெரிய ஒரு மரத்தில் வேகமாக மோதியதன் காரணமாக அந்த ஸ்தலத்திலேயே 5 பேர்கள் இறந்து போகின்ற சூழ்நிலை ஏற்பட்டு அந்த டிரைவரும் மிக ஆபத்தான சூழ்நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவர் நேற்று இரவு மருத்துவமனையில் இறந்தார், ஆக மொத்தம் 6 பேர்கள் அந்த விபத்திலே இறந்துவிட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. முதலிலே ஒரு விபத்து ஏற்பட்டு அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக வந்து மற்றொரு வேன் அதே விபத்தை உறுதியாக்குகின்ற அளவிற்கு அமைந்திருப்பது மிகவும் துக்கமான செய்தியாகும். திரு. பிச்சை அவர்கள் இரு முறை அருப்புக்கோட்டை தொகுதியிலிருந்து வெற்றி பெற்று இந்த அவையில் வந்து சிறப்பான பணியாற்றியவர்கள். மிகவும் அடக்கமும், அமைதியாகவும் இருந்து கொள்கைத் துடிப்போடு, கொள்கை உறுதிப்பாட்டோடு இருந்து மிகச் சிறப்பாக பணியாற்றுகின்ற சிறிய தொண்டர்களில் ஒருவராக அவர்கள் திகழ்ந்தார்கள்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொது தேர்தலில் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அருப்புக்கோட்டைதொகுதியிலே நின்ற போது, நின்று வென்றதற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சார்பாக அந்த அருப்புக்கோட்டைத் தொகுதியிலே ஆற்றவேண்டிய பணிகளையெல்லாம் நின்று ஆற்றியவர் திரு. பிச்சை அவர்கள்.

ஆக அந்த அளவுக்கு புரட்சித்தலைவருடைய நல்ல எண்ணத்தையும், நம்பிக்கையையும், அவருடைய அன்பையும், அரவணைப்பையும் சிறப்பாகப் பெற்றவர். அதற்குப் பிறகு 1980-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும், 1984-லே நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் அவர்கள் சிறப்பான வெற்றி பெற்று ஆரவாரமற்ற முறையில், படாடோபமற்ற வகையில் தம்முடைய அரசியல் பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றி வந்தார்கள். அரசியல் பணிகள் மட்டும் அல்லாமல் அந்தப் பகுதியில் வாழ்கிற மக்களுக்கெல்லாம் சமூகத் தொண்டை ஆற்றுவதிலும் நல்ல தொண்டுள்ளம் படைத்தவராக இருந்து யார் வந்து எந்த உதவி கேட்டாலும் அவர்களுக்காகப் பரிந்து சென்று அந்த உதவிகளை அவர்களுக்குச் செய்து தருவதில் தம்முடைய நேரத்தையும், உழைப்பையும் பயன்படுத்தி அந்த வகையில் அந்தப் பகுதி வாழ் மக்களுடைய நல்ல பாராட்டுதலையும், போற்றுதலையும் சிறப்பாகப் பெற்றிருந்தவர் அவர்.

அவருக்கு வயது 45 என்றுதான் குறிப்பிடுகிறார்கள். இவ்வளவு இளம் வயதில் இப்படிப்பட்ட ஒரு கோரமான விபத்திற்கு ஆளாகி அவர் இயற்கை எய்தும்படியான சூழ்நிலை ஏற்பட்டது நமக்கெல்லாம் மெத்த வருத்தத்தையும், துக்கத்தையும் அளிக்கிற ஒன்றாகும். அப்படிப்பட்ட நல்லவர் மறைவது நமக்கெல்லாம், பெரும்



துயரத்தை அளிக்கிற ஒன்றாகவும் அமைந்திருக்கிறது. சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய அவர் மறைந்தது குறித்து இந்தப் பேரவை தன்னுடைய வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறது என்ற முறையிலே அவரை இழந்து வருந்தும் குடும்பத்தினருக்கு இந்தப் பேரவை தன்னுடைய வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானத்தை நான் முன்மொழிந்து இதனை வழிமொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று அகால மரணம் அடைந்த நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் எல்லோருடைய அன்புக்கும் பாத்திரமாக இருந்த அருமை நண்பர் திரு. பிச்சை அவர்கள் எதிர்பாராத விதமாக விபத்தில் சிக்கி மரணம் அடைந்தது குறித்து நம்முடைய முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக வழிமொழிகிறேன்.

அவர்களுடைய சிறப்பியல்புகளைப் பற்றி அவை முன்னவர் அவர்கள் விரிவாகக் கூறிவிட்டார்கள். பிச்சை அவர்கள் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். அவர் தேசிய பற்று கொண்ட ஒரு குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். திராவிட இயக்கத்தில் பற்று கொண்டு அவர் ஆற்றிய பணியின் காரணமாக இரண்டு முறை இந்த மன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவர் அந்தப் பகுதி மக்களுக்குச் சிறந்த சமூக சேவை செய்தார் என்று அவை முன்னவர் அவர்கள் கூறினார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில் அங்கு அவர்கள் அடிக்கடி செல்ல முடியாத ஒரு காரணத்தை ஒட்டி தன்னுடைய பிரதிநிதியாக தான் ஆற்ற வேண்டிய கடமைகளை அந்த மக்களுக்குச் செய்யவேண்டிய சேவைகளை, தான் இருந்து பார்க்க முடியாத சூழ்நிலையின் காரணத்தால் அவர் சார்பாக நண்பர் பிச்சை அவர்களிடம் முதலமைச்சர் அவர்கள் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து இருந்தார்கள். அவர்கள் சிறப்பாக அந்தக் காரியங்களைச் செய்து தனக்கும் நல்ல பெயரை ஈட்டி, மாண்புமிகு முதலமைச்சருக்கும் நல்ல பெயரை உருவாக்கிய காரணத்தால்தான் இந்தச் சட்டமன்றத்திற்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அந்த அளவுக்கு நண்பர் திரு. பிச்சை அவர்கள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளைச் செம்மையாகவும் சிறப்பாகவும் ஆற்றினார்கள் என்பதற்கு ஒரு பெரும் எடுத்துக்காட்டு என்னவென்றால் அந்தப் பகுதி பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற ஒரு பகுதி ; அவர் இரண்டு முறை அங்கம் வகித்த அந்தக் குறுகிய காலத்தில் அந்தப் பகுதி மக்களுக்கு ஆற்றவேண்டிய தொண்டினை, சிறப்பான காரியங்களைச் செய்து முடித்திருக்கிறார் என்றால் அது மிகையல்ல என்பது அங்கு சென்று பார்த்தவர்களுக்கெல்லாம் தெரியும். ஆகவே அப்பேர்ப்பட்ட நல்ல சிறப்

[திரு. உ. சுப்பிரமணியன்] [1986 ஏப்ரல் 29

பியல்புகளைக் கொண்ட நம்முடைய அருமை நண்பரும் இரண்டு முறை இந்தச் சட்டப்பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. பிச்சை அவர்களுடைய மறைவு குறித்து இந்த மாமன்றம் தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரை இழந்து தவித்து நிற்கும் அந்தக் குடும்பத்தினருக்கும் அவர் சார்ந்திருந்த அந்த இயக்கத்தினருக்கும் எங்களுடைய இயக்கத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு மீண்டும் அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த அனுதாபத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. க. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று வரையில் நம்மோடு கலந்துரையாடி, இந்த மாமன்றத்தில் அமர்ந்து பணியாற்றிய ஒரு தொண்டர் மரியாதைக் குரிய மு. பிச்சை அவர்கள் எதிர்பாராதவிதமாக கோர விபத்தில் சிக்கி மாண்டார் என்ற செய்தியை இன்றைக்கு காலையில் பத்திரிகையில் பார்க்கிறபோது என்னால் நம்பமுடியவில்லை. மாண்புமிகு பிச்சை அவர்கள் பழகுவதற்கு மிகவும் எளிமையானவர். அவருடன் ஒருமுறை சட்டமன்றக் குழுவில் வெளிமாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்தபோது நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவர் அந்தசமயத்தில் என்னுடன் பழகிய பழக்கத்தை எண்ணிப் பார்க்கிறபோது, அப்படிப்பட்ட நல்ல நண்பரை, கட்சிப் பாகுபாடு இல்லாமல் பழகிய சிறந்த தொண்டரை இழந்துவிட்ட செய்தி மிகவும் வேதனையாக இருந்தது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இன்று காலையில் குறளில் எடுத்துச் சொன்னதைப்போல, நேற்றைக்கு இருந்தவர் இன்றைக்கு இல்லையென்ற பெருமையை உடையதாகும் இவ் வுலகம். இருந்தாலும் ஒரு சிறந்த தொண்டர், ஏழை எளியவர் களுடன் நல்லமுறையில் பழகக்கூடிய நல்ல பண்பாளர் இறந்து விட்ட செய்தி உள்ளபடியே ஆழ்ந்த துக்கத்தை அளிக்கிறது. அவர்கள் ஏழை எளியவர்களுக்கு ஆற்றியிருக்கிற சமுதாயப் பணிகள் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எதிர்பாராதவித மாக விபத்தில் இறந்த பிச்சை அவர்களின் மறைவு குறித்து மாண்புமிகு முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர் மானத்தை எங்கள் கட்சியின் சார்பாக நானும் வழிமொழிந்து, அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் அனுதாபத்தை தெரிவித்து அமர்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளில் இன்றைக்கு காலையில் பார்த்த இந்தச் செய்தி மிகவும் கோரமானது என்பது மட்டுமல்ல, மோட்டார் வாகனங் களில் அடிபட்டு இப்படிப்பட்ட நல்ல உயிர்கள் பல போய்க் கொண்டிருக்கக் கூடிய ஒரு மோசமான நிலைமையும் ஏற்பட்டு வருவதை எண்ணிப் பார்க்கிற போது மிகவும் வேதனையடைய வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட துர்மரணங்களுக்கு எந்த



1986 ஏப்ரல் 29] [திரு. கு. ரமணி]

அளவிற்கு தடுப்புகளை உருவாக்க முடியுமோ, அதுபற்றி கவனிக்கிற பொறுப்பு கூட நமக்கிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன். திரு. மு. பிச்சை அவர்கள் இரண்டு தடவைகள் தேர்தலில் வெற்றி பெற்று இந்த மாமன்றத்தில் நம்மோடு இருந்தவர். அவர் எந்தவிதமான ஆர்ப்பாட்டங்களும் பெரிய விளம்பரமும் இல்லாமல் மிகுந்த அமைதியோடு இந்த அவையிலே இருந்து வந்த உறுப்பினர்களில் அவரும் ஒருவர். நமக்கு அதிக மாக அவருடன் நேரிடையாகப் பழகுகிற, அனுதினமும் அவர் களுடைய நடவடிக்கைகளை நாமும் தெரிந்துகொள்ளக் கூடிய வாய்ப்புகள் இல்லாவிட்டாலும், பல சந்தர்ப்பங்களில் அவர்களை சந்திக்கிற நேரங்களில், நிகழ்ச்சிகளில் பார்க்கிற போது அவர் களுடைய நடவடிக்கைகள், பழகுகிற தன்மை, ஒழுங்கு ஆகியவை மிகவும் மனதிற்கு பிடித்தமான நல்ல குணம் உடையவர் என் பதைத் தெளிவாக்கியது. இரண்டு தடவைகள் அவர் அந்தத் தொகுதியில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். நம்முடைய மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தலுக்குப் பிறகு அவர்களின் தொகுதிக்கே பிச்சை அவர்கள் பொறுப்பாக இருந்தார்கள் என்று சொன்னால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் எப்படி தங்கள் தொகுதி மக்களிடத் தில் அன்போடு கஷ்ட நஷ்டங்கள் இரண்டிலும் ஈடுபட்டு இருக்க வேண்டுமோ அப்படிப்பட்ட வகையில் உழைப்பைக் காட்டியிருக் கிறார்கள். ஆகவே மூன்று தடவைகள் அந்தச் சட்டமன்றத் தொகுதியில் பிரதிநிதித்துவம் வகித்தார் என்று சொன்னால் அது மிகையாகாது.

திரு. மு. பிச்சை அவர்கள் இளம் வயதில் இந்தச் சந்தர்ப் பத்தில் ஒரு துர்மரணம் ஏற்பட்டு மரணமடைந்தார் என்பது நமக்கெல்லாம் மிகுந்த வேதனையைத் தருகிறது என்பதில் நாம் அத்தனைபேரும் மாண்புமிகு முன்னவர் அவர்கள் முன் மொழிந்திருக்கிற இந்த இரங்கல் தீர்மானத்தோடு ஒன்றிக் கொள்கிறோம். எங்கள் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் அன்னாரை பிரிந்துத் தவிக்கிற குடும்பத்தாருக்கும், அவருடைய நண்பர்களுக்கும், அந்தத் தொகுதி மக்களுக்கும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அவையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தோடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தனது தீர்மானத்தை வழி மொழிந்து நமது சட்டப் பேரவை உறுப்பின ராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட, ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் மக்களுடைய மிகச் சிறந்த தொண்டன் என்பதற்கு எப்படி இலக்கணமாக நடந்துக் காட்ட வேண்டுமோ அந்த அளவுக்கு நடந்துக் காட்டியவர் திரு. பிச்சை அவர்கள்.

[திரு. பொ. உந்திராபதி] [1986 ஏப்ரல் 29

குறிப்பாக நான் அவரோடு கூட செல்லாமல் இருந்தாலும்
கூட இங்கே பழகுகிறபோதும், அல்லது பல சந்தர்ப்பங்களில்
அவரோடு பேசுகிறபோது இந்த தமிழகத்தில் உள்ள 234 சட்ட
மன்ற தொகுதிகளில் அவரும் ஒரு உறுப்பினராக இருந்து
நம்மோடு பணியாற்றி, அருப்புக்கோட்டை தொகுதி மக்களுக்கு,
அந்த தொகுதியின் முன்னேற்றத்திற்கு தன்னால் முடிந்த
அளவுக்கு எப்படி செம்மையாகப் பணியாற்ற வேண்டுமோ
அப்படி பணியாற்றியவர் அவர் என்ற உணர்வு எழாமல்
இல்லை.

நேற்றும், கடைசி தினம் கூட அவருடைய தொகுதியில்
வெற்றி பெற்ற ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவராக தேர்ந்
தெடுக்கப்பட்ட திரு. முத்துசுப்பு அவர்களும், நம்மைவிட்டு
இன்று பிரிந்திருக்கக் கூடிய திரு. பிச்சை அவர்களும், ஜீப்
வண்டியில் அவருடைய கடமையை ஆற்றுவதற்காக வருகிற
போது இப்பேர்ப்பட்ட ஒரு விபத்து ஏற்பட்டுவிட்டது என்று
சொன்னால் உண்மையிலேயே நம்மால் தாங்க முடியாத ஒரு
நிகழ்ச்சியாகத்தான் அது இருக்கிறது. நான் காலையிலே எழுந்
திருந்து ரோடுக்கு வருகிறபோது, இந்த அகால மரணச்
செய்தியை பார்த்தவுடன், உண்மையிலேயே திடுக்கிட்டுப்
போனேன். அதுவும் சட்டமன்றம் நடந்துக் கொண்டிருக்கும்
போது, நம்முடைய சகா, ஒரு தோழர், இப்படி அகால மரணம்
அடைந்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது மிக
வேதனையாக இருக்கிறது.

எனவே மறைந்த நமது சக உறுப்பினராகப் பணியாற்றிக்
கொண்டிருந்த பிச்சை அவர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த
அஞ்சலியை செலுத்துவதோடு, அவரை விட்டுப் பிரிந்து தவிக்
கின்ற அவருடைய குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொண்டு, அத்தோடு நேற்றைய தினமே அவரோடு
ஒரு ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், அவருடைய சகா அவரோடு
கூட சென்ற மேலும் 4 பேர்கள், அவர்களையெல்லாம் பாதுகாப்
பாக இட்டுச் செல்ல வேண்டும் என்ற கடமை உணர்வோடு
காரை ஓட்டிச்சென்ற அந்த டிரைவர்கூட, அவரோடு இணைந்தே
இன்றைக்கு உயிர் பிரிந்திருக்கிறார்கள் என்று சொன்னால்,
உண்மையிலேயே அது மிகவும் வேதனையைக் கொடுக்கக் கூடிய
அளவுக்கு இருக்கிறது. ஆகவே, அவரோடு இணைந்து உயிர்
நீத்த அந்த 5 குடும்பங்களுக்கும் இணைந்தே என்னுடைய
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டு, அமர்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவையின் சபாநாயகர்
அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதியிலேயிருந்து இரண்டு
முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, நம்மோடு இருந்து இன்று இல்லாமல்
மறைந்திருக்கிற திரு. பிச்சை அவர்களுடைய மரணம் மிகுந்த
வேதனையை நமக்கெல்லாம் அளிப்பதாகும். அருப்புக்



1986 ஏப்ரல் 29] [திரு. குமரி அனந்தன்]

கோட்டையிலிருந்து அண்மை காலங்களில் வந்துக் கொண்டிருக்
கிற செய்திகளே நம்மைப்போன்றவர்களுக்கும், திரு. பிச்சைக்கும்
கூட வேதனையைக் கொடுக்கின்ற ஒன்றாகத்தான் இருந்து
வந்தன.

ஷண்முகா டிரான்ஸ்போர்ட் என்று சொல்லக்கூடிய நிறு
வனத்தின் உரிமையாளர், அருப்புக்கோட்டையை தலைமையிட
மாகக் கொண்டு, மிகச் சிறப்பான சமுதாயத் தொண்டு ஆற்றி
வந்த திரு. தியாகராஜன் அவர்கள் குடும்பத்தோடு காரிலே
போனபோது விபத்து ஏற்பட்டு, அவரது குடும்பத்தினர் அனை
வரும் குழந்தைகளோடு எல்லோருமே இறந்தார்கள். திரு.
பிச்சையினுடைய மிக நெருங்கிய நண்பர் அவர். ஒரு அருமை
நண்பர் இறந்தாரே என்று திரு. பிச்சை அவர்கள் மிகுந்த
துன்பப்பட்டுக் கொண்டிருந்த நேரம்.

அடுத்து தேவதாஸ் டிரான்ஸ்போர்ட்டினுடைய உரிமையாளர்
திரு. சுப்புராஜ், மதுரையைச் சார்ந்த திரு. தங்கராஜ் என்று
சொல்கிற அவர்களும், அருப்புக்கோட்டையை தலைமையிட
மாகக் கொண்டு இயங்கி வந்தவர்கள். அவர்களும் கார் விபத்
திலேதான் இறந்தார்கள். இறந்த திரு. சுப்புராஜ் அவர்கள்
திரு. பிச்சைக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் நெருங்கிய
நண்பர். இப்படி ஒன்றன்பின் ஒன்றாக பிச்சையின் நெருங்கிய
நண்பர்களில் சிலர் மறைந்தது நெஞ்சில் மிக ஆழமான
வேதனை அவருக்கு ஏற்பட்டிருக்கிற நேரத்தில் அவருடைய
இனிய நண்பராக இருந்த திரு. முத்து சுப்புவினுடைய கால்
உடைந்தது கண்டு கதறிக் கொண்டிருந்தார்,

கட்டை வண்டியிலே போனால் அவருடைய காலை செம்மை
படுத்த முடியாதோ என்று கருதித்தான் தூத்துக்குடிக்கு செல்கிற
தனபால் என்று சொல்லக்கூடிய டிரைவரை நிறுத்தி அவருடைய
வேனில் ஏறிக்கொண்டு, அவரை விரைந்துச் செல்லுமாறு
சொல்லியிருக்கிறார்கள். அந்த டிரைவரும் நமது ஊராட்சி
ஒன்றிய பெரும் தலைவருக்கு இப்படிப்பட்ட துன்பம் ஏற்பட்டு
இருக்கிறதே என்ற துடிப்பில், அதை செம்மைபடுத்த வேண்டுமே
என்ற ஆதங்கத்தில் மிக விரைவாக ஓட்டியதன் காரணமாகத்
தானோ என்னவோ காரினுடைய டயர்கூட பழுதடைந்து
விட்டிருக்கிறது. வேகமாகப் போனால் தலைவருடைய வேதனைக்
குறையக்கூடும் என்ற எண்ணத்தோடும், அவருடைய காலை
எப்படியாவது செம்மைபடுத்தியாக வேண்டும் என்ற கடமை
உணர்வோடும் காரை ஓட்டிச்சென்ற காரோட்டியோடு, அவர்
ளுக்கு உதவவேண்டும் என்ற விருப்பத்தோடு உடன்சென்ற
திரு. பிச்சை அவர்களும் உயிர் இழந்திருக்கிறார்கள், நண்பர்
களும் உயிர் இழந்திருக்கிறார்கள்.

[திரு. குமரி அனந்தன்] [1986 ஏப்ரல் 29

மிகவேதனையான செய்தி. இன்னும் ஒன்று. திரு. பிச்சை
அவர்கள் எப்படிப்பட்டவர் என்பதை எல்லாம் இங்கே முன்னவர்
அவர்களே, தான் தீர்மானத்தை மொழிந்த நேரத்திலே எடுத்துச்
சொன்னார்கள். ஒரு செல்வாக்கு மிக்க தலைவர், புகழ் பெற்ற
தலைவர், கட்சியினுடைய தனிப்பெரும் தலைவராக இருக்கின்ற
வர், நின்று வாக்குகள் பெற்ற இடத்திலே, அதற்கு அடுத்தாற்
போல் எனக்கு வாக்கு அளியுங்கள் என்று கேட்பதுகூட சிரம
மான ஒன்று. அப்படிப்பட்ட ஒரு இடத்தில் மரியாதைக்குரிய
புரட்சித்தலைவர் அவர்கள் நின்று வெற்றிபெற்ற இடத்திலே,
அடுத்தாற்போல், தான் வாக்கு பெற்றதோடு அல்லாமல்,
இரண்டாவது முறையும் அவர் வாக்குகள் பெற்று வந்திருக்கிறார்
என்று சொன்னால், அது அவருடைய சாதனைதான். அப்படி
பல்லாயிரம் மக்களுடைய வாக்குகளைப் பெற்று வந்தவர்,
தன்னுடைய கடமைகளைக்கூட முழுமையாக நிறைவேற்ற
முடியாது இடையிலே சென்றிருக்கிறார்கள். பத்து தேன் கூடு
களிலே சேகரித்த தேனை குடத்திலே எடுத்து வருகிற நேரத்திலே,
கொண்டு சேர்ப்பதற்கு எந்த இடத்திற்கு கொண்டு
போகிறோமோ, அதற்கிடையிலே கால் இடறி, அது கீழே விழுந்தி
போய் விட்டது என்றால், வருத்தப்படுகிற நாம், ஆயிரக்கணக்
கான மக்களுடைய வாக்குகளைப் பெற்று, இங்கே வந்தி,
தன்னுடைய கடமையை ஆற்றுவதற்கு முன்னாலே இடையிலே
கார் விபத்திலே போய்விட்டார்கள் என்று சொன்னால், அது
மிகுந்த வேதனை தருவதாகும். அவர்களை இழந்து தவிக்கின்ற
அந்தக் குடுபத்தினருக்கும் அவரை இழந்து தவிக்கின்ற அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அந்தத்
தொகுதி மக்களுக்கும், காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ்
சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

திரு. ஆர். செங்காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்று நம்முடைய சட்டமன்றத்திலே அருப்புக்
கோட்டைத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்று, சட்டமன்றத்
திலே பணியாற்றிக் கொண்டு இருந்த திரு. பிச்சை அவர்கள்
இன்று திடீரென்று அகால மரணம் அடைந்துவிட்ட செய்தியை
காலை பத்திரிகையிலேதான் நான் படித்துப் பார்த்தேன்.
படித்த உடனே, எனக்கு உள்ளத்திலே ஒரு பெரும் அதிர்ச்சி
ஏற்பட்டது. நேற்று வரையிலும் நம்மோடு சட்டமன்றத்திலே
பணியாற்றிய அருமை நண்பர், சிறு வயதுடையவர், இன்னும்
வருங்காலத்திலே நீண்டநாட்கள் அந்தத் தொகுதி மக்களுக்கும்,
தமிழகத்திற்குப் பணியாற்ற வேண்டியவர் இளம் வயதிலேயே
இப்படிப்பட்ட அகால மரணம் எய்திவிட்டாரே என்று மனதிலே ஒரு
வேதனை ஏற்பட்டது. ஆனால் அவர்கள் இன்னும் நீண்ட நாட்
களுக்கு இருந்து அந்த மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டியவர்.
நல்ல பண்பு உடையவர், மக்களுடைய தேவைகளை அன்றாடம்
பூர்த்தி செய்து கொண்டு இருந்தவர். அப்படிப்பட்ட ஒரு சட்ட



1986 ஏப்ரல் 29] [திரு. ஆர். செங்காளியப்பன்]

மன்ற உறுப்பினர் நம் மத்தியிலிருந்து திடீரென்று மறைந்தது
நமக்கு எல்லாம் பெரும் வருத்தத்தையும், துக்கத்தையும்
ஏற்படுத்தி இருக்கிறது. இந்த அவையின் முன்னவர் அவர்கள்
முன்மொழிந்த அந்த இரங்கல் தீர்மானத்தை ஜனதாக் கட்சியின்
சார்பாக நானும் வழிமொழிந்து அவர்களுடைய குடும்பத்தாருக்
கும், அவர் சார்ந்திருக்கக்கூடிய கட்சிக்கும் என்னுடைய ஆழ்ந்த
அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம். மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டைத் தொகுதியிலே
இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தப் பேரவையிலே பணி
யாற்றிய திரு. பிச்சை அவர்கள் அகால மரணம் அடைந்தது
குறித்து, சட்டப்பேரவையின் முன்னவர் அவர்கள் முன்
மொழிந்த தீர்மானத்தை, இந்திய யூனியன் முஸ்லீம் லீக்
கட்சியின் சார்பாக நான் வழிமொழிந்து பேசுகிறேன். அவர்கள்
அந்தத் தொகுதியிலே பேரவை உறுப்பினராக இல்லாத
நேரத்திலும் கூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்ந்
தெடுக்கப்பட்ட நேரத்திலே, அவர் பேரவை உறுப்பினர் போலவே
அந்தத் தொகுதியிலே நல்லமுறையில் சேவை செய்து, அந்த
மக்களுடைய அன்பைப் பெற்று, அதற்குப் பின்னால் இரண்டு
முறை அந்தத் தொகுதியிலிருந்து இந்தப் பேரவைக்கு
உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தப் பேரவையிலே
அந்தத் தொகுதிக்காக நல்ல முறையிலே பணியாற்றியிருக்கிறார்
கள். குறிப்பாக ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள எல்லோருடைய ஒட்டு
மொத்தமான அன்பையும் பெற்றவர். குறிப்பாக முதல்வர்
அவர்களுடைய அன்பைப் பெற்று, நல்லமுறையிலே சேவை
ஆற்றியவர், இந்த மாதிரியான ஒரு பேராபத்தில் சிக்கி அகால
மரணம் அடைந்ததற்கும், அவருடைய பிரிவால் வாடும்
அவருடைய குடும்பத்தினருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும்,
அந்தக் கட்சியினருக்கும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின்
சார்பாக என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து,
மாண்புமிகு முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை
வழிமொழிந்து அமர்கிறேன்.

திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தப் பேரவையில் பேரவை முன்னவர் அவர்களால்
கொண்டுவரப்பட்டுள்ள இரங்கல் தீர்மானத்தை நான்
சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வேர்ட் ப்ளாக் கட்சியின்
சார்பில் வழிமொழிகிறேன். மரியாதைக்குரிய இந்தப் பேரவை
யினுடைய உறுப்பினர், அருமை சகோதரர் திரு. பிச்சை
அவர்கள் பழகுவதற்கு இனியவராகவும், நல்ல பற்றும் பாசமும்
உள்ளவர்களாகவும் விளங்கினார்கள் என்பதை நான் சொல்லித்
தெரிய வேண்டிய அவசியமில்லை. 1977-ம் ஆண்டு
தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்

[திரு. கே. முத்துவேல்] [1986 ஏப்ரல் 29

தேர்ந்தெடுக்கப்பட்டபோது அந்தத் தொகுதியினுடைய பிரதிநிதியாக இருந்து அந்தத் தொகுதி மக்களுக்கு நல்ல பல காரியங்களையும், நல்ல பல தொண்டையும் செய்ததன் பயனாக 1980-லும், 1984லிலும் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருக்கிறார்கள். அந்த தொகுதி மிகவும் பரந்த தொகுதி. பெரும்பாலான கிராமங்கள் நிறைந்த தொகுதி. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிற ஏழை எளிய மக்கள் வாழ்கிற தொகுதி. அந்த மக்களுடைய உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டவர் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பிச்சை ஆவார்கள், அவர்கள் நேற்று ஒரு வேன் விபத்தின் காரணமாக அகால மரணம் அடைந்ததால் அவரை இழந்து துடிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினருக்கும் அவர்கள் சார்ந்திருக்கிற அகில இந்திய அண்ணா திரா.விட முன்னேற்றக் கழகத்திற்கும் நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பில் ஆழ்ந்த வருத்தத்தையும் துயரத்தையும் தெரிவித்து முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று இந்த மாமன்றத்தில் சிறப்பாக பணி யாற்றிய சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. பிச்சை அவர்கள் சட்டப்பேரவை நடந்துகொண்டிருக்கிற இந்தக் காலக் கட்டத்தில் ஒரு விபத்தில் மரணமுற்றார் என்ற செய்தி நம்மை யெல்லாம் மிகுந்த வேதனைக்கு உள்ளாக்குகிறது. பல்வேறு கட்சித் தலைவர்கள் இங்கே பேசியபடி நல்ல குணங்களைப் படைத்து நல்ல சட்டமன்ற உறுப்பினராக செயல்பட்டு வந்த அவர் மறைவு மிகுந்த வேதனைக்குரியது. பார்ப்பதற்கு மிகவும் எளியவராகவும் பழகுவதற்கு இனியவராகவும், சிறந்த பண்பாள ராகவும் இருந்து செயல்பட்டு வந்த அவர் மறைவு நம்மையொத்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மிகப் பெரிய இழப்பாகும். அவை முன்னவர் அவர்கள், அவர்களுடைய நல்ல இயல்புகளை தெளிவாக எடுத்துச் சொன்னதைப்போல் அவர்கள் சிறந்த சட்டமன்ற உறுப்பினராக செயல்பட்டார். அவர்களுடைய மறைவுக்கு இந்திய குடியரசுக் கட்சி சார்பில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவரது இயக்கத்தினருக்கும் எங்கள் இயக்கத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை இந்திய குடியரசுக் கட்சி சார்பில் வழிமொழிந்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றக் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய இரங்கல் கருத்தையும், என்னுடைய அனுதாபத்தையும்



1986 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் குடும்பத்தாருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த உறுப்பினர் திரு. பிச்சை அவர்களை ஓரளவிற்கு நன்கு அறிவேன். தொகுதி மக்களுக்காக நன்றாகப் பாடுபட்டவர். தொகுதி மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றவர். ஒரு சட்டமன்ற உறுப்பினர் எப்படி மக்களுக்காகப் பாடுபடவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் அவர். அவர் அவர்களது தொகுதி மக்களோடு அன்றாடம் பழகி நல்லமுறையில் பணியாற்றியிருக்கிறார்கள், கடமையாற்றி யிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை இந்த மாமன்றம் இன்றைக்கு இழந்திருக்கிறது. தமிழகத்திற்கே இது இழப்புதான். அந்தத் தொகுதிக்கு பெருமளவு இழப்புதான் என்பதை நான் உணர்கிறேன். ஆகவே நீங்கள் எல்லோரும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய அனுதாபத் தையும் இரங்கலையும் அவையின் சார்பிலும் என் சார்பிலும் மறைந்த நம்முடைய மாமன்ற உறுப்பினர் பிச்சை அவர்களுடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.30)

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

## 3. அறிவிப்பு

### பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று எடுத்துக் கொள்ளப் படவிருந்த நிதி அமைச்சர் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை களுக்கான பதிலுரையும், பொதுப் பணித் துறை அமைச்சர் குறித்த மானியக் கோரிக்கைகளுக்கான விவாதமும் பதிலுரையும் நாளை எடுத்துக் கொள்ளப்படும். நாளையும் கேள்வி நேரம் இல்லை.

நாளை எடுத்துக்கொள்ளப்படவிருந்த தொழிலாளர் நலன் குறித்த மானியக் கோரிக்கை எடுத்துக் கொள்ளப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

பேரவை உறுப்பினர் திரு. மு. பிச்சை அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

நாளை (30—4—1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை காலை 9-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4· பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

155. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (பதினொன்றாவது பட்டியல்).

## இணைப்பு

(441ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 15 (3082) க்கான விடையைக் காண்க)

ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப் பட்ட பணிகள் மற்றும் அவற்றின் மதிப்பீடுகள் ஆகிய விவரங்கள் பின்வருமாறு :—

| பணி வகை. (1) | | பணிகளின் எண்ணிக்கை. (2) | மதிப்பீடு. (3) |
|---|---|---|---|
| **ஸ்ரீவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியம்.** | | | |
| | | | ரூ. |
| 1 இணைப்புச் சாலைகள் | .. | 45 | 16,26,900 |
| 2 சிறு பாலங்கள் .. .. | .. | 32 | 14,66,100 |
| 3 ஊரக மருந்தகங்கள் | .. | 4 | 2,76,900 |
| 4 தாய் சேய் நல நிலையங்கள் | .. | 4 | 2,79,900 |
| 5 பள்ளிக் கட்டிடங்கள் .. | .. | 7 | 4,22,500 |
| 6 ஊராட்சி அலுவலகக் கட்டிடம் | | 1 | 46,000 |
| மொத்தம் | .. | 93 | 41,18,300 |
| **வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம்.** | | | |
| 1 இணைப்புச் சாலைகள் .. | .. | 33 | 14,11,000 |
| 2 சிறு பாலங்கள் .. .. | .. | 61 | 22,67,000 |
| 3 ஊரக மருந்தகம் .. | .. | 1 | 98,000 |
| 4 தாய் சேய் நல நிலையங்கள் | .. | 4 | 3,91,000 |
| 5 பள்ளிக் கட்டிடங்கள் .. | .. | 14 | 13,46,000 |
| மொத்தம் | .. | 113 | 55,13,000 |
| கூட்டு மொத்தம் | .. | 206 | 96,31,300 |

ஆவணக்காப்பகம்
136481
சென்னை-600 008